திருமூலர் அருளிய

திருமந்திரம்



முதலாம் தந்திரம்

உ

அன்பே சிவம்

பதிப்புரிமை © 2020

முதல் பதிப்பு 2020

திருமூலர் அருளிய

திருமந்திரம்

முதலாம் தந்திரம்

விளக்கம்

த. சரவணன்

திருமூலர் வரலாறு

திருக்கைலாயத்தில் சிவபெருமானது திருக்கோயிலுக்கு முதற்பெரும் காவல் பூண்ட திருநந்தி தேவரது திருவருள் பெற்ற மாணாக்கருள் அட்டமா சித்திகள் கைவரப்பெற்ற சுந்தரநாதர் என்னும் சிவயோகியார் ஒருவர் இருந்தார். இவர் திருக்கைலாய பரம்பரையைச் சேர்ந்தவர். சித்தர் மரபில் முதலானவராகிய அகத்தியருக்கு அடுத்தவர் இவர் எனக் கருதப்படுகின்றார். திருக்கைலாயத்தில் திருநந்தி தேவரின் உபதேசம் பெற்றவர்.

இவர் அகத்திய முனிவரிடத்தில் கொண்ட நட்பினால் அவரோடு சிலகாலம் தங்குவதற்கு எண்ணி அகத்தியர் எழுந்தருளியிருக்கும் பொதிகை மலையை அடையும் பொருட்டு திருக்கைலையிலிருந்து புறப்பட்டு தென்திசை நோக்கி சுந்தரநாதன் என்ற பெயருடன் சென்றார். அகத்தியரை காணச் செல்லும் வழியில் சாத்தனூர் என்னும் ஊரில் பசுக் கூட்டங்கள் கதறி அழுவதைக் கண்டார். பசுவை மேய்க்கும் மூலன் என்பவன் இறந்தமையால் அதனைத் தாங்காத பசுக்கள் உயிர் நீங்கிய அவனது உடம்பினைச் சுற்றிச்சுற்றி வந்து வருந்தி அழுதன. மேய்ப்பான் இறந்தமையால் பசுக்களைடைந்த துயரத்தினைக் கண்ட சிவயோகியாரது உள்ளத்தில் இப்பசுக்களின் துயரத்தினை நீக்குதல் வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இந்த இடையன் உயிர் பெற்று எழுந்தாலன்றி இப்பசுக்கள் துயரம் நீங்காது என எண்ணிய சிவயோகியார் தம்முடைய திருமேனியைப் பாதுகாப்பாக ஓரிடத்தில் மறைத்து வைத்து விட்டுக் கூடுவிட்டுக் கூடு பாய்தல் என்னும் சித்தியினால் தமது உயிரை இறந்த இடையனது உடம்பில் புகுமாறு செலுத்தினார். மூலன் அதுவரை உறங்கியிருந்தவன் போல் சட்டென்று கண் விழித்து திருமூலராய் எழுந்தார்.

திருமூலர் விழித்தெழுந்ததைக் கண்டு பசுக்கள் மகிழ்ந்து அவரது உடலை நாவினால் நக்கித் தங்களின் அன்பை வெளிப்படுத்தின. அவரும் பசுக்களைத் தட்டிக்கொடுத்து அவற்றோடு சேர்ந்து மகிழ்ந்தார். மாலை வந்ததும் வீடு நோக்கி பசுக்கள் புறப்பட திருமூலரும் கூடவே புறப்பட்டார். ஒவ்வொரு பசுவும் தத்தம் வீடு அறிந்து புகுந்து கொண்டன. திருமூலர் அவற்றை எல்லாம் வீடு சேர்த்தார். ஆனால் மூலன் மட்டும் அவரது வீட்டிற்கு போக விரும்பவில்லை. அவர் ஞான திருஷ்டியால் மூலனுக்குத் திருமணம் ஆகிவிட்டது என்பதை அறிந்தார். அதனால் தனியாக ஒரு இடத்தில் அமர்ந்தார்.

மூலனின் மனைவி கணவன் வரவை வெகு நேரமாக எதிர்பார்த்துப் பயன் ஏதும் இல்லாததால் கணவனைத் தேடிப் புறப்பட்டாள். வரும் வழியிலே ஓரிடத்தில் கணவன் அமர்ந்து இருப்பதைக் கண்டு அருகே சென்று வீட்டிற்கு வரக் காலதாமதம் ஆனது பற்றி கேள்விகளாக கேட்டாள். திருமூலர் மௌனமாகவே இருந்தார். மூலனின் மனைவிக்கு புரியவில்லை. திருமூலரின் கையைத் தொட்டு அழைக்க முற்பட்டாள். அம்மையார் செய்கை கண்டு திருமூலர் சிறிது எட்டி விலகினார். அதைக் கண்டு அந்தப் பெண்மணி அஞ்சி நடுங்கி உங்களுக்கு என்ன தீங்கு நேர்ந்தது? எதற்காக இப்படி விலகுகிறீர்கள்? என்று மன வருத்தத்தோடு கேட்டாள். என்னால் உன் வீட்டிற்கு வர முடியாது. உனக்கும் எனக்கும் இனி மேல் எவ்வித உறவும் கிடையாது. அதனால் ஆலயம் சென்று இறைவனை வழிபட்டு அமைதி பெறுவாயாக என்று கூறினார். அதற்குமேல் அவள் முன்னால் நிற்பதும் தவறு என்பதை உணர்ந்து திருமூல யோகியார் அத்தலத்திலுள்ள திருமடம் ஒன்றுக்குச் சென்று சிவயோகத்தில் அமர்ந்தார். கணவனின் நிலையைக் கண்டு கதிகலங்கிப் போனாள் மனைவி. கணவனின் மனமாற்றத்தைப் பற்றி ஒன்றும் புரியாமல் கவலையோடு வீடு திரும்பினாள்.

மறுநாள் மூலனின் மனைவி சுற்றத்தாரை அழைத்துக்கொண்டு அவர் இருக்குமிடத்திற்கு வந்தாள். யோக நிலையில் அமர்ந்திருக்கும் திருமூலரின் முகத்தில் தெய்வ சக்தி தாண்டவமாடுவது போன்ற தனிப் பிரகாசம் பொலிவு பெறுவது கண்டு இவர் ஒரு முனிவர் என்பதை அவர்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது. இருந்தும் அவர்கள் மூலனின் மனைவிக்காக திருமூலரிடம் வாதாடினார்கள். ஒரு பலனும் கிட்டவில்லை. அதன் பிறகு அவர்கள் மூலனின் மனைவியிடம் உன் கணவர் முன்னைப்போல் இல்லை. இப்பொழுது அவர் முற்றும் துறந்த முனிவராகி விட்டார். இனிமேல் இந்த மெய்ஞானியாரோடு வாழ வேண்டும் என்பது நடக்காத காரியம் என்று கூறினர். அவர்கள் கூறியதைக் கேட்ட மூலனின் மனைவி அவரது கால்களில் விழுந்து வணங்கி வேதனையோடு வீடு திரும்பினாள். பிறகு திருமூலர் மறைவாக இருந்த தமது திருமேனியைத் தேடினார். கிடைக்கவில்லை. முதலில் யோகியாருக்கு சற்று வியப்பாகவே இருந்தது. யோக நிலையில் அமர்ந்தார். தமது தபோ வலிமையால் இறைவன் அருளிய வேத ஆகமப் பொருள்களைத் தமிழிலே வகுத்து உலகோர்க்கு உணர்த்த வேண்டும் என்பதற்காகவே இறைவன் தம் உடலை மறைத்தருளினார் என்பதை உணர்ந்து கொண்டார்.

அங்கிருந்து புறப்பட்ட திருமூலர் திருவாவடுதுறை திருத்தலத்தை அடைந்து மூலவர் பெருமானைப் பணிந்தவாறு மதிலுக்கு வெளியே மேற்கு பக்கமாக அமைந்துள்ள அரசமரத்தின் அடியில் அமர்ந்து சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகளையும் ஓர் ஆண்டிற்கு ஒரு மந்திரப் பாடலாக மூவாயிரம் ஆண்டுகள் சிவயோகத்தில் இருந்து மூவாயிரம் பாடல்களை பாடினார். உலகோர் உய்யும் பொருட்டுத் திருமந்திர மாலையை அருளியபின் திருமூலர் சிதம்பரம் சென்று தில்லை நாதனுடன் கலந்து தனது குருவாகிய நந்தியிடம் தஞ்சம் அடைந்தார்.

திருமூலர் திருமந்திரம் எழுதி முடித்தவுடன் அதை வெளியிடவில்லை. யாரும் அறியாதவாறு தான் அமர்ந்திருந்த திருவாவடுதுறை ஆலயத்தின் கொடி மரத்தின் அடியில் தான் எழுதிய திருமந்திரம் அடங்கிய ஓலைச் சுவடிகளைப் புதைத்து வைத்துவிட்டு அவர் சிதம்பரம் சென்று நந்தீசுவரருடன் கலந்து விட்டார். அதன் பிறகு அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும் சைவக் குரவர்கள் என்று போற்றப்படும் நால்வர்களில் ஒருவருமான திருஞான சம்பந்தர் திருவாவடுதுறை திருத்தலத்தின் வாயிலுக்குள் நுழைந்தவுடன் இறைவனின் திருவருளால் திருமூலர் அருளிய திருமந்திரத்தின் அற்புதமான தமிழ் வாசனை அவரை வந்தடைய அதனால் ஈர்க்கப்பட்டுத் தன்னுடன் வந்தவர்களிடம் இங்கே அருமையான தமிழ் வாசனை வருகின்றதே என்ன என்று பாருங்கள் என்று கூறி கொடி மரத்தின் அடியில் உள்ள மண்ணைத் தோண்டச் செய்து அங்கே திருமூலர் புதைத்து வைத்திருந்த திருமந்திர ஓலைச் சுவடிகளை கண்டு எடுத்தார். அவற்றை படித்து உணர்ந்து அதன் அருமை பெருமைகளை உலகோர் அனைவரும் அனுபவிக்க வேண்டும் என்று வெளியிட்டு அனைவருக்கும் ஓதி அருளச் செய்தார்.

பிற்காலத்தில் வந்த சேக்கிழார் பெருமான் அறுபத்து மூன்று நாயன்மார்களைப் பற்றித் தான் எழுதிய பெரிய புராணத்தில் திருமூலரை நாற்பத்து ஆறாவதாக சேர்த்து திருமூலரின் வாழ்க்கை வரலாற்றையும் திருமந்திரப் பாடல்களின் குறிப்பும் எழுதி வைத்தார். அவருக்குப் பின் வந்த நம்பியாண்டார் நம்பி சைவ சான்றோர்கள் பலர் அருளியிருந்த சைவத் திருமுறைகளை ஒன்றாகத் தொகுத்த போது திருமூலர் அருளிய திருமந்திரத்தையும் பத்தாவது திருமுறையாகத் தொகுத்து அருளினார்.

திருமந்திரம் முன்னுரை

திருமந்திரம் என்பது திருமூலரால் எழுதப்பட்ட ஒரு தமிழ் படைப்பு ஆகும். இது ஒன்பது தந்திரங்களுடன் மூவாயிரம் பாடல்கள் உடையது. ஒவ்வொரு பாடலும் நான்கு வரிகளாகவும் ஒவ்வொரு வரியும் நான்கு சொற்களைக் கொண்டதாகவும் அந்த ஒவ்வொரு வரியிலும் புள்ளி எழுத்துக்கள் நீங்கலாக 12 எழுத்துக்களைக் கொண்டதாகவும் இருக்கும்.

வேதம் ஆகமம் ஆகிய இரண்டிற்கும் திருமந்திரம் விளக்கம் தருகிறது. திருமந்திரம் சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் பத்தாவது திருமுறையாக பெரியோர்களால் வைக்கப்பட்டுள்ளது. தோத்திரத்திற்குத் திருவாசகம் சாத்திரத்திற்குத் திருமந்திரம் என்று சான்றோர் கூறுவர். மேலும் சிவமே அன்பு அன்பே சிவம் எனக் கூறும் திருமந்திரமே சைவ சித்தாந்தத்தின் முதல் நூலாகக் கருதப்படுகிறது. திருமூலர் திருமந்திரத்தில் மூன்று அதிமுக்கியமான வாக்கியங்களை இன்றளவும் நாம் பயன்படுத்தும் விதமாக அருளியுள்ளார் அவையாவன:

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்

அன்பே சிவம்

திருமந்திரம் நூலுக்கு தமிழ் மூவாயிரம் என்ற பெயரே முதலில் இருந்தது. அந்த நூலில் இறைவனை அடையும் எளிய வழிமுறைகளும் மிக நிரம்பிய மந்திரங்களும் சில தந்திரங்களும் நம் மனித ஸ்தூல சரீரத்துக்குத் தேவையான அனைத்தும் விளக்கமாக உள்ளதால் அந்த நூல் திருமூலர் திருமந்திரம் என்று பின்னர் வழங்கப்பட்டது.

எமது முன்னுரை

திருமந்திரம் பாயிரம் பகுதியில் திருமந்திரத் தொகை சிறப்பில் திருமூலர் திருமந்திரத்தை பற்றி விவரிக்கிறார்.

திருமூலனாகிய யாம் வழங்கிய இந்த மூவாயிரம் தமிழ் மந்திரங்களும் யாம் பெற்ற இன்பம் இந்த உலகத்திலுள்ள அனைத்து உயிர்களும் பெற வேண்டும் என்ற அன்பினாலேயே எம் குருநாதன் இறைவனின் அருளால் வழங்கப் பெற்றது. இந்த மந்திரங்களைக் காலையில் எழுந்து அவற்றின் பொருளை ஓதி உணர்ந்து அதில் உள்ள கருத்துக்களைக் கடைபிடித்து வந்தால் உலகங்கள் அனைத்திற்கும் தலைவனாகிய சதாசிவமூர்த்தியைச் சென்று அடைந்து யாம் பெற்ற பேரின்பத்தை அனைவரும் பெறலாம் என்று பாடல் #99 இல் அருளுகிறார்.

உயிர்கள் அனைத்தும் இறைவனை உணர்ந்து வீடு பேறு அடைய வேண்டும் என்கின்ற அன்பினால் யாம் உயிர்களுக்கு வைத்த பேரின்ப பரிசு திருமந்திரம் என்னும் பேரின்ப நன்மை தரும் நூலாகும். இந்த நூலிலுள்ள மூவாயிரம் பாடல்களில் யாம் வழங்கியிருப்பது இறைவனை அடைந்து முக்தி பெறும் வழிகளும் அதன் முடிவில் இறைவனோடு என்றும் கலந்து இருக்கும் பேரின்பத்தின் விளக்கங்களும் ஆகும். இறைவனின் அருளால் அறிவுப்பூர்வமாக இயற்றப்பெற்ற இந்த மூவாயிரம் பாடல்களும் அனைவருக்கும் பொதுவானவையாகும். இந்த மூவாயிரம் பாடல்களையும் தமது சிந்தையில் வைத்து அவற்றின் பொருளுணர்ந்து போற்றி வருபவர்களுக்கு அனைத்துவிதமான சிறப்புகளையும் கொடுக்குமென பாடல் #100 இல் அருளுகிறார்.

இறைவனை அடையும் எளிய வழிமுறைகளும் மிக நிரம்பிய மந்திரங்களும் சில தந்திரங்களும் நம் மனித ஸ்தூல சரீரத்துக்குத் தேவையான அனைத்தும் விளக்கமாகவும் சொல்லினால் விவரிக்க முடியாத இந்த சிறப்பு வாய்ந்த திருமந்திரம் பாடல்களுக்கு திருமூலரின் அருளாலும் எமது குருநாதர் ஆதி அருணாசல சித்தர் கே.வி. நாராயணன் அவர்களின் அருளாலும் தினம் ஒரு திருமந்திரம் பாடலுக்கு சில வருடங்களாக விளக்கம் எழுதிக் கொண்டிருக்கின்றோம்.

இன்னும் முழுமையாக எழுதி முடிக்கவில்லை. எழுதியவரை பாடல்களை சில வருடங்களாக தினந்தோறும் முகநூல் [பேஸ்புக்] வழியாகவும் புலனம் [வாட்ஸ்அப்] வழியாகவும் கேவிஎன்திருமூலர்.காம் வலைதளத்தின் வழியாகவும் பதிவேற்றிக் கொண்டிருக்கின்றோம். தினமும் ஒரு திருமந்திரம் பாடலுடன் விளக்கத்தை இவற்றின் மூலம் படித்து பயன் பெறுமாறு அன்பர்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறோம். திருமந்திர விளக்கங்கள் அனைத்தும் இறுதியானவைகள் அல்ல. தவறுகள் சுட்டிக்காட்டப்படும் போது அதன் உண்மை தன்மை விவாதிக்கப்பட்டு ஆராயப்பட்டு திருத்தப்படுகின்றன. படிப்பவர்கள் தங்களுக்கு எழும் சந்தேகங்களுக்கு விடை தெரிந்து கொள்ள கீழே கொடுக்கப்பட்டுள்ள எமது மின்னஞ்சல் [ஈமெயில்] வழியாகவும் வலைதளம் மற்றும் முகநூல் [பேஸ்புக்] புலனம் [வாட்ஸ்அப்] வழியாகவும் எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம்.

திருமந்திரம் பாடல்களை 3000 வருடங்கள் தவம் இருந்து 3000 பாடல்கள் எழுதியிருக்கின்றோம் என்று திருமூலர் தனது பாடல்கள் வழியாகவே அருளியிருக்கின்றார். ஆனால் பல தலைமுறைகள் தாண்டி தற்போது நமக்கு கிடைத்திருப்பவை 3047 பாடல்கள். இதில் அதிகமாக இருக்கும் 47 பாடல்கள் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் தெரிந்து கொள்ள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எமது எழுத்துப்பணிக்கு உதவி புரிந்த நண்பர் ஸ்ரீநிவாசன் அவரின் பணி மிகவும் மகத்தானது. அவருக்கு வணக்கத்துடன் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் தினந்தோறும் எழுதிய திருமந்திரத்தை புத்தக வடிவாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு எம்மை உற்சாகப்படுத்திய இணையதள நண்பர்களுக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

PDF புத்தகமாக உள்ள திருமந்திரம் பாடல்களின் விளக்கங்கள் கொண்ட இந்த முதல் தந்திரத்தின் தொகுப்பு அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்றும் அனைவரும் படித்து பயன் பெற வேண்டும் என்றும் அமேசான் கிண்டிலிலும் பேஸ்புக் வாட்ஸ்அப் மற்றும் வலைதளங்களிலும் இலவசமாக கொடுக்கப்பட்டுள்ளது. இறை பணியாக செய்யும் இச்செயலை தயவு செய்து யாரும் தவறாக பயன்படுத்த வேண்டாம் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

த. சரவணன்

https://kvnthirumoolar.com

https://www.facebook.com/groups/thirumandhiram.daily/

saravana.0801@gmail.com

வாழ்த்துரை

குருவருளும் திருவருளும் கொண்டு திரு. சரவணன் அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிதனைப் பற்றி சில கருத்துக்களைக் கூற விழைகின்றேன்.

ஆதி அருணாசல சித்தர் குருஜி ஸ்ரீ நாராயணன் அவர்களின் அன்பும் ஆசியாலும் காக்கப்பட்ட எங்களுக்கு சற்குரு பகவான் திருமூலரின் பேரருளும் வழிகாட்டுதலும் கிடைக்கப் பெற்றோம். திரு. சரவணன் அவர்கள் சிறு வயது முதலே சிறந்த பக்தியும் ஆன்மீக நாட்டமும் உள்ளவர். பல வழிபாடுகளில் அவர்தம் ஆற்றிய பணிகள் பல. அவரை "தம்பி சரவணன்" என சற்குரு பகவான் திருமூலரின் அருள்வாக்கில் அழைக்கப்பட்டு பாராட்டு பெற்று ஒரு எடுத்துக் காட்டாக திகழ்பவர்.

அவரது ஆர்வத்தினால் தொடர்ந்து பல ஆன்மீக நூல்களைப் படிப்பது மட்டுமல்லாது திருமந்திரத்தை பல முறை படித்து உட்பொருள் அறிந்து யாவருக்கும் பயன்படுமாறு எளிய முறையில் பதிவிட்டு வருகிறார். தன்னுடைய முதன் முயற்சியாக முதல் இரண்டு தந்திரங்களின் பாடலுடன் பொருளினை சிறந்த விளக்கத்துடன் யாவரும் பயனுறும் வண்ணம் எளிதாக புரிந்து கொள்ளும் வகையில் PDF வடிவில் வெளியிட உள்ளார்.

இவரது முயற்சி தொடர வேண்டும். அதில் யாவரும் பயன் பெற சற்குரு பகவான் திருமூலரின் திருவடிகளை வணங்கி போற்றி அவருக்கு தொடர்ந்து வழிகாட்ட வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

வ.செ. தணிகைநாயகம்.

செயற் பொறியாளர் (ஓய்வு)

தமிழ்நாடு மின்சார வாரியம்.

சென்னை.

பாடல் #0: விநாயகர் காப்பு (விநாயகர் வணக்கம்)

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

விளக்கம்:

ஐந்து கரங்களைக் கொண்டவனும், யானையை முகமாகக் கொண்டவனும், இளம் பிறை நிலா போன்ற வளைந்த கொம்பைக் கொண்டவனும், குருவாக இருக்கும் இறைவனின் மகனாக இருப்பவனும், அறிவின் முழுஉருவாகவும் இருப்பவனை, எனது தலைமேல் வைத்து அவனது திருவடியை போற்றி வழிபடுகிறேன்.

பாடல் #1: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

ஒன்றவன் றானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தான்இருந் தான்உணர்ந் தெட்டே.

விளக்கம்:

இறைவன் ஒருவனே அவனைத்தவிர வேறு தெய்வங்கள் இல்லை. அதாவது, உலகத்தில் உள்ள அனைத்து தெய்வங்களும், அண்டசராசரங்களும், அதிலுள்ள அனைத்தும் இறைவன் ஒருவனாகவே இருக்கின்றான்.

ஒன்றாக இருக்கும் இறைவனின் அருளானது இரண்டாக இருக்கின்றது, அசையா சக்தியான இறைவனின் அருள் அவனிடமிருந்து அசையும் சக்தியாக வெளிப்படுகிறது. அதாவது, எப்படி கசப்பான மருந்தும் இனிப்பான மருந்தும் நோயைக் குணப்படுத்துகிறதோ அதுபோலவே இன்பம் துன்பம் ஆகிய இரண்டும் இறைவனின் அருளாகும்.

இரண்டாக இருக்கும் இறைவனே, பிரம்மன், விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று தெய்வங்களாகவும் நின்று படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றுவிதமான தொழில்களையும் புரிகின்றான்.

மூன்றாய் நின்ற இறைவனே, உயிர்கள் தன்னை அறிந்துகொள்ள வேண்டும் என்கிற மாபெரும் கருணையில், ரிக், யஜுர், சாம, அதர்வண ஆகிய நான்கு விதமான வேதங்களாகவும் நிற்கின்றான்.

நான்கு வேதங்களாக இருக்கும் இறைவனே, நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐந்து பூதங்களகவும் இருக்கின்றான். அதாவது, தெய்வம் அருளும் ஐந்து வகை தொழில்களாகிய, படைத்தல், காத்தல், மாயையால் மறைத்தல், அருளல், மாயையை அழித்தல், ஆகிய ஐந்தின் தலைவன் அவன் ஒருவனே.

ஐம்பூதங்களாக இருக்கும் இறைவனே, உயிர்களின் உடலில் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தம், ஆஞ்ஞை ஆகிய ஆறு சக்கரங்களாக விரிந்து இருக்கின்றான்.

ஆறு சக்கரங்களாக விரிந்திருக்கும் இறைவனே, மூலாதாரத்தில் குண்டலினி சக்தியாக இருந்து யோகங்கள் புரிவதன் மூலம் ஆறு சக்கரங்களுக்கும் மேலேறி ஏழாவது சகஸ்ரரதளத்திற்கு சென்று அதையும் தாண்டி பரவெளியில் உறைந்திருக்கின்றான்.

ஏழு சக்கரங்களிலும் உறைந்திருக்கும் இறைவனை தனக்குள்ளே உணர்ந்து உயிர்கள் அவனை எட்டுதலே முக்தியாகும்.

பாடல் #2: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனாம்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே.

விளக்கம் :

இறைவனைப் போற்றிப் புகழ்ந்து இசைத்துப் பாடும் அடியவர்களின் உள்ளத்தில் வீற்றிருக்கும் புனிதமானவனும் நான்கு திசைகளுக்கும் (உலகமனைத்திற்கும்) நன்மை புரியும் மாதுவாகிய சக்திக்குத் தலைவனானவனும். மேற்கூறிய நான்கு திசைகளுக்குள் தென் திசைக்கு தலைவனானவனும் காலத்தின் அதிபதியான எமனை எட்டி உதைத்ததால் காலத்தை வென்றவனும் ஆகிய இறைவனை யான் கூறிகின்றேன்.

பாடல் #3: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
நக்கனென் றேத்திடு நாதனை நாள்தொறும்
பக்கநின் றார்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றிசெய் வேனே.

விளக்கம்:

அனைத்து உயிர்களுடனும் கலந்திருக்கும் இறைவனை, எண்ணிலடங்காத தேவர்கள் தினந்தோறும் போற்றித் தொழுகின்ற இறைவனை, தத்துவங்களைக் கடந்து அனைத்திற்கும் தலைவனாக இருக்கும் இறைவனை, பக்கத்தில் இருந்தாலும் அறிந்துகொள்ள முடியாத இறைவனை, யாம் அவனுள் அடங்கி நின்று, அவனைத் தியானித்து, அவன் புகழைப் போற்றி உரைப்போம்.

பாடல் #4: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தென்றெனைப் போதவிட் டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே.

விளக்கம்:

அழிந்து போகக்கூடிய அண்டசராசரங்களுக்கும் அதிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் உண்மைப் பொருளாகவும், அனைத்திற்கும் ஆரம்பமாகவும் இருக்கும் இறைவனை, மண்ணுலகில் எம்மை வந்து இருக்குமாறு செய்து, மண்ணுலக மாயையிலிருந்து விடுபடும் வழியாக தனது திருவடியையும் எமக்கு அருளிய இறைவனை, இடைவெளியின்றி பகலிலும் இரவிலும் அவன் பாதங்களைப் பணிந்து, அவனைத் துதித்து, எம்முள் இருக்கும் மாயையாகிய இருளை நீக்கி அவனுடைய உண்மைப் பொருளை உணர்ந்து இருந்தோம்.

பாடல் #5: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கும் யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

விளக்கம்:

சிவத்தோடு ஒப்பிட்டுப் பார்க்குமளவிற்கு எங்கு தேடினாலும் வேறு எந்த தெய்வமும் கிடையாது. அவன் ஈடுஇணை இல்லாதவன் அனைத்து தெய்வங்களுக்கும் மேலானவன். அவனோடு ஒப்பிட்டுப் பார்க்குமளவிற்கு வேறு யாருமே இந்த உலகத்தில் இல்லை. இந்த உலகத்தையும் தாண்டிய பரவெளியில் சூரியனைப் போன்ற ஒளியுடன் பிரகாசித்துக்கொண்டும் சூரியனின் ஒளிக்கற்றைகள் போல மின்னும் சடையைக் கொண்டும் அவன் ஆயிரம் தாமரை மலரின் மேல் வீற்றிருக்கின்றான்.

பாடல் #6: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே.

விளக்கம்:

சிவத்தைத் தவிர பிறப்பு இறப்பு இல்லாத அமரர்கள் யாரும் இல்லை. சிவத்தை நோக்கி செய்யப்படும் தவத்தை விட சிறந்த தவம் வேறு இல்லை. சிவமுடைய அருள் இல்லாமல் படைத்தல், காத்தல், அழித்தல் தொழில்களைச் செய்யும் தெய்வங்களால் எதுவும் செய்ய இயலாது. சிவமில்லாமல் முக்தி அடையும் வேறு எந்த வழியையும் நான் அறியவில்லை.

பாடல் #7: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்
தன்னையப் பாஎனில் அப்பனு மாய்உளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே.

விளக்கம்:

ஆதியிலிருந்து இருக்கும் மூன்று தெய்வங்களான சிவன், விஷ்ணு, பிரம்மா மூவருக்கும் மூத்தவன் சதாசிவமூர்த்தி. தனக்கு ஈடுஇணை இல்லாத தலைவன் அவன். அவனை அப்பா என்று அழைத்தால் உயிர்களுக்கு அப்பாவாகவே தோன்றுவான் [அவனை என்ன சொல்லி அழைத்தாலும் அதுவாகவே உயிர்களுக்குத் தோன்றி அருள்பாலிப்பான்]. பொன் போன்ற அறிவு ஒளியைத் தரும் பல உபதேசங்களை குருவாக நின்று வழங்குபவனும் அவனே. பொன்னைப் போன்ற பேரொளியாக இருப்பவன். வேதங்களை தனக்குள்ளே கொண்டவன் அவன்.

பாடல் #8: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே.

விளக்கம் :

உயிர்கள் இறைவனை அடைவதற்காக அவர்களின் கர்மாக்களை அழிக்கும் போது இறைவன் தீயைவிடவும் அதிக வெப்பமானவானாக இருக்கின்றான். உயிர்கள் இறைவனை நாடும் போது தண்ணீரைவிடவும் குளிர்ந்தவனாக இருக்கின்றான். விருப்பு வெறுப்பின்றி தன்னலம் இல்லாத குழந்தையைவிட இறைவன் நல்லவன். காதுகளில் குண்டலங்களை அணிந்துகொண்டும் நீண்ட சடையைக் கொண்டவனுமான இறைவன் தன்னை நாடும் அன்பர்களுக்குத் பெற்ற தாயைவிடவும் மிகவும் அன்பு செலுத்துபவனாகத் திகழ்கின்றான். இருந்தும், அவனுடைய திருவருளை அறிந்தவர்கள் யாரும் இல்லை.

பாடல் #9: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

பொன்னால் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னால் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே.

விளக்கம்:

பொன்னாலே பின்னப்பட்ட சடையை பின்னால் உடைய எம்மால் வணங்கப்படுகின்ற, இறைவன் பெயர் நந்தி என்கின்ற சிவபெருமான் அவனால் வணங்கப்படுகின்றவர் இந்த உலகில் இல்லை.



பாடல் #10: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

தானே இருநிலம் தாங்கிவின் ணாய்நிற்கும்
தானே சுடும்அங்கி ஞாயிறுந் திங்களும்
தானே மழைபொழி தையலுமாய் நிற்கும்
தானே தடவரை தண்கட லாமே.

விளக்கம்:

சதாசிவமூர்த்தியாகிய தானே இந்த உலகைத் தாங்கிக் கொண்டு ஆகாயமுமாயும் இருக்கின்றான் அவனே சுடுகின்ற அக்கினிச் சூரியனாகவும் சந்திரனாகவும் உள்ளான். அவனே அருள் பொழியும் சக்தியுமாய் இருக்கின்றான். அவனே விசாலமான மலையாகவும் குளிரச்சியான கடலாகவும், உள்ளான்.

பாடல் #11: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதுமொன் றில்லை
முயலும் முயலின் முடிவும்மற் றாங்கே
பெயலும் மழைமுகிற் பேர்நந்தி தானே.

விளக்கம்:

அனைத்திற்கும் ஆதியாகிய சதாசிவமூர்த்தியை எண்ணினால் அவருக்கு நிகரான பெருந்தெய்வத்தை தூரத்திலும் அருகிலும் பார்க்க முடியவில்லை. நம்முடைய முயற்சியும் அவனே நம் முயற்சியின் பயனும் அவனே மழை பொழிகின்ற மேகமும் அவனே அவன் பெயர் நந்தி ஆகும்.



பாடல் #12: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

கண்ணுத லான்ஒரு காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்
மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
அண்ணல் இவன்என் றறியகி லார்களே.

விளக்கம்:

சிவபெருமான் நெற்றிக் கண்ணால் அருள் கொடுத்து நின்ற போது எண்ணில் அடங்காத தேவர்கள் அழிவில்லாத அமர வாழ்வைப் பெற்றார்கள். மண்ணில் வாழ்பவர்களும் விண்ணில் வாழ்பவர்களும் சிவபெருமானின் அருளைப்பற்றி தெரிந்து கொள்ளாமல் அவருடைய நெற்றிக் கண்ணால் நிறைய பேர் இறந்து விட்டதாக அறியாமையால் எண்ணிக்கொண்டு இருக்கின்றார்கள்.

பாடல் #13: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்னம் நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தான்தன்னை மேல்அளந் தாரில்லை
கண்ணளந் தெங்குங் கடந்துநின் றானே.

விளக்கம்:

மூவுலகையும் மூன்று அடிகளால் அளந்த திருமால் தாமரை மலரில் அமர்ந்த பிரம்மன் முதலிய அனைத்துத் தேவர்களும் இன்னமும் தங்களின் எண்ணத்தால் கூட அளக்க முடியாத சதாசிவமூர்த்தியின் பெருமையைப் பற்றி எண்ணாமல் இருக்கின்றார்கள். அடிமுடி காண முடியாத சதாசிவமூர்த்தியை அளந்து பார்த்தவர்கள் ஒருவரும் இல்லை. கண் பார்க்கக்கூடிய எதையும் கடந்து அளவிட முடியாமல் அனைத்தையும் தனக்குள் உள்ளடக்கி நிற்கின்றான்.

பாடல் #14: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

கடந்துநின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணன்எம் மாயன்
கடந்துநின் றான்அவர்க் கப்புறம் ஈசன்
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே.

விளக்கம்:

தாமரை மீது அமர்ந்து கொண்டு முதலாவதாகிய படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்மனையும் கடந்து நிற்கின்றவன் சதாசிவமூர்த்தி. உயிர்களைக் காப்பாற்றும் தொழிலைச் செய்யும் நீல வண்ணனாகிய திருமாலையும் கடந்து நிற்கின்றவன் சதாசிவமூர்த்தி. இவர்கள் இருவருக்கும் அப்புறம் உயிர்களின் மாயையை அழிக்கும் ஈசுவரனையும் கடந்து நிற்கின்றவன் சதாசிவமூர்த்தி. இவ்வாறு மூவரையும் கடந்து அனைத்திற்கும் இறைவனாக இருக்கின்ற சதாசிவமூர்த்தியை யாம் காணும் இடமெல்லாம் கண்டு நின்றோம்.

பாடல் #15: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற
வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தான்அருட்
சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் றானே.

விளக்கம்:

உயிரின் ஆரம்பத்திலிருந்து உயிர்களுக்குப் பாதுகாப்பாக உடலுக்குள்ளே நின்று உலகின் அனைத்து வினை மாற்றங்களுக்கு காரணமாகவும் எங்கும் பரவி விரிந்து இருப்பவனும் உயிர்களுக்குள்ளேயே உணரப்படுபவனுமாய் இருந்து என்றும் அருள் வழங்கும் குறையாத தன்மையுடைய மாபெரும் ஜோதியாகவும் அனைத்திற்கும் நீதியுமாகவும் என்றும் அழியாத சக்தியுமாகவும் இறைவன் நிலைத்து நிற்கின்றான்.

பாடல் #16: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
மாது குலாவிய வாள்நுதல் பாகனை
யாது குலாவி அமரருந் தேவரும்
கோது குலாவிக் குணம்பயில் வாரே

விளக்கம்:

நரம்போடு இருக்கும் கொன்றைப் பூவைச் சூடிக்கொண்டு சுருள் சுருளான சடையை உடையவரும் அழகு நிறைந்து பிரகாசிக்கும் நெற்றியைக் கொண்டிருக்கும் உமாதேவியை தமது இடபாகத்தில் உடையவரும் ஒரு மாசில்லாத தூய்மையானவருமான இறைவனை, மும்மல பற்றுக்கள் இன்னும் நீங்காமல் இருக்கும் அமரர்களும் தேவர்களும் எப்படிக் கூடிக் குலாவுவார்கள்? ஆதலால் இறைவனின் இயல்பை அவர்கள் அறியாமலேயே இருக்கின்றனர்.

பாடல் #17: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

காயம் இரண்டும் கலந்து கொதிக்கினும்
ஆயம் கத்தூரி அதுமிகும் அவ்வழி
தேசம் கலந்தொரு தேவனென் றெண்ணினும்
ஈசன் உறவுக் கெதிரில்லை தானே.

விளக்கம்:

வெங்காயம் பெருங்காயம் ஆகிய இரண்டையும் ஒன்றாக கொதிக்க வைத்தாலும் அதிலிருந்து வரும் வாசனையைவிட கருமையான கத்தூரியிலிருந்து வரும் வாசம் அதிகமாகும். அதுபோலவே உலகெங்கும் எத்தனை தெய்வங்களைத் தேடி அடைந்து அவர்களே இறைவன் என்று எண்ணிக்கொண்டு அவர்களோடு கலந்து முயன்றாலும் அனைத்திற்கும் இறைவனான ஈசுவரனை [சதாசிவமூர்த்தியை] கலந்து பெறும் உறவுக்கு [பேரின்பத்திற்கு] கொஞ்சம் கூட ஈடாகாது.

உள் விளக்கம்:

வெங்காயம் என்பது பருமையான தேகத்தையும் [அன்னமயகோஷம்] பெருங்காயம் என்பது நுண்மையான தேகம் [மனோமய கோஷத்தையும்] குறிக்கும். இவ்விரண்டு தேகங்களும் உயிர்களின் உடலுக்குள்ளே கலந்து இருந்தாலும் அது இறைவனோடு கலந்து பெறும் சூக்கும தேகத்திற்கு ஈடாகாது. உலகப் பற்றுக்கள் எவ்வளவுதான் இன்பத்தைத் தருவதாக இருந்தாலும் அவை அனைத்தும் இறைவனோடு இரண்டறக் கலந்து பெறும் பேரின்பத்திற்கு ஈடாகாது.

பாடல் #18: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி
யதுபதி யாதரித் தாக்கம தாக்கென
இதுபதி கொள்என்ற எம்பெரு மானே.

விளக்கம்:

குபேரன் இறைவன் மேல் கொண்ட தீராத பக்தியினால், அவரை நோக்கிச் செய்த நிறைவான தவத்தை கண்டு மெச்சிய இறைவன் அவனை உலகத்திலுள்ள செல்வங்களுக்கெல்லாம் தலைவனாக ஆக்கிவிட்டு இனி வடக்குத் திசையிலிருக்கும் அழகாபுரியே உன்னுடைய ஊர் நீ அதற்கு அரசன் என்றும் தம்மை நாடி வருபவர்களை ஆதரித்து அவர்களைத் தம் உறவினர்போல ஆதரவு கொடுத்து அவர்களுக்கும் வேண்டிய செல்வம் வழங்குவாயாக என்றும் அருளிய மாபெரும் கருணையாளன் எம்பெருமான்.

உள் விளக்கம்:

உலகப் பற்றுக்களில் விருப்பம் வைக்காமல் இறைவனின் மேல் தீராத அன்பு கொண்டு அவனை எண்ணி வடதிசை நோக்கி [இங்கே வடதிசை என்பது ஏழாவது சக்கரமான சுழுமுனை நாடியின் உச்சமான சகஸ்ரரதளத்தைக் குறிக்கும்] தவம் புரிந்தால் [தியானம் செய்தால்] அளவிடமுடியாத அளவு செல்வங்களைக் [உலக செல்வங்களுக்கும் மேலான செல்வங்களான சித்திகளையும் முக்தியையும்] கொடுத்து அந்தச் செல்வங்களுக்கெல்லாம் நம்மைத் தலைவனும் ஆக்குபவன் எம்பெருமான் இறைவனே.

பாடல் #19: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

இதுபதி ஏலம் கமழ்பொழில் ஏழும்
முதுபதி செய்தவன் மூதறி வாளன்
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதி யாக அமருகின் றானே.

விளக்கம்:

இந்த உலகத்தில் ஏலக்காயின் சுகந்தமான வாசனை வீசக்கூடிய ஏழுவிதமான காடுகளை உருவாக்கியவன் இறைவன். அவற்றை பேரழிவுக் காலத்தில் வெறும் சாம்பல் காடுகளாகவும் மாற்றுபவனும் அவனே. அவன் அனைத்தும் அறிந்த பேரறிவாளன். பிறை நிலாச் சந்திரனை தன் திருமுடியில் அணிந்திருக்கும் இறைவன் தன்னை நோக்கி உயிர்கள் புரியும் உண்மையான தவத்தை மெச்சி அந்த உயிர்களின் உடலையே தான் கொண்ட திருக்கோயிலாக எழுந்தருளும் மாபெரும் அருளாளன்.

உள் விளக்கம்:

சுகந்தமான வாசனை வீசும் ஏழு காடுகள் என்பது அற்புதமான சக்தியை தமக்குள் அடக்கியிருக்கும் ஏழு சக்கரங்களைக் குறிக்கும். உயிர்களின் உடலில் இருக்கும் இந்த ஏழு சக்கரங்களே அவற்றை முக்திக்கு அழைத்துச் செல்லும் வழியை கொடுக்கக்கூடியவை. சக்திவாய்ந்த ஏழு சக்கரங்கள் இருந்தாலும் அவற்றை முறைப்படி தியானத்தால் சக்தியூட்டாமல் விட்டுவிட்டால் உயிர்களின் உடல் ஒரு நாள் அழிந்து வெறும் சாம்பலாக மாறிவிடும் என்பதையே சாம்பலாகும் காடுகள் குறிக்கிறது. இறைவன் முக்காலமும் அறிந்தவன் அவன் பேரறிவாளன் என்பது அவனிடமிருந்து எதையுமே மறைக்க முடியாது என்பதைக் குறிக்கிறது.
மாபெரும் அன்பானவன் சந்திரனை விட குளிர்ச்சியை உடைய இறைவனை நோக்கி உண்மையான தவம் இருந்தால் அந்த உயிர்களின் உடலே இறைவனே மகிழ்ந்து வந்து தங்கும் இடமாகிவிடும். இதுவே முக்தியடையும் வழியுமாகும்.

பாடல் #20: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறநெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவம்
கடிமலர்க் குன்றம் மலையது தானே.

விளக்கம்:

படைப்புக்கள் அனைத்திற்கும் ஆரம்பம் எப்போது அழிவு எப்போது என்பதை முன்னமே தீர்மானித்து அதன்படியே படைத்து அருளுபவனும் தன்னை வணங்கி வழிபடும் அடியவருக்கும் அடியவனாக இருப்பவனும் இறைவனின் தன்மையை உணர்த்தும் அறங்களையும் நெறிகளையும் தேடினால் அது வேதங்களே ஆகும். அத்தகைய இறைவனின் உருவம் எப்படி இருக்கும் என்று தேடினால் இடி இடிக்கும் போது வானத்தில் தோன்றும் மின்னல் ஒளியும் அவன் உருவமே, அப்போது கேட்கும் இடியின் ஓசையும் அவன் உருவமே ஆகும். இப்படி அனைத்தையும் தன் உருவமாகக் கொண்டிருக்கும் இறைவனின் இருப்பிடம் எது என்று தேடினால் வாசனை மிக்க மலர்கள் சூழ்ந்த சோலைகளைக் கொண்ட குன்றுகளெல்லாம் அவன் இருப்பிடமே, அந்தக் குன்றுகள் இருக்கும் மாபெரும் மலைகளும் அவன் இருப்பிடமே.

பாடல் #21: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தஎம்
கோனைப் புகழுமின் கூடலு மாமே.

விளக்கம்:

வானத்திலிருக்கும் பெருத்த மழை மேகம் போல மாயையால் குறைபட்டுக் கிடக்கும் உயிர்கள் அனைத்திற்கும் அவற்றின் பிறவியை அழித்து முக்தியை அருளுபவனும் மந்திரத்தால் ஏவப்பட்ட காட்டு யானையின் உடலைப் பிளந்து தனது ஆடையாக உடுத்திக்கொண்ட இறைவனின் புகழ்களைப் புகழ்ந்து பாடினால் அவன் அருள் பெற்று அவனோடு இரண்டறக் கலந்து விடலாம்.

உள் விளக்கம்:

வானத்திலிருக்கும் பெரிய மழை மேகம் எப்படி வித்தியாசம் பார்க்காமல் அனைத்தின் மேலும் சரிசமமாக மழை பொழிய வைக்கின்றதோ அதுபோலவே, இறைவன் மாபெரும் கருணையால் திருமால், பிரம்மன், தேவர்கள், மனிதர்கள் என்று மாயையால் குறைபட்டுக் கிடக்கும் அனைவரின் மாயையை அழித்து அவர்கள் உய்யுமாறு அருளுகின்றான். அப்படிப்பட்ட இறைவனை வெறும் மந்திரத்தினால் கட்டுப்படுத்திவிடலாம் என்ற எண்ணி தாருகாவனத்திலிருந்த முனிவர்கள் தங்களின் ஒன்றுபட்ட சக்தியைக்கொண்டு யாகக் குண்டத்திலிருந்து மந்திரசக்தியால் தோன்றுவித்த காட்டு யானையை இறைவனை நோக்கி ஏவினார்கள். அவனோ அந்த காட்டு யானையைக் காடே அதிரும்படி கதற இரண்டாகப் பிளந்து அதன் தோலை தனது மேலாடையாக போர்த்தியபடி அதன் தலைமேல் கால் வைத்து கஜசம்ஹாரமூர்த்தியாக அவர்களின் அறியாமையை அகற்றி அருளினான். இப்படி தன்னை எதிர்ப்பவர்களுக்கும் சரிசமமாக அருள் வழங்கி ஒரு தலைசிறந்த அரசனப் போல உயிர்களைப் பாதுகாக்கும் இறைவனின் புகழ்களைப் புகழ்ந்து பாடினால் அவனருள் பெற்று முக்தியடையலாம்.

பாடல் #22: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
நினைத்த தறிவன் எனில்தான் நினைக்கிலர்
எனக்கிறை அன்பிலன் என்பர் இறைவன்
பிழக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே.

விளக்கம்:

இறைவன் தன்னை உண்மையான பக்தியோடு வணங்குபவர்களின் உள்ளத்தில் எழுந்தருளுபவன் அவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மாயக்காரன். அவர்களின் அன்பு கொண்ட உள்ளத்தையே தனக்கு ஒரு நல்ல இடமாக எண்ணி அதிலேயே வசிப்பவன். அவர்களின் மனதில் நினைத்ததையெல்லாம் அறிந்தவன். இறைவனை உண்மையான பக்தியோடு நினைக்காமல் என் மேல் இறைவனுக்கு அன்பில்லை என்று அறியாமையால் பலர் புலம்புகின்றார்கள். இந்தப் பிறவியைவிட்டு முக்தியடைய வேண்டும் என்ற ஆசையில் இறைவன் மீது உண்மையான பக்தியோடு நிற்கின்றவர்களின் பக்கத்திலேயே அவர்களைப் பாதுகாத்துக் கொண்டு நிற்கின்றான் இறைவன்.



பாடல் #23: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணம்
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே.

விளக்கம் :

சர்வ வல்லமை படைத்தவனும் அக்கினிக்குத் தலைவனானவனும் காட்டு யானைத் தோலை ஆடையாகப் போர்த்தியவனும் மும்மலங்கள் தனது அடியவர்களைப் பாதிக்காது நில் என்று கட்டளையிட்டவனும் அனைத்து உயிர்களுக்கும் சரிசமமாக நீதியை வழங்குபவனுமாகிய எம்பெருமான் இறைவனை அறியாமையால் இல்லை என்று கூறாதீர்கள். வானத்து தேவர்கள் முதல் அனைத்து உயிர்களுக்கும் இரவும் பகலும் இடையறாது அருளை வழங்கி நிற்கின்றான் இறைவன்.

உள் விளக்கம்:

இறைவன் சர்வ வல்லமை படைத்தவன். குண்டலினி அக்கினி, உணவை செரிக்கச் செய்யும் ஜடராக்கினி, கடல் நீரை கரை தாண்டாமல் வைத்திருக்கும் படபாக்கினி, உலகின் தட்பவெப்பத்தைக் கட்டுப்படுத்தும் பூமியின் மைய அக்கினி, எரிமலைக் குழம்பாக வெடித்துவரும் அக்கினி முதலாகிய அனைத்து அக்கினிகளுக்கும் இறைவன் தலைவன். உயிர்களின் உடலில் குண்டலினி அக்கினி இருக்கும் மூலாதாரத்தில்தான் அவர்களின் நல்கர்மாக்கள் இருக்கின்றன. அவற்றை மேலெழும்பவிடாமல் மும்மலங்களாகிய ஆணவம், கன்மம், மாயை ஆகியவை யானை போன்ற கனத்துடன் தடுத்துக்கொண்டு எளிதில் அசைக்க முடியாமல் இருக்கின்றன. பிறவியை விட்டு நீங்கி இறைவனை அடையவேண்டும் என்ற உண்மையான பக்தியோடு இறைவனை வணங்கும் அடியவர்களின் முக்திக்கு உதவும் நல்கர்மாக்களை மேலெழுப்ப யானை போன்ற மும்மலங்களை இறைவன் தனது இடையில் ஆடையாக அணிந்துகொண்டு அவை தம் அடியவர்களின் முத்தியடையும் வழியைத் தடுக்காது நில்லுங்கள் என்று கட்டளையிட்டு தம் அடியவர்களை பிறவிப் பிணியிலிருந்து காப்பாற்றுகின்றவன் இறைவன். அனைத்திற்கும் நீதியாகவும் மாபெரும் கருணையாளனாகவும் இருக்கும் இறைவனை அறியாமையால் உணராதிருந்து அவனை இல்லை என்று கூறவேண்டாம். அவன் இரவும் பகலும் எப்போதும் தம்மை நாடிவரும் உயிர்களுக்கு அருளை இடைவிடாமல் அருளிக்கொண்டேதான் இருக்கின்றான்.

பாடல் #24: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி
தேற்றுமின் என்றுஞ் சிவனடிக் கேசெல்வம்
ஆற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே.

விளக்கம் :

இறைவனின் பெருமைகளை எப்போதும் போற்றிப் பாடியும் அவன் புகழ்களை வாழ்த்தியும் அவனது திருவடியை எண்ணி வணங்குபவர்கள் மிகப் பெரும் அருட் செல்வம் சேர்ப்பவர்கள். உலகத்திலுள்ள செல்வங்களே பெரிது என்ற மாயையின் மயக்கத்தில் இருக்காமல் இறைவனின் திருவடியை எண்ணிப்பெறும் அருட் செல்வமே உண்மையானது என்று உணர்ந்தவர்கள் செல்லும் வழிகளிலெல்லாம் அவர்களைக் காத்து அவர்களோடு இருக்கின்றான் இறைவன்.

பாடல் #25: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே.

விளக்கம்:

பிறப்பில்லாதவனும், பிறை நிலாவைத் தலைமுடியில் சூடியவனும் மிகப்பெரும் அருளாளனும் இறப்பில்லாதவனும் எல்லோருக்கும் இன்பங்களை வழங்கி அருளுபவனும் எவரையும் விட்டு எப்போதும் நீங்காதவனுமாகிய எம்பெருமான் சதாசிவமூர்த்தியைத் தினமும் வணங்குங்கள். அப்படி அவனை வணங்கி வந்தால் மாயையால் மறைக்கப்பட்டிருக்கும் சிற்றறிவு நீங்கி இறைவனின் திருவடியை என்றும் மறக்காத பேரறிவைப் பெறலாம்.

பாடல் #26: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

தொடர்ந்துநின் றானைத் தொழுமின் தொழுதால்
படர்ந்துநின் றான்பரி பாரக முற்றும்
கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
புணர்ந்திருந் தானடிப் புண்ணிய மாமே.

விளக்கம் :

அனைத்து உயிர்களையும் விட்டு நீங்காமல் அவர்களுடனேயே என்றும் நிற்கின்றவனாகிய இறைவனைத் தினமும் வணங்குங்கள். அவ்வாறு வணங்கி வந்தால் உலகம் மற்றும் அண்டசராசரங்கள் முழுவதும் படர்ந்து விரிந்து இருப்பவனும் அவற்றையும் தாண்டி நிற்பவனும் உயிர்களின் தலையுச்சியிலிருக்கும் ஏழாவது சக்கரமான சகஸ்ரரதளத்தின் ஆயிரம் தாமரை இதழ்களில் வசிப்பவனுமாகிய எம்பெருமான் சதாசிவமூர்த்தியுடன் கலந்து அவன் திருவடியை எப்போதும் காணும் புண்ணியத்தை அடையலாம்.

பாடல் #27: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

சந்தி எனத்தக்க தாமரை வான்முகத்து
அந்தமில் ஈசன் அருள்நமக் கேயென்று
நந்தியை நாளும் வணங்கப் படும்அவர்
புந்தியின் உள்ளே புகுந்துநின் றானே.

விளக்கம்:

சூரியன் மறையும் மாலை நேரத்தில் தெரியும் வானத்தின் நிறம் போன்ற செந்தாமரை மலர் விரிந்து தெரியும் அழகைப் போன்ற முகத்தை உடையவரும் முடிவென்பதே இல்லாதவருமான எம்பெருமான் சதாசிவமூர்த்தியின் அருள் தமக்கே வேண்டும் என்று பக்தியோடு தம்முடைய குருவை நாளும் வணங்கி வருபவர்களின் எண்ணத்தில் இறைவன் உறைந்து இருக்கின்றான்.

பாடல் #28: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

இணங்கிநின் றான்எங்கு மாகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் னாகிநின் றானும்
உணங்கிநின் றான்அம ராபதி நாதன்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே.

விளக்கம்:

அனைத்து உயிர்களுடனும், எங்கும் எதிலும் கலந்து இருப்பவனும், உலக வழக்கங்களுக்கு மாறுபட்டு நிற்கின்றவனும், அனைத்திற்கும் ஆரம்பமாகவும் அவற்றின் முடிவாகவும் இருப்பவனும், தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய இந்திரனுக்கும் தலைவனாக இருப்பவனுமாகிய எம்பெருமான் சதாசிவமூர்த்தி, தன்னை உண்மையான பக்தியோடு வணங்கி நிற்பவர்கள் செல்லும் வழிகளிலெல்லாம் அவர்களைப் பாதுகாத்துக்கொண்டு துணையாக வருகின்றான்.

பாடல் #29: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

காணநில் லாய்அடி யேற்குற வாருளர்
நாணநில் லேன்உன்னை நான்தழு விக்கொளக்
கோணநில் லாத குணத்தடி யார்மனத்
தாணியன் ஆகி அமர்ந்துநின் றானே.

விளக்கம்:

இறைவனை எப்போதும் நினைத்துக்கொண்டிருப்பதிலிருந்து மாறாத குணமுடைய அடியவர்களின் மனதில் ஆணி அடித்தது போல அமர்ந்து இருக்கும் எம்பெருமான் சதாசிவமூர்த்தியே உங்களைக் காண வேண்டும் என்ற ஆசையால் துடிக்கும் எமது முன் நீங்கள் எழுந்தருள வேண்டும். நீங்கள் எம் முன் எழுந்தருளிவிட்டால் உங்களை உடனே எம்மோடு ஆரத்தழுவிக்கொள்வதில் யாம் வெட்கப் படமாட்டோம்.

பாடல் #30: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

வானின் றழைக்கும் மழைபோல் இறைவனும்
தானின் றழைக்குங்கொல் என்று தயங்குவார்
ஆனின் றழைக்கும் அதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது ஞானம் கருதியே.

விளக்கம்:

வானத்திலிருந்து பெய்யும் மழை வேண்டிவர் வேண்டாதவர் என்றில்லாமல் அனைவரின் மீதும் பொதுவாக பெய்கிறது. அதுபோல இறைவனின் அருள் வேண்டிவர் வேண்டாதவர் என்றில்லாமல் அனைவரின் மீதும் இறையருள் கிடைக்கும் என்று எண்ணிக்கொண்டு இறைவனை நாடிச் செல்ல சிலர் தயங்குவார்கள். எவ்வாறு கன்று தன் பசியை தாய்ப்பசுவை நோக்கிக் கதறித் தெரிவிக்கின்றதோ அதுபோலவே குருவான எம்பெருமான் சதாசிவமூர்த்தியை நான் வேண்டி அழைப்பது எமது ஞானப் பசியை அவர் தீர்க்கவேண்டும் என்கிற வேண்டுதலால் தான்.

பாடல் #31: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

மண்ணகத் தான்ஒக்கும் வானகத் தான்ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான்ஒக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே.

விளக்கம்:

மண்ணுலகில் வாழும் மனிதர்களுக்கு மனிதவடிவிலும் விண்ணகத்தில் உள்ள தேவர்களுக்கு தேவவடிவிலும் முத்திஅடைபவர்களுக்கு வீடுபேறுதருபவனாகவும் சித்திகளை விரும்பியவர்களுக்கு சித்தனாகவும் இனிய பாடல்களின் இன்னிசையாகவும் விளங்கும் எம்பெருமான் சதாசிவமூர்த்தியை ஞானக் கண்ணால் கண்டுணர்ந்து அவர் மேல் அளவில்லாத அன்புகொண்டு நின்றிருந்தோம்.

பாடல் #32: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

தேவர் பிரான்நம் பிரான்திசை பத்தையும்
மேவு பிரான்விரி நீர்உல கேழையும்
தாவு பிரான்தன்மை தானறி வார்இல்லை
பாவு பிரான்அருள் பாடலும் ஆமே.

விளக்கம்:

தேவர்களுக்கெல்லாம் தலைவனாக, தேவர்களோடு கலந்து இருப்பவனும் நமக்கும் தலைவனாக நம்மோடு கலந்து இருப்பவனும் பத்து திசைகளிலும் (எட்டுத்திசைகள் மற்றும் ஆகாயம் பூமி ஆகியவை) பரவி இருப்பவனும் பெரும் கடலால் சூழப்பட்டுள்ள ஏழு உலகங்களையும் தாண்டி இருப்பவனுமாகிய எம்பெருமான் சதாசிவமூர்த்தியின் தன்மை என்னவென்பதை யாரும் அறிந்துகொள்ளவில்லை. எங்கும் எதிலும் பரந்து நிறைந்து இருக்கும் அந்தப் பரம்பொருளின் அருளைப் பற்றியே யாம் பாடுகின்றோம்.

பாடல் #33: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

பதிபல ஆயது பண்டிவ் உலகம்
விதிபல செய்தொன்று மெய்ம்மை உணரார்
துதிபல தோத்திரம் சொல்லவல் லாரும்
மதிஇலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே.

விளக்கம்:

பண்டைய காலத்தில் இருந்து பலவிதமான தெய்வங்களை இந்த உலகத்தில் உள்ளவர்கள் வணங்கினார்கள். அவர்கள் ஒவ்வொரு தெய்வத்திற்கும் வரைமுறைகள் விதிமுறைகளை வகுத்தனர். பல விதிமுறைகளை வகுத்தும் பலவிதமான துதிகளையும் தோத்திரங்களையும் இசையோடு பாட வல்லவர்கள் கூட உண்மை என்னவென்று உணராமல் உண்மையான ஞானத்தை அடைய முடியாதவர்கள் நெஞ்சத்தில் அமைதி இல்லாமல் துன்பப்பட்டுக்கொண்டே இருக்கின்றார்கள்.

பாடல் #34: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

சாந்து கமழும் கவரியின் கந்தம்போல்
வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடரன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே.

விளக்கம்:

வாசனையில்லாத வெறும் கூந்தலில் எப்படி வாசனைப் பொருட்களை அரைத்து எடுத்த சாந்தைப் பூசியவுடன் இனிமையான வாசனை வருகின்றதோ அதுபோலவே உண்மையில்லாத வெறும் உலகப் பற்றுக்களை விட்டுவிட்டு உண்மையான இறைவனை அடைந்து சிவமனம் கமழும் முக்தியைப் பெறுவதற்கு இறைவன் அமர்களுக்கு அருளிய மெய்ஞான வழி என்னவென்றால் ஆயிரம் சூரியனைப் போன்று பிரகாசிக்கும் பேரறிவு ஒளியைக் கொடுப்பது ஓம் நமசிவாய எனும் திருநாமம். அதன் அருமையை உணர்ந்ததால் தான் செயலற்று ஓய்ந்து இருக்கும் போதும் செயல்களைச் செய்து கொண்டு இருக்கும் போதும் அந்தத் திருநாமத்தை இடைவிடாது போற்றிப் புகழ்ந்துகொண்டே இருக்கின்றேன்.

பாடல் #35: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

ஆற்றுகி லாவழி யாகும் இறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்
மேற்றிசைக் கும்கிழக் குத்திசை எட்டொடும்
ஆற்றுவன் அப்படி ஆட்டவும் ஆமே.

விளக்கம்:

முக்தியை கொடுப்பவரும் அதற்க்கான வழியாகவும் இருப்பவருமான இறைவனை போற்றக் கூடிய வழிகள் அனைத்திலும் போற்றியும் புகழ்ந்தும் இருந்தோமேயானால் எட்டுத்திசைகளோடு மேல்திசை (வானம்) கீழ்திசை (பூமி) இரண்டு திசைகளையும் சேர்த்து பத்து திசைகளையும் வழி நடத்திச் செல்லும் இறைவன் நம்மையும் நல்வழிநடத்திச் சென்று முக்தியையும் அருளுவான்.

பாடல் #36: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெறலாமே.

விளக்கம் :

உயிரின் தந்தையாகவும், குருவாகவும் உள்ள இறைவனை தெவிட்டாத அமுதம் போன்றவனை வேண்டுவோர்க்கு வேண்டியதை அருளும் தனக்கு ஒப்பில்லாத வள்ளலை ஊழியைச் செய்கின்ற முதல்வனை வரைமுறையின்றி எத்தன்மையிலும், எவ்வழியில் வழிபட்டாலும் அவ்வழியிலே ஈசனின் அருளைப் பெறலாம்.

பாடல் #37: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

நானும்நின் றேத்துவன் நாள்தொறும் நந்தியைத்
தானும்நின் றான்தழல் தானொக்கு மேனியன்
வானில்நின் றார்மதி போல்உடல் உள்ளுவந்
தூனில்நின் றாங்கே உயிர்க்கின்ற வாறே.

விளக்கம் :

இறைவன் திருவருளால் நாள்தோறும் குருவாய் இருக்கும் சிவனை வழிபட்டு நிற்கின்றேன். அந்த சிவன் சிவப்பாய் எரியும் நெருப்புத்தழல் போன்ற வெளிச்சமுடன் எம்முடன் நிற்கின்றான். வானத்தில் இருளை நீக்கிப் பிரகாசமாய் ஒளிரும் நிலவைப் போல குருவை வணங்கி நிற்பவர்களின் உடலுக்குள் மகிழ்ந்து வந்து அங்கே உயிருக்கு உயிராக நின்று அஞ்ஞான இருளை அகற்றும் பேரொளியாய் இருக்கின்றான்.

பாடல் #38: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

பிதற்றொழி யேன்பெரி யான்அரி யானைப்
பிதற்றொழி யேன்பிற வாஉரு வானைப்
பிதற்றொழி யேன்எங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்றொழி யேன்பெரு மைத்தவன் நானே.

விளக்கம்:

அனைத்தையும் விட பெரியவனும் கிடைப்பதற்கு மிகவும் அரிதானவனும் பிறவியே இல்லாமல் உருவானவனும் நந்தி என்ற பெயரில் எமக்குள் குருவாக வந்து இருப்பவனும் பெருமை மிக்க தவத்தின் பலனாக கிடைப்பவனுமாகிய சதாசிவமூர்த்தியின் மேல் யான் கொண்ட தீராத அன்பினால் அவனின் பெருமைகளையும் புகழ்களையும் எப்போதும் ஓயாமல் சொல்லிக்கொண்டே இருப்பேன் யான்.

பாடல் #39: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தம்செய் தீசன் அருள்பெற லாமே.

விளக்கம்:

இறைவனின் எல்லையற்ற குணங்களை உணர்ந்து புகழ்ந்து போற்றக்கூடியவர்களின் மனதின் உள்ளே ஜோதியாய் பரவி இருப்பவனும் அடியவர் உள்ளத்தையே கோயிலாக கொண்டு அங்கே பெருமகிழ்வோடு வீற்றிருக்கும் எம்பெருமான் சதாசிவமூர்த்தியை போற்றியும் புகழ்ந்தும் எம்பெருமான் என்று உரக்க அவன் நாமத்தை கூறியும் அன்போடு இருந்தால் அவனின் அருளைப் பெறலாம்.

பாடல் #40: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

குறைந்தடைந் தீசன் குரைகழல் நாடும்
நிறைந்தடை செம்பொனின் நேரொளி ஒக்கும்
மறைஞ்சடம் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப்
புறஞ்சடம் செய்வான் புகுந்துநின் றானே.

விளக்கம்:

தூய்மையான ஒளி நிறைந்த பொன்னை புடம் போட்டால் கிடைக்கும் பிரகாசத்தைப் போன்ற பேரொளியை உடைய இறைவனை உயிர்கள் தங்களின் குறைகளை உணர்ந்து தாழ்மையோடு பெருமைக்குரிய இறைவனின் திருவடிகளைத் தேடிச் சரணடைந்து நெஞ்சில் வஞ்சமின்றி ஆணவமின்றி போற்றிப் புகழக்கூடியவர்களின் உள்ளத்துள் இறைவன் மகிழ்வோடு வந்து நின்று அவர்களை எப்போதும் பாதுகாத்து அருளுவான்.

பாடல் #41: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

சினம்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
புனம்செய்த நெஞ்சிடைப் போற்றவல் லார்க்குக்
கனம்செய்த வாள்நுதல் பாகனும் அங்கே
இனம்செய்த மான்போல் இணங்கிநின் றானே.

விளக்கம்:

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து சீறிக்கொண்டு எழுந்த ஆலகால விஷம் யாரையும் தீண்டாதவாறு தாமே அருந்தி அனைவரையும் காத்தருளிய தேவர்களின் தலைவனும் அந்த விஷம் உள்ளே இறங்கிவிடாமல் கழுத்திலேயே தடுத்து வைத்த பேரொளி வீசும் நெற்றியைக் கொண்ட உமையம்மையாரைத் தன் உடலின் சரி பாதியாகக் கொண்ட சிவபெருமானை தமது குறைகளையும் தாண்டிய உறுதியோடு நெறி வழியில் சென்று இறைவனைத் தம் நெஞ்சத்தினுள்ளே வைத்துப் பூஜிக்கக்கூடியவர்களுடன் பெண் மானைச் சேர்ந்த ஆண் மான் போல எப்போதும் பிரியாது இணைந்து நிற்கின்றான்.

உள் விளக்கம்:

உண்மையான பொருளான இறைவனை அடையும் ஆசையில், அவனை நெஞ்சத்தில் வைத்துப் போற்றிப் புகழ்ந்து வரும் அடியவர்களின் நெஞ்சத்திலிருந்து, ஆணவம், அகங்காரம், ஆத்திரம் முதலிய விஷங்கள் அவர்களைப் பாதிக்காதவாறு தாமே எடுத்துக்கொண்டு, அவர்களைச் சூழ்ந்துகொண்டு இறைவனை அடையவிடாமல் தடுக்கும் கர்மங்களை அவர்களின் வழியில் குறுக்கிடாதவாறு தடுத்து நிறுத்திவிட்டு, அவர்கள் செல்லும் நேர்வழிப் பாதையில் அவர்களோடு இணைந்து ஒன்றாக நடந்து வந்து, அவர்களைக் காத்தருள்வான் சதாசிவமூர்த்தி.

பாடல் #42: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

போயரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயக னான்முடி செய்தது வேநல்கு
மாயகஞ் சூழ்ந்து வரவல்ல ராகிலும்
வேயன தோளிக்கு வேந்தொன்றுந் தானே.

விளக்கம்:

சிவபெருமானை அடைக்கலம் புகுந்து துதிப்பவர்கள் பெறத்தக்க பயன் என்னவென்றால் நான்கு திருமுடியுடைய பிரம்மன் படைப்பான மாய உலகில் மறுபடியும் மறுபடியும் பிறக்க வேண்டியவர்களானாலும் மூங்கில் போன்ற திரட்சியான தோள்களையுடைய உமாதேவியின் தலைவனான சிவபெருமான் அவர்களுடன் பொருந்தி இருப்பான்.

பாடல் #43: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

அரனடி சொல்லி அரற்றி அழுது
பரனடி நாடியே பாவிப்ப நாளும்
உரனடி செய்தங் கொதுங்கவல் லார்க்கு
நிரனடி செய்து நிறைந்துநின் றானே.

விளக்கம் :

இறைவன் திருவடியை நினைத்து அவன் நாமத்தை கூறி அன்பால் கசிந்துருகி அழுது ஆராய்ந்து தெளிந்து இறைவன் திருவடியை நாள்தோறும் உறுதியான உள்ளத்தோடு தியானித்து அந்த உணர்விலே இலயித்து இருப்பவர்களுக்கு திருவடிபேற்றை அருளி இறைவன் அவர்களுடன் நிறைந்து இருப்பான்.

பாடல் #44: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே.

விளக்கம் :

போற்றுவார்கள் அமரர்கள் தூய நிர்மல இறைவனின் திருவடியை போற்றுவார்கள் அசுரர்கள் தூய நிர்மல இறைவனின் திருவடியை போற்றுவார்கள் மனிதர்கள் தூய நிர்மல இறைவனின் திருவடியை யாமும் எமது அன்பினுள் அவனை போற்றி நிலைபெறச்செய்தேன்.



பாடல் #45: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

விதிவழி அல்லதிவ் வேலை உலகம்
விதிவழி இன்பம் விருத்தமும் இல்லை
துதிவழி நித்தலும் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவன் ஆமே.

விளக்கம்:

கர்ம விதிப்படியே இந்த உலகம் இயங்குகின்றதே அன்றி வேறில்லை. உயிர்கள் பெறும் இன்பமும் துன்பமும் அவரவர்களின் கர்ம விதிப்படியே இருக்குமேயன்றி மாறி இருப்பதில்லை. இருப்பினும் முக்தியடைய வேண்டும் என்கிற எண்ணத்தில் இறைவனை தினமும் வணங்கித் துதித்து வரும் உயிர்களுக்கு அவர்களின் கர்ம விதிகளை அகற்ற சூரியன் போல் ஒளியாய் வந்து இறைவன் முக்திபெறும் வழியைக் காட்டி அருள்வான்.



பாடல் #46: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

அந்திவண் ணாஅர னேசிவ னேஎன்று
சிந்தைசெய் வண்ணந் திருந்தடி யார்தொழ
முந்திவண் ணாமுதல் வாபர னேஎன்று
புந்திவண் ணன்எம் மனம்புகுந் தானே.

விளக்கம்:

மாலைநேர அந்தி சூரியனைப் போன்ற சிவந்த நிறத்தையுடைய பிறவியை அழிக்கும் அரனே சிவனே என்று மனதில் எண்ணிக்கொண்டே இருந்து இறைவனைத் தொழுகின்ற மனம் திருந்திய அடியவர்களுக்கும் அனைத்திற்கும் ஆரம்பமானவனே அனைத்திற்கும் முதல்வனே ஆதியானவனே என்று துதிக்கும் எமக்கும் ஞான ரூபமான இறைவன் எமது மனத்துள் புகுந்து நிற்கின்றான்.

பாடல் #47: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனையுள் இருந்த பருந்தது போல
நினையாத வர்க்கில்லை நின்இன்பம் தானே.

விளக்கம்:

கர்மவினைப் பயனால் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டுக்கொண்டே எப்போதும் இறைவன் சிந்தனையில் இருக்கக் கூடியவர்கள் மாபெரும் தவம் செய்பவர்களுக்கு ஈடானவர்கள். இறைவனை எப்போதும் நினைத்துக் கொண்டே இருப்பவர்கள் அவனின் பேரன்பிலேயே எப்போதும் நிற்கின்றார்கள். பனைமரத்தில் கூடு கட்டி வாழும் பருந்து பனைமரத்தின் பலன்களை அனுபவிக்காமல் (சுவையான பனம்பழங்களையோ இலைகளையோ பட்டைகளையோ உண்ணாமல்) வெளியில் உணவு தேடி அலைகின்றதோ அதுபோலவே இறைவன் அருகில் இருந்தும் இறைவனை நினைக்காமல் இருக்கின்றவர்களுக்கு பேரின்பம் எப்போதும் கிடைப்பதில்லை.

பாடல் #48: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்
படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கென்று மேவிநின் றேனே.

விளக்கம்:

அடியவர்கள் போற்றிப் புகழும் தேவர்களின் தலைவனை தலை தாழ்த்தி வணங்கி அனைத்திற்கும் முதல்வனானவனை எனது எண்ணத்தில் வைத்து உலகமனைத்திலும் உள்ள உயிர்களுக்கு அருளும் ஆதிப் பொருளானவனை எனது தந்தை என்று நினைத்து ஆன்ம இருளைப் போக்கும் எப்போதும் அனையாத மணிவிளக்கு அவன் என்று உணர்ந்து அவனோடு கலந்து நின்றேன்.

பாடல் #49: பாயிரம் - 1. கடவுள் வாழ்த்து

பரைபசு பாசத்து நாதனை உள்ளி
உரைபசு பாசத் தொருங்கவல் லார்க்குத்
திரைபசு பாவச் செழுங்கடல் நீந்திக்
கரைபசு பாசம் கடந்தெய்த லாமே.

விளக்கம்:

மாயையால் உயிர்களைக் கட்டிப்போடும் பரை (அசையாசக்தி), மும்மலங்களால் கட்டுண்ட ஆன்மாவாகிய பசு, ஆன்மாக்களை உலகோடு கட்டிப்போடும் பாசம் (உலகப் பற்றுக்கள்) இவை அனைத்திற்கும் தலைவனான இறைவனை உள்ளத்தில் வைத்துப் போற்றிப் புகழ்ந்து அன்பினால் அவனோடு கலந்து இருக்கக்கூடியவர்களுக்கு ஆன்மாவின் கர்மாக்கள் பெருங்கடல் போன்று சூழ்ந்து மெய்ஞானத்தை மறைக்கும் திரைபோல இருந்தாலும் இறைவனின் அருளால் அந்தக் கடலையும் நீந்திக் கரையேறி மும்மலக்கட்டுக்களை அறுத்து உலகப் பற்றுக்களை ஒதுக்கி மாயையைக் கடந்து முக்தியை எய்தலாம்.

பாடல் #50: பாயிரம் – 1. கடவுள் வாழ்த்து

சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்
றாடுவன் ஆடி அமரர்பி ரான்என்று
நாடுவன் நானின் றறிவது தானே.

விளக்கம்:

இறைவனின் திருவடிகளை என் தலைமேல் சூடிக்கொள்வேன். அவனின் திருவடிகளை என் நெஞ்சத்தில் வைத்துக்கொள்வேன். எம்பெருமான் என்று அவன் புகழ்களைப் பாடுவேன். பலவித மலர்களை அவன் திருவுருவத்தின் மேல் தூவி அவனைப் பணிந்து நின்று அவன் முன்னால் அவன் பெருமைகளைப் பாடிக்கொண்டே ஆடுவேன். ஆடியபின் அமரர்களின் தலைவனான இவனே எனக்கு முக்தியளிக்கக்கூடியவன் என்று அவனை நாடி அடைந்தபின் அனைத்தும் அவனே எனும் உண்மை ஞானத்தை அறிந்து அவனுடன் கலந்து நிற்பேன்.

உள்விளக்கம்:

இறைவனை அடைந்து முக்திபெற மாபெரும் தவங்கள், யோகங்கள், யாகங்கள் இருந்தாலும் அவனது திருவடியை எண்ணத்தில் எப்போதும் வைத்து அவனைப் புகழ்ந்து பாடி ஆடி பலவித மலர்களைத் தூவி பூஜித்தாலே அவனை நாடி முக்தியை அடையலாம். இதுவே யாம் அறிந்த சிறந்த உபாயம் என்று திருமூலர் அருளுகின்றார்.

பாடல் #51: பாயிரம் – 2. வேதச் சிறப்பு

வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத் தகும்அறம் எல்லம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே.

விளக்கம்:

வேதங்களை விட இறைவன் வழங்கிய அறம் வேறொன்றும் இல்லை. ஓதுவதற்கும் அதன்படி நடப்பதற்கும் ஏற்ற அறங்கள் எல்லாம் வேதத்தில் உள்ளது. நமது முன்னோரான அறிவிற் சிறந்த ஞானிகள் அனைவரும் இறைவன் வழங்கிய வேதத்தை ஏன் எதற்கு என்கிற வீண் விவாதங்கள் செய்யாமல் அனைவரும் இறைவன் வழங்கிய வேதத்தை ஓதியே முக்தியைப் பெற்றார்கள்.

பாடல் #52: பாயிரம் – 2. வேதச் சிறப்பு

வேதம் உரைத்தானும் வேதியன் ஆகிலன்
வேதம் உரைத்தானும் வேதம் விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்காய்
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே.

விளக்கம்:

வேதங்கள் ஓதுபவர்கள் அனைவரும் வேதியர்கள் ஆக மாட்டார்கள். வேதங்களின் அர்த்தங்களை உணர்ந்து அதன்படி நடப்பவர்களே உண்மையான வேதியர்கள் ஆவார்கள். இறைவன் வேதங்களை வழங்கியது உயிர்கள் அறங்களை தெரிந்து கொண்டு அதன்படி நடந்து உண்மைப் பொருளான இறைவனை உணர்ந்து மெய்ப்பொருளான இறைவனை அடைவதற்க்காகவே.

பாடல் #53: பாயிரம் – 2. வேதச் சிறப்பு

இருக்குரு வாம்எழில் வேதத்தின் உள்ளே
உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி
வெருக்குரு வாகிய வேதியர் சொல்லும்
கருக்குரு வாய்நின்ற கண்ணனும் ஆமே.

விளக்கம்:

சொல்லழகு மிகுந்த வேதத்தின் உள்ளே மந்திர வடிவாக இருப்பவனும் உணர்ந்து வேதத்தை சொல்லும் வேதியர் உள்ளத்தில் உணர்வாக இருப்பவனும் வேதம் சொல்லும் வழி நடக்கும் சிறந்த வேதியர்கள் ஓதும் வேதத்தின் சொற்களில் மறைப் பொருளாகவும் அனைத்தையும் உருவாக்கிய சக்தியாக நின்று அருளுபவனும் எம்பெருமான் முக்கண் முதல்வன் சிவபெருமானே ஆவான்.

பாடல் #54: பாயிரம் – 2. வேதச் சிறப்பு

திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாம்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே.

விளக்கம்:

இறைவனை அடைந்து முக்தி பெறும் வழிகளாகிய சித்தாந்தம் [அறிந்த கருத்துக்கள்] அசித்தாந்தம் [அறியாத கருத்துக்கள்] மற்றும் இறைவனை மனதில் எப்போதும் நினைத்து அவனை பூஜிக்கும் பெருமைக்குரிய பக்தி வழியும் குருவானவர் அருளும் மாபெரும் சிவ வழியில் ஒன்று கூடும் சன்மார்க்க வழியும் இவை அனைத்தும் இறைவனை அடையும் ஒரு வழியே ஆகும் என்பதையே வேதங்கள் ஓதுகின்றன.

பாடல் #55: பாயிரம் – 2. வேதச் சிறப்பு

ஆறங்க மாய்வரு மாமறை ஓதியைக்
கூறங்க மாகக் குணம்பயில் வார்இல்லை
வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்
பேறங்க மாகப் பெருக்குகின் றாரே.

விளக்கம்:

ஆறு அங்கங்களாக விளங்கும் மாபெரும் வேதங்களை (சிட்சை, கற்பம், வியாபகரணம், சந்தோபிசிதம், சோதிடம், நிருத்தம்) ஓதி அருளிய இறைவனை தனது உடம்பினுள்ளே ஒரு அங்கமாக வைத்து அவனின் தன்மைகளை உணர்பவர்கள் யாரும் இல்லை. அவனைத் தமது உடலிலிருந்து வெளியே இருக்கும் ஒரு அங்கமாக எண்ணிக்கொண்டு பலவித செயல்களைச் செய்கின்றனர். அப்படிச் செய்து கிடைத்த பயன்களையே உயர்வாகக் கருதி அதையே பெருக்கிக் கொண்டு இறைவனை உணராமலேயே வாழ்கின்றார்கள்.

பாடல் #56: பாயிரம் – 2. வேதச் சிறப்பு

பாட்டும் ஒலியும் பரக்கும் கணிகையர்
ஆட்டும் ஆறாத அவனியில் மாட்டாதார்
மேட்டு விருப்பார் விரதம்இல் லாதவர்
ஈட்டும் இடம்சென் றிகலலுற் றாரே.

விளக்கம்:

இறைவனைப் பற்றிய பாடல்களை இசையோடு ஒலித்துப் பாடி அதற்கேற்ப பாவமும் காட்டி நடனமாடும் இளம்பெண்கள் அந்தப் பாடல்களின் மூலம் இறைவனை உணர்ந்து முக்திபெறுவதற்கு முயற்சிக்காமல் தங்களின் நடனங்களின் மூலம் பொருள் பெறவே முயற்சிக்கின்றனர். அப்பெண்களின் நடனத்தைக் கண்டு களிப்பவர்களும் அதன் உண்மைப் பொருளை உணராமல் அவர்களின் நடனத்தைக் கண்டு சிற்றின்பத்திலேயே இருக்கின்றார்கள். உயர்வான வேதங்களை உயிர்கள் உய்யும் பொருட்டு உண்மைப் பொருளுணர்ந்து ஓதவேண்டிய அந்தணர்கள் மோட்சம் அடையவேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் அதற்கான ஒழுக்கங்களைக் (விரதங்கள்) கடைப்பிடிக்காமல் பிறர் கொடுக்கும் பொருளுக்காக வேதங்களை ஓதி யாகங்களை வளர்ப்பதால் இந்தப் பெண்களைப் போன்றவர்கள் ஆகின்றார்கள். இவர்களால் செய்யப்படும் யாகங்களைப் பெறுபவர்களும் உண்மைப் பொருள் உணராமல் உலகப் பொருள்களிலேயே மனம் செலுத்துவதால் அப்பெண்களின் நடனத்தைக் காண்பவர்கள் ஆகின்றார்கள். இவ்வர்கள் கொடுக்கும் பொருளுக்கு ஆசைப்படும் அந்தணர்களோ அப்படி பொருள் கிடைக்கும் இடங்களுக்கெல்லாம் சென்று தங்களின் உயர்வான பிறப்பை இழிபிறப்பாக மாற்றித் துன்பத்தில் வாழ்கின்றார்கள்.

பாடல் #57: பாயிரம் - 2. ஆகமச் சிறப்பு

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.

விளக்கம்:

நீல நிற தேகத்தை உடைய உமா மகேஸ்வரியை இடது பாகத்தில் கொண்ட இறைவன் தனது மேல் நோக்கிய ஐந்தாவது முகமான ஈசான முகத்திலிருந்து அரிதான இருபத்து எட்டு ஆகமங்களை தன்னைக் கைகூப்பி வேண்டிக்கொண்ட அறுபத்து ஆறு யோகபுருஷர்களுக்கு மொழிந்து அருளினான்.

இருபத்து எட்டு ஆகமங்களும் அதைக் கேட்ட அறுபத்து ஆறு யோகபுருஷர்களும்:

1. காமிகம்: பிரணவர், திரிகலர், ஹரர்
2. யோகஜம்: சுதா, பஸ்மர், விபு,
3. சிந்தியம்: சுதீப்தர், கோபதி, அம்பிகை
4. காரணம்: காரணர், சர்வருத்ரர், பிரஜாபதி
5. அஜிதம்: சுசிவர், சிவர், அச்சுதர்
6. தீப்தம்: ஈசர், ஈசானர், ஹூதாசனர்
7. சூட்சுமம்: சூட்சுமர், வைஸ்சிரவணர், பிரபஞ்சனர்
8. சகஸ்ரம்: காலர், பீமர், தருமர்
9. அம்சுமான்: அம்புசம்யமர், அர்க்கர், ரவி
10. சுப்ரபேதம்: தசேசர், விக்னேசர், சசி
11. விஜயம்: அனாதிருத்தர், பரமேசுவரர்
12. நிஸ்வாசம்: தசாரணர், சைலசர்
13. சுவாயம்புவம்: நிதனேசர், பிரமர்
14. அனலம்: வியோமர், அக்கினி
15. வீரம்: தேஜஸ், பிரஜாபதி
16. ரௌரவம்: பிரம்மேசர், நந்திகேசர்
17. மகுடம்: சிவர், மகாதேவர்
18. விமலம்: சர்வாத்மகர், வீரபத்திரர்
19. சந்திரஞானம்: அனந்தர், கிரஹஸ்பதி
20. பிம்பம்: பிரசாந்தர், ததீசி
21. புரோத்கீதம்: சூலி, கவசர்
22. லளிதம்: லயர், ஆலயர்
23. சித்தம்: பிந்து, சண்டேசுவரர்

24. சந்தானம்: சிவநிஷ்டர், வாயு
25. சர்வோக்தம்: சோமதேவர், நிருசிம்மர்
26. பாரமேசுரம்: ஸ்ரீதேவி, உசனஸ்
27. கிரணம்: தேவவிபவர், சம்வர்த்தகர்
28. வாதுளம்: சிவர், மகாகாளர்

பாடல் #58: பாயிரம் – 3. ஆகமச் சிறப்பு

அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின் றன்பொருள் ஏத்துவன் யானே.

விளக்கம்:

சதாசிவமூர்த்தி உயிர்கள் உய்யும் பொருட்டு அருளிய சிவாகமங்களை எண்ணினால் அது இருபத்து எட்டு கோடி நூறாயிரம் இவற்றையே விண்ணில் இருக்கும் தேவர்களும் சிவபெருமானின் சிறப்புக்களாகக் கூறினார்கள். அவற்றையே நானும் சிந்தனை செய்து நின்று அவற்றின் பொருளைப் புகழ்ந்து பாடிப் பரப்புகின்றேன்.

பாடல் #59: பாயிரம் – 3. ஆகமச் சிறப்பு

பண்டித ராவார் பதினெட்டுப் பாடையும்
கண்டவர் கூறும் கருத்தறிவார் என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அரன்சொன்ன வாறே.

விளக்கம்:

இறைவனை அடைய ஆகமங்கள் கூறும் பதினெட்டு நிலைகளையும் அதன் உண்மையையும் உணர்ந்தவர்கள் பண்டிதர்கள் ஆவார்கள். இந்தப் பதினெட்டு நிலைகளையும் அரன் எனும் பெயரால் அறியப்படுபவனும் உலகங்கள் அனைத்திற்கும் முதல்வனுமான இறைவன் கூறியவையாகும். இறைவன் கூறியவற்றை அவன் கூறியபடியே விளக்குபவர்களே உண்மையான பண்டிதர்கள் ஆவார்கள்.

பாடல் #60: பாயிரம் – 3. ஆகமச் சிறப்பு

அண்ணல் அருளால் அருளும்திவ் யாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரிது
எண்ணில் எழுபது கோடிநூ றாயிரம்
எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே.

விளக்கம்:

உயிர்கள் தன்னை அடைய இறைவன் அருளிய திவ்யமான ஆகமங்களை விண்ணகத்தில் இருக்கும் அமரர்க்கும் பொருள் விளங்க அரிதானவையாகும். மொத்தம் உள்ள ஆகமங்களை எண்ணினால் அது எழுபது கோடி நூறாயிரம் ஆகும். இத்தனை கோடி ஆகமங்களை எண்ணிக்கொண்டு இருந்தால் நீர் மேல் எழுதிய எழுத்தை எப்படிப் படிக்க முடியாதோ அதுபோல இத்தனை கோடி ஆகமங்களின் பொருளை உணரமுடியாமல் போய்விடும்.



பாடல் #61: பாயிரம் – 3. ஆகமச் சிறப்பு

பரனாய்ப் பராபரம் காட்டி உலகின்
தரனாய்ச் சிவதன்மம் தானேசொல் காலத்து
அரனாய் அமரர்கள் அர்ச்சிக்கும் நந்தி
உரனாய் ஆகமம் ஓங்கிநின் றானே.

விளக்கம் :

பரமாகிய சிவமும் பராவாகிய சக்தியும் சேர்ந்து பராபரமாகிய அனைத்திற்கும் மேலான சதாசிவமூர்த்தி உலகின் தலைவனாய் நின்று எல்லா உயிர்களும் இறைவனை அடைய ஆகமங்களை அருளிய நேரத்தில் அமரர்களுக்கு குருவாய் நிற்கும் இறைவனை அரன் என்று அவர்களால் அர்ச்சிக்கப்பட்டு ஆகமங்கள் கூறும் ஞானத்தின் மொத்த அறிவு உருவமாக உயர்ந்து நின்றான்.

பாடல் #62: பாயிரம் – 3. ஆகமச் சிறப்பு

சிவமாம் பரத்தினில் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவஆ கமம்எங்கள் நந்திபெற் றானே.

விளக்கம்:

பரமாகிய சிவமும் பராவாகிய சக்தியும் சேர்ந்து சதாசிவம் எனும் மாபெரும் பரம்பொருளாக விளங்கி அந்தப் பரம்பொருள் மகேசுவரன், ருத்திரன், திருமால், பிரமன், ஈசுவரன் ஆகிய ஐவர்களும் சதாசிவமூர்த்தியிடமிருந்து பெற்றது மொத்தம் ஒன்பது ஆகமங்கள் ஆகும். அந்த ஒன்பது ஆகமங்களை எங்கள் குருவான நந்தி பெற்று எமக்கு அருளினான்.

பாடல் #63: பாயிரம் – 3. ஆகமச் சிறப்பு

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சித்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே.

விளக்கம்:

எங்கள் குருவான நந்தியிடமிருந்து பெற்ற நல்வழியைக் காட்டும் ஒன்பது ஆகமங்கள் 1. காரணம் 2. காமிகம், 3. அமையப்பெற்ற வீரம் 4. உயர்வான சித்தம் 5. வாதுளம், 6. மற்றவைகளான யாமளம், 7. அனைத்துமாகும் காலோத்தரம் 8. நிறைவுடைய சுப்பிரம், 9. சொல்லிய மகுடம் ஆகியவையாகும்.

பாடல் #64: பாயிரம் – 3. ஆகமச் சிறப்பு

அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ணல் அறைந்த அறிவறி யாவிடின்
என்னிலி கோடியும் நீர்மேல் எழுத்தே.

விளக்கம்:

உயிர்கள் தன்னை அடைய இறைவன் அருளிய சிவாகமங்களை தொகுத்தால் பல கோடிகளாக இருக்கும் என்றாலும் இறைவனை எண்ணி அவனருள் வேண்டி அவன் கொடுக்கும் ஞானத்தை வைத்து அறிந்து கொள்ளலாம். அவ்வாறு இறைவன் கொடுத்த ஞானத்தை கொண்டு ஆகமத்தை உணராமல் வெறும் வார்த்தைகளைக் கொண்டு பொருள் புரியாமல் ஓதினால் அந்த எண்ண முடியாத கோடிகள் அனைத்தும் நீர் மேல் எழுதிய எழுத்துக்கள் போல யாருக்கும் உபயோகம் இல்லாமலேயே இருக்கும்.

பாடல் #65: பாயிரம் – 3. ஆகமச் சிறப்பு

மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்று
ஏரியும் நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரிய மும்தமி ழும்உட னேசொல்லிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே.

விளக்கம்:

மழைக்காலம் கோடைக்காலம் பனி பெய்யும் குளிர்காலம் என எல்லாக் காலமும் ஏரிகளெல்லாம் நீர்வற்றி அனைத்தும் யுகங்களின் முடிவான ஊழிக்காலத்தில் அழியும். ஆரிய மொழியாகிய சமஸ்கிருதத்திலும் தமிழிலும் வேதங்களையும் ஆகமங்களையும் புதுயுகத்தில் பிறக்கும் உயிர்களின் உயிரின் தாயான உமாதேவிக்கு அந்த உயிர்கள் இறைவனை அடையும் பொருட்டு உடனே வழங்கி இறைவன் மாபெரும் கருணை செய்தான்.

பாடல் #66: பாயிரம் – 3. ஆகமச் சிறப்பு

அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறும்
சிமிழ்த்தலைப் பட்டுயிர் போகின்ற வாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும்இவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலு மாமே.

விளக்கம்:

மும்மலங்கள் உயிர்களைவிட்டு விலகுகின்ற முறையையும் மும்மலங்கள் உயிர்களைக் கட்டிப்போடும் முறையையும் பந்தபாசத்தால் பிறந்த இந்த உடலைவிட்டு உயிர் பிரிந்து போகும் முறையையும் இன்னும் பலவற்றை ஆகமங்கள் கூறுகின்றன. தமிழ் மொழி சமஸ்கிருத மொழி ஆகிய இரண்டு மொழியிலும் ஆகமங்கள் கூறி உணர்த்தும் ஒரே உண்மை இறைவன் வழங்கிய ஆகமங்களை அவன் அருளாலேயே ஞானம் பெற்று உணர வேண்டும்.

பாடல் #67: பாயிரம் – 4. குருபாரம்பரியம்

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மரும் ஆமே.

விளக்கம்:

இறைவனே குருவாய் நந்தி தேவராக வந்து உண்மைப் பொருளை உபதேசித்து அருள் பெற்று நாதர் என்று பெயர் பெற்றவர்கள் யாரெனில் சனகர், சனந்தனர், சனாதனர் மற்றும் சனற்குமாரர் ஆகிய நான்கு பேரும். சிவயோகத்தில் சிறந்து இருந்ததால் சிவயோக மாமுனிவர் என்று பெயர் பெற்றவரும். தில்லையில் வந்து இறைவனின் திருநடனத்தைக் கண்டுகளித்த ஆதிசேஷனின் அவதாரமான பாதி மனித உருவமும் பாதி பாம்பு உருவமும் கொண்ட பதஞ்சலி முனிவரும் தன் இடைவிடாத தவத்திற்காக இறைவனிடமிருந்து புலியின் கால்களைப் பெற்றதால் வியாக்கிரமபாதர் என்று பெயர் பெற்றவரும் திருமூலனாகிய யானும் சேர்ந்து மொத்தம் எட்டு பேர்கள் ஆவார்கள்.

பாடல் #68: பாயிரம் – 4. குருபாரம்பரியம்

நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந் தேனே.

விளக்கம்:

குருநாதராகிய நந்தியாகிய இறைவனின் அருளினால்தான் யாம் நாதர் என்ற பெயர் பெற்றோம். நந்தியின் அருளினால்தான் இறந்து கிடந்த இடையனாகிய மூலனைக் கண்டு அழுதுகொண்டிருந்த பசுக்களின்மேல் இரக்கம் கொண்டு அவனின் உடலில் புகுந்தோம். நந்தியின் அருள் இல்லாவிட்டால் இந்த நாட்டின் என்ன செய்துவிட முடியும்? நந்தியின் அருளினால்தான் அவர் காட்டிய வழியின் படியே நானும் இருந்தேன்.

பாடல் #69: பாயிரம் – 4. குருபாரம்பரியம்

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோடு
இந்த எழுவரும் என்வழி யாமே.

விளக்கம்:

இறைவனே குருநாதராக இருந்து அருளிய மந்திரங்களைப் பெற்ற எம்மிடம் சீடர்களாக இருந்து அந்த மந்திரங்களைப் பெற்ற குருவழிமுறையில் வந்தவர்கள் மாலாங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், காலாங்கி நாதன், கஞ்ச மலையன் ஆகிய ஏழு பேர்கள். இவர்கள் ஏழு பேரும் என்வழியில் வந்தவர்கள் ஆவார்கள்.

பாடல் #70: பாயிரம் - 4. குருபாரம்பரியம்

நால்வரும் நாலு திசைக்கொன்று நாதர்கள்
நால்வரும் நானா விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரும் நான்பெற்ற தெல்லாம் பெறுகென
நால்வரும் தேவராய் நாதரா னார்களே.

விளக்கம்:

எம்மிடம் சீடராக இருந்து மந்திரம் பெற்ற ஏழு பேர்களில் முதல் நால்வராகிய இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன் ஆகிய நான்கு பேர்களும் திசைக்கு ஒருவராய் நான்கு திசைகளுக்கும் நாதர்களாக இருந்து குருவிடம் பெற்ற மந்திரத்துடன் அவர்களின் இறையனுபவமும் இறைவனின் அருளும் சேர்த்து பெற்ற அருளையெல்லாம் மற்றவர்களும் பெற்று இன்புற்றிருக்க வேண்டுமென்று அவர்கள் நால்வரும் தேவர்களாகவும், மற்றவர்களுக்கு குருநாதர்களாகவும் ஆனார்கள்.

பாடல் #71: பாயிரம் – 4. குருபாரம்பரியம்

மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்
செழுஞ்சுடர் முன்னொளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்ட கிலானே.

விளக்கம்:

எம்மிடம் சீடர்களாக இருந்த ஏழு பேர்களுக்கும் எம்முள் இருந்து எம்மூலமாக மந்திரங்களை வழங்கியது இறைவனே. அவன் பிறப்பும் இறப்பும் இல்லாத பெருமையை உடையவன். சூரியனின் ஒளி தோன்றுவதற்கு முன்பிருந்து எப்போதும் மாபெரும் ஒளியாக இருப்பவன் அவன். அவனுடைய பெருமைகளை அவன் அருளின்றி யாரிடமிருந்தும் தெரிந்து கொள்ள முடியாது. ஆகவே நாம் இறைவன் அருள் பெற்ற குருநாதர்களின் மூலம் இறைவனின் தன்மைகளையும் அவனை அடையும் வழிகளையும் தெரிந்து கொண்டு அவன் அருள் பெற்று அவனை அடையலாம்.

பாடல் #72: பாயிரம் – 4. குருபாரம்பரியம்

எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையும்
செழுந்தண் நியமங்கள் செய்மினென் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே.

விளக்கம்:

ஏழு கடல்களும் பொங்கியெழுந்து ஏழு மேகங்களும் மும்மாரி மழையைப் பொழிந்து எட்டுத் திசைகளும் நீரால் நிரம்பினாலும் [நீரினால் வரும் ஊழிக்காலப் பேரழிவு வந்தாலும்] பிறப்புக்கு உயர்வைத் தருகின்ற தன்மையுடைய நியமங்களைச் [நல்அறங்கள்] செய்துகொண்டே இருங்கள் என்று அனைத்தையும் பாதுகாத்து அருளுபவனும் சிவப்பான தன்மையுடைய பவளம் போன்ற மேனியை உடையவனும் குளிர்கொண்ட மேகம் போன்ற தன்மையுடைய விரிந்த சடையை உடையவனுமான இறைவன் தன் திருவடியைப் பணிந்து தொழுத நான்கு சனகாதி முனிவர்களுக்கும் [சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர்] அருளினான்.

பாடல் #73: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்து
அந்தி மதிபுனை அரனடி நாடொறும்
சிந்தைசெய் தாகமம் செப்பலுற் றேனே.

விளக்கம்:

குருநாதராக வந்த இறைவனின் இணையில்லாத திருவடிகளை என் தலை மேல் வைத்துக்கொண்டு, அவர் அருளிய அனைத்தையும் எனது புத்திக்குள் புகுந்து நிற்கும்படி நினைவில் நிறுத்திக்கொண்டு சூரியன் மறைவில் தோன்றும் இளம்பிறைச் சந்திரனை தனது திருமுடியில் அணிந்துகொண்டிருக்கும் அரன் என்று அழைக்கப்படும் அந்த இறைவனின் பெருமைகளைப் போற்றி அவன் திருவடிகளை தியானித்துக் கொண்டு நாள்தோறும் அவன் அருளிய ஆகமங்களை சொல்கின்றேன்.

பாடல் #74: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

செப்பும் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பிலி கோடி யுகம்இருந் தேனே.

விளக்கம்:

சிவபெருமானாலேயே சொல்லப்பட்டதால் சிவாகமம் என்ற பேர் பெற்று பெருமை வாய்ந்த ஆகமங்களை அப்பெருமானே குருநாதராக இருந்து சொல்ல அவரின் திருவடிகளை வணங்கி பெற்றுக்கொண்ட பின் ஒரு குறையும் இல்லாத தில்லை அம்பலத்தில் ஆடிய இறைவனின் திரு நடனத்தைக் கண்டு களித்து அந்த ஒப்பில்லாத இறைவனின் நினைப்பிலேயே ஒரு கோடி யுகங்கள் இருந்தேன்.

பாடல் #75: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

இருந்தவக் காரணம் கேளிந் திரனே
பொருந்திய செல்வப் புவனா பதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே.

விளக்கம்:

யாம் தவத்தில் இருக்க முடிந்ததின் காரணத்தைக் கேட்டுக்கொள் இந்திரனே அனைத்து விதமான செல்வங்களையும் கொண்டிருக்கும் உலகங்கள் அனைத்திற்கும் தலைவனானவனும் எளிதில் செய்ய முடியாத அரிய தவம் செய்பவர்களுக்குக் கிடைக்கும் இறைவனின் திருவடிகளை தொழுதபோது எம் பக்தியைக் கண்டு கருணை கொண்டு என்னுடனே இறைவனும் வந்து இருந்ததால் தான் என்னால் ஒரு கோடி யுகம் இருக்க முடிந்தது.

பாடல் #76: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந் தேனின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்மனம் நீங்கி
உதாசனி யாதுட னேயுணர்ந் தோமே.

விளக்கம்:

பிரம்மன், திருமால், உருத்திரன், மகேசுவரன், ஈசன் ஆகிய ஐந்து தெய்வங்களின் மூலம் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என ஐந்து தொழில்களைச் செய்யும் இறைவனாகிய சதாசிவமூர்த்தி அருளிய ஆகமத் தத்துவங்களையும், இயல், இசை, நாடகம் ஆகிய மூன்று தமிழ் மொழிகளையும் நான்மறையாகிய வேதங்களையும் அளவின்றி யாம் பெற்றுக் கொண்டு அவற்றிலேயே மனம் திளைத்து கொண்டிருக்கும் காலங்களின் மேல் மனதைச் செலுத்தாமல் இருந்தபோது இனியும் சென்று கொண்டிருக்கும் காலங்களை உதாசீனப்படுத்தாமல் உடனே காலத்தின் தேவையை உணர்ந்து இவற்றை மற்றவர்களுக்கு வழங்கவேண்டும் என்பதை என்னுடன் இருந்த இறைவன் உணர்த்தினான்.

பாடல் #77: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

மாலாங்க னேஇங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே.

விளக்கம்:

எமது சீடனாகிய மாலாங்கனே இறைவனோடு இருந்த யான் இந்த உலகத்திற்கு வந்ததின் காரணத்தைக் கேட்டுக்கொள். நீல நிற மேனியைக்கொண்டு இறைவனின் திருமேனியில் சரிபாகமாக இருக்கும் சக்தி தேவியும் ஆதிமூலமாகிய இறைவனும் சேர்ந்து உயிர்கள் உய்யும் பொருட்டு புரிந்த திருநடனத்தின் தத்துவங்களையும் இறைவனை அடைய வழிவகுக்கும் அரும்பெரும் ஒழுக்கங்களையும் உள்ளடக்கிய வேதத்தை மற்றவர்களுக்கு எடுத்து உரைக்கவே யான் வந்தேன்.

பாடல் #78: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

நேரிழை யாவாள் நிரதிச யானந்தப்
பேருடை யாளென் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள்சிவன் ஆவடு தண்டுறை
சீருடை யாள்பதம் சேர்ந்திருந் தேனே.

விளக்கம்:

இறைவனின் திருமேனியில் சரிபாகம் கொண்டவளும் என்றும் நீங்காத ஆனந்தத்தின் பெயரை உடையவளும் பிறப்பை நீக்கி என்னை முழுமையாக ஆட்கொண்டவளும் சீரும் சிறப்பும் உடையவளுமாகிய உமா தேவி தம் தலைவன் சிவபெருமானின் அருள் வேண்டி பசு மாடாக இருந்து தவம்புரிந்த திரு ஆவடுதுறைத் திருத்தலத்தில் அவளை அனைத்து எழுந்த நாதராக இருவரும் சேர்ந்து வீற்றிருக்கும் சிவசக்தியின் திருவடிகளைத் தொழுதுகொண்டே நான் அத்திருத்தலத்தில் இருந்தேன்.

பாடல் #79: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவன் ஆவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலில்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே.

விளக்கம்:
திருமேனியில் சரிசமமான பங்கு சக்தி தேவியுடன் சிவபெருமான் வீற்றிருக்கும் திருஆவடுதுறை திருத்தலத்தில் இறைவன் ஞானம் போதித்த படர் அரசமரத்தின் நிழலில் இறைவனோடு சேர்ந்து அவன் திரு நாமங்களை ஓதிக்கொண்டே இருந்தோம்.

பாடல் #80: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே.

விளக்கம்:

இந்த உடலில் எண்ணிலடங்காத கோடிக்கணக்கான வருடங்கள் இரவு பகல் இல்லாத இடத்தில் [சூட்சும வெளி] பல்லாயிரக்கணக்கான தேவர்களாலும் முனிவர்களாலும் சித்தர்களாலும் போற்றிப் புகழப்பெறுபவனும் எம் குருநாதனுமாகிய இறைவனின் ஈடு இணையில்லாத திருவடிகளின் கீழ் அமர்ந்து இருந்தேன்.

பாடல் #81: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே.

விளக்கம்:

இறைவனை அடைய வேண்டும் என்ற ஆசையில் தாமாக முயன்று தவங்கள் செய்யாமல் வாழ்க்கையை வீணே கடத்துபவர்கள் மீண்டும் மீண்டும் பிறவி எடுத்துக் கொண்டே இருக்கின்றார்கள். இப்படிப் பிறவியை வீணாக்காமல் இறைவனை உயிர்கள் அடையும் வழிகள் அனைத்தையும் குருநாதராக இருந்து எனக்குப் போதித்த இறைவன் அவற்றை நன்றாகத் தமிழில் வழங்குமாறே என்னை இங்கே அனுப்பி வைத்தான்.

பாடல் #82: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பால் ஆட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன்நற் போதியின் கீழே.

விளக்கம்:

பேரறிவு ஞானத்தின் தலைவனாகிய எம் குருவாகிய இறைவன் இருக்கும் இடத்தில் ஒரு குறையும் இல்லாமல் ஒன்பது கோடி யுகங்களாக, ஞானத்தால் உருவாகும் அமிர்தப் பால் ஊற்றி இறைவனை அர்ச்சனை செய்து இறைவனின் நல்திருவடியின் கீழ் இருந்தேன்.

பாடல் #83: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

செல்கின்ற வாறறி சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராய்ப்
பல்கின்ற தேவர் அசுரர் நரர்தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே.

விளக்கம்:

நல் நெறிகளின் மூலம் இறைவனை அடையும் வழிகளை அறிந்து சிவனை மனதுள் வைத்துத் துதித்து மனதை வெல்லக்கூடிய பேரறிவு ஞானத்தை மிகவும் பெற்ற ஒரு முனிவராக நான் இருந்த காலத்தில் பல்லாயிரக்கணக்கான தேவர்களும், அசுரர்களும், மனிதர்களும் மேலுலகம் செல்லும் நுண்ணிய (சூட்சும) வானத்தின் வழியே யானும் புகுந்து இந்தப் பூமியை நோக்கி வந்தேன்.

பாடல் #84: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கிங் கருளால் அளித்ததே.

விளக்கம்:

இறைவன் கூறிய உத்தமமான வேதங்களின் பொருளை அவனது அருளால் உள்ளுணர்ந்து ஓதுவதால் சிறப்பு பெறுகின்ற மந்திரங்களை உடலும் மனமும் ஒன்று போல் லயித்திருக்கும் பொழுது உள்ளிருந்து உற்பத்தியாகும் பேரின்ப உணர்வுகளை என்மேல் கொண்ட கருணையால் எம் குருநாதனாகிய இறைவன் எமக்கு அளித்து அருளினான்.

பாடல் #85: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே.

விளக்கம்:

இறைவனை உணர்ந்து இறைவனை அடைந்து யான் பெற்ற பேரின்பம் இந்த உலகத்திலுள்ள அனைவரும் பெற்று இன்புற்றிருக்க வேண்டும் என்றும் அண்டங்கள் அனைத்திலும் உறைந்து நிற்கும் வேதத்தின் உண்மைப் பொருளைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றும் உயிர்களின் உடலோடு கலந்து உயிராக நிற்கும் இறைவனே வேதத்தின் முழுப்பொருள் ஆவார். அந்த இறைவனை உள்ளுணர்வு கொண்டு அனைவரும் அறிந்து கொள்ளவே திருமந்திரத்தை வழங்கினோம். இந்தத் திருமந்திரத்தை மனம் விரும்பி நினைத்து நினைத்துத் துதித்துக்கொண்டு இருப்பவர்களுக்கு இறைவனின் திருவருள் தானாகவே வந்தடைந்து யான் பெற்ற பேரின்பம் கிடைக்கும்.

பாடல் #86: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலா நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடு கூடிநின் றோதலும் ஆமே.

விளக்கம்:

பிறப்பு இறப்பு இல்லாதவனும், நந்தி எனப் பேர் பெற்ற குருநாதனுமாகிய இறைவனை சீரும் சிறப்போடும் வானத்திலிருக்கும் தேவர்களெல்லாம் சென்று கைகூப்பித் தொழும் இறைவனை ஒரு பொழுதும் மறக்காத நெஞ்சத்தினுள் திருமந்திர பாடல்களைப் பதிவேற்றி தடுமாற்றமில்லாத உறுதியான மனதோடு அனைவரும் ஒன்றாகக் கூடி நின்று ஓதி வாருங்கள்.

பாடல் #87: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

அங்கிமி காமைவைத் தானுல கேழையும்
எங்குமி காமைவைத் தானுடல் வைத்தான்
தங்கிமி காமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்
பொங்கிமி காமைவைத் தான்பொருள் தானுமே.

விளக்கம்:

சூரியனின் நெருப்பு அதிகமாகி உலகங்களை அழிக்காதவாறு அளவோடு வைத்தவன் இறைவனே. ஒவ்வொரு அண்டங்களிலும் ஏழு உலகங்களை அளவோடு வைத்தவன் இறைவனே. இந்த உலகங்களில் உயிர்கள் பிறக்க வேண்டி உடலை அளவோடு வைத்தவன் இறைவனே. அந்த உயிர்கள் மேல் நிலையை அடையும் பொருட்டு என்னுள் இருந்து இந்தத் திருமந்திரம் எனும் தமிழ்ச் சாத்திரத்தையும் அளவோடு சொல்ல வைத்தவன் இறைவனே. சொல்லப்பட்ட இந்தத் திருமந்திரத்தின் பொருளை வெறும் வாயால் கூறி பயனில்லாமல் போகாதபடி, அனுபவத்தின் மூலமே அறியும் பொருளாக அளவோடு வைத்தவன் இறைவனே.

பாடல் #88: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

அடிமுடி காண்பார் அயன்மால் இருவர்
படிகண் டிலர்மீண்டும் பார்மிசைக் கூடி
அடிகண் டிலேன்என் றச்சுதன் சொல்ல
முடிகண்டன் என்றயன் பொய்மொழிந் தானே.

விளக்கம்:

தமக்குள் யார் பெரியவர் என்று பிரம்மனும் திருமாலும் வாதிட்டுக் கொண்டிருந்தபோது சிவபெருமான் ஒரு மாபெரும் நெருப்புத் தூணாக நின்று இத்தூணின் அடியையோ அல்லது உச்சியையோ காண்பவரே பெரியவர் என்று அறிவிக்க பிரம்மன் பறந்து உச்சியைக் கண்டுவிடலாம் என்று நினைத்து அன்னப் பறவையாக பறந்து செல்ல திருமால் பூமியைக் குடைந்து அடியை கண்டுவிடலாம் என்று நினைத்து பன்றியாக குடைந்து செல்ல இருவரும் தங்கள் எண்ணப்படி அடியையும் உச்சியையும் காணாமல் பூமியின் மேல் வந்து நிற்க அடியைக் காண முடியவில்லை என்று திருமால் ஒப்புக்கொள்ள பிரம்மன் உச்சியைக் கண்டுவிட்டேன் என்று பொய் கூறினான்.

உள் விளக்கம்:

இந்தப் பாடலில் திருமூலர் ஒரு புராணக் கதையை சித்தரிப்பது போல இருந்தாலும் இறைவனின் திருவடிகளை கண்டு அவன் திருவடிகளின்கீழ் இருப்பதே பேரின்பம் என்பதை அனுபவத்தில் கண்டு அறிந்த திருமூலர் (பாடல் #82 இல் கூறியபடி) அந்தப் பேரின்பத்தை அனைவரும் அடையும் வழியாகவே திருமந்திரத்தை வழங்கினோம் என்பதையே இங்கு உணர்த்துகிறார்.

பாடல் #89: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

பெற்றமும் மானும் மழுவும் பிறிவற்ற
தற்பரன் கற்பனை யாகும் சராசரத்து
அற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்
நற்பத மும்அளித் தான்எங்கள் நந்தியே.

விளக்கம்:

காளையும் (இடபம்), மானும், மழுவும் (ஆயுதம்) தரித்துத் தானே தோன்றிய இறைவனின் எண்ணத்திலிருந்து தோன்றியதே இந்த அண்ட சராசரங்கள் அனைத்தும். இறைவன் என்மேல் கொண்ட கருணையினால், உண்மைப் பொருளையும் வழங்கி அடியவன் என் தலைமேல் தன்னுடைய நன்மை தரும் பொற்பாதங்களையும் வைத்து ஆகமங்கள் அனைத்தையும் எங்களின் குருநாதராக இருந்து வழங்கினான்.



பாடல் #90: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை அச்சிவன் தன்னை யகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே.

விளக்கம்:

உணர்வினால் அறியப்பட வேண்டிய இறைவனையும் அந்த இறைவனை அறிந்து கொள்ளும் அறிவைக் கொடுக்கும் ஞானத்தையும் உயிருக்குள் ஆன்மாக இருக்கும் இறைவனையும் அந்த ஆன்மாவை அறியவிடாமல் தடுக்கும் மாயையும் அந்த மாயையை ஆளும் சிவத்தையும் இந்த சிவத்திலிருந்து வரும் சக்தியையும் சிவமும் சக்தியும் சேர்ந்த சதாசிவமூர்த்தியையும் தனக்குள்ளே உணர்ந்து இறைவனை அடையும் வழிகளான ஒலி ஒளி தத்துவங்கள் அனைத்தையும் விளக்கி யாம் வழங்கியதே இந்தத் திருமந்திர மாலை.

PRANAVA VYAGRAPUREESWARAR , OMAMPULIYUR

பாடல் #91: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

விளக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கரும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து
வளப்பின் கயிலை வழியில்வந் தேனே.

விளக்கம்:

ஆகம வேதப் பொருளை விளக்கி அருளிய குருநாதன் பரம்பொருள் எனப்படும் உண்மையான ஞானத்தின் ஜோதி வடிவானவன். அளவிடமுடியாத பெருமைகளைக் கொண்டவன் ஆனந்த வடிவானவன். மும்மலங்களையும் அறுக்கும் ஆனந்த நடனத்தை ஆடும் கூத்தன் சொன்ன சொல்லைக் கட்டளையாக ஏற்று அதன்படியே நானும் அரும்பெரும் வளங்கள் நிறைந்த திருக்கயிலாய வழியில் இந்த உலகம் தேடி வந்தேன்.

பாடல் #92: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்
நந்தி அருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நானிருந் தேனே.

விளக்கம்:

குருநாதராகிய இறைவனின் அருளினால்தான் நான் இடையன் மூலனின் உடலில் புகுந்தேன். அதன்பிறகும் அவரின் அருளினால்தான் அந்த உடலிலேயே தவ நிலையில் இருந்து சதாசிவமாகவே மாறினேன். அவரின் அருளினால்தான் உண்மையான ஞானத்தை அடைந்து அதனுள்ளேயே உறைந்திருந்தேன். அவரின் அருளினால்தான் அவரோடு எப்போதும் இருந்தேன்.

பாடல் #93: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனும் சோமனும் ஆரழல் வீச
உருக்கிய ரோமம் ஒளிவிடுந் தானே.

விளக்கம்:

இறைவன் வழங்கிய ஆகமங்கள் எவ்வளவு என்று எண்ணமுடியாத அளவு பல கோடிகளாக இருக்க, அந்த ஆகமங்களின் அடிப்படை மூலப் பொருளாக வீற்றிருக்கும் இறைவனே உயிர்களின் உடலுக்குள் சூரியனும் சந்திரனும் அழகான ஒளி வீசுவதுபோல உருக்கிய பொன் போன்ற ஒளிக்கதிராக வீசிக்கொண்டு இருக்கின்றான்.

பாடல் #94: பாயிரம் – 5. திருமூலர் வரலாறு

பிதற்றுகின் றேன்என்றும் பேர்நந்தி தன்னை
இயற்றுவன் நெஞ்சத் திரவும் பகலும்
முயற்றுவன் ஓங்கொளி வண்ணன்எம் மானை
இயற்றிகழ் சோதி இறைவனும் ஆமே.

விளக்கம்:

நந்தி எனும் பெயர் கொண்ட இறைவனை எனது நெஞ்சத்துள் வைத்து இரவு பகல் பாராமல் எப்போதும் அவனின் திருநாமத்தைச் சொல்லிக்கொண்டே இருப்பேன். விண்ணுக்கும் மண்ணுக்கும் ஓங்கி நிற்கும் ஜோதி வடிவான எம்பெருமானை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் எப்போதும் இருப்பேன். எவரும் ஏற்றி வைக்காமல் இயல்பாகவே ஒளிரும் மாபெரும் ஜோதியே நான் வணங்கும் இறைவன் ஆவான்.

பாடல் #95: பாயிரம் – 6. அவையடக்கம்

ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறி வார்இந்த அகலமும் நீளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே.

விளக்கம்:

எவராலும் அறிய முடியாத அளவிற்கு பெருமைகளை உடையவனும் எவராலும் அவனின் உயரத்தையும் அகலத்தையும் அறிய முடியாத அளவிற்கு அளவிட முடியாதவனும் எவராலும் அறிந்து கொண்டு அழைத்து விட முடியாத அளவிற்கு பெயரிட முடியாத மாபெரும் சுடர் போன்று இருப்பவனும் தனக்கென்று ஆரம்பமும் முடிவும் இல்லாதவனுமான எம்பெருமான் சதாசிவமூர்த்தியின் அருமை பெருமைகளை அவன் அருள் மூலமே அறிந்துகொண்டு அதை யான் உங்களுக்குச் சொல்லுகின்றேன்.

பாடல் #96: பாயிரம் – 6. அவையடக்கம்

பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்
ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்
நாடவல் லார்நெறி நாட அறிகிலேன்
தேடவல் லார்நெறி தேட கில்லேனே.

விளக்கம்:

இறைவனைத் துதித்து பாடல்களை இசைத்துப் பாடி அவனருளைப் பெறக்கூடியவர்களின் வழியை அறியாதவன் யான். இறைவனை ஆனந்தக் கூத்தாடி அவனருளைப் பெறக்கூடியவர்களின் வழியை அறியாதவன் யான். இறைவனை உண்மையான அன்போடு நாடிச் சென்று அவனருளைப் பெறக்கூடியவர்களின் வழியை அறியாதவன் யான். இறைவன் எங்கே இருக்கின்றான் என்று தேடி அலைந்து அவனைத் தமக்குள்ளே கண்டு அவனருளைப் பெறக்கூடியவர்களின் வழியை அறியாதவன் யான். எம்மை ஆட்கொண்டு அவனை முழுவதும் அறியவைத்தது எம்பெருமான் சதாசிவமூர்த்தியின் பேரருளே.

PASUPATHEESWARAR , PANDHANAI NALLUR

பாடல் #97: பாயிரம் – 6. அவையடக்கம்

மன்னிய வாய்மொழி யாலும் மதித்தவர்
இன்னிசை உள்ளே எழுகின்ற ஈசனைப்
பின்னை உலகம் படைத்த பிரமனும்
உன்னும் அவனை உணரலு மாமே.

விளக்கம்:

என்றும் நிலைத்திருக்கும் வேதங்களைச் சொல்லுவதால் மட்டும் உணர முடியாதவனும் இனிமையான இசையோடு பாடுகின்ற அடியவர்களின் இசையினுள்ளே எழுந்தருளுகின்றவனும் படைப்புத் தொழிலைச் செய்யவேண்டி இறைவன் படைத்த பிரம்மனும் தியானிக்கும் சதாசிவமூர்த்தியை அவனது அருள்கொண்டே அவனை உணர முடியும்.

பாடல் #98: பாயிரம் – 6. அவையடக்கம்

தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வரை
முத்திக் கிருந்த முனிவரும் தேவரும்
ஒத்துடன் வேறாய் இருந்து துதிசெயும்
பத்திமை யால்இப் பயனறி யாரே.

விளக்கம்:

இறைவனை உணர்ந்து முக்தி பெறவேண்டும் என்று மலை உச்சிகளிலும் குகைகளிலும் தவமிருக்கும் முனிவர்களுக்கும் தேவர்களுக்கும் சதாசிவமூர்த்தியை உணரக்கூடிய பேரறிவு ஞானத்தை இறைவனே கூறியருளினாலும் இறைவனும் தாமும் ஒன்றானவர்களே என்கிற உணர்வு இல்லாமல் இறைவனையும் தம்மையும் வேறு வேறாகக் எண்ணிக்கொண்டு அவ்விறைவனின் மேல் பக்திகொண்டு போற்றிப்பாடுபவர்கள் இறைவன் வழங்கிய பேரறிவு ஞானத்தின் பயனை பெறாமலே இருக்கின்றார்கள்.

பாடல் #99: பாயிரம் – 7. திருமந்திரத் தொகை சிறப்பு

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே.

விளக்கம்:

திருமூலனாகிய யான் வழங்கிய இந்த மூவாயிரம் தமிழ் மந்திரங்களும் யான் பெற்ற இன்பம் இந்த உலகத்திலுள்ள அனைத்து உயிர்களும் பெற வேண்டும் என்ற அன்பினாலேயே எம் குருநாதன் இறைவனின் அருளால் வழங்கப் பெற்றது. இந்த மந்திரங்களைக் காலையில் எழுந்து அவற்றின் பொருளை ஓதி உணர்ந்து அதில் உள்ள கருத்துக்களை கடைபிடித்து வந்தால் உலகங்கள் அனைத்திற்கும் தலைவனாகிய சதாசிவமூர்த்தியைச் சென்று அடைந்து யான் பெற்ற பேரின்பத்தை அனைவரும் பெறலாம்.



பாடல் #100: பாயிரம் – 7. திருமந்திரத் தொகை சிறப்பு

வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவா யிரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவா யிரம்பொது
வைத்த சிறப்புத் தருமிவை தானே.

விளக்கம்:

உயிர்கள் அனைத்தும் இறைவனை உணர்ந்து வீடு பேறு அடைய வேண்டும் என்கின்ற அன்பினால் யாம் உயிர்களுக்கு வைத்த பேரின்ப பரிசு திருமந்திரம் என்னும் பேரின்ப நன்மை தரும் நூலாகும். இந்த நூலிலுள்ள மூவாயிரம் பாடல்களில் யாம் வழங்கியிருப்பது இறைவனை அடைந்து முக்தி பெறும் வழிகளும் அதன் முடிவில் இறைவனோடு என்றும் கலந்து இருக்கும் பேரின்பத்தின் விளக்கங்களும் ஆகும். இறைவனின் அருளால் அறிவுப்பூர்வமாக இயற்றப்பெற்ற இந்த மூவாயிரம் பாடல்களும் அனைவருக்கும் பொதுவானவையாகும். இந்த மூவாயிரம் பாடல்களையும் தமது சிந்தையில் வைத்து அவற்றின் பொருளுணர்ந்து போற்றி வருபவர்களுக்கு, அனைத்துவிதமான சிறப்புகளையும் கொடுக்கும் இந்த திருமந்திரப் பாடல்கள்.

பாடல் #101: பாயிரம் - 8. குருமட வரலாறு

வந்த மடமேழும் மன்னும்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்
சுந்தர ஆகமச் சொல்மொழிந் தானே.

விளக்கம்:

இறைவனை அடையும் உண்மையான வழிகளை உயிர்களுக்கு எடுத்துக்கூற இவ்வுலகத்திற்கு வந்த இறைவனை உணர்ந்து இறை நிலையை அடைந்த ஏழு நாதர்களில் முதலில் தோன்றியவனாகிய திருமூலன் எனும் யான் அந்த வழிகள் அனைத்தையும் ஒன்பது தந்திரங்களாகவும் அந்தத் தந்திரங்களைச் சார்ந்த மூவாயிரம் பாடல்களாகவும் இறைவன் வழங்கிய அழகிய ஆகமங்களின் பொருளை அழகான தமிழ்ச் சொற்களில் வழங்கியருளியதே இந்தத் திருமந்திர மாலை எனும் நூலாகும்.

பாடல் #102: பாயிரம் – 8. குருமட வரலாறு

கலந்தருள் காலாங்கர் தம்பால் அகோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
புலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே.

விளக்கம்:

திருவருளும் குருவருளும் கலந்து அருளும் காலாங்கர் (காலாங்கி நாதர்), அனைவரையும் தம்பால் ஈர்க்கவல்ல அகோரர், நன்மைகளைத் தரும் திருமாளிகைத் தேவர், அனைத்திற்கும் தலைவனான நாதனைப் போற்றும் நாதாந்தர், புலன்களை வென்ற பரமானந்தர் மற்றும் போக தேவர் (போகர்), இறைவனை அடையும் வழிகளை வழங்கி மண்ணுலக உயிர்களைத் திகழச்செய்த திருமூலராகிய நாங்கள் ஏழு பேரும் இறைவனின் அருளால் என்றும் இறவா சூட்சுமநிலை பெற்றவர்கள்.

பாடல் #103: பாயிரம் – 9. மும்மூர்த்திகளின் முறைமை

அளவில் இளமையும் அந்தமும் ஈறும்
அளவியல் காலமும் நாலும் உணரில்
தளர்விலன் சங்கரன் தன்னடி யார்சொல்
அளவில் பெருமை அறியயற் காமே.

விளக்கம்:

உயிர்கள் ஆரம்பத்தில் எப்போதுமே இளமையாகவே இருப்போம் அது அளவில்லாதது என்று கருதிக்கொள்வது இளமையின் தன்மை. அந்த இளமையின் முடிவாகத் தோன்றுவது முதுமையின் தன்மை. அந்த முதுமைக்குப் பின் வாழ்க்கையின் முடிவாக வருவது இறப்பின் தன்மை. பிறக்கும் முன்பே வரையறுக்கப்பட்டு பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் இயங்குவது காலத்தின் தன்மை. இந்த நான்கு தன்மைகளும் இயல்பிலேயே மாயையால் உருவாக்கப்பட்டன என்பதை உணர்ந்துகொண்டால் அந்த மாயையை என்றும் தளராமல் அறுக்கும் சங்கரனின் (அழிப்பவன்) தன்மையை உணரலாம். இதனை உணர்ந்த சிவனடியார்கள் தாம் உணர்ந்த சங்கரனின் தன்மைகளை எடுத்துச் சொன்னால் அது ஹரிக்கும் (திருமால்) அயனுக்கும் (பிரம்மன்) எட்டாத அளவு பெருமை உடையதாக இருக்கின்றது.



பாடல் #104: பாயிரம் – 9. மும்மூர்த்திகளின் முறைமை

ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித் துலகம் பிணங்குகின் றார்களே.

விளக்கம்:

ஆதியிலிருந்து அனைத்திற்கும் ஆரம்பமாக இருக்கின்ற உருத்திரனும் அணிகின்ற மணிகளைப் போன்ற நீல நிறம் படைத்த திருமாலும் படைப்புத் தந்தையாக தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரம்மனும் இவர்கள் மூவரும் யார் என்று ஆராய்ந்து பார்த்தால் அவர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட தொழில்களில் தனிப்பட்டு நின்றாலும் அவர்களுக்குள் இருந்து இயக்கும் சிவத்தின் தொடர்ச்சியில் ஒன்றுபட்டு இருக்கின்றார்கள் என்பதை உணரலாம். இதை அறியாமல் அவர்களின் தொழில்களை வைத்து வேறு வேறாகப் பிரித்து இதில் யார் பெரியவர் யார் சிறியவர் என்று தேவையில்லாத குழப்பத்தில் தமக்குள் சண்டையிட்டுக்கொண்டு உலகத்தவர்கள் துன்பப்படுகின்றார்கள்.

பாடல் #105: பாயிரம் – 9. மும்மூர்த்திகளின் முறைமை

ஈசன் இருக்கும் இருவினைக் கப்புறம்
பீசம் உலகில் பெருந்தெய்வ மானது
ஈசன் அதுஇது என்பார் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் தூரறிந்த் தார்களே.

விளக்கம்:

இறைவன் நல்வினை தீவினை ஆகிய இரண்டுமாகவே இருக்கிறான். அதையும் தாண்டி அவனை உணர வழிசெய்யும் ஓம் எனும் பிரணவ மந்திரமே இந்த உலகின் மிகப்பெரும் தெய்வமாக இருக்கின்றது. இது எதுவும் தெரியாமல் இறைவன் அதுதான் இதுதான் என்று பல்வேறாக நினைத்துக்கொண்டு அலைபவர்கள் மும்மலங்களின் மாசு படிந்து இருப்பதால் அதை அகற்றி உண்மைப் பொருளான இறைவனை உணராமலேயே இருக்கின்றார்கள்.

பாடல் #106: பாயிரம் – 9. மும்மூர்த்திகளின் முறைமை

சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றொடொன் றாகும்
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதற் சங்கரன் தன்பெயர் தானே.

விளக்கம்:

சிவபெருமானே அனைத்தின் முதல்வனாய் படைத்தலில் பிரம்மன் காத்தலில் திருமால் அழித்தலில் உருத்திரன் என்கிற மூவராகவும் அவர்களோடு சேர்ந்து அருளலில் மகேசுவரன் மறைத்தலில் சதாசிவன் என்று ஐந்து பேராகவும் சிறப்பாக நின்று உயிர்களின் உடலிலுள்ள சக்திமயங்கள் (ஏழு சக்கரங்களும் அதைத் தாண்டிய பரவெளியும்) அனைத்திலும் ஒன்றோடு ஒன்றாக கலந்து இருக்கின்றார். இவர்கள் அனைவருக்கும் மூலமாகிய பரம்பொருள் சதாசிவமூர்த்தியே ஒளியும் ஒலியுமாய் ஓங்கிப் பரவெளியில் அனைத்திற்கும் முதலாகிய சங்கரன் எனும் பெயரில் ஒருவராக இருக்கின்றார்.

பாடல் #107: பாயிரம் – 9. மும்மூர்த்திகளின் முறைமை

பயனறிந் தவ்வழி எண்ணும் அளவில்
அயனொடு மால்நமக் கன்னியம் இல்லை
நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்
வயனம் பெறுவீர் அவ்வானவ ராலே.

விளக்கம்:

இறைவனை அடையவேண்டும் என்பதையே பிறவிப்பயனாக அறிந்துகொண்டு அதற்கான வழிகள் என்னவென்று யோசிக்கும் அளவில் எந்தத் தெய்வத்தை வணங்கினாலும் ஒன்றே. இவர்களுக்கு திருமாலும் பிரம்மனும் அன்னியர்கள் இல்லை. முக்கண் முதல்வனாகிய குருநாதன் சிவபெருமானுக்கு சொந்தமே. ஆகையால் உண்மையான பயனை அடையவேண்டும் என்று எண்ணி எந்த வானவர்களை [தெய்வங்கள்] வணங்கினாலும் அதற்கான பயனை சதாசிவமூர்த்தியே அந்த வானவர்களாக [தெய்வங்களாக] இருந்து அருளுவார்.



பாடல் #108: பாயிரம் – 9. மும்மூர்த்திகளின் முறைமை

ஓலக்கம் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனி பணிந்தடி யேன்தொழ
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ
ஞாலத்து நம்மடி நல்கிடென் றானே.

விளக்கம்:

இறைவனின் திருக்கோலத்தை அடியவர்களும் இறப்பில்லாத தேவர்களும் சூழ்ந்து நிற்க பால் போன்ற வெண்ணீறு அணிந்த அவனின் திருவுடலைப் பணிந்து அடியவனாகிய யான் தொழுது நிற்கும்போது காக்கும் தொழிலைச் செய்யும் திருமாலுக்கும் படைக்கும் தொழிலைச் செய்யும் பிரம்மனுக்கும் நீ சரிசமமானவன் ஆகையால் உலகத்திற்கு சென்று எமது திருவடியின் திருவருளை அனைவருக்கும் வழங்கிடுக என்று இறைவன் எமக்கு கூறி அருளினான்.

உள் விளக்கம்:

பிரம்மனும் திருமாலும் ஒரு சமயத்தில் ஆன்மாக்களாக இருந்து செய்த மாதவங்களாலேயே இறைவனிடமிருந்து படைக்கும் தொழிலையும் காக்கும் தொழிலையும் பெரும் பேறாகப் பெற்றார்கள் என்பதால் அவர்கள் மாதவம் செய்த இறைவனின் அடியவர்களுக்கு சரிசமமானவர்களே. உலகில் இறைவனின் திருவடியைப் போற்றி அதன் பயனை மற்றவர்களுக்கும் அருளும் மாதவம் செய்த சிவனடியார்கள் அனைவருமே பிரம்மனுக்கும் திருமாலுக்கும் சரிசமமானவர்கள்.

பாடல் #109: பாயிரம் – 9. மும்மூர்த்திகளின் முறைமை

வானவர் என்றும் மனிதர்இவர் என்றும்
தேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது
தானமர்ந் தோரும் தனித்தெய்வம் மற்றில்லை
ஊனமர்ந் தோரை உணர்வது தானே.

விளக்கம்:

தேவர்கள் என்றும் மனிதர்கள் என்றும் ஆன்மாக்கள் இருப்பது தேன் நிறைந்த கொன்றை மலர் மாலையைச் சூடியிருக்கும் சிவபெருமானின் திருவருளினாலன்றி வேறில்லை. அச்சிவபெருமானின் அருள் இல்லாமல் தானாகவே இருந்தவர்கள் என்றும் தனியொரு தெய்வம் என்றும் வேறு எதுவும் இல்லை. அப்படிப்பட்ட இறைவனே உயிர்களின் உடலுக்குள்ளும் இருக்கின்றான் என்பதை உணர்வதுதான் பிறவியின் உண்மையான பயனாகும்.

பாடல் #110: பாயிரம் – 9. மும்மூர்த்திகளின் முறைமை

சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவ தறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித் தவரைப் பிதற்றுகின் றாரே.

விளக்கம்:

ஒளி விடுகின்ற பேரொளிப் பிழம்பான சிவமே படைத்தலில் பிரம்மன் காத்தலில் திருமால் அழித்தலில் உருத்திரன் என்கின்ற மூவராகவும் அவர்களோடு அருளலில் மகேசுவரன் மறைத்தலில் சதாசிவன் என்று ஐந்து பேராகவும் நின்று அந்தத் தொழில்களை செய்துவருவதும் அந்தச் சிவமே ஆதியிலிருந்து இருக்கின்ற பரம்பொருள் என்பதை அறியாத மூடர்கள் அவர்கள் செய்யும் தொழிலை வைத்து அவர்களை வேறு வேறு தெய்வங்களாகக் கருதிக்கொண்டு அவர்களில் யார் பெரியவர் யார் சிறியவர் என்று வீணாகச் சண்டையிட்டுக்கொண்டு புலம்புகின்றார்கள்.

மாணிக்கவண்ணர்

பாடல் #111: பாயிரம் – 9. மும்மூர்த்திகளின் முறைமை

பரத்திலே ஒன்றாய்உள் ளாய்ப்புற மாகி
வரத்தினுள் மாயவ னாய்அயன் ஆகித்
தரத்தினுள் தான்பல தன்மையன் ஆகிக்
கரத்தினுள் நின்று கழிவுசெய் தானே.

விளக்கம்:

பரம்பொருள் என்பதில் ஒன்றானவனாகவும் உயிர்களுக்குள்ளும் வெளியிலும் இருப்பவனும், ஆன்மா மாதவம் செய்து பெற்ற வரத்தினால் திருமாலாகவும் பிரம்மனாகவும் தவம் செய்த தகுதிக்கேற்ப வெவ்வேறு விதமான தரங்களில் பலவித தன்மைகள் கொண்ட தெய்வங்களாகவும் செய்கின்ற தொழில்களில் பலவிதமாக நின்று அருளுகின்றவன் சதாசிவமூர்த்தியாகிய ஒருவனே.

பாடல் #112: பாயிரம் – 9. மும்மூர்த்திகளின் முறைமை

தானொரு கூறு சதாசிவன் எம்இறை
வானொரு கூறு மருவியும் அங்குளன்
கோனொரு கூறுடல் உள்நின் றுயிர்க்கின்ற
தானொரு கூறு சலமய னாமே.

விளக்கம்:

எமது இறைவனாகிய சிவமே ஞானசக்தியை ஒரு பகுதியாகச் சேர்த்து சதாசிவமாக இருக்கின்றான். [சதாசிவம் அசையும் சக்தியாகவும் அசையா சக்தியாகவும் இரு பகுதியாக உள்ளான்] அவனே வானத்தில் இருக்கும் அனைத்து தெய்வங்களின் உருவங்களாகவும் மருவி அங்கு இருக்கின்றான். உலகங்கள் அனைத்திற்கும் தலைவனான அவனே அவ்வுலகங்களில் இருக்கும் அனைத்து உயிர்களின் உடலுக்குள்ளும் ஒரு பாகமாக இருந்து கொண்டு உள்ளிருந்து அந்த உடலை இயக்கும் உயிர்சக்தியாகவும் இருக்கின்றான். இப்படி அனைத்திலும் ஒரு பாகமாக இருக்கும் சிவமே அனைத்தின் தன்மைகளிலும் கலந்து நின்று அனைத்துமாகவும் இருக்கின்றான்.

பாடல் #113: முதல் தந்திரம் - 1. உபதேசம்

விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியோ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்புஅறுத் தானே.

விளக்கம்:

வானத்தில் [அண்டத்தில்] வெவ்வேறு நிலைகளில் இருக்கும் ஆன்மாக்கள் உலகத்தில் இறங்கி வந்து அவரவர் வினைக்கு ஏற்ப பலவிதமான உடல்களை ஏற்றுப் பிறக்கும்போது அடியவர்களின் உள்ளம் குளிர்விக்கும் திருவடிகளை அவர்களின் தலைக்கு மேலே காவலாக வைத்து அவர்களின் உடலுக்குள்ளே உயிர்சக்தியாய் நின்று தான் யார் என்பதை உள்ளிருந்து உணரவைத்து உயிர்களுக்கு ஞானக்காட்சியய் தனது ஈடுஇணையில்லாத பேரானந்த நிலையைக் காட்டி அடியவர்களின் ஆன்மாவை மூடியிருக்கும் மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை அகற்றி அருளுகின்றான் இறைவன்.

பாடல் #114: முதல் தந்திரம் – 1. உபதேசம்

களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி
களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்
களிம்பணு காத கதிரொளி காட்டிப்
பளிங்கிற் பவழம் பதித்தான் பதியே.

விளக்கம்:

எங்களது ஆன்மாக்களின் மேல் இருந்த மும்மலங்களான ஆணவம், கன்மம், மாயைகளை தன் அருட் பார்வையால் அகற்றி எமது ஞானக்கண்ணைத் திறந்தான் குருநாதராக வந்த இறைவன். அவனே எந்தவித மலங்களும் நெருங்க முடியாத மாசு மருவற்ற தனது அருட் பேரொளியைக் காட்டியவன். அவனே மும்மலங்கள் அகற்றியதால் பளிங்கு போல மாறிய எமது ஆன்மாக்களின் மேல் பவழம் போன்ற தனது திருவருளைப் பதித்தான் எமக்குத் தலைவனாக இருப்பவன்.

பாடல் #115: முதல் தந்திரம் - 1. உபதேசம்

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அநாதி
பதியினை சென்றணு காப்பசு பாசம்
பதியணு கில்பசு பாசம் நிலாவே.

விளக்கம்:

ஆன்மாக்களின் தலைவன் இறைவன் பதி ஆன்மாவாகிய உயிர்கள் பசு உயிர்களைப் பிடித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் பாசம். இந்த மூவரும் யாரென்று சொல்லப் போனால் என்றும் நிலைத்து நிற்கும் பழமைவாய்ந்த இறைவனைப் போலவே ஆன்மாக்களும் அவற்றை பிடித்திருக்கும் மும்மலங்களும் நித்தியமானவையே. மும்மலங்களால் கட்டுண்டு கிடக்கும் ஆன்மாக்கள் தங்களின் தலைவனாகிய இறைவனைத் தேடிச் சென்று அடைவதில்லை. இறைவன் யாரென்று தெரிந்து கொள்ள முயன்று அவனைப் பலவித வழிகளில் தேடிச்சென்று அடைந்தால் ஆன்மாக்களிடமிருந்து மும்மலங்களும் விலகிவிடும்.

பாடல் #116: முதல் தந்திரம் - 1. உபதேசம்

வேயின் எழுங்கனல் போலேஇம் மெய்யெனும்
கோயி லிருந்து குடிகொண்ட கோன்நந்தி
தாயினும் மும்மலம் மாற்றித் தயாஎன்னும்
தோயமது வாய்எழும் சூரிய னாமே.

விளக்கம்:

மூங்கிலினுள்ளே இருக்கும் நெருப்பு போல [காய்ந்த மூங்கில்களை ஒன்றோடு ஒன்று உரசினால் வெளிப்படும் நெருப்பு] உயிர்களின் மெய் எனப்படும் உடலாகிய கோயிலினுள்ளே குடி கொண்டு வீற்றிருக்கும் உயிர்களின் தலைவனாகிய குருநாதன் இறைவன். உலகத் தாயை விடவும் உயிர்களின் மேல் அதிக கருணை கொண்டு அவ்வுயிர்களைப் பற்றியிருக்கும் மும்மலங்களாகிய அழுக்குகளை அகற்ற வேண்டி இருளை விலக்க கடலின் மேலே தோன்றும் சூரியனைப் போல மும்மல இருளை அகற்றும் பேரொளியாக தனது கருணை எனும் மாபெரும் கடலின் மேலே தோன்றும் சூரியன் இறைவன்.

பாடல் #117: முதல் தந்திரம் – 1. உபதேசம்

சூரிய காந்தமும் சூழ்பஞ்சும் போலவே
சூரிய காந்தமும் சூழ்பஞ்சைச் சுட்டிடா
சூரியன் சந்நிதி யிற்சுடு மாறுபோல்
ஆரியன் தோற்றமுன் அற்ற மலங்களே.

விளக்கம்:

சூரியகாந்தக் கல்லையும் பஞ்சையும் ஒன்றாக சுற்றினால்கூட அந்தக் கல் பஞ்சை எரித்துவிடாது. சூரியகாந்தக் கல்லின் மேல் சூரியனின் கதிர்கள் பட்டு அவை பஞ்சின் மேல் குவிக்கப்பட்டால் மட்டுமே பஞ்சு எரியும். அதுபோலவே ஆன்மாக்களைச் சூழ்ந்திருக்கும் மும்மலங்களாகிய அழுக்கை ஆன்மாக்களால் நீக்க முடியாது. ஆன்மாக்களின் இருளை அகற்றும் பேரொளியாக வரும் இறைவனின் அருள் கிடைத்தால் மட்டுமே ஆன்மாக்களின் மும்மல அழுக்கு நீங்கும்.

பாடல் #118: முதல் தந்திரம் - 1. உபதேசம்

மலங்களைந் தாமென மாற்றி அருளித்
தலங்களைந் தானற் சதாசிவ மான
புலங்களைந் தானப் பொதுவினுள் நந்தி
நலங்களைந் தானுள் நயந்தான் அறிந்தே.

விளக்கம்:

உயிர்களைக் கட்டிவைத்திருக்கும் ஐந்துவித மலங்களான 1. ஆணவம் - செருக்கு, மமதை. 2. கன்மம் - வினைப்பயன். 3. மாயை -பொய்த்தோற்றம், 4. திரோதாயி - மறைத்தல் ஆன்மாக்களின் கர்மாக்கள் தீர உலக அனுபவங்களைக் கொடுத்து உண்மையை மறைத்தல் செய்யும் சிவபெருமானின் ஐவகை ஆற்றலுள் ஒன்று. 5. மாயேயம் அசுத்தமாயை. ஆகியவற்றை நீரினில் கழுவி அழுக்குகளை அகற்றுவதுபோல தனது அருளால் கழுவி அகற்றி உடம்பில் சிவ சதாக்கியம், அமூர்த்தி சதாக்கியம், மூர்த்தி சதாக்கியம், கருத்துரு சதாக்கியம், கன்மத்துரு சதாக்கியம் ஆகிய 5 லிங்கங்களாக சதாசிவமூர்த்தியாகவே வீற்றிருந்து உயிர்களின் ஐந்துவித புலன்களையும் (பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல், தொடுதல்) நீக்கிப் பேரறிவு அளிக்கும் குருநாதராக இருப்பதும் உயிர்களின் உலகியல் சார்ந்த பந்த பாசங்களை அறுத்து அவற்றினுள் தன் பேரொளியைப் பரவியருளி பேரறிவு ஞானத்தை கொடுப்பதும் எம்பெருமான் சதாசிவமூர்த்தியின் அருட்பெரும் கருணையே.

பாடல் #119: முதல் தந்திரம் - 1. உபதேசம்

அறிவைம் புலனுட னேநான்ற தாகி
நெறியறி யாதுற்ற நீராழம் போல
அறிவறி வுள்ளே அழிந்தது போல
குறியறி விப்பான் குருபர னாமே.

விளக்கம்:

உயிர்களின் சிற்றறிவு அவர்களின் ஐந்து பொறிகளின் [கண், காது, மூக்கு, வாய், உடல்] வழியே கிடைத்து உணர்வுகளிலிலேயே [பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல், தொடுதல்] லயித்திருந்து பேரறிவை அறியாமல் அழிந்து போகின்றது. ஆற்றின் ஆழம் தெரியாமல் நீரில் இறங்கி மூழ்கியவர்கள் போல உயிர்களும் உலக இன்பங்களில் மூழ்கி தங்களின் பிறவியைக் கடத்துகிறார்கள். இவர்களின் சிற்றறிவுக்குள்ளே பேரறிவு ஞானம் இருப்பதையும், அதை அறிந்தால் உண்மைப் பொருளை உணர்ந்து பந்த பாச உலகப் பிணைப்புகளை அறுத்து இறைவனை அடைய முடியும் என்பதையும் பரம்பொருள் இறைவன் குருவாக வந்து குறிப்பில் உணர்த்துவான்.

பாடல் #120: முதல் தந்திரம் - 1. உபதேசம்

ஆமேவு பால்நீர் பிரிக்கின்ற அன்னம்போல்
தாமே தனிமன்றில் தன்னம் தனிநித்தம்
தீமேவு பல்கர ணங்களுள் உற்றன
தாமேழ் பிறப்புளரி சார்ந்தவித் தாமே.

விளக்கம்:

பசுவின் பாலில் கலந்து இருக்கும் நீரை அகற்றி வெறும் பாலை மட்டும் பருகும் அன்னப் பறவை போல உயிர்கள் தினமும் தங்களின் பலவித காரணங்களால் சேர்த்துக்கொள்ளும் தீவினைகளாகிய அழுக்கை சுத்தமான அவர்களின் ஆன்மாவிலிருந்து அகற்றி அந்தத் தீவினைகளால் அவர்கள் எடுக்கும் ஏழுவித பிறப்புகளுக்கு வித்தாகிய வினைகளை எரித்து உயிர்களைத் தம்பால் ஈர்த்துக்கொள்ளவே தில்லை அம்பலத்தில் இறைவன் எப்போதும் தனியாகத் திருநடனம் புரிகின்றான்.

பாடல் #121: முதல் தந்திரம் - 1. உபதேசம்

வித்தைக் கெடுத்து வியாக்கிரத் தேமிகச்
சுத்தத் துரியம் பிறந்து துடக்கற
ஒத்துப் புலனுயிர் ஒன்றாய் உடம்பொடு
செத்திட் டிருப்பர் சிவயோகி யார்களே.

விளக்கம்:

உயிர்கள் மறுபடியும் பிறப்பதற்குக் காரணமாக இருக்கும் வினைகளை அழித்து அருள குருநாதராக வந்த இறைவன் உபதேசித்த பேரறிவு ஞானம் மிகவும் வாய்க்கப் பெற்று அந்தப் பேரறிவு ஞானத்தின் மூலம் மல மாசு இல்லாத சுத்தமான ஆன்மாவாகப் பிறந்து உலகப் பற்றுக்களை உதறிவிட்டு ஐம்புலன்களைக் கொண்ட உயிரும் உடலும் ஒன்றாக சேர்ந்து இருக்கும் போதே இறந்து போன உடலைப் போல அசைவற்று எப்போதும் இறைவனின் நினைப்பிலேயே இருப்பவர்கள் சிவயோகியர்கள் ஆவார்கள்.

பாடல் #122: முதல் தந்திரம் - 1. உபதேசம்

சிவயோக மாவது சித்தசித் தென்று
தவயோகத் துள்புக்குத் தன்னொளி தானாய்
அவயோகம் சாரா தவன்பதி போக
நவயோக நந்தி நமக்களித் தானே.

விளக்கம்:

சிவயோகியர்கள் செய்யும் சிவயோகம் என்பது என்னவென்றால் சித்து (உயிர்) அசித்து (உடல்) ஆகிய இரண்டும் தனக்குள்ள தொடர்பை அறுத்துக்கொண்டு தவம் புரியும் யோக வழியில் தானும் தனக்குள் இருக்கும் இறைவனும் ஒன்றாகச் சேரும்படி தியானித்து பிறப்பு இறப்புகளுக்குக் காரணமாகிய உலக வழிகளில் செல்லாமல் உயிர்களின் தலைவனாகிய இறைவனின் திருவடிகளை நாடிச்சென்று அடைதல் ஆகும். பிறவியின் பெரும் பயனைத் தரும் இந்தச் சிவயோக நிலையை உயிர்களுக்கு அளித்து குருநாதராக வந்த இறைவன் பெரும் கருணை செய்தான்.



பாடல் #123: முதல் தந்திரம் - 1. உபதேசம்

அளித்தான் உலகெங்கும் தானான உண்மை
அளித்தான் அமரர் அறியா உலகம்
அளித்தான் திருமன்றுள் ஆடுந் திருத்தாள்
அளித்தான் பேரின்பத் தருள்வெளி தானே.

விளக்கம்:

அண்டங்கள் அனைத்தும் சிவமாகவே இருக்கும் உண்மையையும் தேவர்களும் அமரர்களும் அறியாத பேரின்ப உலகையும் உயிர்கள் உய்வதற்கென்று தில்லை அம்பலத்தில் ஆடும் தம் திருவடிகளையும் பேரின்பம் சூழ்ந்த அருள்வெளியாகிய பரவெளியையும் இறைவன் தன் பெருங்கருணையால் உயிர்களுக்கு அளித்து அருளினான்.

பாடல் #124: முதல் தந்திரம் - 1. உபதேசம்

வெளியில் வெளிபோய் விரவிய வாறும்
அளியில் அளிபோய் அடங்கிய வாறும்
ஒளியில் ஒளிபோய் ஒடுங்கிய வாறும்
தெளியும் அவரே சிவசித்தர் தாமே.

விளக்கம்:

பரவெளி மற்றும் உலகத்தைச் சுற்றியிருக்கும் வெற்றிட வெளிகளில் (ஆகாயம்) இறைவன் பரவி இருக்கும் முறைகளையும் உயிர்களிடத்தில் அன்பு அடங்கி இருக்கும் முறைகளையும் பேரொளியாக இருக்கும் இறைவனிடத்தில் சிற்றொளியாகிய ஆன்மாக்கள் சேர்ந்து இருக்கும் முறைகள் அனைத்தையும் தம் பேரறிவு ஞானத்தால் அறிந்து தெளிவாக உணர்ந்து இருப்பவர்களே சிவயோகியர்கள் எனப்படும் சித்தர்கள்.

பாடல் #125: முதல் தந்திரம் - 1. உபதேசம்

சித்தர் சிவலோகம் இங்கே தெரிசித்தோர்
சத்தமும் சத்த முடிவும்தம் முள்கொண்டோர்
நித்தர் நிமலர் நிராமயர் நீள்பர
முத்தர்தம் முத்தி முதல்முப்பத்து ஆறே.

விளக்கம்:

சித்தர்கள் என்பவர்கள் சிவ உலகத்தை இறைவனின் அருளால் மண்ணுலகிலேயே தரிசித்தவர்களாகவும் ஓசையும் அவ்வோசையின் முடிவில் இருக்கும் அமைதியையும் பேரானந்தத்தையும் தமக்குள்ளே உணர்ந்தவர்களாகவும் என்றும் அழிவில்லாதவர்களாகவும் மும்மல அழுக்குகள் இல்லாதவர்களாகவும், உலகப் பற்றுக்கள் இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்கள் உடம்புடன் இருக்கும்போதே இறைவனின் அருளால் முக்திபெற்றவர்கள். இவர்கள் பெற்ற முக்திக்கு முழுமுதல் காரணமாக இருந்தது முப்பத்து ஆறு தத்துவங்களே ஆகும். இவை ஆன்ம தத்துவம் இருபத்தி நான்கும் [ஆன்ம ஞானம்], வித்தியா தத்துவம் ஏழும் [கலை/அறிவு ஞானம்], சிவ தத்துவம் ஐந்தும் [பரம்பொருள் ஞானம்] ஆக மொத்தம் முப்பத்து ஆறு தத்துவங்கள் ஆகும்.

பாடல் #126: முதல் தந்திரம் - 1. உபதேசம்

முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணியாய்
ஒப்பிலாத ஆனந்தத் துள்ளொளி புக்குச்
செப்பரிய சிவங்கண்டு தான் தெளிந்து
அப்பரிசாக அமர்ந்து இருந் தாரே.

விளக்கம்:

பாடல் #125 இல் கூறிய முப்பத்தாறு தத்துவங்களையும் முக்திபெறுவதற்கு ஏறிச் செல்லும் படிக்கட்டுகளைப் போல ஒவ்வொன்றாக இறையருளால் அறிந்து கொண்டு அதன் பயனாய் ஈடு இணையில்லாத பேரானந்தத்தை வழங்கும் பேரொளியை தமக்குள்ளே கண்டு வார்த்தைகளில் சொல்லிவிடமுடியாத சிவத்தைத் தமக்குள்ளே தரிசித்து தாம்தான் சிவம் என்பதை உணர்ந்து தெளிந்தவர்களாக இறைவன் வழங்கிய இந்தப் பேரருளே தமது பிறவியின் பெரும் பரிசாக ஏற்றுக்கொண்டு அவன் வழங்கிய பேரானந்த நிலையிலேயே அமர்ந்து இருப்பவர்கள் சித்தர்கள் ஆவார்கள்.

பாடல் #127: முதல் தந்திரம் - 1. உபதேசம்

இருந்தார் சிவமாகி எங்குந்தா மாகி
இருந்தார் சிவன்செயல் யாவையும் நோக்கி
இருந்தார் முக்காலத் தியல்பைக் குறித்து
இருந்தார் இழவுவந் தெய்திய சோம்பே.

விளக்கம்:

சித்தர்கள் தாமே சிவம் என்பதை உணர்ந்து சிவம் போலவே அனைத்தும் தாம் தான் என்ற நிலையில் இருப்பார்கள். சிவம் செய்யும் ஐந்துவித தொழில்களையும் இரசித்தபடியே இருப்பார்கள். இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்ற மூன்று காலத்திலும் நடக்கும் நிகழ்வுகளின் தன்மைகளை உணர்ந்து இருப்பார்கள். தமக்கென செய்யும் செயல் பேச்சு என்று எதுவும் இல்லாமல் சிவத்தோடு ஒன்றி இருப்பார்கள் சித்தர்கள்.

பாடல் #128: முதல் தந்திரம் - 1. உபதேசம்

சோம்பர் இருப்பது சுத்த வெளியிலே
சோம்பர் கிடப்பது சுத்த வெளியிலே
சோம்பர் உணர்வு சுருதி முடிந்திடஞ்
சோம்பர் கண்டாரச் சுருதிக்கண் தூக்கமே.

விளக்கம்:

சித்தர்கள் இறைவனின் திருநாமத்தை மட்டும் மனதிற்குள் ஜெபித்துக்கொண்டே இருப்பது எந்தவிதமான மலங்களும் வினைகளும் இல்லாத சுத்தமான பரவெளியில்தான். அவர்கள் தம் ஜெபத்தின் பலனால் இறைவனிடமிருந்து பெற்ற பேரின்பத்தில் மூழ்கி செயலற்றுக் கிடப்பதும் சுத்தமான பரவெளியில்தான். அவ்வாறு பேரின்பம் கண்ட நிலையில் அவர்கள் மனதிற்குள் ஜெபித்து வந்த இறைவனின் திருநாமமும் மறைந்து அத்திருநாமத்தில் லயித்து இறைவனின் திருவடிகளில் கிடைக்கும் பேரின்பத்தில் எண்ணங்களும் இல்லாமல் உணர்வுகளும் இல்லாமல் தூங்குபவர்கள் போன்ற சமாதி நிலையில் அவர்கள் இருப்பார்கள்.

பாடல் #129: முதல் தந்திரம் – 1. உபதேசம்

தூங்கிக்கண் டார்சிவ லோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ யோகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்சிவ போகமும் தம்உள்ளே
தூங்கிக்கண் டார்நிலை சொல்வது எவ்வாறே.

விளக்கம்:

பாடல் #128 ல் உள்ளபடி சமாதி நிலையில் இருக்கும் சித்தர்கள் அனைத்து உலகங்களும் சிவமாய் இருப்பதை தமக்குள்ளே தரிசித்துக்கொண்டார்கள். அப்படியே இருந்து தான் சிவனை விட்டுப் பிரியாது சிவனோடு கலந்து நிற்கும் சிவயோகமும் தம்முள்ளே கண்டார்கள் அப்படியே இருந்து தான் சிவபோகமான பேரானந்த நிலையையும் தமக்குள்ளே கண்டார்கள். அப்படி அவர்கள் இருக்கும் நிலையை யாம் வெறும் வார்த்தைகளால் எப்படி விளக்கிச் சொல்ல முடியும்? அதை அனுபவித்து உணர்ந்தால் மட்டுமே அறிய முடியும்.

பாடல் #130: முதல் தந்திரம் – 1. உபதேசம்

எவ்வாறு காண்பான் அறிவு தனக்கெல்லை
அவ்வா றருட்செய்வன் ஆதி பரன்தானும்
ஒவ்வாத மன்றுள் உமைகாண ஆடிடும்
செவ்வானிற் செய் செழுஞ்சுடர் மாணிக்கமே.

விளக்கம்:

பாடல் # 129 ல் கூறியபடி பேரின்பத்தில் இருக்கும் சித்தர்கள் எந்த அளவு பேரறிவு ஞானத்தைப் பெற்று இருக்கின்றார்களோ அந்த அளவு அவர்களுக்கு தன் அருளை வழங்குபவன் ஆதியிலிருந்து இருக்கின்ற பரம்பொருளான சதாசிவமூர்த்தி. அவனே ஈடு இணை சொல்லமுடியாத தில்லையம்பலத்தில் உமாதேவியார் கண்டு களிக்க திருநடனம் ஆடுகின்ற போது மாலை நேரத்தில் சூரியன் மறையும் போது சிவந்து தெரியும் வானத்தையும் விட சிவப்பான சுடர்களுடைய பேரொளியைத் தரும் மாணிக்கம் போல இருப்பவன்.

பாடல் #131: முதல் தந்திரம் – 1. உபதேசம்

மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினில் ஆடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதுஎன்ன பேறு பெற்றாரே.

விளக்கம்:

பாடல் #130ல் உள்ளபடி பேரொளியாய் இருக்கும் மாணிக்கத்தின் [சிவன் – செந்நிறம்] உள்ளிருந்து மரகதஜோதியாய் [சக்தி – பச்சை], சக்தியே சிவனுக்கு திருமேனியாக இருவரும் இணைந்து தில்லையின் பொன்னம்பலத்தில் ஆடும் திருநடனத்தைத் தம்முள் தரிசித்த சிவயோகியர் என்ன பேறு பெற்றார்களோ என்று வார்த்தைகளில் சொல்ல முடியாத அளவு பெரிய பேறு பெற்றார்கள்.



பாடல் #132: முதல் தந்திரம் - 1. உபதேசம்

பெற்றார் உலகிற் பிரியாப் பெருநெறி
பெற்றார் உலகிற் பிறவாப் பெரும்பயன்
பெற்றார்அம் மன்றிற் பிரியாய் பெரும்பேறு
பெற்றார் உலகுடன் பேசாப் பெருமையே.

விளக்கம்:

பாடல் 131 ல் உள்ளபடி சிவ சக்தியின் திருநடனத்தைத் தம்முள்ளே கண்ட சிவயோகியர் இந்த உலகத்திலிருந்து என்றும் பிரிந்துவிடாத (இறவாத) பெரும் வழியையும் இந்த உலகத்தில் மீண்டும் பிறக்காத (இறப்பில்லையேல் மீண்டும் பிறப்பும் இல்லை) பெரும் பயனையும் தில்லை பொன்னம்பலத்தில் தாம் தரிசித்த சிவசக்தியர் தம்மை என்றும் பிரியாமல் அவர்களுடனே பேரானந்தத்தில் என்றும் நிலைத்து இருக்கும் பெரும் பேறும் அப்படி பேரானந்தத்தில் நிலைத்திருக்கும் நிலையில் உலகோடு எந்த செயலும் கொள்ளாமல் தனித்து தமக்குள்ளே தியானித்து இருக்கும் பெருமைகள் அனைத்தையும் பெற்றார்கள்.

பாடல் #133: முதல் தந்திரம் - 1. உபதேசம்

பெருமை சிறுமை அறிந்தெம் பிரான்போல்
அருமை எளிமை அறிந்தறி வாரார்
ஒருமையுள் ஆமைபோல் உள்ளைந் தடக்கி
இருமையுங் கெட்டிருந் தார்புரை அற்றே.

விளக்கம்:

பெரியது எதுவோ அதைவிடவும் பெரியதாக இருக்கும் பெருமையையும் சிறியது எதுவோ அதைவிடவும் சிறியதாக இருக்கும் சிறுமையையும் அறிந்து கொண்டு அருமையயான எம்பெருமான் சதாசிவமூர்த்தியைப் போல அடியவர்களுக்கு அடியவராய் அருளும் எளிமையையும் முழுவதும் அறிந்தவர்கள் யார்? ஆபத்தில் தனது நான்கு கால்கள் ஒரு தலை ஆகிய ஐந்து உறுப்புகளையும் ஒரு ஓட்டுக்குள் உள்ளிழுத்துக் கொள்ளும் ஆமையைப் போலவே சிவத்தை நோக்கித் தமது ஐம்புலன்களையும் அடக்கித் தியானித்திருக்கும் சிவயோகியர்கள் இறப்பு பிறப்பு இல்லாமல் எப்போதும் இறைவனின் பேரின்பத்திலேயே திளைத்து செயலும் உணர்வும் இல்லாமல் இறைவனின் தன்மைகளை முழுமையாக அறிந்துகொள்வார்கள்.

பாடல் #134: முதல் தந்திரம் - 1. உபதேசம்

புரையற்ற பாலினுள் நெய்கலந் தாற்போல்
திரையற்ற சிந்தைநல் ஆரியன் செப்பும்
உரையற் றுணர்வோர் உடம்பிங் கொழிந்தால்
கரையற்ற சோதி கலந்தசத் தாமே.

விளக்கம்:

புரை ஊற்றப்படாத சுத்தமான பாலுக்குள்ளே நெய் கலந்து இருப்பது போலவே கடல் அலைகள் போல அலைபாய்ந்து கொண்டிருக்கும் சிந்தனைகளுக்குள்ளே ஞானகுரு சொன்ன மந்திரத்தை ஜெபித்து இறைவனின் மேல் மனம் ஒருநிலைப்பட்டு இருப்பதை உணர்ந்தவர்கள் தாம் பிறந்த இந்த உடலை விட்டுவிட்டு சூட்சும ஒளியாகி எல்லையில்லாத பேரொளியாகிய இறைவனோடு கலந்து சுத்தமான பரவெளியில் என்றுமே நிலைத்து இருப்பார்கள்.

பாடல் #135: முதல் தந்திரம் - 1. உபதேசம்

சத்த முதலைந்தும் தன்வழித் தான்சாரில்
சித்துக்குச் சித்தன்றிச் சேர்விடம் வேறுண்டோ
சுத்த வெளியில் சுடரில் சுடர்சேரும்
அத்தம் இதுகுறித் தாண்டுகொள் அப்பிலே.

விளக்கம்:

சத்தம் முதலாகிய ஐந்து புலன்களும் அவை தோன்றிய இச்சை வழியிலேயே சென்று அந்த இச்சைகளைத் தீர்த்து பின் அடங்கிவிட்டால் ஆன்மாவின் சித்தமாக இருக்கும் இறைவனின் பேரான்மாவோடு போய் சேர்வதைத் தவிர வேறு வழி இருக்கிறதா? இறைவன் இருக்கும் சுத்தமான பரவெளியில் ஆன்ம ஒளி இறைவனின் பேரொளியோடு சேர்ந்து விடும். பிறவியின் பொருள் இதுதான் என்பதை அனுபவத்தால் அறிந்து கொண்டு தெளிந்த நீரைப் போல மனம் தெளிந்து இருப்பீர்களாக.

பாடல் #136: முதல் தந்திரம் – 1. உபதேசம்

அப்பினிற் கூர்மை ஆதித்தனின் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற் றருச்செய்த அவ்வுரு
அப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோல்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே.

விளக்கம்:

கடல் நீரில் கரிப்பாக கலந்திருக்கும் உப்புச்சத்தே சூரியனின் வெப்பத்தால் ஒன்றுகூடி உப்பு எனும் பேர் பெற்ற பொருளாக உருவம் பெறும். அப்படி உருவம் பெற்ற உப்பு எனும் பொருளை மறுபடியும் கடல் நீரில் சேர்த்தால் அதன் உருவம் மறைந்து மறுபடியும் கரிப்புச் சத்தாகவே மாறிக் கடலோடு ஒன்றாக கலந்துவிடும். அதுபோலவே சொல்லப்போனால் பேரான்மாவான சிவத்திடமிருந்து பிரிந்து வந்த ஆன்மாவும் இறுதியில் சிவமாகிய பேரான்மாவில் ஒன்றாகக் கலந்து அடங்கிவிடும்.

பாடல் #137: முதல் தந்திரம் – 1. உபதேசம்

அடங்குபே ரண்டத் தனுஅண்டம் சென்றங்
கிடங்கொண்ட தில்லை ஈதன்றி வேறுண்டோ
கடந்தொறும் நின்ற உயிர்கரை காணில்
திடம்பெற நின்றான் திருவடி தானே.

விளக்கம்:

அண்டங்கள் அனைத்துமே அனுக்களாகவே இருப்பதால் அவை அனுவுக்குள் அடங்குபவையாகும். அனுவானது அண்டங்களுக்குள் அடங்கும் ஒரு பொருள் இல்லை. அது அண்டங்கள் முழுவதற்கும் மூலப் பொருள். அதுபோலவே, உடம்பெடுத்து வந்த உயிர்கள் அனைத்துமே ஆன்மாவால் உருவானவை என்பதால் ஆன்மா உடலுக்குள் அடங்கும் ஒரு பொருள் இல்லை அது உடம்பின் உருவத்திலேயே இருக்கின்ற இறைவனின் ஒரு பகுதி. உடல் முடிந்தபின் உயிர் சென்று சேரும் இடம் எது என்று பார்த்தால் அது எந்த பரமாத்மாவிலிருந்து வந்ததோ அந்த பேரான்மாவாக நின்று கொண்டிருக்கும் இறைவனின் திருவடிகளில் தான்.



பாடல் #138: முதல் தந்திரம் - 1. உபதேசம்

திருவடி யேசிவ மாவது தேரில்
திருவடி யேசிவ லோகம்சிந் திக்கில்
திருவடி யேசெல் கதியது செப்பில்
திருவடி யேதஞ்சம் உள்தெளி வார்க்கே.

விளக்கம்:

பேரான்மாவாக நின்று கொண்டிருக்கும் இறைவனின் திருவடிகளை உணர்ந்து கொண்டால் இறைவனின் திருவடியே சிவமாக இருக்கும். இறைவன் இருக்கும் சிவலோகம் எது என்று சிந்தித்தால் இறைவனின் திருவடிகளே சிவலோகமாக இருக்கின்றது. உயிர்கள் சென்று சேருகின்ற இடம் எது என்று சொன்னால் இறைவனின் திருவடிகளே சென்று சேரும் இடமாக இருக்கின்றது. தாமக்குள் இருக்கும் இறைவனை உள்ளுக்குள் உணர்ந்து தெளிபவர்களுக்கு இறைவனின் திருவடிகளே அவர்கள் எப்போதும் சென்று தஞ்சமடையும் இடமாக இருக்கின்றது.

பாடல் #139: முதல் தந்திரம் - 1. உபதேசம்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே.

விளக்கம்:

குருவின் திருமேனியைத் தரிசித்து அவரது உருவத்தைத் தமது உருவமாகவே எண்ணி தியானிப்பதும் குருவின் திருநாமத்தை மந்திரமாக சொல்லிக்கொண்டே தியானிப்பதும் குருவின் திருவார்த்தைகளைத் தமக்குள்ளே கேட்டு உணர்வதும் எப்போதும் குருவின் திரு உருவத்தைத் தம் மனதிற்குள் சிந்தித்து தியானிப்பதும் ஆகிய இந்த செய்கைகள் அனைத்தும் மும்மலங்களும் நீங்கித் தாம் யார் இறைவன் யார் என்பதைத் தமக்குள் உணர்ந்து தெளிகின்ற பேரறிவு ஞானத்தைக் கொடுக்கும்.



பாடல் #140: முதல் தந்திரம் - 1. உபதேசம்

தானே புலனைந்தும் தன்வச மாயிடும்
தானே புலனைந்தும் தன்வசம் போயிடும்
தானே புலனைந்தும் தன்னில் மடைமாறும்
தானே தனித்தெம் பிரான்தனைச் சந்தித்தே.

விளக்கம்:

குருவின் அருளால் இறைவனைத் தமக்குள் உணர்ந்து தெளிவு பெறுபவர்களுக்குத் தானாகவே இதுவரை அவர்களை ஆட்டி வைத்திருந்த ஐந்து புலன்களும் அவர்களின் வசமாகும். அவ்வாறு அவர்களின் வசமான ஐந்து புலன்களும் அவைகளின் தனிப்பட்ட தன்மைகளை இழந்துவிடும். அவ்வாறு தனிப்பட்ட தன்மைகளை இழந்த ஐந்து புலன்களும் அவர்களுக்குக் கட்டுப்பட்டு அவர்கள் இஷ்டம் போல செயல்படுபவையாக மாறிவிடும். அவ்வாறு இஷ்டம் போல செயல்படும் ஐம்புலன்களும் அவை மூலம் வந்த மலங்கள் முழுவதும் குருவின் திருவருளால் தாமாகவே அவர்களை விட்டு நீங்கி அவர்களின் ஆன்மா மட்டுமே இறைவனைச் சென்று சந்திக்கும்.

பாடல் #141: முதல் தந்திரம் – 1. உபதேசம்

சந்திப் பதுநந்தி தன்திருத் தாளினை
சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி
வந்திப் பதுநந்தி நாமம்என் வாய்மையால்
புந்திக்குள் நிற்பது நந்திபொற் போதமே.

விளக்கம்:

குருவின் அருளினால் தமது அனைத்து மலங்களும் நீங்கிச் சென்று சந்திப்பது இறைவனின் திருவடிகளே ஆகும். எப்போதும் சிந்தித்துக்கொண்டே இருக்க வேண்டியது இறைவனின் திருமேனியே ஆகும். உண்மையை மட்டுமே பேசுகின்ற வாயால் எப்போதும் வணங்கித் துதிக்க வேண்டியது இறைவனின் திருநாமமே ஆகும். நெஞ்சத்திலும் எண்ணத்திலும் என்றும் நிலைத்து நிற்க வேண்டியது குருநாதர் கூறிய பொன்னான போதனைகளே ஆகும்.

பாடல் #142: முதல் தந்திரம் – 1. உபதேசம்

போதந் தரும்எங்கள் புண்ணிய நந்தியைப்
போதந் தனில்வைத்துப் புண்ணிய ராயினார்
நாதன் நடத்தால் நயனம் களிகூர
வேதம் துதித்திடப் போயடைந்தார் விண்ணே.

விளக்கம்:

குருநாதர் கொடுத்த புண்ணியமான போதனைகளைத் தமது எண்ணத்தில் வைத்து அவற்றின் பொருளுணர்ந்து தமக்குள் தெளிவு பெற்றவர்கள் தாம் பெற்ற பிறவியின் புண்ணியத்தை அடைந்தவர்கள் ஆவார்கள். புண்ணியம் பெற்றவர்கள் குருவின் திருவருளால் இறைவனின் திருநடனத்தைத் தமக்குள்ளே தரிசித்து பேரின்பம் கூடிவர வேதங்கள் துதிக்க விண்ணுலகத்திற்குச் சென்று இறைவனின் திருவடியைச் சேருவார்கள்.

பாடல் #143: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

மண்ணொன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்
திண்ணென் றிருந்தது தீவினை சேர்ந்தது
விண்ணின்று நீர்விழின் மீண்டுமண் ணானாற்போல்
எண்ணின்றி மாந்தரும் இறக்கின்ற வாறே.

விளக்கம்:

உயிர்களின் உடல் குயவன் செய்யும் மண் பாத்திரம் போன்றது. குயவன் பல பாத்திரங்கள் செய்தாலும் அவன் பயன்படுத்தும் மண் எதுவென்று பார்த்தால் அது களிமண் ஒன்று தான். அதுபோலவே உயிர்களின் உடல் பலவகைப் பட்டதானாலும் ஆன்மா ஒன்று தான். குயவன் செய்யும் மண் பாத்திரங்கள் ஒரே மண்ணில் செய்யப்பட்டாலும் இரண்டு வகையாக இருக்கின்றன. ஒன்று தீயினால் சுட்டப்பட்டு திண்ணென்று இருக்கும் பாத்திரம். இரண்டாவது தீயினால் சுடப்படாமல் பச்சை மண்ணாக இருக்கும் பாத்திரம். உயிர்களும் இருவகை உடல்களைத் தாங்கியே உலகிற்கு வருகின்றன. உயிர்களின் உடலோடு அவை செய்த தீவினைகளும் சேர்ந்தே இருக்கின்றன. எப்படி வானிலிருந்து மழை பெய்தால் சுடப்படாத பச்சை மண்ணாலான பாத்திரங்கள் கரைந்து மறுபடியும் களிமண்ணாகவே மாறிவிடுமோ, அதுபோலவே உயிர்கள் இறைவனின் மேல் நாட்டமில்லாமல் தங்களின் தீவினைகளிலேயே கட்டுண்டு பச்சை மண்ணாகவே இருந்து ஒரு நாள் அழிந்து போகின்றன. இப்படி உலக வாழ்க்கை வாழ்ந்து இறந்து போகும் மனிதர்கள் எண்ணிலடங்காதவர்கள்.

பாடல் #144: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே.

விளக்கம்:

தென்னங்கீற்றுகளால் பின்னப்பட்ட கூரையும் அதைத் தாங்கியிருக்கும் கழியும் நீண்ட காலம் உபயோகிக்கப்பட்டபின் ஒரு நாள் விழுந்துவிடும். அதுபோலவே, நல்ல வினை தீய வினை ஆகிய இரண்டுவித வினைகளால் பின்னப்பட்ட இந்த உடலென்னும் கூரையும் அதைத் தாங்கியிருக்கும் மூச்செனும் கழியும் அந்த இருவினைகளின் பயன்களை முழுவதும் அனுபவித்தபின் முதுமை பெற்று ஒரு நாள் மூச்சு வெளியேறி இறந்து விடும். கூரை இருந்த வரையில் அதனடியில் வசித்து வந்த மக்கள் கூரை விழுந்த பின் அதனோடு இறந்து விழுவதில்லை. அதுபோலவே மனிதன் வாழும் வரை அவனோடு கூடவே இருந்து அவனால் பயன்பெற்ற மனைவியும் குழந்தைகளும் அவன் இறந்து போனபின் அவனோடு கூடவே இறந்து போவதில்லை. உயிர் இறந்து மேலுலகத்திற்குத் தனியாகச் செல்லுகின்ற போது அதனுடனே பாதுகாவலர்கள் போல துணைக்கு வருவது அந்த உயிர் வாழும் போது செய்த விரதங்களின் பலன்களும் இறையருளால் பெற்ற ஞானங்களும் மட்டுமே. மற்ற எதுவும் அந்த உயிரோடு வருவதில்லை. வாழும்வரை இறைவனை நினைத்து காரியங்களைச் செய்து குருவின் அருள்பெற்று ஞானத்தை வளர்ப்பதே நல்லது.

பாடல் #145: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

விளக்கம்:

உயிர் உடலில் இருக்கும் வரை அவனுடன் வாழ்ந்த மனைவி, குழந்தைகள், உறவினர், சுற்றத்தார், ஊரார்கள் என்று அனைவருமே அவன் இறந்துபோன பின் ஒன்றாகக் கூடி சத்தம்போட்டு அழுது புலம்பிவிட்டு அவனுக்கு அதுவரை வைத்திருந்த பேரைச் சொல்லிக் கூப்பிடாமல் பிணம் என்று ஒரு பேரை வைத்துவிட்டு அனைவரும் சேர்ந்து அவனுடைய உடலை எடுத்துச்சென்று ஊருக்கு வெளியில் இருக்கும் சூரைப்புற்கள் நிறைந்த சுடுகாட்டில் வைத்து அதை எரித்துவிட்டு அந்த உடலைத் தொட்டதை தீட்டு என்று சொல்லி அதைப் போக்க ஆற்றினில் மூழ்கி எழுந்தபின் மெல்ல மெல்ல அவனைப் பற்றிய நினைவுகளையும் மறந்து போவார்கள்.

பாடல் #146: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

காலும் இரண்டு முகட்டல கொன்றுள
பாலுள் பருங்கழி முப்பத் திரண்டுள
மேலுள கூரை பிரியும் பிரிந்தால்முன்
போலுயிர் மீளவும் புகஅறி யாதே.

விளக்கம்:

மனிதர்களின் இரண்டு கால்களே சுவர்களாகவும் முதுகுத் தண்டே அந்தச் சுவற்றிற்கு நடுவில் கூரையைத் தாங்கியிருக்கும் உத்திரமாகவும், உடலைச் சுற்றியிருக்கும் முப்பத்தி இரண்டு விலா எலும்புகளே சுவற்றைச் சுற்றி அது விழுந்துவிடாமல் இருக்கவேண்டி வைக்கப்பட்ட சட்டங்களாகவும் தலையே உத்திரத்தின் உச்சியிலிருக்கும் கூரையாகவும் இருக்கும் இந்த உடலாகிய வீடு எப்படி வீட்டின் மேலே இருக்கும் கூரை பிரிந்து விட்டால் வெறும் சுவர்களும் அதைத் தாங்கியிருக்கும் சட்டங்களும் மட்டுமே நிற்க உபயோகிக்க முடியாததாக ஒரு வீடு இருக்குமோ அதுபோலவே தலைவழியே மூச்சுக்காற்று வெளியேறி விட்டால் உடலும் இறந்துபோய் வெறும் சதையும் எலும்புகளும் மட்டுமே நிற்க வெளியில் சென்ற உயிர் மீண்டும் அந்த உடலுக்கும் புகுந்துகொள்ளும் வழி என்னவென்று தெரியாமல் நிற்கும்.

பாடல் #147: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

சீக்கை விளைந்தது செய்வினை மூட்டற்ற
ஆக்கை பிரிந்த தலகு பழுத்தது
மூக்கினிற் கைவைத்து மூடிட்டுக் கொண்டுபோய்க்
காக்கைக் குப்பலியாகக் காட்டிய வாறே.

விளக்கம்:

மனிதர்களின் இந்த உடலானது நோய்கள் செய்த வினைகள் எல்லாம் முடிந்து போனபின் ஒரு நாள் முதுமை பெற்று நாடி நரம்புகள் செயலிழந்து எலும்புகள் பழுத்துத் தளர்ந்துபோக இறந்து போய்விடும். அப்படி இறந்து போனபின் மற்றவர்கள் வந்து அந்த உடலின் மூக்கின் மேல் கைவைத்து மூச்சிருக்கின்றதா என்று சோதித்துப் பார்த்துவிட்டு மூச்சில்லை என்பது உறுதியானவுடன் துணியால் உடலை மூடி அதைக் கொண்டு போய் சுடுகாட்டில் வைத்து சடங்குகளைச் செய்தபின் புதைத்துவிட்டு [அல்லது எரித்துவிட்டு], திவசம் செய்யும்போது காகங்களுக்குச் சாதம் வைத்து அது இறந்தவர்களுக்குச் சென்று சேரும் என்று எண்ணி செய்கிறார்கள் மூடர்கள். இறந்தவர்களின் உயிரும் அங்கேயே இருப்பதில்லை. இவர்கள் காகத்திற்கு வைக்கும் சாதமும் அவர்களால் உட்கொள்ளப் படுவதில்லை.

பாடல் #148: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

அடப்பண்ணி வைத்தார் அடிசிலை உண்டார்
மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்
இடப்பக்க மேஇறை நொந்தது என்றார்
கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே.

விளக்கம்:

புதியதாகத் திருமணம் செய்த மாப்பிள்ளைக்கு அறுசுவையோடு உணவு சமைத்து வைத்தார்கள். மாப்பிள்ளையும் அனைத்து உணவையும் நன்றாக சுவைத்து உண்டான். கொடிபோன்ற இடை கொண்ட இளம் மனைவியுடன் சுகமாக குலாவினான். இடது பக்கம் சிறிது வலிக்கின்றது என்றான். மனைவி அவனைத் தன் மடியில் கிடத்திப் படுக்கவைத்து என்ன ஆயிற்று என்று கேட்டுக்கொண்டு இருக்கும்போதே இதய வலியால் உயிர் பிரிந்து இறந்து போனான். உயிர் எந்த அளவு நிலைப்புத் தன்மை இல்லாதது என்பதை விளக்கும் ஒரு நிகழ்வு.

பாடல் #149: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

மன்றத்தே நம்பி தன்மாடம் எடுத்தது
மன்றத்தே நம்பி சிவிகைபெற் றேறினான்
மன்றத்தே நம்பி முக்கோடி வழங்கினான்
சென்றத்தா வென்னத் திரிந்திலன் தானே.

விளக்கம்:

ஊரில் ஆடவன் ஒருவன் தன் முயற்சியினால் பெரும் பொருள் சேர்த்து பலரும் வியக்கும் வண்ணம் பல அடுக்கு மாளிகையைக் கட்டினான். பின் ஊர் அறிய ஒரு பல்லக்கு செய்து அதில் ஏறி, ஊரில் உள்ளோர்க்கு தானங்கள் பல வழங்கினான். அவனது உடலை விட்டு உயிர் பிரிந்த பின் பலர் நின்று தலைவனே என்று கூப்பிட்டுக் கதறியும் அவன் உயிர் திரும்பாமலே போய்விட்டான்.

கருத்து : ராஜபோகத்தில் வாழ்ந்தாலும் தான தர்மங்கள் எவ்வளவு செய்தாலும் உயிர் உடலில் நிற்காது.

பாடல் #150: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

வாசந்தி பேசி மணம்புணர் தம்பதி
நேசந் தெவிட்டி நினைப்பொழி வார்பின்னை
ஆசந்தி மேல்வைத் தமைய அழுதிட்டுப்
பாசந்தீச் சுட்டுப் பலியட்டி னார்களே.

விளக்கம் :

இனிய உறுதி மொழிகளை கூறி ஆணும் பெண்ணும் இருமனங்களும் ஒன்று சேர திருமணம் செய்து கொண்டனர். பின்னர் கூடிக்கலந்து மகிழ்ந்திருந்த மணமக்கள் காலப்போக்கில் ஆரம்பத்தில் இருந்த காதல் பாச நினைவுகளை மறந்து ஒருவர் மேல் ஒருவர் திகட்டி சலிப்படைந்து விடுவர். பின் ஒரு நாள் இருவரில் ஒருவர் இறந்து விட அந்த உடலை பாடையின் மேல் வைத்து ஒப்பாரி வைத்து அழுது புலம்பி தங்களின் அன்பு பாசத்தையும் உடலுடன் சேர்த்து தீ வைத்து பலியிட்டார்களே.

கருத்து : மணந்தவர்களின் அன்பும் சுடுகாடு வரை மட்டுமே இருக்கும்.

பாடல் #151: முதல் தந்திரம் – 2. யாக்கை நிலையாமை

கைவிட்டு நாடிக் கருத்தழிந் தச்சற
நெய்யட்டிச் சோறுண்ணும் ஐவரும் போயினார்
மையிட்ட கண்ணாளும் மாடும் இருக்கவே
மெய்விட்டுப் போக விடைகொள்ளு மாறே.

விளக்கம் :

மை பூசிய கண்களுடைய மனைவியும் தேடிய செல்வமும் அருகில் இருக்க மருத்துவர் கையில் நாடி பார்த்து இனி மருத்துவம் பயனளிக்காது என்று கைவிட்டு விட கொடுத்தது வாங்கியது செய்யவேண்டியது அனைத்தையும் மற்றவர்களிடம் சொல்ல எண்ணியும் நினைவுகள் இல்லாமல் தடுமாறி உடலில் ஒட்டிய உயிர் மூச்சு ஒடுங்கிவிடும். வாசம் மிகுந்த நெய்யால் செய்த உணவுகளை உண்டு மகிழ்ந்த மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து புலன்களும் செயலிலந்து உடலை விட்டு உயிர் பிரிந்து விடும்.

பாடல் #152: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

பந்தல் பிரிந்தது பண்டாரங் கட்டற்ற
ஒன்பது வாசலும் ஒக்க அடைத்தன
துன்புறு காலத் துரிசுவர மேன்மேல்
அன்புடை யார்கள் அழுதகன் றார்களே.

விளக்கம் :

மரண வேதனையில் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் கடைசி காலத்தில் ஒரு நாள் மரணம் வந்துவிடும். அப்போது உயிராகிய பொக்கிஷத்தின் மேல் போர்வை போல் இருந்த உடம்பாகிய பந்தல் பிரிந்துவிட உடலோடு இருந்து இதுவரை வழிநடத்திவந்த உயிரும் வெளியேறிவிடும். உயிர் வெளியேறிய பின் காற்றில்லாத உடலில் ஒன்பது வகை துவாரங்களும் [2 கண், 2 காது, 2 மூக்குத்துவாரங்கள், வாய், பால்குறி, ஆசனவாய்] அடைபட்டுவிடும். அப்படி உயிர்காற்று வெளியேறியபின் அந்த உடலின்மேல் அன்பு கொண்டிருந்தவர்கள் எல்லோரும் வந்து அழுது ஒப்பாரி வைத்துவிட்டு பின்பு சென்றுவிடுவார்கள்.

பாடல் #153: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

நாட்டுக்கு நாயகன் நம்மூர்த் தலைமகன்
காட்டுச் சிவிகையொன் றேறிக் கடைமுறை
நாட்டார்கள் பின்செல்ல முன்னே பறைகொட்ட
நாட்டைவிட்டு நம்பி நடக்கின்ற வாறே.

விளக்கம்:

தன் நாட்டிற்கு அரசனாகவும் குடிமக்களில் முதல்வனாகவும் இருப்பவன் பலவித பல்லக்கில் ஏறித் திரிந்தவன் கடைசியில் சுடுகாட்டிற்குச் செல்லும் பாடையில் உயிர் பிரிந்து கிடக்க அவனது நாட்டின் குடிமக்கள் அவனுக்குப் பின்னால் வர அவனுக்கு முன்னால் பறை அடிப்பவர்கள் மத்தளம் கொட்ட இதுவரை அவன் ஆட்சி செய்த நாட்டைவிட்டு சுடுகாட்டுக்கு அவன் செல்லும் முறை இதுவே ஆகும்.

பாடல் #154: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

முப்பதும் முப்பதும் முப்பத் தறுவரும்
செப்ப மதிளுடைக் கோயிலுள் வாழ்பவர்
செப்ப மதிளுடைக் கோயில் சிதைந்தபின்
ஒப்ப அனைவரும் ஓட்டெடுத் தார்களே.

விளக்கம்:

மனித உடலில் தொண்ணூற்றாறு தத்துவங்கள் வாழுகின்றன, இந்தத் தொண்ணூற்றாறு தத்துவங்களாலும் செய்யப்பட்ட மதிலாகிய உடல் சூழ்ந்த கோயிலுக்குள் ஆன்மாவாகிய உயிர் வாழுகின்றது. எப்போது அந்தக் கோயிலாகிய உடல் பழுதடைந்து கெட்டு உயிர் போகிறதோ அப்போது அதன் மதிலாக இருந்த தொண்ணூற்றாறு தத்துவங்களும் ஒன்றாக ஓடி விடுகின்றன.

96 தத்துவங்கள் - 25 பஞ்சபூத காரியங்கள், 5 வாசனாதிகள்/அவத்தைகள், 10 வாயுக்கள், 10 நாடிக்கள், 4 வாக்குகள், 3 மலங்கள், 3 குணங்கள்] 5 சிவ தத்துவம், 7 வித்யா தத்துவம், 24 ஆன்ம தத்துவம்

பாடல் #155: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

மதுவூர் குழலியும் மாடும் மனையும்
இதுவூர் ஒழிய இதணம தேறிப்
பொதுவூர் புறஞ்சுடு காடது நோக்கி
மதுவூர் வாங்கியே வைத்தகன் றார்களே.

விளக்கம்:

தேன் நிறைந்த வாசனை மிக்க மலர்களைத் தன் கூந்தலில் சூடியிருக்கும் மனைவியும் சம்பாதித்த செல்வங்களும் சொத்துக்களும் ஒருவன் இருந்த ஊரிலேயே தங்கிவிட அவன் மட்டுமே பாடையில் ஏற்றப்பட்டு ஊருக்குப் பொதுவாக வெளியில் இருக்கும் சுடுகாட்டுக் கொண்டு செல்லப்பட்டு அங்கே அவனது குழந்தைகளும் சுற்றத்தாரும் அன்பு கலந்த சோகத்தோடு அவனது உடலைப் பாடையிலிருந்து வாங்கி சுடுகாட்டில் வைத்து சுட்டெரித்துவிட்டு அல்லது புதைத்துவிட்டு அங்கிருந்து அகன்று சென்றுவிடுவார்கள்.

கருத்து : தேடிய சொத்துக்கள், மனைவி, மக்கள் அனைத்தும் வீட்டிலேயே இருக்க தேடியவன் மட்டும் காட்டில் எரிக்கப்படுவான்.

பாடல் #156: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

வைச்சகல் வுற்றது கண்டு மனிதர்கள்
அச்சக லாதென நாடும் அரும்பொருள்
பிச்சது வாய்ப்பின் தொடர்வுறு மற்றவர்
எச்சக லாதுநின் றிளைக்கின்ற வாறே.

விளக்கம்:

பாடல் #155 இல் கூறியபடி தேடிய சொத்துக்கள் மனைவி மக்கள் அனைத்தும் வீட்டிலேயே இருக்க தேடியவன் மட்டும் காட்டில் எரிக்கப்படுவான் என்று கண்கூடாக கண்ட மனிதர்கள் கூட தங்களின் உடலை விட்டு உயிர் என்றும் பிரியாது இருக்கும் என்று நினைத்துக் கொண்டு பெரும் பாடுபட்டு பலவித செல்வங்கள் சேர்ப்பதும் சேர்த்த செல்வங்களின் மேலே அதிகமான ஆசையை வைப்பதும் அவரைத் பின்பற்றி மற்றவர்களும் அவ்வாறே செய்வதும் இதனால் அவர்கள் பிறவியோடு வந்த கர்ம நிலைகள் மாறாமலேயே அவர்களும் உடல் இளைத்து வயதாகி ஒரு நாள் அவர்கள் முதலில் கண்டவனைப் போலவே உயிர்பிரிந்து சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்படுவதையும் பார்த்தால் இவர்களின் எண்ணத்தை என்னவென்று சொல்வது?

பாடல் #157: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலைப் போக்கி விறகிட் டெரிமூட்டி
நீர்த்தலையில் மூழ்குவர் நீதியில் லாரே.

விளக்கம்:

ஒருவன் இறந்தபின் அவனது உடலைச் சுற்றி நின்று கூவி ஒப்பாரி வைக்கும் உறவினர்களும், சுற்றத்தாரும், மனைவியும், மக்களும் அவனது உடலை ஊரின் எல்லை சுடுகாடு வரை எடுத்துச் சென்றபின் தங்களின் நெற்றியின் மேல் அரும்பிவிட்ட வேர்வையை துடைத்து நீக்குவது போல் அவனது உடலையும் இறக்கி வைத்து விறகுகளை அடுக்கி அதற்கு நெருப்பு மூட்டிவிட்டு நீரினில் தலை முழுகி விட்டுச் சென்று விடுபவர்கள். தனக்கு உறுதிணையாய் இருந்த அவனது உடலையும் அவனது அன்பையும் அப்போதே மறந்துவிட்ட நீதியில்லாதவர்கள் இவர்கள்.

கருத்து:

ஒருவன் இருக்கும் வரை அவன் மூலம் கிடைத்த அனைத்தையும் அனுபவித்துக்கொண்டு அவனோடு அன்பாக இருந்தவர்கள் அவன் இறந்ததும் அனைத்தையும் மறந்துவிட்டும், தங்களுக்கும் ஒரு நாள் இறப்பு வரும் என்பதை நினைத்துப் பார்க்காதவர்கள் நீதியில்லாதவர்கள்.

பாடல் #158: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

வளத்திடை முற்றத்தோர் மாநிலம் முற்றும்
குளத்தின் மண்கொண்டு குயவன் வனைந்தான்
குடமுடைந் தால்அவை ஓடென்று வைப்பர்
உடலுடைந் தால்இறைப் போதும்வை யாரே.

விளக்கம்:

இந்த உலகம் முழுவதும் பிறக்கின்ற உயிர்களின் உடல்கள் எல்லாம் அழகாக செய்யப்பட்ட மண்குடம் போன்றது. தாயின் வளமை பொருந்திய இடையின் முன்பிருக்கும் வயிற்றிலிருக்கும் குளமாகிய கருப்பைக்குள் சுரோணிதமாகிய மண் மற்றும் சுக்கிலமாகிய நீர் கலந்து குயவனாகிய இறைவனால் படைந்த உடல் இது. மண்ணால் செய்யப்பட்ட குடம் உடைந்து போனால் கூட ஓடாக பயன்படும் என்று வைத்திருக்கும் மனிதர்கள் தோலாகிய மண்ணால் செய்யப்பட்ட இந்த உடலாகிய குடம் உடைந்து போனால் (இறந்து போனால்) மட்டும் வைத்திருக்காமல் வெளியே எடுத்துச் சென்று சுடுகாட்டில் வைத்து எரித்துவிடுவார்கள்.

கருத்து:

களிமண்ணால் செய்யப்பட்ட உடைந்த குடத்திற்கு இருக்கும் மதிப்பு கூட உயிர்பிரிந்த உடலுக்கு கிடையாது.

பாடல் #159: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

ஐந்து தலைப்பறி யாறு சடையுள
சந்தவை முப்பது சார்வு பதினெட்டுப்
பந்தலும் ஒன்பது பந்தி பதினைந்து
வெந்தது கிடந்தது மேலறி யோமே.

விளக்கம்:

ஐம்புலன்களும் செயல்படும் தலையாய ஐந்து இந்திரியங்களும் [கண், காது, மூக்கு, வாய், தோல்] நாடிகளோடு பிணைந்துக் கிடக்கும் ஆறு ஆதாரங்களும் [மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிப்பூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை] முப்பது எலும்புகளும், அந்த எலும்புகளை இணைக்கும் பதினெட்டு மூட்டுக்களும், இவை அனைத்தையும் போர்வை போல மூடி வைத்திருக்கும் தோலும், அந்தத் தோலிலுள்ள ஒன்பது துவாரங்களும் [2 கண், 2 காது, 2 நாசி, வாய், பால்குறி, ஆசனவாய்], பதினைந்து வித எலும்புவரிகளும் [மண்டையெலும்பு, தாடையெலும்பு, கழுத்தெலும்பு, மார்பெலும்பு, முதுகெலும்பு, முதலியன] ஆகிய அனைத்தும் சேர்ந்து இருக்கும் இந்த மனித உடலானது இறந்தபின் சுடுகாட்டில் கொண்டுபோய் எரிக்கப்படும்போது அனைத்தும் எரிந்து வெறும் சாம்பல் மட்டுமே கிடக்கும். அப்படி வெந்து கிடக்கும் சாம்பலுக்குப் பிறகு அந்த உயிருக்கு என்னவாகின்றது என்பதை யாரும் அறிவதில்லை.



பாடல் #160: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

அத்திப் பழமும் அரைக்கீரை நல்வித்தும்
கொத்தி உலைப்பெய்து கூழட்டு வைத்தனர்
அத்திப் பழத்தை அரைக்கீரை வித்துண்ணக்
கத்தி எடுத்தவர் காடுபுக் காரே.

விளக்கம்:

அத்திப்பழத்தையும் [பெண்ணின் உடல்தரும் சுரோணிதம்] நல்ல அரைக்கீரை வித்தையும் [ஆணின் உடல்தரும் சுக்கிலம்] ஒன்றாகக் கலக்கும்படி கொத்தி [ஆணும் பெண்ணும் ஒன்றாக சேருதல்] அதை உலையில் வைத்து [கருப்பை], கூழாக [தூமை எனப்படும் குழந்தையின் சதை உருவம்] சமைத்து வைத்தனர் பெற்றோர். பின்பு அத்திப்பழமாகிய சுரோணிதத்தை அரைக்கீரை வித்தாகிய சுக்கிலம் உண்டு குழந்தையின் உடலாக மாறிவிட்டபின் பிரசவ வேதனையில் கதறி அதைப் பெற்றெடுத்தவர்கள் ஒரு நாள் அந்த உடல் இறந்தபின் அதை எரிக்க சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்றனர்.

கருத்து:

சில பொருள்கள் சேர்த்து சாப்பாடு சமைப்பது போலவே ஆணும் பெண்ணும் சேர்ந்து சமைத்த இந்த மனித உடல் சாப்பிட்டு முடித்ததும் பாத்திரத்தைக் கழுவி எடுத்து வைத்ததுபோல ஒரு நாள் உயிர் போனபின் உடல் சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று வைக்கப்பட்டுவிடும். நன்றாக சமைத்த சாப்பாடும் நிரந்தரமாக பசியைப் போக்காதது போலவே உடலும் நிரந்தரமாக இருக்காது.

பாடல் #161: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

மேலும் முகடில்லை கீழும் வடிம்பில்லை
காலும் இரண்டு முகட்டலக் கொன்றுண்டு
ஓலையான் மேய்ந்தவ ரூடு வரியாமை
வேலையான் மேய்ந்ததோர் வெள்ளித் தளிகையே.

விளக்கம்:

இந்த மனித உடலாகிய வீட்டிற்கு மேலும் கூரையில்லை [உச்சியில் தலை மட்டுமே]. அடியிலும் செப்பனிட்ட தளமில்லை [காலுக்குக்கீழ் ஒன்றுமில்லை]. வீட்டின் சுவரைத் தாங்கும் கழிகளும் இரண்டுதான் இருக்கின்றது [இரண்டு கால்கள் மட்டுமே]. அதன் நடுவில் உத்திரத்தைத் தாங்கும் கழி [முதுகெலும்பு] ஒன்றுதான் இருக்கிறது. இப்படி இருக்கும் வீட்டிற்கு சொந்தக்காரனோ [மனித உயிர்] வீட்டை என்றும் அழியாமல் உறுதியாக வைக்கத் தெரியாமல் விட்டுவிட்டான் [சுழுமுனை நாடி வழியே மூச்சுக்காற்றை செலுத்தத் தெரியாமல் விட்டுவிட்டான்]. வேலையால் [வினைக் கர்மங்கள்] செய்யப்பட்ட இந்த வெள்ளிக் கோயில் போன்ற உடல் [வெள்ளை நிற சுக்கிலத்தால் உருவானது] வீணே அழிந்து போகின்றது [இறந்து போகின்றது].

கருத்து:

இறைவன் மனித உடலில் கூரையாக சகஸ்ரர தள பரவெளியையும், அடித்தளமாக குண்டலினி சக்தியையும் கால்களாக இடகலை பிங்கலை ஆகிய இரண்டு நாடிகளையும், தாங்கும் முதுகெலும்பாக நடுவில் சுழுமுனை நாடியையும் கொடுத்து உடம்பை ஒரு கோயிலாக படைத்திருக்கின்றான். இருப்பினும் உயிர்கள் தம் உடலிலுள்ள குண்டலினி சக்தியை சுழுமுனை நாடி வழியே மேலெழுப்பி, சகஸ்ரர தளத்தில் சேர்த்து என்றும் அழியாத உடலைப் பெறும் வழியைத் தெரிந்து கொள்ளாமல் தங்களின் வாழ்க்கையை வீணே கழித்து ஒரு நாள் அழிந்து போகின்றார்கள்.

பாடல் #162: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

கூடம் கிடந்தது கோலங்கள் இங்கில்லை
ஆடும் இலையமும் அற்ற தறுதலும்
பாடுகின் றார்சிலர் பண்ணில் அழுதிட்டுத்
தேடிய தீயினில் தீயவைத் தார்களே.

விளக்கம்:

நாட்டியம் ஆடுகின்ற கலைக்கூடம் வெறுமனே கிடக்கின்றது [உயிர் ஆடிய உடல் செத்துக் கிடக்கின்றது]. அங்கே அழகிய அலங்காரங்கள் எதுவும் இல்லை [பிணத்திற்கு அழகு இல்லை] நாட்டியம் ஆடும் சுதியும் லயமும் இல்லை. [மூச்சுக் காற்றும் இருதயத் துடிப்பும் இல்லை] அந்தக் கலைக்கூடத்தில் பாடுகின்றார்கள் சிலர் [பண்டாரங்கள் பறையறைந்து பாடுதல்]. சுதியும் லயமும் இல்லாமல் வெறும் பண் வைத்துப் பாடுவது அழுவதுபோல இருக்கிறது [பிணத்தைச் சுற்றி ஒப்பாரி வைத்து அழுகின்றார்கள்]. இதனால் அழகிய நாட்டியத்தைக் காண வேண்டும் என்று தேடி வந்தவர்களின் ஆசைத் தீயினில் ஏமாற்றமெனும் தீயை வைத்து ஆசையை எரித்துவிட்டார்கள் [காய்ந்த விறகுகளைத் தேடி எடுத்து வந்து வைத்த தீயினில் உடலை வைத்து எரித்துவிட்டார்கள்].

கருத்து:

உயிர் இருக்கும் வரை ஓயாது ஆசை எனும் தீயினில் ஆடும் இந்த உடல் அந்த உயிர் பிரிந்தவுடன் மற்றவர்கள் வைத்த தீயினில் வெந்து சாம்பலாகின்றது.

பாடல் #163: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்
இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்
பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினில்
கெட்டது எழுபதிற் கேடறி யீரே.

விளக்கம்:

கரு முட்டையில் [சுரோணிதம்] சுக்கிலம் சேர்ந்ததால் முன்னூறு நாட்களில் [10 மாதம்] பிறந்தது மனித உடல். பிறந்த உயிர் தாமாகவே இறைவனை அறியும் அறிவை கொண்டு வரவில்லை. பிறந்ததில் இருந்து இறைவனை அடையும் அறிவுச் செல்வம் இல்லாத அந்த குழந்தை 12 ஆண்டுகளில் உலக வாசனையுடன் வளர்ந்து சிறிது சிறிதாக உலகப் பற்றுக்களின் மேல் ஆசை கொண்டு அப்பற்றுகளுடன் வாழும் அந்த உயிர் எழுபது வயதில் இறைவனை அடையும் வழிகள் தெரியாமல் மனம் தெளிவை அடையாமலேயே உடல் கெட்டு அழிந்து விடுவதை யாரும் அறிந்து கொள்ளவில்லை.

பாடல் #164: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

இடிஞ்சில் இருக்க விளக்கெரி கொண்டான்
முடிஞ்ச தறியார் முழங்குவர் மூடர்
விடிஞ்சிரு ளாவ தறியா உலகம்
படிஞ்சு கிடந்து பதைக்கின்ற வாறே.

விளக்கம்:

விளக்கு (மனித உடல்) இருக்கும் போதே அதிலிருக்கும் ஒளியை (உயிர்) எடுத்துக் கொண்டான் (எமன்) என்று கதறுபவர்கள் எண்ணெய் (கர்ம வினைகள்) தீர்ந்து விட்டதால்தான் ஜோதியும் (உயிர்) நின்றுவிட்டது என்பதை அறியாத மூடர்கள். தினமும் விடியும் காலைப் பொழுது (பிறப்பு) பிறகு இரவு வர மறைந்து இருளாகும் (இறப்பு) என்பதை உணராத இந்த உலகத்தவர்கள் இறந்தவனுக்காக துக்கத்தில் புலம்புகின்றனர். பிறப்பு உண்டெனில் இறப்பும் உண்டு என்பதை அறியாமல் உலகப் பற்றுக்களில் ஆசை வைத்து நிலையற்ற உடம்பை நிலையென்று எண்ணி வருந்துகின்றனரே.

பாடல் #165: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

மடல்விரிக் கொன்றையன் மாயன் படைத்த
உடலும் உயிரும் உருவந் தொழாமல்
இடர்படந் தேழா நரகிற் கிடப்பர்
குடர்பட வெந்தமர் கூப்பிடு மாறே.

விளக்கம்:

மடல் விரித்த அழகிய கொன்றை மலரை மார்பில் அணிந்த மாயவனால் [இறைவன்] மாயையில் படைக்கப்பட்ட இந்த மனித உடலும் அதிலிருக்கும் உயிரும் அந்த இறைவனின் திரு உருவத்தைத் வழிபடாமல் ஆசைகளின் வழியே வாழ்ந்து துன்பப்பட்டு இறந்தவர்களின் நெருக்கமானவர்கள் [மனைவி மக்கள் மற்றும் உறவினர்] அடிவயிற்றிலிருந்து உரக்கக் கூப்பிட்டு அழுது புலம்பிக்கொண்டிருக்க நரகிலேயே கொடியதான ஏழாவது நரகத்தில் கிடந்து அல்லல் படுவார்கள்.

கருத்து:

அழியக்கூடிய இந்த உடலின் மேல் ஆசை வைத்து உலகில் ஆசையினால் பல தீய காரியங்களைச் செய்துகொண்டு தம்மைப் படைத்த என்றும் அழியாத இறைவனைப் போற்றி வணங்காதவர்கள் இறந்தபின் அவர்களின் உறவினர்கள் கதறி அழுது கூப்பிட்டாலும் திரும்பி வரமுடியாமல் ஏழாவது நரகத்தில் கிடந்து துன்பப்படுவார்கள்.

பாடல் #166: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

குடையும் குதிரையும் கொற்றவா ளும்கொண்
டிடையுமக் காலம் இருந்து நடுவே
புடையு மனிதனார் போகும்அப் போதே
அடையும் இடம்வலம் ஆருயி ராமே.

விளக்கம்:

அரசாட்சியும் வலிமையான குதிரை படையும் உறுதியான வாளும் செங்கோலும் தரித்துக் கொண்டு வாழ வேண்டிய காலம் வரை அரசனாக வாழும் மனிதர்களும் அவர்களின் நடுவே நான்கு பக்கமும் மனிதர்களோடு புடைசூழ சென்று கொண்டிருக்கும் போதே அவர்களது உயிரானது இடகலை பிங்கலை நாசிகளின் வழியே பிரிந்து அடையவேண்டிய இடத்துக்குச் சென்று அடைந்துவிடும்.

உட்கருத்து:

மக்கள் படைசூழ வலம் வரும் பாராளும் அரசன் ஆனாலும் உயிர் பிரிந்து போவதை யாராலும் தடுக்க இயலாது.

பாடல் #167: முதல் தந்திரம் - 2. யாக்கை நிலையாமை

காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளிப் பெய்யிலென் பல்லோர் பழிச்சிலென்
தோற்பையுள் நின்று தொழிலறச் செய்தீட்டும்
கூத்தன் புறப்பட்டுப் போனஇக் கூட்டையே.

விளக்கம்:

உடலாகிய இந்தத் தோல் பையினுள் [தோலால் சூழ்ந்த உடல்] உயிராக இருந்து வினைகளைச் [செயல்களை] செய்து அதன் மூலம் தன்னுடைய கர்ம பலன்கள் கழிந்த பின் உடல் இயங்க காரணமான இறைவன் [உயிர்] உடலில் இருந்து பிரிந்த பிறகு வெறும் எலும்பும் தோலுமாகிய இந்த மனித உடலை காக்கை வந்து கொத்தித் திருடிச் சென்றால் என்ன? கண்டவர்கள் பிணம் என்று பழித்தால் என்ன? உடலை சுட்டு எரித்தபின் எலும்பின் மேல் பால் ஊற்றி காரியம் செய்தால் என்ன? பலவகைப் பட்டவர்களும் வந்து உயிர் இருக்கும் போது செய்த காரியங்களைப் பற்றி பழி சொன்னால் என்ன? பலரும் புகழ்ந்து பேசினால் என்ன? அதனால் இந்த உயிருக்கோ அல்லது வெறுமெனக் கிடக்கும் உடலுக்கோ ஒரு பயனும் இல்லை.

கருத்து:

வாழும்போது இந்த உடலின் மூலம் இறைவனை அடையும் வழிகளைப் பற்றி எண்ணாமல் இறந்தபிறகு அந்த வெறும் உடலை என்ன செய்தாலும் அதனால் ஒரு பயனும் இல்லை.

பாடல் #168: முதல் தந்திரம் - 3. செல்வம் நிலையாமை

அருளும் அரசனும் ஆனையுந் தேரும்
பொருளும் பிறர்கொள்ளப் போவதன் முன்னம்
தெருளும் உயிரொடுஞ் செல்வனைச் சேரின்
மருளும் பினையவன் மாதவ மன்றே.

விளக்கம்:

நாட்டுக்கு நன்மை செய்யும் அரசனின் ஆதிக்கத்தில் இருக்கும் யானைப் படைகளும் தேர்களும் அவன் ஈட்டிய பெருஞ் செல்வங்களும் பின்னொரு நாளில் அவனை வெற்றிகொள்ளும் வேறொருவருக்குச் சொந்தமாகிவிடும். யாருடைய செல்வமாக இருந்தாலும் ஒருநாள் மற்றவர் அந்த செல்வங்களை எடுத்துச் செல்வார்கள். அப்படி வேறொருவர் வந்து எடுத்துக் கொள்ளும் முன்னரே உலகச் செல்வங்களுக்கெல்லாம் தலைவனான இறைவனைப் பற்றி தெரிந்து கொண்டு அவனைப் பற்றிய தெளிவு பெற்று உணர்ந்து அவன் திருவடி சென்று சேர்ந்துவிட்டால் அதன் பிறகு செய்வதற்கு இவ்வளவு கடினமா என்று உயிர்கள் பயப்படும் அளவிற்கு இருக்கும் மாபெரும் தவங்கள் எதுவுமே செய்யத் தேவையில்லை.

கருத்து:

ஒரு மாபெரும் நாட்டையே ஆளும் அரசனாக இருந்தாலும் அவனிடமிருக்கும் எந்தச் செல்வமும் நிலைப்பதில்லை. நிலையாத இந்த செல்வங்களில் ஆசை வைக்காமல் அரிய மாபெரும் செல்வமாக என்றும் நிலைத்து நிற்கும் இறைவனிடன் சென்று சேர்ந்து விடவேண்டும். இறைவனைச் சென்று சேர்வதற்கு மாபெரும் தவங்கள் எதுவும் தேவையில்லை அவன் திருவடியை இறுகப் பற்றிக்கொண்டு முழுவதுமாக சரணடைந்துவிட்டாலே போதும்.

பாடல் #169: முதல் தந்திரம் - 3. செல்வம் நிலையாமை

இயக்குறு திங்கள் இருட்பிழம் பொக்கும்
துயக்குறு செல்வத்தைச் சொல்லவும் வேண்டா
மயக்கற நாடுமின் வானவர் கோனைப்
பெயற்கொண்டல் போலப் பெருஞ்செல்வ மாமே.

விளக்கம்:

பௌர்ணமி அன்று முழுவதாக இருந்து பெரும் ஒளி வீசும் நிலவு கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து பிறகு அமாவாசை அன்று சுத்தமாக மறைந்து விடுவதுபோல அதிகமாக இருந்தாலும் நாளடைவில் குறைந்து பிறகு ஒன்றுமே இல்லாமல் ஆகிவிடும் உலகச் செல்வங்களால் வரும் துன்பங்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? இந்த நிலையில்லாத உலகச் செல்வங்களின் மேல் மயங்கி இருக்காமல் என்றும் நிலைத்திருப்பவனும் தேவர்களுக்கெல்லாம் தலைவனுமாகிய இறைவனைத் தெளிவாக உணர்ந்து அடையுங்கள். அப்படி அடைந்தால் பெரும் மழையை கொடுக்கும் கார்மேகம் போல பெருஞ் செல்வங்களை இறைவன் மழை போல் பொழிவான்.



பாடல் #170: முதல் தந்திரம் - 3. செல்வம் நிலையாமை

தன்னது சாயை தனக்குத வாதுகண்
டென்னது மாடென் றிருப்பர்கள் ஏழைகள்
உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காணும்ஒளி கண்டுகொ ளீரே.

விளக்கம்:

நமது நிழலாக இருந்தாலும் அது நமக்கு உதவாது [நிழல் நமது கூடவே வந்தாலும் அதில் நாம் ஒதுங்கி இளைப்பாற முடியாது] என்பதைத் தெளிவாக கண்ட பிறகும் நாம் கஷ்டப்பட்டு சேர்த்த செல்வங்கள் நமக்கு எப்போதும் உதவும் என்று நினைத்துக்கொண்டு இருப்பவர்கள் ஏமாளிகளே. நமது உடலோடு ஒன்றாகப் பிறந்த உயிர் கூட நம்மோடு என்றும் நிலைத்திருக்காமல் என்றாவது ஒரு நாள் போய்விடும். இப்படி நிலையில்லாத எதிலும் மனதை வைக்காமல் நமக்குள் மனதைச் செலுத்தி அங்கே ஒளிர்ந்து கொண்டிருக்கும் இறைவனின் திருஒளியை அகக் கண்ணால் கண்டு என்றும் நிலையான இறைவனை உணர்ந்து கொள்ளுங்கள்.

பாடல் #171: முதல் தந்திரம் - 3. செல்வம் நிலையாமை

ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்
ஓட்டித் துரத்திட் டதுவலி யார்கொளக்
காட்டிக் கொடுத்துஅது கைவிட்ட வாறே.

விளக்கம்:

வாசனை மிக்க மலர்களைத் தேடிச் சென்று அவைகளில் இருக்கும் தேனைக் கொஞ்சம் கொஞ்சமாக சேகரித்து ஒரு மரத்தின் கொம்பில் கொண்டு வந்து கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து பெரிய தேனடை அளவிற்கு சேமித்து வைக்கின்றது தேனீக்கள். ஒரு நாள் அந்தப் பெரிய தேனடையைக் கண்டுவிட்ட மனிதர்கள் வந்து அவைகளைத் தீப்பந்தங்களால் துரத்திவிட்டு அவை சேமித்து வைத்திருந்த தேனடையைக் கொண்டு போய்விடுகிறார்கள். தேனீ தாமே தேனடையைப் பெரியதாகச் சேமித்து தானே மனிதர்களுக்கு காட்டிக்கொடுத்து விடுகிறது. அதுபோலவே உயிர்கள் தாங்கள் சிறுகச் சிறுகச் சேகரித்த செல்வங்களையும் ஒரு நாள் மற்றவர்கள் கவனிக்குமளவு தங்களிடமிருக்கும் செல்வத்தைப் பிறருக்கு பெரிதாகக் காட்டிக்கொடுத்து விட அவர்களைவிட வலிமையான மற்றவர்கள் வந்து அந்தச் செல்வங்களைக் களவாடிச் செல்வார்கள்.

பாடல் #172: முதல் தந்திரம் - 3. செல்வம் நிலையாமை

தேற்றத் தெளிமின் தெளிந்தீர் கலங்கன்மின்
ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் மறித்துங்கள் செல்வத்தைக்
கூற்றன் வருங்காலிற் குதிக்கலு மாமே.

விளக்கம்:

உலகில் நிலையான செல்வம் எது என்று தெளிவான அறிவு இல்லாதவர்கள் யாம் கூறுவதைக் கேட்டுத் தெளிவடையுங்கள். தெளிவடைந்து விட்டால் உங்களுக்குத் துன்பங்கள் இருக்காது. ஆற்றுப் பெருக்குப் போல திரண்டு வரும் பெருஞ் செல்வங்களைக் கண்டு மதிமயங்கி நிற்காதீர்கள். அந்தச் செல்வங்கள் எதுவும் நிலையானது அல்ல. அந்தச் செல்வங்களை உங்களது சேமிப்பிலிருந்து மாற்றிப் பிறருக்குக் கொடுத்துத் தீர்த்துவிடுங்கள். ஏனெனில் நீங்கள் இறக்கும் தறுவாயில் எம்பெருமான் வரும்பொழுது இந்தச் செல்வங்கள் எதையும் காட்டி அவனைத் தடுக்கவும் முடியாது. இந்தச் செல்வங்கள் எதையும் விட்டுவிட்டு வரமாட்டேன் என்று கூறவும் முடியாது. நீங்கள் பிறருக்குக் கொடுத்து உதவிய தருமங்களே உங்களோடு நிலைத்து நிற்கும்.

பாடல் #173: முதல் தந்திரம் - 3. செல்வம் நிலையாமை

மகிழ்கின்ற செல்வமும் மாடும் உடனே
கவிழ்கின்ற நீர்மிசைச் செல்லும் கலம்போல்
அவிழ்கின்ற ஆக்கைக்கோர் வீடுபே றாகச்
சிமிழொன்று வைத்தமை தேர்ந்தறி யாரே.

விளக்கம்:

உயிர்கள் தாங்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டி சம்பாதிக்கும் செல்வங்களும் சொத்துக்களும் ஆற்றில் சென்றுகொண்டிருக்கும் படகு சட்டென்று வெள்ளம் வந்தால் எப்படி மூழ்கிவிடுமோ அதுபோல சட்டென்று போய்விடும். வெள்ளம் பெருகும் கடலாக இருந்தாலும் அதிலிருக்கும் சிப்பிக்கு எதுவும் ஆவதில்லை. அதுபோலவே அழிந்துபோகின்ற இந்த உடலுக்கு உள்ளேயே என்றும் நிலைத்திருக்கும் முக்தியை அடையும் வழியாக ஒரு சிமிழை (குண்டலினி சக்தி) இறைவன் வைத்திருப்பதை எவரும் ஆராய்ந்து பார்த்து அறிந்து கொள்வதில்லை.

உட்கருத்து:

அழிகின்ற செல்வங்களில் ஆசை வைக்காமல் என்றும் அழியாத முக்திக்கு வழிதரும் குண்டலினி சக்தியை தியானத்தால் எழுப்பி அதைச் சகஸ்ரர தளத்தின் உச்சியில் கொண்டு சேர்த்து இறைவனின் நமக்குள் உணர்ந்து அறிவுத்தெளிவு பெற வேண்டும்



பாடல் #174: முதல் தந்திரம் - 3. செல்வம் நிலையாமை

வாழ்வு மனைவியும் மக்கள் உடன்பிறந்
தாரு மளவே தெமக்கென்பர் ஒண்பொருள்
மேவு மதனை விரிவுசெய் வார்கட்கு
கூவுந் துணையொன்று கூடலு மாமே.

விளக்கம்:

உடன் வாழும் மனைவியும் பிள்ளைகளும் உடன் பிறந்தவர்கள் அனைவருமே நாம் சேர்த்து வைத்த செல்வங்களில் எமக்குக் கொடுக்கும் அளவு என்ன என்றுதான் கேட்பார்கள். அதற்காக அவர்களுக்கும் சேர்த்து மேலும் மேலும் செல்வங்களைச் சேமிக்கும் மனிதர்களுக்கு அவர்கள் இறக்கும் தறுவாயில் கூப்பிட்டு அழைத்தால் உடனே வருவதற்கென்று யாரும் இருக்க மாட்டார்கள். அவர் இறந்ததும் அவர் சேமித்து வைத்த செல்வங்களை உடனே கூறு போட்டு விடுபவர்கள் மட்டுமே இருப்பார்கள். எப்போதும் கூப்பிட்ட குரலுக்கு உடனே வந்து அருள் செய்யும் இறைவனின் துணையை விரும்பி அழிந்துவிடுகின்ற செல்வங்களின் மேல் ஆசை வைத்துச் சேமிக்காமல் என்றும் நிலைத்திருக்கும் இறைவன் மேல் எண்ணம் வைத்து அவனை வணங்கி வழிபட்டால் கூப்பிட்ட குரலுக்கு அவன் எப்போதும் கூட வருவான்.

பாடல் #175: முதல் தந்திரம் - 3. செல்வம் நிலையாமை

வேட்கை மிகுந்தது மெய்கொள்வார் இங்கில்லை
பூட்டுந் தறியொன்று போம்வழி ஒன்பது
நாட்டிய தாய்தமர் வந்து வணங்கிப்பின்
காட்டிக் கொடுத்துஅவர் கைவிட்ட வாறே.

விளக்கம்:

உயிர்கள் உலக ஆசைகள் அதிகமாக கொண்டவை அதையும் தாண்டிய உண்மையைத் தெரிந்துகொள்ளும் உயிர்கள் இங்கே அதிகம் இல்லை. உயிரைக் கட்டி வைக்கும் உடல் ஒன்றுதான். ஆனால் அந்த உயிர் உடலை விட்டுப் பிரியும் வழிகளோ ஒன்பது (2 கண்கள், 2 காதுகள், 2 மூக்குத்துவாரங்கள், வாய், பால்குறி, ஆசனவாய்). உயிர் எவ்வளவுதான் ஆசைகொண்டு மாபெரும் பொருள் சேர்த்தாலும் அதன் உடலிலிருந்து உயிர் பிரிந்து போய்விட்டால் அந்த உயிரைப் பெற்று மண்ணில் வளர்த்த தாய் தந்தையர் முதற்கொண்டு உறவினர்கள் அனைவருமே வந்து உயிர் இல்லாத உடலை மரியாதை நிமித்தம் வணங்கிவிட்டு அந்த உடலைப் புதைக்கும்/எரிக்கும் இடத்திற்கு கொண்டு சென்று இறந்த உடல் இதுதான் என்று காட்டிக் கொடுத்துவிட்டு அந்த உடலையும் அதனோடு இதுவரை அவர்களுக்கு இருந்த உறவையும் கைவிட்டு விட்டுச் சென்றுவிடுவார்கள். அதன் பிறகு அந்த உயிர் ஈட்டிய அனைத்து செல்வங்களையும் இது உனக்கு இது எனக்கு என்று காட்டிக் கொடுத்து எடுத்துக்கொள்வார்கள். இந்த உலக உண்மையை உணராமல் உயிர்கள் வெறும் ஆசையில் ஆடிக்கொண்டு என்றும் நிலையான உண்மையாகிய இறைவனை மறந்துவிடுகின்றன.

பாடல் #176: முதல் தந்திரம் - 3. செல்வம் நிலையாமை

உடம்பொ டுயிரிடை விட்டோடும் போது
அடும்பரி சொன்றில்லை அண்ணலை எண்ணும்
விடும்பரி சாய்நின்ற மெய்நமன் தூதர்
சுடும்பரி சத்தையும் சூழகி லாரே.

விளக்கம்:

உயிர்கள் உலக ஆசையில் எவ்வளவுதான் செல்வங்கள் சேமித்து வைத்திருந்தாலும் அவர்களின் உடலை விட்டு உயிர் பிரிந்து ஓடிவிடும். உடலை விட்டு உயிர் வரும் வழியில் வெளியே காத்திருந்து அதைத் கவர்ந்து செல்லலாம் என்று நிற்கின்ற எம தூதர்களுக்குத் தடையாக இருக்கக்கூடிய ஒரே செல்வம் இறைவனைப் பற்றிய தூய்மையான சிந்தனை மட்டுமே. இறைவனைப் பற்றிய தூய சிந்தனையில் வாழும் உயிர்கள் வெளிவிடும் மூச்சுக்காற்றை சுற்றி வருவதற்கு கூட எம தூதுவர்கள் பயப்படுவார்கள். எப்போதும் உயிர்களைக் காக்கும் இறைவனைப் பற்றியே எண்ணியிருந்து வீணான செல்வங்களின் மேல் ஆசை வைக்காமல் இருக்க வேண்டும்.

பாடல் #177: முதல் தந்திரம் - 4. இளமை நிலையாமை

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டும் தேறார் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டும் தேறார் வியனுல கோரே.

விளக்கம்:

தினமும் காலையில் கிழக்கில் உதிக்கின்ற சூரியன் மாலையில் மேற்கில் விழுந்து மறைந்து விடுவதைக் கண்டும் அதன் காரணத்தைப் புரிந்து கொள்ளாத உயிர்கள் கண்கள் இருந்தும் உண்மையைக் காணாத குருடர்களே. பசுமாடு ஈன்ற குழந்தையாக மண்ணில் வந்த கன்றுக்குட்டியும் சில நாட்களில் எருதாக மாறுவதும் பின்னர் அது முதுமையடைந்து இறந்து விழுவதையும் கண்டுகொண்ட பிறகும் தமக்கும் அதுபோல ஒரு நாள் இளமை நீங்கி முதுமை வந்துவிடும் என்கின்ற உண்மையை உணராத மூடர்களாக உலகத்து உயிர்கள் இருப்பது மிகவும் வியப்புக்கு உரியதே.

பாடல் #178: முதல் தந்திரம் - 4. இளமை நிலையாமை

ஆண்டு பலவும் கழிந்தன அப்பனைப்
பூண்டு கொண்டாரும் புகுந்தறிவா ரில்லை
நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினும்
தூண்டு விளக்கின் சுடருமறி யாரே.

விளக்கம்:

உயிர்கள் பிறந்து பல ஆண்டுகள் உலகத்தில் கழித்தாலும் இறைவனைப் பற்றிக்கொண்டு அவனைத் தமது ஆன்மாவிற்குள் புகுந்து உணர்ந்து அறிபவர்கள் யாரும் இல்லை. எரிகின்ற தீபச் சுடரை எத்தனை காலங்கள் தூண்டு கோலால் திரிநூலை நீட்டி நீட்டி எரிய வைத்தாலும் திரிநூல் தீர்ந்தபின் விளக்கு அணைந்து போகும் என்கின்ற உண்மையை யாரும் அறியாமல் இருக்கின்றார்கள். திரி போன்ற உடலின் உள்ளே தீபம் போல் இருக்கும் உயிர் பிறந்து வளர வளர எரியும் தீபத்தின் திரிநூல் தீர்ந்து விடுவது போல உடலும் இளமை மாறி முதுமை கூடி ஒரு நாள் அழிந்து போய்விடும்.

பாடல் #179: முதல் தந்திரம் - 4. இளமை நிலையாமை

தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்
பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்துஉற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே.

விளக்கம்:

உயிர்கள் பிறந்து வளர வளர உடலும் தேய்ந்து இளமை மாறி முதுமை வந்து ஒரு நாள் இறந்தும் போகின்ற இயற்கையின் விதிகளை ஆராய்ந்து அறிந்து கொள்ளுங்கள். அவ்வாறு அறிந்துகொண்ட பின்பு பாய்ந்து வரும் கங்கையைத் தன் திருமுடியில் சூடிக்கொண்டிருக்கும் இறைவனே என்றும் நிரந்தரமானவன் என்பதை உணர்ந்து, அவனைச் சென்று அடையத் தேவையான பல அரிய தவங்களையும் தியானங்களையும் குருநாதர் மூலம் கற்றுக் கொண்டு மனதை ஒருமுகப்படுத்தி அந்த அரிய செயல்களை உயிர் உடலில் இருக்கும்போதே செய்து இறைவனைச் சென்றடையுங்கள்.

பாடல் #180: முதல் தந்திரம் - 4. இளமை நிலையாமை

விரும்புவர் முன்னென்னை மெல்லியல் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குக்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயும் ஒத்தனே.

விளக்கம்:

ஆண்களின் உடல் முன்பு இளமையாக இருந்த காலங்களில் மென்மையான இயல்புடைய பெண்கள் கரும்பை உடைத்து அதன் அடிக்கரும்பிலிருந்து எடுக்கும் சாறு போன்ற இனிப்பாக நினைத்து விரும்பினார்கள். பூக்களின் அரும்பு போன்ற மென்மையான மார்புகளும் ஆலமரத்தின் இலை போன்ற இடையையும் உடைய இந்தப் பெண்களுக்கு இப்போது வயதாகி வலுவிழந்து சுருங்கி இருக்கும் ஆண்களின் உடம்பு எட்டிக் காய் போல கசக்கிறது. அவர்களுக்கு முன்பு கரும்புச் சாறு போல இனித்ததும் இன்று எட்டிக் காய் போல கசப்பதும் ஒரே உடல்தான் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

பாடல் #181: முதல் தந்திரம் - 4. இளமை நிலையாமை

பாலன் இளையன் விருத்தன் எனநின்ற
காலம் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலம் கடந்தண்டம் ஊடறுத் தானடி
மேலும் கிடந்து விரும்புவன் நானே.

விளக்கம்:

குழந்தை இளைஞன் வயோதிகன் என்று காலம் கழியக் கழிய உடல் மாறுவதைக் கண்டும் அதன் உண்மையை அறிந்து கொள்ளாதவர்கள் உலகத்தவர்கள். உலகத்தையும் தாண்டி அண்டங்கள் அனைத்திலும் கலந்து இருப்பவனும், அதிலே தோன்றுபவை அனைத்தையும் ஒரு நாள் அழித்து ஆட்கொள்பவனுமான இறைவனின் திருவடிகளின் கீழே எத்தனைக் காலங்கள் ஆனாலும் கிடந்து இருப்பதையே நான் விரும்புகின்றேன்.

பாடல் #182: முதல் தந்திரம் - 4. இளமை நிலையாமை

காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாணாள் கழிவதும்
காலுமவ் வீசன் சலவிய னாகிலும்
ஏல நினைப்பவருக் கின்பஞ்செய் தானே.

விளக்கம்:

தினந்தோறும் காலையில் எழுகின்ற உயிர்கள் மாலையில் தூங்கச் செல்லும் வரை பலவித செயல்கள் செய்து அவர்களின் வாழ் நாட்களை வீணாகக் கழிக்கின்றனர். அவ்வாறு வீணாக வாழ்க்கை கழிந்தபின் இறக்கும் உயிர்களை அழிக்கும் ஈசுவரன் கோபம் கொண்ட உருத்திரனைப் போலத் தெரிந்தாலும், அவனைத் தம் அறிவு முதிர்ச்சிக்கு ஏற்ப அன்போடு நினைத்து வாழும் உயிர்களுக்குப் பேரின்பத்தை வழங்கி அருளுவான்.

கருத்து:

தினந்தோறும் பல காரியங்கள் செய்து வெட்டியாக வாழ்க்கையைக் கழித்து பின் இறக்கும்போது இறைவனைப் பார்த்து அவன் கோபத்தோடு அழிப்பவன் என்று பயப்படாமல் உயிரோடு இருக்கும்போதே இறைவனை அன்போடு நினைத்து வழிபட்டு வந்தால் இறக்கும் போதும் அவன் பேரின்பத்தையே அளித்து அருளுவான்.

பாடல் #183: முதல் தந்திரம் – 4. இளமை நிலையாமை

பருவூசி ஐந்துமோர் பையினுள் வாழும்
பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம்
பருவூசி ஐந்தும் பனித்தலைப் பட்டால்
பருவூசி பையும் பறக்கின்ற வாறே.

விளக்கம்:

உடலாகிய இந்தப் பையினுள் புலன்களாகிய ஐந்து பெரிய ஊசிகள் இருக்கின்றன (பார்த்தல் – கண், கேட்டல் – காது, பேசுதல் – வாய், நுகர்தல் – மூக்கு, தொடுதல் – தோல்). இந்த ஐந்து பெரிய ஊசிகளும் தன் விருப்பத்திற்கு பறக்கின்ற பறவைகள் போன்றவை. வெயில் காலத்தில் அங்கும் இங்கும் பறந்து தன் இஷ்டம் போல திரியும் பறவைகள் பனிக்காலத்தில் பறந்து செல்ல வழியின்றி குளிரினில் நடுங்கிக்கொண்டு கூட்டுக்குள்ளேயே இருக்கும். அதுபோலவே இளமைக் காலங்களில் ஆசைகளில் வயப்பட்டு ஐந்து புலன்களையும் அதன் விருப்பத்திற்கு பறக்க விட்டால் பின்பு வயதாகி முதுமை வந்தபிறகு இறைவனை அடைய எண்ணம் இருந்தாலும் குளிர் காலம் நீண்ட நாள் நீடித்து கூட்டிற்கு உள்ளேயே பறவை இருந்து இறந்து போவது போல ஐந்து புலன்களும் உடலுக்குள்ளேயே அடங்கிக் கிடந்து உடலுக்குள் இருந்த உயிர் பறந்து போய் அதிலிருந்த ஐந்து புலன்களும் முற்றும் செயலிழந்து விடும்.

கருத்து:

உயிரோடும் இளமையோடும் இருக்கும்போது ஆசை செல்லும் வழியில் புலன்களைச் செலுத்தாமல் அவைகளைக் கட்டுப்படுத்தி இறைவனின் மேல் நாட்டத்தை ஏற்படுத்தி அவனை அடையும் வழிகளைத் தேடி அடைய வேண்டும்.

பாடல் #184: முதல் தந்திரம் - 4. இளமை நிலையாமை

கண்ணதும் காய்கதி ரோனும் உலகினை
உண்ணின் றளக்கின்ற தொன்றும் அறிகிலார்
விண்ணுறு வாரையும் மண்ணுறு வாரையும்
எண்ணுறு முப்பதில் ஈர்ந்துஒழிந் தாரே.

விளக்கம்:

உயிரின் கண்களில் பார்வையாய் இருப்பவனும் பார்க்கப்படும் பொருளாய் இருப்பவனும் இறைவனே. ஆனால் உயிர்கள் பார்க்கப்படும் பொருளின் மீது மாயையினால் ஆசைப்பட்டு உலக இன்பங்களில் ஈடுபட்டு வினைகளைச் சேர்ப்பதை அந்த உயிரின் உள்ளிருந்தே இறைவன் அளந்து கொண்டு இருப்பதை யாரும் உணரவில்லை. இறைவனை அடையும் வழிகளைத் தேடி அதன் பயனாக விண்ணுலகத்தில் இறைவனை அடைவதும் ஆசைகளில் வயப்பட்டு அதை அனுபவித்து அதன் பயனாகப் பல வினைகளைச் சேர்த்துக்கொண்டு அதைத் தீர்க்க மீண்டும் மீண்டும் மண்ணுலகில் பிறப்பதும் உயிர்களின் எண்ணத்தின் படி உடலின் இளமை இருக்கும் முப்பது ஆண்டுகளில் உயிர்கள் தேர்ந்தெடுக்கும் வழிகளில் இருக்கிறது.

பாடல் #185: முதல் தந்திரம் - 4. இளமை நிலையாமை

ஒன்றிய ஈரெண் கலையும் உடன்றன
நின்றது கண்டு நினைக்கிலர் நீதர்கள்
கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்புஒழி யாரே.

விளக்கம்:

பௌர்ணமி அன்று முழுவதாக இருக்கும் நிலா பிறகு 16 கலைகளில் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்துப் பின் முழுவதுமாக அமாவாசை அன்று மறைந்துவிடும் வழக்கத்தை ஒவ்வொரு மாதமும் பார்த்தாலும் அதன் பொருளை நினைக்காமல் இருக்கின்றனர் மூடர்கள். உயிர்களின் மூடத்தன்மையினால் அவர்கள் செய்யும் பல வினைகளைக் கண்டு கோபம் கொள்ளும் எமதர்மன் அவர்கள் மீண்டும் பிறக்க வைக்கும் குழிகளை (ஆசைகளை) வைத்தவுடன் அந்த குழிகளில் ஆசையினால் சென்று விழுகின்றன உயிர்கள். அப்படி ஆசையில் விழுந்த பின் இளமை அழிந்து முதுமைப் பெற்று இறக்கும் தறுவாயில் எமனைக் கண்டு ஏன் இப்படி நமக்கு நடக்கிறது என்று திகைப்பு மாறாமல் இருக்கின்றார்கள் இந்த மூடர்கள்.



பாடல் #186: முதல் தந்திரம் - 4. இளமை நிலையாமை

எய்திய நாளில் இளமை கழியாமை
எய்திய நாளில் இசையினால் ஏத்துமின்
எய்திய நாளில் எறிவ தறியாமல்
எய்திய நாளில் இருந்ததுகண் டேனே.

விளக்கம்:

உயிர்கள் வினைப் பயனாக உலகத்தில் பிறக்கும் பொழுதே இந்த உலகில் எத்தனைக் காலம் இருக்க வேண்டும் என்பதை ஒரு நாளில் எத்தனை முறை மூச்சுவிடுகின்றன என்கிற கணக்கின்படி எத்தனை நாள் வாழ வேண்டும் என்று வரையறுக்கப்பட்டே பிறக்கின்றன. இந்த வரையறுக்கப்பட்ட நாள்களில் இளமையாக இருப்பது சிறிது நாட்களே. இளமை இருக்கும் போதே எப்போதும் நிரந்தரமான இறைவனைப் பாடித் தொழுது வாழ்வதே சிறந்தது. இளமை இருக்கும் நாட்களிலேயே இறைவனைப் பற்றிய எண்ணங்கள் வரவிடாமல் தடுத்துவிடும் பலவித ஆசைகளை எடுத்து வெளியே எறிந்துவிடத் தெரியாமல் உயிர்கள் ஆசைக்கு அடிமையாகி தங்களின் வாழ்க்கையை இழந்து பின்பு வயதாகி இறந்துவிடுகின்றன. ஆசைக்கு அடிமையாகாமல் உயிரோடு இருக்கும் காலங்களிலேயே இறைவனைப் பற்றிய சிந்தனையில் வாழ்ந்த உயிர்கள் இறைவனை அடைவதை நானும் இருந்து கண்டேன்.

பாடல் #187: முதல் தந்திரம் - 5. உயிர் நிலையாமை

தழைக்கின்ற செந்தளிர்த் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற வெல்லாம் இறக்கின்ற கண்டும்
பிழைப்பின்றி எம்பெரு மானடி யேத்தார்
அழைக்கின்ற போதறி யாரவர் தாமே.

விளக்கம்:

செடிகளிலும் கொடிகளிலும் தழைத்து வளர்கின்ற செழுமையான தளிர்களின் மேல் பூக்கின்ற பூக்களும் அது காய்க்கின்ற காய்களும் பின்பு பழுக்கின்ற பழங்களும் அவை உருவாக்கிய அனைத்துமே ஒரு நாள் இறந்து போவதை [பூக்கள், காய்கள், பழங்கள் பறிக்கப்படுதல் அல்லது அதுவாகவே உலர்ந்து விழுதல்] தினமும் பார்க்கும் உயிர்கள் இந்த வாழ்க்கை நிலைக்காது என்பதைப் புரிந்துகொண்டு எது நிரந்தரமானது என்பதைத் தேடி இறைவனே அனைத்திலும் நிரந்தரமானவன் என்பதைப் புரிந்துகொண்டு அவனுடைய திருவடிகளைத் தொழுது வணங்காதவர்கள் தனக்கும் இறக்கும் நாள் வரும் என்பதை அறியாத மூடர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் இறக்கும் தருணத்திலும் இறைவனை அறியாதவர்களாகவே இருக்கின்றனர்.

பாடல் #188: முதல் தந்திரம் - 5. உயிர் நிலையாமை

ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவார்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யதன் காவல்விட் டாரே.

விளக்கம்:

ஐந்து நபர்களுக்கு ஒரு நிலம் கிடைத்தது அதில் நன்றாக விவசாயம் செய்து விளைச்சல் விளைந்து கிடந்தது. ஐந்து நபர்களும் அந்த நிலத்தையும் அதன் விளைச்சலையும் கெட்டுப்போகாமல் நன்றாக காத்து பராமரித்து வந்தனர். ஒரு நாள் அந்த ஐந்து நபர்களின் தலைவன் அவர்களை உடனே தன் இடத்திற்கு வந்து சேரும்படி ஓலை அனுப்பினான். அந்த ஓலை வந்தவுடனே ஐவரும் உடனே தாங்கள் இதுவரைக் காத்து பராமரித்து வைத்திருந்த நிலத்தை விட்டுவிட்டு தங்களின் தலைவனை நாடிச் சென்றுவிட்டனர். இதில் ஐவர்கள் என்பது உடலில் இருக்கும் உயிரின் ஐந்து புலன்கள் [கண் - பார்த்தல், காது - கேட்டல், மூக்கு - நுகர்தல், வாய் - பேசுதல், தோல் - தொடுதல்] நிலம் என்பது உயிர் உலகில் எடுத்த உடல் ஆகும். ஐவர்களின் தலைவன் இறைவன் ஆவார். ஐந்து புலன்களும் உடலை கெட்டுப்போகாமல் நன்றாக காத்து பராமரித்து வந்தனர். எப்போது உயிர்களின் உலகப் பிறப்பு வினையின் காலம் முடிகிறதோ அப்போது இறைவன் அழைத்தவுடன் ஐந்து புலன்களும் உடலைவிட்டு பிரிந்து சென்றுவிடும்.

பாடல் #189: முதல் தந்திரம் - 5. உயிர் நிலையாமை

மத்தளி ஒன்றுள தாளம் இரண்டுள
அத்துள்ளே வாழும் அரசரும் அஞ்சுள்ள
அத்துள்ளே வாழும் அரசனும் அங்குளன்
மத்தளி மண்ணாகி மயங்கிய வாறே.

விளக்கம்:

மண்ணினால் கட்டப்பட்ட கோட்டை ஒன்று இருக்கின்றது. அந்தக் கோட்டையிலிருந்து இரண்டுவித தாளங்களின் சப்தங்கள் எப்போதும் கேட்கின்றது. அந்தக் கோட்டையினுள் ஐந்து சிற்றரசர்கள் இருக்கின்றார்கள். அவர்களுடன் அவர்களின் தலைவனான பேரரசன் ஒருவனும் அந்தக் கோட்டைக்குள் இருக்கின்றான். இருக்கும் காலம் முடியும்போது அந்தப் பேரரசன் வெளியே சென்றுவிட அவனுடனே ஐந்து சிற்றரசர்களும் சென்றுவிட்டனர். அவர்கள் சென்றபின் அந்தக் கோட்டை மீண்டும் மண்ணோடு மண்ணாகி அழிந்து போய்விட்டது. இதில் கோட்டை என்பது உயிரின் உடல் தாளங்கள் என்பது உயிர் உள்ளிழுக்கும் மூச்சும் வெளிவிடும் மூச்சுக்காற்றும் [இந்த இரண்டும் சேர்ந்துதான் அவர்களின் வாழ் நாட்களைக் கணக்கிடுகின்றது] ஐந்து சிற்றரசர்களாவது உடலிலிருக்கும் ஐந்து புலன்கள் [கண் - பார்த்தல், காது - கேட்டல், மூக்கு - நுகர்தல், வாய் - பேசுதல், தோல் - தொடுதல்], பேரரசன் என்பவர் இறைவன். எப்போது உயிர்கள் இழுத்து விடும் மூச்சுக்காற்றுக்களின் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கை முடிகின்றதோ அப்போது அவர்களின் உடலிலிருந்து உயிர் பிரிந்து உடல் அழிந்து மண்ணோடு மண்ணாகி விடும்.



பாடல் #190: முதல் தந்திரம் - 5. உயிர் நிலையாமை

வேங்கட நாதனை வேதாந்தக் கூத்தனை
வேங்கடத் துள்ளே விளையாடு நந்தியை
வேங்கடம் என்றே விரகறி யாதவர்
தாங்கவல் லாரினுயிர் தாமறி யாரே.

விளக்கம்:

உயிர்களின் உடலுக்கு தீயிட்டால் வெந்து போகின்ற இந்த உடலின் தலைவனாக இருப்பவனும் வேதங்களின் வழி வினைகளை அழித்து தன்னை அடைய உயிர்களின் உள்ளே இருந்து தனது திருவிளையாடலால் உணர்த்தி குருவாக இருக்கின்றான் கூத்தனான இறைவன். தமது உடலுக்குள்ளேயே இருந்து விளையாடும் உயிராக இருப்பது இறைவனே எனும் மாபெரும் ரகசியத்தை அறியாதவர்களாகவும் அண்டசராசரங்களையும் அதிலுள்ள அனைத்தையும் தாங்கவல்ல இறைவனே தமக்குள்ளும் உயிராக இருந்து தம்மையும் தாங்குகின்றான் என்பதையும் அறியாதவர்களாகவும் இருக்கின்றார்கள்.

கருத்து:

உயிர் என்பது இறைவனே அந்த உயிர் எடுக்கும் பிறவியில் உடலுக்குள் வந்து அந்தப் பிறவியின் வினைப்படி உள்ளிருந்தே ஆட்டி வைத்து வினையை அழிப்பதும் இறைவனே இந்த இரகசியத்தை அறியாமல் இருக்கின்றனர் உயிர்கள்.

பாடல் #191: முதல் தந்திரம் – 5. உயிர் நிலையாமை

சென்றுணர் வான்திசை பத்தும் திவாகரன்
அன்றுணர் வாலளக் கின்ற தறிகிலர்
நின்றுண ரார்இந் நிலத்தின் மனிதர்கள்
பொன்றுணர் வாரிற் புணர்க்கின்ற மாயமே.

விளக்கம்:

சூரியன் தானிருக்கும் இடத்திலிருந்தே பத்து திசைகளுக்கும் [வடக்கு, வட கிழக்கு, கிழக்கு, தென் கிழக்கு, தெற்கு, தென் மேற்கு, மேற்கு, வட மேற்கு, மேல், கீழ்] தனது கதிர்களை அழைத்துச் சென்று அதன் மூலம் உருவாகிய வெளிச்சத்தினால் அனைத்தையும் உணர வைக்கின்றான். அதுபோலவே இறைவனும் உயிர்களின் உடலுக்குள்ளேயே உயிராக இருந்துகொண்டு அனைத்தையும் உணர வைக்கின்றான். இந்த உண்மையை உயிர்கள் அறிவதில்லை. இந்த உலகில் மீண்டும் மீண்டும் பிறந்து இறைவன் காட்டும் அனைத்தையும் கண்டும்கூட இறைவனை உணராத இந்த உலகத்து மனிதர்கள் தம்மைப் போலவே இந்த உலகத்தில் பிறந்து அனைத்தும் இறப்பதைக் கண்டும்கூட தமக்கும் இறப்பு ஒரு நாள் வரும் என்பதை உணராமல் தாம் இறக்கும் தருணம் மட்டுமே அதை உணரும் மற்ற மனிதர்களோடே கலந்து இறைவனை அறிய முயலுவது ஆச்சரியமே.

பாடல் #192: முதல் தந்திரம் – 5. உயிர் நிலையாமை

மாறு திருத்தி வரம்பிட்ட பட்டிகை
பீறு மதனைப் பெரிதுணர்ந் தாரில்லை
கூறுங் கருமயிர் வெண்மயி ராவதும்
ஈறும் பிறப்புமொ ராண்டெனும் நீரே.

விளக்கம்:

பட்டு நூலை சிக்கல் எடுத்து கரை வைத்து அழகு கூட்டி கண்ணும் கருத்துமாக நெய்த பட்டாடைகூட நாளாக நாளாக நைந்து ஒரு நாள் கிழிந்து போய்விடும் என்பதை உணராமல் தாம் வாங்கும் பட்டாடை எப்போதும் இருக்கும் என்று எண்ணுகின்றனர் மக்கள். நாட்கள் சென்று கொண்டிருப்பதையும் தமக்கு வயது கூடி கிழப்பருவம் வருகின்றது என்பதையும் கருப்பாக இருந்த கூந்தல் வெள்ளையாக மாறுவதையும் உணர்ந்து கொள்ளாமல் சூரியன் மறைந்து தோன்றுவதற்கு ஒரு நாள் என்று கூறும் உயிர்கள் அது குறிப்பால் தமக்கும் வாழ் நாளைக் குறைத்துக் கொண்டிருப்பதை அறியாதவர்களாக இருக்கின்றனர்.

பாடல் #193: முதல் தந்திரம் - 5. உயிர் நிலையாமை

துடுப்பிடு பானைக்கும் ஒன்றே அரிசி
அடுப்பிடு மூன்றிற்கும் அஞ்செரி கொள்ளி
அடுத்தெரி யாமற் கொடுமின் அரிசி
விடுத்தன நாள்களும் மேற்சென் றனவே.

விளக்கம்:

ஒரு பானை அரிசி கரண்டி உள்ளது. இந்த மூன்றையும் வைத்து சோறு சமைக்க அடுப்பில் வைத்து அடுப்பினடியில் ஐந்து விறகுகளை வைத்து எரிக்க வேண்டும். விறகுகள் எரிய பதம்பார்த்துச் சமைக்கப்பட்ட அரிசி சோறாக மாறி உடலை வளர்க்கும் உணவாகின்றது. இதுபோலவே அழிகின்ற இந்த உடலுக்குள் அழிவைத்தராத ஒரு அரிசி இருக்கின்றது. எப்படி எனில் தியானத்தின் வழியாக உடம்பாகிய பானையில் இடகலை பிங்கலை என்கின்ற கரண்டியை வைத்து உபயோகித்து மூச்சுக்காற்றாகிய அரிசியை விறகுகளாகிய பிராணன் [உயிர்க்காற்று], அபானன் [மலக்காற்று], சமானன் [நிரவுக்காற்று], உதானன் [ஒலிக்காற்று], வியானன் [தொழிற்காற்று] வைத்து சமைத்தால் மூச்சுக்காற்று சுழுமுனை வழியே மேலெழும்பி சகஸ்ரரதளத்தை அடைந்து அமுதமாகிய சோறாக மாறும். அந்த அமுதமாகிய சோறானது உயிரை வளர்க்கும் உணவு. அந்த உணவைத் தொடர்ந்து உண்டு வருகின்ற உயிரானது அது இருக்கும் உடலுக்குக் கொடுக்கப்பட்ட காலங்கள் முடிந்தபோதும் அழிந்துவிடாமல் தொடர்ந்து மேலும் வாழ்ந்து இறைவனை தனக்குள் உணர்ந்து பேரின்பத்திலேயே இருக்கும்.

கருத்து:

உடம்பில் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட காலங்கள் முடியும் வரை மட்டுமே உயிர் வாழ்ந்து அது முடிந்ததும் உடல் அழியக்கூடியவை. உடல் அழியாமல் வைத்து இறைவனை அடைய வேண்டுமெனில், மூச்சுக்காற்றை சுழுமுனை நாடி வழியே மேலேற்றி சகஸ்ரரதளத்தை அடைந்து அமுதம் பெற்று அதைப் பருகி இருக்கும் உடலிலேயே உயிரை வைத்து இறைவனுடன் பேரின்பத்தில் இருக்கலாம்.

பாடல் #194: முதல் தந்திரம் - 5. உயிர் நிலையாமை

இன்புறு வண்டங்கு இனமலர் மேற்போய்
உண்பது வாசம் அதுபோல் உயிர்நிலை
இன்புற நாடி நினைக்கிலும் மூன்றொளி
கண்புற நின்ற கருத்தினுள்நில் லானே.

விளக்கம்:

இனிமையான தேனைச் சுவைக்க ஆசைகொண்ட வண்டுகள் அந்த இனிமையான தேனைத் தன் மகரந்தத்திற்குள் வைத்திருக்கும் தேன் இன மலர்களை அவற்றின் வாசனையின் மூலம் கண்டு பிடித்து அவற்றின் மேல் போய் உட்கார்ந்து அதன் மகரந்தத்திற்குள்ளிருக்கும் தேனை உறிஞ்சிக் குடித்து இன்பம் அடையும். அதுபோலவே உடலுக்குள் உயிராக நிற்கும் இறைவனை அறிய விரும்பாமல் உலகத்து ஆசைகளை அனுபவிக்க ஆசைப்படும் உயிர்கள் அந்த ஆசைகளை அனுபவிக்கும் வழிகளைத் தேடிச் சென்று வினைக் காரியங்களை செய்து அனுபவித்து சிற்றின்பம் அடையும். பகலில் காட்சிகளைக் காட்டும் சூரிய ஒளியாகவும் இரவில் காட்சிகளைக் காட்டும் சந்திர ஒளியாகவும் பகலிலும் இரவிலும் காட்சிகளைக் காணும் கண்ணின் ஒளியாகவும் இருக்கின்ற இறைவன் உலக இன்பத்தில் திளைத்திருக்க விரும்பும் உயிர்கள் காணும் காட்சியில் இருப்பானே தவிர அவர்களின் உணர்வுகளில் இருக்க மாட்டான்.

பாடல் #195: முதல் தந்திரம் - 5. உயிர் நிலையாமை

ஆம்விதி நாடி அறஞ்செய்மின் அந்நிலம்
போம்விதி நாடிப் புனிதனைப் போற்றுமின்
நாம்விதி வேண்டும தென்சொலின் மானிடர்
ஆம்விதி பெற்ற அருமைவல் லாருக்கே.

விளக்கம்:

உலகத்து உயிர்கள் மீண்டும் உலகத்தில் மனிதராக பிறக்கவேண்டும் என்றாலே அதற்கு பல நல்ல அறங்களைச் செய்திருக்க வேண்டும். மீண்டும் உலகில் மனிதராகப் பிறக்க வேண்டுமானால் பல நல்ல காரியங்களைச் செய்து மற்றவர்களுக்கு நன்மை செய்யுங்கள். இந்தப் பிறவியே போதும் இனிமேல் பிறவி வேண்டாம் இறைவனை அடைந்து முக்தி பெற வேண்டும் என்றால் அதற்கு இறைவனை நாடி அவனை எண்ணத்தில் எப்போதும் வைத்துப் போற்றி வழிபடுங்கள். நல்ல அறங்களைச் செய்து இந்த பிறவியில் சிறந்த மனிதப் பிறப்பை எடுத்தவர்களுக்கு இந்த இரண்டு விதிகளைத் தவிர மிகவும் சிறப்பாக சொல்வதற்கு வேறு விதிகள் இல்லை.

பாடல் #196: முதல் தந்திரம் - 5. உயிர் நிலையாமை

அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விக்கொ டுஉண்மின் தலைப்பட்ட போதே.

விளக்கம்:

பொய்யும் புரட்டும் பேசி அறவழிகளை அழிக்காதீர்கள். பொறாமையும் கோபமும் கொண்டு பிறரின் பொருட்களைப் பிடுங்கிக் கொள்ளாமல் இருங்கள். எண்ணமும் செயலும் சிறப்புடையவராக மாறி வாழ்வு சிறந்திருக்கும் போது உணவு உண்ணும்போது யாராவது வந்து பசிக்கிறது என்றால் ஒரு கைப்பிடி அளவாவது உணவை அவருக்கு அளித்தபின் உண்ணுங்கள். இப்படியெல்லாம் வாழ்ந்தால் உடல் அழிந்து உயிர் பிரிந்தாலும் இறைவனை அடைந்து பேரின்பம் அடையலாம்.

பாடல் #197: முதல் தந்திரம் - 6. கொல்லாமை

பற்றாய நற்குரு பூசைக்கும் பன்மலர்
மற்றோர் அணுக்களைக் கொல்லாமை ஒண்மலர்
நற்றார் நடுக்கற்ற தீபமும் சித்தமும்
உற்றாரும் ஆவி அமர்ந்திடம் உச்சியே.

விளக்கம்:

இறைவனின் திருவடிகளைப் பற்றிக் கொள்வதற்கு வழிகாட்டியாக இருக்கும் குருவான இறைவனுக்கு செய்யும் பூஜைக்குப் பலவித மலர்கள் உள்ளது. உயிர்களின் உள்ளத்தால் கிடைக்கும் மலர்களும் உள்ளன. பிற உயிர்களைக் கொல்லாமை, ஐந்து புலன்களையும் அடக்கிய பொறியடக்கம், பொறுமை, இறைவனை அடைய சிந்திக்கும் அறிவு, உண்மையை மட்டுமே பேசும் வாய்மை, உண்மையான தவம், அன்பு ஆகியவை. இதில் மிகவும் சிறந்த மலர் கொல்லாமையே ஆகும். இறைவனைப் பற்றிய எண்ணத்திலிருந்து சிறிதும் கூட மாறிவிடாத எண்ணங்களே இறைவனின் பூஜைக்கு மிகவும் சிறந்த தீபமாகும். இவை அனைத்தையும் உணர்ந்து செயல்படும் உயிர் சென்று அமரும் இடம் தலை உச்சியிலுள்ள சகஸ்ரரதளமாகும். அவ்வாறு அமர்ந்த உயிர் இறைவனையே அடைந்து பேரின்பம் பெறுகின்றது.

கருத்து :

இறைவனை அடைய உலகத்தில் கிடைக்கும் மலர்களில் இறைவனுக்கு செய்யும் பூஜைகளை விட புலனடக்கம், அன்பு, தியானம், அறிவு, கொல்லாமை, பொறுமை, வாய்மை ஆகிய நல்ஒழுக்க மலர்களால் இறைவனை பூஜிப்பதால் விரைவில் இறைவனையே அடைந்து பேரின்பம் அடையலாம்.

பாடல் #198: முதல் தந்திரம் - 6. கொல்லாமை

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற்றாற் கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துமவர் தாமே.

விளக்கம்:

பிற உயிர்களை கொன்றுவிடு குத்திவிடு என்று கொலைவெறி பிடித்துக் கூறும் மிருகத்தன்மை கொண்டவர்களை வலிமையாக அடிக்கக்கூடிய எமனின் தூதுவர்கள் வந்து வலிமையான பாசக் கயிற்றால் கட்டி அடிக்கடி நில் செல் என்று மாறி மாறி அதட்டிக் கொண்டே இழுத்துச் சென்று எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் நரகத்தின் தீயில் கொண்டு சென்று இங்கேயே நில் என்று கொடிய வெப்பம் கொண்ட தீயினுள்ளேயே நிறுத்திவிடுவார்கள்.

பாடல் #199: முதல் தந்திரம் - 6. புலான் மறுத்தல் [அசைவம் சாப்பிடாமல் இருத்தல்]

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்றன் தூதுவர்
செல்லாகப் பற்றித் தீவாய் நரகத்தினுள்
மல்லாக்கத் தள்ளி மறித்துவைப் பார்களே.

விளக்கம்:

பிற உயிர்களை கொன்று அதன் உடலிலிருந்து பெறுவதாலும் மனித உடலுக்கு தீமை தருவதாலும் பொல்லாத புலாலை [அசைவத்தை] விரும்பிச் சாப்பிடும் கீழ்மையான மக்களை அவர்கள் இறக்கும் தறுவாயில் அவர்களைச் சுற்றி நின்ற அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும்போதே எமதர்மனின் தூதுவர்கள் வந்து கரையானைப் போல இறுக்கமாகப் பற்றி இழுத்துக் கொண்டு போய் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் கொடிய நரகத் தீயினுள் அவர்களின் முதுகு கீழே பட முகமும் உடலும் மற்றவர்கள் பார்க்கும் படி மேலே தெரிய மல்லாக்கத் தள்ளிவிட்டு அவர்கள் சுடும் தீயிலிருந்து தப்பிச்செல்லாமல் இருக்க கதவுகளையும் மூடிவிடுவார்கள்.

பாடல் #200: முதல் தந்திரம் - 7. புலான் மறுத்தல் [அசைவம் சாப்பிடாமல் இருத்தல்]

கொலையே களவுகள் காமம் பொய்கூறல்
மலைவான பாதக மாம்அவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே.

விளக்கம்:

பிற உயிர்களைக் கொல்லுதல், பிறரின் பொருட்களைத் திருடுதல், புத்தியை மயக்கும் கள்ளை குடித்தல் [மது அருந்துதல்] பெண்களின் மேல் காம வயப்படுதல் பொய் பேசுதல் ஆகிய இந்த ஐந்தும் உயிர்கள் செய்யக்கூடிய பாவங்களிலேயே மிகவும் பெரிய பாவங்களாகும். இந்த பாவங்களைச் செய்யாமல் இறைவனது திருவடிகளைத் தனது சிந்தனையில் வைத்து இறைவனைப் பற்றிய எண்ணங்களிலேயே திளைத்து இருப்பவர்களுக்கு, பேரறிவு ஞானத்தினால் விளங்கும் பேரின்பம் எப்போதும் கிடைக்கும்.



பாடல் #201: முதல் தந்திரம் – 8. பிறர்மனை நயவாமை [மற்றவர்கள் துணையின் மீது ஆசைப்படாமல் இருத்தல்]

ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறும் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக்கு இடருற்ற வாறே.

விளக்கம்:

எனக்கு இவள் தான் என்று உறுதிமொழி கூறி திருமணம் செய்த அன்பான மனைவி தமது வீட்டில் இருக்கும்போதே மற்றொருவர் திருமணம் செய்து பாதுகாத்து வைத்திருக்கும் மனைவியர் மீது ஆசைப்படும் இளைஞர்கள் தமது வீட்டின் கொல்லைப்புறத்தில் காய்த்து பழுத்துத் தொங்கும் பலாப் பழத்தை சாப்பிட விரும்பாமல் எங்கோ முட்காட்டுச் செடிகளுக்கு நடுவே வளர்ந்து கிடக்கும் ஈச்சம் பழத்தைச் சாப்பிட ஆசைப்படுவது போன்ற முட்டாள்தனம்.

பாடல் #202: முதல் தந்திரம் - 8. பிறர்மனை நயவாமை [மற்றவர்கள் துணையின் மீது ஆசைப்படாமல் இருத்தல்]

திருத்தி வளர்த்ததோர் தேமாங் கனியை
அருத்தமென் றெண்ணி அறையில் புதைத்துப்
பொருத்த மிலாத புளிமாங்கொம் பேறிக்
கருத்தறி யாதவர் காலற்ற வாறே.

விளக்கம்:

நன்றாக உரமிட்டு நீர் பாய்ச்சி பாதுகாத்து வளர்த்த மாமரத்தில் விளைந்த சுவைமிகுந்த மாம்பழத்தை சாப்பிட விரும்பாமல் அதை பத்திரமாக அறைக்குள் பூட்டி வைத்துவிட்டு தமக்குச் சற்றும் பொருத்தம் இல்லாத யாரோ இட்ட விதையிலிருந்து எப்போதோ பெய்த மழை நீரில் வளர்ந்த புளிய மரத்தில் விளைந்த புளியம் பழத்திற்கு ஆசைப்பட்டு உறுதியில்லாத புளிய மரத்துக் கிளையில் ஏறி புளியம் பழத்தை பறிக்கும் போத, கிளை முறிந்து கீழே விழுந்து காலை உடைத்துக் கொள்வது அறிவற்ற செயல். அதுபோல் தமக்கு பெற்றவர்கள் பார்த்து திருமணம் செய்து வைத்த அழகிய மனைவி இருக்கும்போது அவளை அறைக்குள்ளேயே பூட்டி வைத்துவிட்டு மற்றவரின் மனைவியின் மேல் ஆசைப்பட்டால் அறைக்குள் பூட்டி வைத்த பழம் எப்படி நாளாக நாளாக அழுகிவிடுமோ அதுபோலவே கட்டிய மனைவியை வீட்டிலேயே அடைத்து வைத்திருந்தால் அவளுக்கும் முதுமை வந்து அவள் மூலம் பெறக்கூடிய சந்ததி இல்லாமல் போய்விடும்.

பாடல் #203: முதல் தந்திரம் – 8. பிறர்மனை நயவாமை [மற்றவர்கள் துணையின் மீது ஆசைப்படாமல் இருத்தல்]

பொருள்கொண்ட கண்டனும் போதத்தை யாளும்
இருள்கொண்ட மின்வெளி கொண்டுநின் றோரும்
மருள்கொண்ட மாதர் மயலுறு வார்கள்
மருள்கொண்ட சிந்தையை மாற்றகில் லாரே.

விளக்கம்:

உலகத்தில் இருக்கும் செல்வங்களே சிறப்பானவை என்று எண்ணி செல்வங்களை மேலும் மேலும் பெருக்க விரும்பி பல நாடுகளில் படை எடுத்துப் பெரும் செல்வம் சம்பாதித்த அரசனும் இருண்ட வானத்தில் எப்போதாவது தோன்றுகின்ற மின்னல் ஒளி போல அறியாமையாகிய இருளில் எப்போதாவது தோன்றும் சிற்றறிவு ஞானத்தையே பெரிதாக எண்ணிக்கொண்டு தமக்கு அனைத்தும் தெரியும் என்று காட்டிக் கொள்கின்றவனும் ஆண்களைக் கண்டால் பயந்து பார்க்கும் அழகிய பெண்களைக் கண்டு அவர்களின் அழகில் மயங்கி மோகம் கொண்டால் தங்களது அறிவு இருளாகிக் கொண்டு இருப்பதை அறிந்திருப்பவர் ஆகிய இந்த மூவரும் மோகத்தில் சிக்கிக்கொண்ட தங்களின் எண்ணங்களை மாற்ற முடியாமல் இருப்பார்கள் இவர்கள்.

பாடல் #204: முதல் தந்திரம் - 9. மகளிரிழிவு
[பெண்களின் மேல் கொண்ட காமத்தால் பெறும் இழிவு]

இலைநல வாயினும் எட்டி பழுத்தால்
குலைநல வாங்கனி கொண்டுண லாகா
முலைநலங் கொண்டு முறுவல்செய் வார்மேல்
விலகுறு நெஞ்சினை வெய்துகொள் ளீரே.

விளக்கம்:

எட்டி மரத்தின் இலைகள் பார்க்க அழகாக இருக்கும். அதன் பழங்கள் பழுத்துவிட்டால் குலை குலையாக அழகாகத் தொங்கும். அதற்காக அழகாகவும் சாப்பிடுவதற்கு சுவையானது போலவும் தோன்றும் எட்டிப் பழத்தைப் பறித்துச் சாப்பிட்டுவிட்டால் உடனே அதன் விஷம் உயிரைக் கொல்லும். அதுபோலவே அழகான முலைகளைக் கொண்டு சிந்தனையைக் கவரும் வண்ணம் புன்னகையை வீசும் பெண்களின் மேல் காமம் ஏற்பட்டால் அதுவும் விஷமாகி அழித்துவிடும். அத்தகைய பெண்களின் மேல் ஆசைப்படும்
நெஞ்சை விஷத்திற்கு ஆசைப்படாதே என்றும் கொடியதென்றும் கோபத்துடன் திட்டி ஆசையால் முறைதவறிச் செல்லாமல் வைத்திருங்கள்.

பாடல் #205: முதல் தந்திரம் - 9. மகளிரிழிவு
[பெண்களின் மேல் கொண்ட காமத்தால் பெறும் இழிவு]

மனைபுகு வார்கள் மனைவியை நாடில்
சுனைபுகு நீர்போல் சுழித்துடன் வாங்கும்
கனவது போலக் கசிந்தெழும் அன்பை
நனவது போலவும் நாடவொண் ணாதே.

விளக்கம்:

கணவர் வீட்டில் வாழும் இல்லற நெறியில் இருக்கும் பெண்களின் மேல் காமம் கொண்டு அணுகினால் சுழல் நீரின் மேலே நீந்துபவர்களையும் தன்னுடன் இழுத்துச் சென்றுவிடுவது போல நம்மையும் அந்தக் காமம் இழிவில் இழுத்துக் கொண்டு போய்விடும். மற்றவர்களின் மனைவிகள் மீது கசிந்து எழும் சிறிது அன்பானது தூக்கத்தில் கண்ட கனவு போன்றது. அதை உண்மை என்று நம்பி மேலும் அன்பு செய்வது அழிவுக்கே வழிவகுக்கும்.

கருத்து:

தூங்கும் போது சாப்பிடுவது போல கனவு கண்டால் அப்போதைக்குச் சந்தோஷமாக இருக்குமே தவிர உண்மையில் பசி தீர்ந்துவிடாது. அதுபோலவே தமக்கு உரிமையில்லாத பெண்கள் மீது காட்டும் அன்பானது அப்போதைக்கு இன்பமாக இருக்குமே தவிர உண்மையில் இழிவு நிலைக்கு இழுத்துச் சென்றுவிடும்.

பாடல் #206: முதல் தந்திரம் - 9. மகளிரிழிவு
[பெண்களின் மேல் கொண்ட காமத்தால் பெறும் இழிவு]

இயலுறும் வாழ்க்கை இளம்பிடி மாதர்
புயலுறும் புல்லின் புணர்ந்தவ ரேயினும்
மயலுறும் வானவர் சாரவிரும் என்பார்
அயலுறப் பேசி அகன்றொழிந் தாரே.

விளக்கம்:

இளம் பெண்யானையைப் போல இல்வாழ்க்கையில் இல்லாமல் பொது மகளிராக இருக்கும் பெண்கள் மழை துளிகளைத் தழுவி வளரும் புற்களைப் போல ஆரத்தழுவி ஆணுடன் இருந்தாலும் புதியதாக வேறொரு பணக்காரர் வந்துவிட்டால் அவரைத் தேவர் என்று புகழ்ந்து எம்மோடு இன்புற்று இருங்கள் என்று வேண்டிக்கொள்வார்கள். அப்போது பழைய காதலரை உடனே வெளியே செல்லுமாறு கடுமையான வார்த்தைகளால் பேசி அவர்களிடமிருந்து சுத்தமாக விலகிச் சென்றுவிடுவார்கள்.

கருத்து:

பொது மகளிர் எவ்வளவுதான் நம்மீது அன்போடு இருப்பது போல் காட்டிக்கொண்டு ஆரத்தழுவினாலும், அவர்களின் எண்ணம் எப்போதும் பணத்தின் மேலேயே இருக்கும். இருப்பவரை விட வேறொரு பணக்காரர் வந்துவிட்டால் அவரை தேவர் என்று புகழுந்து தம்மோடு வைத்துக்கொண்டு இருப்பவரை வெளியே போகச் சொல்லிவிடுவார்கள்.

பாடல் #207: முதல் தந்திரம் - 9. மகளிரிழிவு
[பெண்களின் மேல் கொண்ட காமத்தால் பெறும் இழிவு]

வையகத் தேமட வாரொடும் கூடியென்
மெய்யகத் தோருளம் வைத்த விதியது
கையகத் தேகரும் பாலையின் சாறுகொள்
மெய்யகத் தேபெறு வேம்புஅது வாமே.

விளக்கம்:

உலகத்தில் பெண்களுடன் மோகம் கொள்வதால் கிடைக்கும் பயன் என்று ஒன்றும் இல்லை. இது உண்மை ஞானத்தை உணர்ந்தவர்களின் உள்ளம் கண்ட விதியாகும். கையில் பணத்தை வைத்தால் கரும்புச்சாறு போல் இனிக்கப் பேசிப் பழகும் பெண்கள் அந்தப் பணம் தீர்ந்துவிட்டால் வேப்பங்காயாகக் கசந்து பேசி விலகுவார்கள். இத்தகையப் பெண்களின் மேல் மோகம் கொள்வது நமக்கு நாமே வைத்துக்கொள்ளும் கசப்பு இதுவென்று அறிந்துகொள்ளுங்கள்.

பாடல் #208: முதல் தந்திரம் - 9. மகளிரிழிவு
[பெண்களின் மேல் கொண்ட காமத்தால் பெறும் இழிவு]

கோழை ஒழுக்கங் குளமூடு பாசியில்
ஆழ நடுவார் அளப்புறு வார்களைத்
தாழத் துடக்கித் தடுக்ககில் லாவிடில்
பூழை நுழைந்துஅவர் போகின்ற வாறே.

விளக்கம்:

உணவாக மாறும் விளையும் பயிரை பாசிபடிந்த குளத்தின் அடியில் நட்டால் அது விளையாமல் பாசியோடு பாசியாகி அழிந்து போய்விடும். அதே குளத்தைப் பாசி நீக்கித் தூர்வாரி வரும் நீரை சேமித்தால் அந்த நீர் பெரும் விளைச்சலுக்கு உதவும். அதுபோலவே, இல்லறத்தின் மூலம் பிள்ளைகள் பெற்று சந்ததி வளர உபயோகமாகும் விந்துவை பொது மகளிரின் மேல் மோகம் கொண்டு அவர்களின் பாசிபடிந்த கருவறைக்குள் நட்டுவைத்து அதில் இன்பம் காண்பவர்களை உண்மை அறிவுள்ளவர்கள் தடுத்து அவர்களின் மயக்கத்தைப் போக்க முயலாவிட்டால் தம் குலமும் தம்மால் பிறக்குக் கிடைக்க வேண்டிய நலமும் கெட்டு அதனால் பல இழிவுகள் ஏற்பட்டுப் பின்பு இறந்தும் போவார்கள்

கருத்து:

உரிமையில்லாத பெண்களைக் கூடுவது கெடுதல் என்பதைப் புரிந்துகொள்ளாமல் அதில் கிடைக்கும் இன்பத்திலேயே திளைத்திருக்கும் மூடர்களை தடுத்து நிறுத்தி சரியான பாதையைக் காட்டி வழி நடத்துதல் அறிவுள்ளவர்களின் கடமையாகும். அப்படிச் செய்வதனால் மூடர்கள் நலம் பெறுவது மட்டுமின்றி அவர்களால் பலரும் நலம் பெறுவார்கள்.

பாடல் #209: முதல் தந்திரம் - 10. நல்குரவு (வறுமை)

புடவை கிழிந்தது போயிற்று வாழ்க்கை
அடையப்பட் டார்களும் அன்பில ரானார்
கொடையில்லை கோளில்லை கொண்டாட்ட மில்லை
நடையில்லை நாட்டில் இயங்குகின் றார்க்கே.

விளக்கம்:

உயிர்களிடம் இருந்த ஆடைகளை திரும்பத் திரும்ப போட்டுக்கொண்டதால் கிழிந்து போனது. அவர்களின் வாழ்க்கையும் துன்பப்பட்டுக் கசந்து போனது. அவருக்கென்று இருந்த துணையும் பிறந்த குழந்தைகளும் பெற்ற தாய் தந்தையரும் உடன் பிறந்த சகோதர சகோதரிகளும் என அனைவருமே அவர்களின் மேல் அன்பில்லாமல் விலகிப் போய்விட்டனர். அவர்களுக்குத் தானமாகவோ இல்லை கடனாகவோ பொருள் கொடுப்பவர்களும் யாரும் இல்லை. அவர்களுக்குச் சிறப்புடைய நாட்கள் என்று ஒன்றும் இல்லாமல் போனது. அப்படிச் சிறப்பான நாட்கள் இல்லாததால் எதையும் கொண்டாடுவதும் இல்லாமல் போனது. அவர்கள் முன்பு தலை நிமிர்ந்து நடந்த நடை இப்போது இல்லாமல் போனது. வெறும் இயந்திரம் போன்றே இவர்கள் நாட்களைக் கழித்து வாழ்கின்றார்கள்.

பாடல் #210: முதல் தந்திரம் - 10. நல்குரவு (வறுமை)

பொய்க்குழி தூர்ப்பான் புலரி புலருதென்
றக்குழி தூர்க்கும் அரும்பண்டந் தேடுவீர்
எக்குழி தூர்த்தும் இறைவனை ஏத்துமின்
அக்குழி தூரும் அழுக்குஅற்ற போதே.

விளக்கம்:

உயிர்களின் வயிறு என்பது ஒரு பொய்யான குழி போன்றது. பசி வரும்போது உணவு சாப்பிட்டு பசி தீர்ந்தது போலத் தெரிந்தாலும் மீண்டும் நான்கு மணி நேரத்தில் பசிக்க ஆரம்பித்து விடுகின்றது. இப்படி பொய்யாக இருக்கும் வயிறு எனும் குழியை நிரப்புவதற்கு உணவு கிடைக்குமா என்று உயிர்கள் தினமும் தேடி அலைகின்றன. பொய்யான வயிற்றுப் பசியைப் போக்க உணவு தேடி உயிர்கள் தமது பசியை எப்படி தீர்த்துக் கொண்டாலும் எந்த வேலை செய்தாலும் எப்படி பொருள் சம்பாதித்தாலும் அதிலேயே மூழ்கி இருந்துவிடாமல் இறைவனைப் போற்றிப் புகழ்ந்து வழிபடவும் நேரம் ஒதுக்க வேண்டும். இறைவனைப் போற்றிப் புகழ்ந்து வழிபட்டு வந்தால் பிறவியோடு வந்த மும்மலங்களாகிய (ஆணவம், கன்மம், மாயை) அழுக்குகளும் நீங்கி உள்ளம் தெளிவுபெறும். உள்ளம் தெளிவு பெற்ற உயிர்களின் பிறவிப்பசி அப்போதே தீர்ந்து இனி பிறவி இல்லாத மோட்ச நிலை கிட்டிவிடும்.

பாடல் #211: முதல் தந்திரம் - 10. நல்குரவு (வறுமை)

கற்குழி தூரக் கனகமும் தேடுவார்
அக்குழி தூர்க்கை யாவர்க்கும் அரியது
அக்குழி தூர்க்கும் அறிவை அறிந்தபின்
அக்குழி தூரும் அழுக்குஅற்ற வாறே.

விளக்கம்:

கல்லால் ஆன குழியை மூட தங்கக் கட்டிகளைத் தேடுவது போல தினமும் ஏற்படும் பசிக்காக பலவித செல்வங்களைத் தேடுகின்றன உயிர்கள். கல்லால் ஆன குழியை எப்படி தங்கத்தால் நிரப்ப முடியாதோ அதுபோலவே வயிற்றுப் பசியை எத்தனை வகையான செல்வம் சேர்த்தாலும் நிரந்தரமாகத் தீர்த்துவிட முடியாது. நிரந்தரமாக பசியைத் தீர்ப்பது எப்படி என்கிற அறிவை அறிந்து கொள்ளுங்கள் அப்படி நிரந்தரமாகப் பசியைத் தீர்ப்பது எப்படி என்கிற அறிவைத் தெரிந்து கொண்டு விட்டால் அதன் மூலம் இனி எப்போதுமே பசி வராமல் இருக்கும்படி ஆன்மாவின் அனைத்து அழுக்குகளும் நீங்கி பிறவி இல்லா பெருவாழ்வு கிடைத்துவிடும்.

பாடல் #212: முதல் தந்திரம் - 10. நல்குரவு (வறுமை)

தொடர்ந்தெழும் சுற்றம் வினையினும் தீய
கடந்ததோர் ஆவி கழிவதன் முன்னே
உடந்தொரு காலத் துணர்விளக் கேற்றித்
தொடர்ந்துநின் றவ்வழி தூர்க்கலு மாமே.

விளக்கம்:

உயிர்கள் இந்த உலகில் பிறக்கும் பொழுதே அவற்றின் முன் பிறவிகளிலிருந்து தொடர்ந்து வரும் வினைகளும் கூடவே பிறந்து அந்த உயிரைச் சுற்றியிருக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய அழுக்குகளாக எப்போதும் இருக்கின்றன. உயிரின் வாழ்க்கை கடந்து முடிவதற்கு முன்பே உலகப்பற்றுகளில் இருந்து விடுபட்டு தமக்குள் இருக்கும் இறைவனை போற்றிப் புகழ்ந்து வழிபட்டு தமது உள்ளுக்குள்ளேயே இறைவனை ஜோதியாக உணர்ந்து ஆன்மாவின் இருளை அகற்றும் விளக்காக ஏற்றிவைத்து அது காட்டும் வழியிலேயே எப்போதும் மாறாமல் நின்று வந்தால் பொய்யான வயிற்றுப் பசியோடு பிறக்கும் பிறவிகளும் இனி இல்லாமல் போய்விடும்.

பாடல் #213: முதல் தந்திரம் - 10. நல்குரவு [வறுமை]

அறுத்தன ஆறினும் ஆனினம் மேவி
அறுத்தனர் ஐவரும் எண்ணிலி துன்பம்
ஒறுத்தன வல்வினை ஒன்றல்ல வாழ்வை
வெறுத்தனன் ஈசனை வேண்டிநின் றானே.

விளக்கம்:

உயிர்கள் கண் - பார்த்தல், காது - கேட்டல், மூக்கு - நுகர்தல், வாய் - சுவைத்தல், மெய் - தொடுதல்/உணர்தல்] ஆகிய ஐந்து இந்திரியங்களின் உதவியால் உயிர்களின் பசி உணவு சாப்பிட்டவுடன் தீர்ந்துவிட்டாலும் அதே இந்திரியங்கள்தான் ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பையும் அறுத்து விடுகிறது. ஆகையால் உயிர் தான் எடுத்த பிறவியில் எண்ணிலடங்காத துன்பங்களைப் பெற்று வருந்துகின்றது. மேலும் ஜென்ம வினை, கர்ம வினை, எண்ண வினை, பந்தம், பாசம், பற்று, செல்வம் என பல காரணங்களாலும் துன்பம் அடைகின்றது. துன்பத்தின் இறுதியில் இனி இப்படிப் பட்ட பிறவியே வேண்டாம் என்று வெறுக்கும் உயிர்கள் பிறவி இல்லாத நிலை வேண்டி ஈசனிடம் நிற்கின்றான்.

கருத்து :

செல்வ செழிப்புடன் இருப்பவர்களை விட வறுமை நிலையில் இருக்கின்றவர்கள் விரைவில் இந்த ஜென்ம வாழ்க்கையை வெறுத்து இறைவனை அடைந்து பிறவி இல்லாத பேரின்பநிலை அடைய எண்ணுகின்றார்கள்.

பாடல் #214: முதல் தந்திரம் - 11. அக்கினி காரியம் [யாகம் / வேள்வி செய்வதன் முக்கியத்துவம்]

வசைஇல் விழுப்பொருள் வானும் நிலனும்
திசையும் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேத முதலாம்
அசைஇல் அந்தணர் ஆகுதி வேட்கிலே.

விளக்கம்:

ஒழுக்கத்திலிருந்து சிறிதும் மாறாத வேதம் அறிந்த அந்தணர்கள் கருத்தோடும் சிரத்தையோடும் மந்திரங்கள் ஓதி நெய்யிட்டு ஹோமத்தினால் மாசில்லாத சுத்தமான மழை நீரைத் தரும் மேகங்களைக் கொண்ட வானமும். அது பொழிந்தால் வளம் பெறும் நிலங்களும். வளம் பெற்ற நிலங்களில் விளைந்த விளைச்சல்களைப் பெற்று அதைச் சுற்றி எட்டுத் திசையிலும் வாழும் நாட்டு மக்களும். அந்த மக்கள் திசைக்கொரு காவலர்களாக வைத்து வணங்கும் பல தேவர்கள் கூட்டமும் ஆகிய இவை அனைத்தும் தனது காரியங்களை சிறப்பாக செய்ய வேதங்களும் வேள்விகளும் முக்கியமாக இருக்கின்றது.

கருத்து:

ஒரு நாட்டில் இருக்கும் அந்தணர்கள் தமது ஒழுக்கத்திலிருந்து சிறிதும் மாறிவிடாமல் சிறப்பான வேதங்களை முதலாக வைத்து முறையாக மந்திரங்கள் ஓதி ஹோமத் தீயை வளர்த்து வந்தால் அந்த நாட்டின் வளமும், அதில் வாழும் மக்களின் வளமும். அவர்கள் வணங்கும் தெய்வங்களின் சக்தியும் சிறப்பாக இருக்கும்.

பாடல் #215: முதல் தந்திரம் - 11. அக்கினி காரியம் [யாகம் / வேள்வி செய்வதன் முக்கியத்துவம்]

ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்
போகதி நாடிப் புறங்கொடுத் துண்ணுவர்
தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி
தாமுமறி வாலே தலைப்பட்ட வாறே.

விளக்கம்:

அரிய பொக்கிஷமான வேதங்களை முறையாக மந்திரங்கள் ஓதி ஹோமத் தீயை வளர்க்கும் அந்தணர்கள் தமது முக்திக்கு வழி தேடி ஹோமம் செய்து பெற்றதை பிறருக்கும் கொடுத்து மிஞ்சியதை மட்டுமே உண்டு வாழ்வார்கள். அப்படி வாழும் அந்தணர்கள் இறைவனை அடையக்கூடிய வாழ்க்கை முறையை உண்மை நெறிப் பாதையை அவர்கள் தவறாமல் செய்த ஹோமத்தின் பயனால் அறிந்து கொண்டு அதன் படியே வாழ்ந்து முக்தி அடைவார்கள்.

கருத்து:

வேத முறைப்படி யாகங்கள் தவறாமல் செய்து அதில் கிடைக்கும் பொருட்களைப் பிறருக்கும் கொடுத்து மீதி இருப்பதை உண்டு நெறி தவறாமல் வாழும் அந்தணர்கள் முக்தி அடைவார்கள்.



பாடல் #216: முதல் தந்திரம் - 11. அக்கினி காரியம் [யாகம் / வேள்வி செய்வதன் முக்கியத்துவம்]

அணைதுணை அந்தணர் அங்கியுள் அங்கி
அணைதுணை வைத்ததின் உட்பொரு ளான
இணைதுணை யாமத் தியங்கும் பொழுது
துணையணை யாயதோர் தூய்நெறி யாமே.

விளக்கம்:

உயிர்களைக் காத்துக் கொண்டு அவற்றின் துணையாக கூடவே இருப்பது அந்தணர் வளர்க்கும் வேள்வித் தீயினுள் ஜோதியாக இருக்கும் இறைவனே ஆகும். உயிர்களைக் காத்து துணையாக இருக்கும் இறைவன் அருள் வேண்டி அந்தணர்கள் வேள்விகளை முறையாக செய்ய வேண்டும். அப்படி முறையாக செய்யப்படும் வேள்வியில் இருக்கும் இறைவனுடன் ஹோமத் தீ இணைந்து வளரும் போது அதன் பயனால் கிடைக்கும் இறையருளே உயிர்களுக்கு துணையாக இருந்து அவர்களை முக்தி பெறும் தூய்மையான வழியில் நடத்திச் சென்று முக்தியையும் அளித்துவிடும்.

பாடல் #217: முதல் தந்திரம் - 11. அக்கினி காரியம் [யாகம் / வேள்வி செய்வதன் முக்கியத்துவம்]

போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு
மாதிரண் டாகி மகிழ்ந்துட னேநிற்கும்
தாதிரண் டாகிய தண்ணம் பறவைகள்
வேதிரண் டாகியே வெறிக்கின்ற வாறே.

விளக்கம்:

காலை மாலை இரு வேளையிலும் வேத முறைப்படி மந்திரங்கள் ஓதி அந்தணர்கள் ஹோமம் செய்து வந்தால் அந்த ஹோமத்தில் இருக்கும் இறை சக்தியானது ஹோமத்தினால் மகிழ்ந்து உயிர்களுக்கு அருள் வழங்கிவிட்டு உயிர்களின் கூடவே காத்துக் கொண்டு துணையாக நிற்கும். அப்படி செய்யாமல் இருந்தால் ஆண் பெண் இருவரால் உருவாகும் உயிர் காட்டுப் பறவைகளைப் போல தமது இஷ்டத்திற்கு அலைந்து திரிந்து மனதில் நிம்மதி இல்லாமலும் செல்வம் இல்லாமலும் துன்பப்பட்டுக் கொண்டு ஆசைகளிலேயே மயங்கிக் கிடக்கும்.

கருத்து:

ஒரு நாட்டில் வாழும் உயிர்கள் தமது உலகப் பற்றுக்களை அறுத்து முக்தி பெற வேண்டுமெனில் வேத முறைப்படி தினமும் காலையும் மாலையும் யாகம் செய்து பாடல் #215ல் உள்ளபடி பெற்றதை பிறருக்கும் கொடுத்து மிஞ்சியதை மட்டுமே உண்டு வாழும் அந்தணர்கள் அந்த நாட்டில் இருக்க வேண்டும்.

பாடல் #218 முதல் தந்திரம் - 11. அக்கினி காரியம் [யாகம் / வேள்வி செய்வதன் முக்கியத்துவம்]

நெய்நின் றெரியும் நெடுஞ்சுட ரேசென்று
மைநின் றெரியும் வகையறி வார்கட்கு
மைநின் றவிழ்தரும் அத்தினம் ஆமென்றும்
செய்நின்ற செல்வமும் தீயுமது வாமே.

விளக்கம்:

யாகத்தில் இடும் நெய்யில் பற்றிக் கொண்டு எரியும் பெரிய நெருப்பின் உள்ளிருக்கும் இறைவன் அருளைக் கொண்டு தமது ஆன்ம இருளான மும்மலங்களை [ஆணவம், கன்மம், மாயை] எரித்து முக்தி பெறும் விதத்தை அறிந்து கொண்டவர்களுக்கு இருளை நீக்கும் இரத்தினம் போல வேள்வி செய்பவர்களின் உள்ளிருந்து மும்மல இருளை நீக்கி அவர்களை முக்திபெறுபடி செய்யும் மாபெரும் செல்வம் அவர்கள் வளர்த்த ஹோமத் தீயே.

கருத்து:

முறையாக வளர்த்த வேள்வித் தீயில் வெளிவரும் இறைஜோதி உயிர்களின் உள்ளே இருந்து அவர்களின் மும்மல இருள்களை நீக்கி முக்திபெற செய்யும் என்பதை அறிந்தவர்கள் வேள்வித் தீயை தினமும் வளர்ப்பார்கள்.

பாடல் #219: முதல் தந்திரம் - 11. அக்கினி காரியம் [யாகம் / வேள்வி செய்வதன் முக்கியத்துவம்]

பாழி அகலும் எரியும் திரிபோலிட்
டூழி அகலும் உறுவினை நோய்பல
ஆழி செய்தங்கி உதிக்க அவைவிழும்
வீழி செய்துஅங்கி வினைசுடு மாமே.

விளக்கம்:

இரவு நேர இருளை நீக்க ஆழமான அகல் விளக்கில் எண்ணெய் ஊற்றித் திரியை இட்டு எரித்து ஒளியைப் பெறுவது போல பிறக்கும்போதே உயிர்களுடன் பிறக்கும் வினைகளையும் அவற்றின் பயனால் வரும் பலவித துன்பங்களையும் நீக்க யாகக் குழி ஏற்படுத்தி அதில் நெய்யை ஊற்றித் திரிபோல குச்சிகளை இட்டு முறைப்படி மந்திரங்கள் ஓதி யாகம் செய்தால் அந்த யாகத்திலிருந்து தோன்றும் இறைஜோதியானது மேலெழும்பிய உடனே வினைகளை சுட்டு எரித்து விடும் வினையினால் ஏற்பட்ட துன்பங்கள் அனைத்தும் விழுந்துவிடும்.

கருத்து:

மோட்சத்திற்குத் தடையாக இருப்பதும் பிறந்த பிறவியில் துன்பங்களைத் தருவதும் பிறப்போடு உடன்வரும் வினைகளே ஆகும். அந்த வினைகளும் அதனால் ஏற்படும் துன்பங்களும் நீங்கி நிரந்தர மோட்சம் கிடைக்க முறையாக மூட்டிய வேள்வித்தீ உதவி செய்யும்.

பாடல் #220: முதல் தந்திரம் - 11. அக்கினி காரியம் (யாகம் / வேள்வி செய்வதன் முக்கியத்துவம்)

பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த
அருஞ்செல்வந் தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணிப்
பருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் றாரே.

விளக்கம்:

உலகத்தில் கிடைக்கும் செல்வங்கள் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அவை உயிர்களுக்கு துன்பத்தையே கொடுக்கும் கேடு என்பதை உணர்ந்து கொண்டு அரிதான வேதத்தை தந்த இறைவனை நாடுங்கள். இறைவனை அடைந்து பேரின்பமாகிய இறைசெல்வம் கிடைக்க வேண்டும் என்று வேத முறைப்படி யாகத்தை வளர்த்து அதன் மூலம் அதைப் பெறுவதற்கு உயிர்கள் முயற்சி செய்கின்றனர்.

பாடல் #221: முதல் தந்திரம் - 11. அக்கினி காரியம் [யாகம் / வேள்வி செய்வதன் முக்கியத்துவம்]

ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை
ஒண்சுட ராகிஎன் னுள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோன்உல கேழுங் கடந்தஅத்
தண்சுட ரோமத் தலைவனும் ஆமே.

விளக்கம்:

ஈடு இணையில்லாத அழகு பொருந்திய ஜோதியாக இருப்பவனும் அழிவு என்ற ஒன்று இல்லாத தலைவனும் எமது ஆன்மாவோடு இணைந்து எமது உள்ளத்துள் இருக்கின்றவனும் நெற்றிக் கண்ணில் நெருப்பாக இருப்பவனும் ஏழு உலகங்களையும் கடந்து எங்கும் வியாபித்து இருப்பவனும் குளிர்ந்த ஒளியைத் தரும் நிலவைத் தன் தலைமுடியில் சூடியிருப்பவனும் முறையாகச் செய்யப்படும் ஹோமத்திற்கெல்லாம் தலைவன் எம்பெருமான் சதாசிவமூர்த்தியே ஆவான்.

பாடல் #222: முதல் தந்திரம் - 11. அக்கினி காரியம் [யாகம் / வேள்வி செய்வதன் முக்கியத்துவம்]

ஓமத்துள் அங்கியின் உள்ளுளன் எம்இறை
ஈமத்துள் அங்கி இரதங்கொள் வானுளன்
வேமத்துள் அங்கி விளைவு வினைக்கடற்
கோமத்துள் அங்கி குரைகனலும் தானே.

விளக்கம்:

ஹோமத்தில் வளர்க்கும் தீயின் உள்ளிருந்து எழும்புகின்ற ஜோதியானவன் எமது இறைவன் சதாசிவமூர்த்தியே. இறந்த உடல்களைத் தகனம் செய்யும் போது அங்கே நெருப்பாக இருந்து உடலை எரிக்கின்றவனும் அவனே. அந்த உடலின் ஆன்மாவை வானத்திற்கு தாங்கி எடுத்துச் செல்கின்றவனும் அவனே. உடல் பிறக்கும்போதே உயிரோடு சேர்ந்து பிறக்கும் கடல் போன்ற வினைகளை ஹோமத்தின் தீயினுள் இருந்து சத்தத்தோடு எரியும் நெருப்பாக சுட்டு எரிப்பவனும் அவனே.

பாடல் #223: முதல் தந்திரம் - 11. அக்கினி காரியம் (யாகம் / வேள்வி செய்வதன் முக்கியத்துவம்)

அங்கி நிறுத்தும் அருந்தவர் ஆரணத்
தங்கி இருக்கும் வகையருள் செய்தவர்
எங்கும் நிறுத்தி இளைப்பப் பெரும்பதி
பொங்கி நிறுத்தும் புகழுமது வாமே.

விளக்கம்:

யாகத்தில் தோன்றும் நெருப்பின் தலைவன் அரும்பெரும் தவத்துக்கு உரியவனான இறைவனே. யாகம் வளர்க்கும் முறைகளை வேதங்களில் வழங்கியவனும் அவனே. வேத முறைகளை பலவித ஆகமங்களாக வகைபடுத்தி அருளியவனும் அவனே. இறைவன் வழங்கிய வேதங்களையும் ஆகமங்களையும் தவறாது செயல்படுத்தி உலகத்தில் எங்கு சென்றாலும் அங்கு முறைப்படி யாகத்தை வளர்த்து யாகத்தின் மூலம் அங்கிருக்கும் உயிர்களுக்கு இறைவனின் அருளைக் கொண்டு வருபவன் அந்தணன். அதனால் அவன் உடலளவில் சிறிது துன்பப்பட்டாலும் அந்த துன்பத்திலிருந்து இளைப்பாறி பெருமளவு இன்பம் பெறும்படி இறைவன் அவனுக்கு வழங்குவது மாபெரும் புகழேயாகும்.

கருத்து:

இறைவன் கொடுத்த முறைகளின்படி உலகெல்லாம் சென்று உயிர்கள் இறைவன் அருளைப் பெற வேண்டி எந்த அந்தணன் யாகம் வளர்க்கின்றானோ அவனுக்கு அளவில்லாத அளவு இன்பத்தையும் புகழையும் இறைவனே வழங்கிவிடுவான்.

பாடல் #224: முதல் தந்திரம் - 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பது யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்
தம்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே.

விளக்கம் :

அந்தணர் என்பவர் வேதங்களை ஓதுதல், கற்ற வேதங்களை பிறருக்கு கற்றுக்கொடுத்தல், வேத முறைப்படி யாகம் வளர்த்தல், பிறருக்கு யாகம் செய்யும் முறையை கற்றுக்கொடுத்தல், தானம் கேட்டு வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் தானம் தருதல், பிறரிடமிருந்து தானம் பெறுதல், ஆகியவற்றை செய்பவர்களே அந்தணர்கள் ஆவார்கள். அதுமட்டுமின்றி 1.தூய்மையாக இருத்தல், 2. இறையருளோடு இருத்தல், 3. அளவான உணவு, 4. பொறுமையோடு இருத்தல், 5. நேர்மையுடன் இருத்தல், 6. பொய் பேசாது சத்தியத்தைக் கடைபிடித்தல், 7. சத்தியத்திற்காக வைராக்கியத்தை வளர்த்தல், 8. காமத்தை எண்ணாதிருத்தல், 9. களவு [திருடு] எண்ணாமலிருத்தல், 10. கொலை எண்ணாமலிருத்தல், ஆகிய பத்து குணங்களையும் தானும் அறிந்து பிறர் அறித்துகொள்ளச் செய்து நியமத்தின் வழி நடக்க வேண்டும். தாம் கடைபிடிக்கும் தவத்திலும் நல்ல காரியங்களைச் செய்யும் கருமங்களிலிருந்தும் எப்போதும் தவறாமல் நின்று நல்லது தீயது ஆகிய அனைத்து சடங்குகளையும் பிறருக்காக செய்து கொடுப்பவர்களே அந்தணர்கள் அவர்கள்.

பாடல் #225: முதல் தந்திரம் - 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பது யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

வேதாந்தங் கேட்க விருப்பொடு முப்பதப்
போதாந்த மான பிரணவத் துள்புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை
ஈதாம் எனாதுகண் டின்புறு வோர்களே.

விளக்கம்:

அந்தணர்கள் எப்போதும் வேதங்களின் முடிவாக இருக்கின்ற வேதாந்தங்களைக் கேட்பதில் விருப்பத்தோடு இருக்க வேண்டும். மூன்று பதங்களைக் கொண்ட படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்றின் முடிவாய் இருக்கின்ற ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் உட்பொருளாகிய தத்துவமசி [பரம்பொருள் நீயாக இருக்கிறாய்] என்பதை உணர்ந்து ஒலி மற்றும் வேதத்தின் முடிவாகிய இறைவனை இவன் தான் என்று தனக்குள் உணர்ந்து பேரின்பத்திலேயே திளைத்து இருப்பவர்களே அந்தணர்கள் ஆவார்கள்.

பாடல் #226: முதல் தந்திரம் – 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பது யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

காயத் திரியே கருதுசா வித்திரி
ஆய்தற் குவப்பர் மந்திரமாங்கு உன்னி
நேயுத் தேரேறி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துள் தோயாத மறையோர்கள் தாமே.

விளக்கம்:

காயத்ரி மந்திரத்தையும், சாவித்ரி மந்திரத்தையும் தமது கருத்தில் வைத்து விருப்பப்பட்டு ஆராய்ந்து அதன் பொருளை உணர்ந்து நாள் தோறும் அந்த மந்திரங்களையே மனதில் வைத்து தியானித்து இறையருளால் உணர்ந்த அன்பு எனும் தேரில் ஏறி அன்பையே தமது எண்ணத்தில் எப்போதும் வைத்து மாயையாகிய உலகப் பற்றுக்களின் மேல் ஆசை கொள்ளாமல் வேதங்களின் முறைப்படியே வாழ்ந்து வருபவர்களே அந்தணர்கள் ஆவார்கள்.

குறிப்பு: காயத்ரி மந்திரத்தின் ஒரு எழுத்து இல்லாத மந்திரமே சாவித்திரி மந்திரமாகும். ஞானிகள், முனிவர்கள், யோகிகளால் மட்டுமே காயத்ரி மந்திரத்தை சொல்ல முடியும். ஏனெனில் இந்த மந்திரத்தை உச்சரிக்கும் போது உருவாகும் சக்திகளை சாதாரண மனிதர்களால் தாங்க முடியாது. உடல்நிலை மனநிலை பாதிக்கும். தற்போது மனிதர்கள் சொல்லிக்கொண்டிருக்கும் காயத்ரி மந்திரமே சாவித்திரி மந்திரமாகும். தற்போது இருக்கும் கலியுகத்தில் மனிதர்களின் உடல்நிலை மனநிலை எந்த விதத்திலும் பாதிப்படையாமல் இறைவனை அடைய இறையருளால் ஓர் எழுத்து நீக்கப்பட்ட மந்திரமே சாவித்திரி மந்திரமாகும்.

பாடல் #227: முதல் தந்திரம் - 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பது யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து
குருநெறி யாலுரை கூடிநால் வேதத்
திருநெறி யான திருகை இருத்திச்
சொரூபம தானோர் துகளில்பார்ப் பாரே.

விளக்கம்:

முக்திக்கு வழிகாட்டும் பெரிய நெறியாகிய ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை பொருளுணர்ந்து ஜெபித்து குருவானவர் வழிகாட்டிய நெறிகளையே பின்பற்றி குருவானவர் கூறிய மந்திர உரைகளையே எப்போதும் ஜெபித்து இறைவனை அடைய நான்கு வேதங்களிலும் [1. ரிக் வேதம், 2. யஜுர் வேதம், 3. சாம வேதம், 4. அதர்வண வேதம்] சொல்லப்பட்டிருக்கும் நெறிகளின்படி வாழ்ந்து அந்த நான்கு வேதங்களின் உட்பொருளாக இருக்கும் இறைவனை தமக்குள் வைத்து தியானித்து தமது உருவத்தையே இறைவனது உருவமாக பாவித்து தமது உடலில் உள்ள ஒவ்வொரு துகளிலும் இறைவனை பார்ப்பவர்கள் அந்தணர்கள்.

பாடல் #228: முதல் தந்திரம் – 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பது யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

சத்திய முந்தவம் தான்அவன் ஆதலும்
எய்த்தகும் இந்திய மீட்டியே வாட்டலும்
ஒத்த உயிருடல் உண்டாய் உணர்வுற்றுப்
பெத்தம் அறுத்தலும் ஆகும் பிரமமே.

விளக்கம்:

சத்தியத்தையும் தவத்தையும் இடைவிடாமல் காத்து பின்பற்றுவதும் தாமே இறைவன் என்று உணர்வதும் ஆசை வழியே செல்லும் ஐந்து விதமான இந்திரியங்களையும் [கண் – பார்த்தல், காது – கேட்டல், மூக்கு – நுகர்தல், வாய் – பேசுதல், உடல் – உணர்தல்] ஆசை வழியில் போகாமல் தடுத்து அவற்றை அடக்கித் தாம் நினைத்தபடி அவற்றை வேலை செய்ய வைப்பதும் உயிரும் உடலும் ஒன்றாக இருந்து உள்ளிருப்பவன் இறைவனே என்பதை உணர்ந்து உலகப் பற்றுக்களையெல்லாம் அறுத்துவிடுவதும் ஒருவரை பிரம்மம் ஆக்கிவிடும்.



பாடல் #229: முதல் தந்திரம் - 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பது யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

வேதாந்தங் கேட்க விரும்பிய வேதியர்
வேதாந்தங் கேட்டும்தம் வேட்கை ஒழிந்திலர்
வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
வேதாந்தங் கேட்டுஅவர் வேட்கைவிட் டாரே.

விளக்கம்:

இறைவன் அருளிய வேதாந்தங்களைக் கேட்க விரும்பிய அந்தணர்கள் வேதாந்தங்களைக் கேட்ட பின்பும் தமக்கென்று இருக்கும் ஆசாபாசங்களை விட்டுவிடாமல் இருக்கின்றனர். உலக ஆசைகளையும் பாசங்களையும் விட்டு இறைவனை அடைவதுதான் வேதாந்தத்தின் முடிவாகும். ஆசையை விட்ட இடமே வேதாந்தத்தின் முடிவாகும். வேதாந்தத்தின் பொருளை உணர்ந்து கேட்டவர் ஆசையை விட்டவராவார்.

கருத்து : வேதத்தை படித்து உணர்ந்து ஆசையை விட்டவரே அந்தணர் ஆவார்.

பாடல் #230: முதல் தந்திரம் – 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பது யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

நூலும் சிகையும் நுவலின் பிரமமோ
நூலது கார்ப்பாசம் நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காண நுவலிலே.

விளக்கம்:

பூணூலும் குடுமியும் அணிந்து கொண்டுவிட்டால் இறைவனை உணர்ந்த அந்தணர் என்று கூறிவிடமுடியாது. பூணூல் பருத்தியால் செய்யப்பட்டது. குடுமி தலையிலிருக்கும் மயிரை சிரைத்துச் செய்யப்பட்டது. பூணூலுக்கும் குடுமிக்கும் ஒருவரை இறைவனை உணர்ந்த அந்தணராக மாற்றும் சக்தி இல்லை. பூணூல் என்பது வேதாந்தத்தைக் கற்றவரின் குறியீடு. குடுமி என்பது இறை ஞானத்தைப் பெற்றவரின் குறியீடு. இறைவன் அருளிய வேதாந்தங்களை முறைப்படி தமது குருவின் மூலம் கற்று அவற்றின் பொருளை உணர்ந்து இறைவனை உணர்ந்து பூணூலும் குடுமியும் அணிந்துகொண்டவர்களே அந்தணர் என்னும் சொல்லுக்கு தகுதியானவர்கள் ஆவார்கள்.

பாடல் #231: முதல் தந்திரம் - 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பது யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
ஒத்த விடையம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரனுண்மை இன்றிஊன்
பித்தேறும் மூடர் பிராமணர் தாமன்றே.

விளக்கம்:

சத்தியத்தின் வழி நடக்காமலும் தன்னை உணரும் ஞானமும் இல்லாமலும் உடலோடு வந்த இந்திரியங்களின் வழி வரும் ஆசைகளை விட்டு விலகி நடக்காமலும் உண்மையான மெய்ஞான உணர்வில்லாமலும் இறைவனின் மேல் பக்தியில்லாமலும் உண்மைப் பொருள் இறைவன் ஒருவனே என்பதை உணராமலும் நிலையில்லாத உடலின் மேல் கொண்ட ஆசையினால் இந்திரியங்கள் வழியே வாழுகின்ற முட்டாள்கள் பிராமணர் என்று தன்னை கூறிக்கொள்ள தகுதியில்லாதவர்கள் ஆவார்கள்.

பாடல் #232: முதல் தந்திரம் - 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பது யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்
குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணும்
துரிய சமாதியாம் தூய்மறை யோர்க்கே.

விளக்கம்:

சித்தாந்தம் [அறிந்த கருத்துக்கள்] அசித்தாந்தம் [அறியாத கருத்துக்கள்] ஆகிய இரண்டும் இல்லாத குருவானவர் காட்டிய வழியில் குருவின் பாதங்களைச் சரணடைந்து தினமும் செய்யும் கர்மங்களையும் நியமங்களையும் விட்டுவிட்டு வெளி உலகத்தை காணாமல் தமக்குள் தியானித்து சமாதி நிலைகளில் நான்காவதான துரிய சமாதி நிலையை [அனைத்தையும் இறைவனாகவே காணும் நிலை] அடைந்து இருப்பவர்களே தூய்மையான வேதங்களின் வழி வாழும் அந்தணர்கள் ஆவார்கள்.

பாடல் #233: முதல் தந்திரம் - 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பது யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

மறையோது வாரே மறையவ ரானால்
மறையோர்தம் வேதாந்தம் வாய்மையில் தூய்மை
குறையோர்தல் மற்றுள்ள கோலா கலமென்
றறிவோர் மறைதெரிந் தந்தண ராமே.

விளக்கம்:

வேதத்தின் பொருளான வேதாந்தங்களை குருவின் மூலம் கற்று உணர்ந்து வேதங்களை ஓதுகின்றவர்களே அவற்றின் பொருளை உணர்ந்து தனக்குள் இருக்கும் இறைவனை உணர்ந்து இறைவனாக மாறிவிட்டால் [இறைவன் அருளிய வேதமும் இறைவனும் வேறில்லை இறைவனும் வேதமும் ஒன்று தான்] தமது வாய்ச்சொல்லில் சொல்லுவது அனைத்தும் நடக்கும். மற்ற உயிர்கள் மாயையால் இறைவனை அடைய தடையாய் இருக்கும் குறைபாடுகள் என்னவென்று தெரியும். பூணூல், குடுமி, உருத்திராட்ச மாலை, விபூதிப் பட்டை, அங்கவஸ்திரம், போன்றவை அந்தணர் போலக் காட்டிக்கொள்வது வெறும் கோலாகலமான ஆடம்பரமே என்பதை அறிந்தவர்கள் உண்மையான வேதங்களைக் கற்று உணர்ந்த அந்தணர்கள்.

பாடல் #234: முதல் தந்திரம் - 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பது யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்றாகும்
அந்தியும் சந்தியும் ஆகுதி பண்ணுமே.

விளக்கம்:

காலையிலும் மாலையிலும் வேத முறைப்படி வேள்விகளை வளர்த்து அனைத்து உயிர்களையும் அன்போடு இறைவனாகவே பார்க்கின்ற தண்மையைக் கொண்டு உயர்ந்த வேதங்களையும் அவற்றின் பொருளான வேதாந்தங்களையும் எப்போதும் தமது சிந்தனையில் வைத்துத் தியானிக்கும் அந்தணர்கள் சேர்ந்து வாழும் நாடானது செழுமையுடன் எல்லா வளங்களும் கொண்டு எப்போதும் பஞ்சமோ நோய்களோ இல்லாமல் எப்போதும் சீரும் சிறப்புமாக இருக்கும். அந்த நாட்டையும் அதன் மக்களையும் ஆளும் மன்னவர்களும் மிகவும் நலமாக இருப்பார்கள்.

பாடல் #235: முதல் தந்திரம் - 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பது யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

வேதாந்த ஞானம் விளங்கும் விதியிலோர்
நாதாந்த போதம் நணுகிய போக்கது
போதாந்த மாம்பரன் பாற்புகப் புக்கதால்
நாதாந்த முத்தியும் சித்தியும் நண்ணுமே.

விளக்கம்:

வேதங்களையும் அதன் பொருளாகிய வேதாந்தங்களையும் குருவின் மூலம் கற்று ஞானம் பெறும் வழியைத் தமது கர்மவிதியின் காரணமாக பெற இயலாதவர்கள் ஓம் என்னும் நாதத்தின் முடிவாகிய ஞானத்தை வழங்கும் குருவின் போதனைகளை அவரைச் சரணடைந்து கற்று உணர்ந்து அதன்படி நடந்தால் அதுவே அவர்களுக்கு இறைவனின் திருவடியில் சென்று சேரும் அருளை வழங்கி ஓம் என்னும் நாதத்தின் முடிவான முக்தியையும் ஞானத்தின் முடிவான சித்தியையும் அவர்களுக்கு வழங்கிவிடும்.

உட்கருத்து:

தமது கர்ம விதியால் வேதங்களையும் வேதாந்தங்களையும் கற்றுணர்ந்து அவற்றின் மூலம் இறைவனை அடையும் வழியைப் பெற வாய்ப்பு இல்லாதவர்கள் குருவின் திருவடிகளைச் சரணடைந்து அவர் காட்டிய வழியில் நடந்தாலே அது அவரை இறைவனிடம் கொண்டு சேர்த்து அவருக்கு வேண்டிய ஞானத்தையும் முக்தியையும் வழங்கிவிடும்.

பாடல் #236: முதல் தந்திரம் - 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பவர் யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

ஒன்றும் இரண்டும் ஒடுங்கிய காலத்து
நன்றும் இருந்தும் நலம்பல பேசினும்
வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்
சென்று வணங்குந் திருவையுடை யோரே.

விளக்கம்:

எண்ணம், பேச்சு, செயல் ஆகிய மூன்றும் அமைதியாக இருக்கும் காலத்திலும் எண்ணம், பேச்சு, செயல் ஆகிய மூன்றும் அதன் வேலைகளை செய்து கொண்டிருக்கும் காலத்திலும் அனைத்திற்குள்ளும் இருந்து அனைத்தையும் வெல்லும் இறைவனை தியானித்திருப்பவர்களை அவர்கள் இருக்கும் இடத்திற்குப் பிறர் சென்று அவர்களை வணங்குமளவிற்கு இறைவனின் திருவருளைப் பெறுபவர்கள் அந்தணர்கள் ஆவார்கள்.

பாடல் #237: முதல் தந்திரம் - 12. அந்தணர் ஒழுக்கம் [அந்தணர் என்பவர் யார், அவர் எப்படி இருக்க வேண்டும்]

தானே விடும்பற் றிரண்டும் தரித்திட
நானே விடப்படும் ஏதொன்றை நாடாது
பூமேவு நான்முகன் புண்ணிய போகனாய்
ஓமேவும் ஓரா குதிஅவி உண்ணவே.

விளக்கம்:

பாடல் #236 ல் கூறியபடி எண்ணம், பேச்சு, செயல் மூன்றிலும் சிவசிந்தனை வைத்த அந்தணரிடம் அகப்பற்றான உடம்பின் மேல் இருக்கும் பற்றும் புறப்பற்றான செல்வம் பந்தம் போன்ற பற்றுகளும் சென்றுவிடும். நான் என்னும் அகங்காரம் நீங்கி இறை சிந்தனையிலேயே இருக்கும் அவர்களை எதுவும் பாதிக்காது. அவர்கள் செய்யும் வேள்வியில் இடும் அவிர்பாகங்களை [நெய், அரிசி போன்ற வேள்வியில் இடும் பொருட்கள்] உண்ண தாமரை மலரில் வீற்றிருக்கும் அந்த புண்ணிய போகன் பிரமன் வருவான்.

பாடல் #238: முதல் தந்திரம் - 13. இராசதோடம் [அரசாட்சி முறை]

கல்லா அரசனும் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனின் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்என்பான்
நல்லாரைக் காலன் நணுகவும்நில் லானே.

விளக்கம்:

கல்வி அறிவு இல்லாத அரசனும் உயிர் எடுப்பதில் எமதர்மனுக்குச் சமமானவன். ஆனாலும் கல்வி அறிவு இல்லாத அரசனைவிட எமதர்மன் மிகவும் நல்லவன். ஏனென்றால் கல்வி அறிவு இல்லாத அரசன் அறம் எது, நீதி எது, என்று ஆராயாமல் குற்றம் சாற்றப்பட்டவரை உடனே கொன்றுவிடு என்று கட்டளையிட்டு விடுவான். எமதர்மனோ நல்லவர்களின் பக்கத்தில் நிற்கவும் தயங்கி அவர்களின் காலம் முடியும் வரை காத்திருப்பான்.

பாடல் #239: முதல் தந்திரம் - 13. இராசதோடம் [அரசாட்சி முறை]

நாடொறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாடொறும் நாடி அவன்நெறி நாடானேல்
நாடொறும் நாடு கெடுமுட னண்ணுமால்
நாடொறும் செல்வம் நரபதி குன்றுமே.

விளக்கம்:

ஒரு நாட்டுக்கு அரசனாக இருக்கின்றவன் அந்த நாடு முழுவதிலும் தினந்தோறும் தவ வழியில் வாழ்பவர்களுக்கு எந்தவொரு துன்பமும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அரசனுக்கு என்று விதிக்கப்பட்ட நீதியிலும் தர்மத்திலும் சிறிதளவும் பிழை வந்துவிடாமல் தினந்தோறும் நடந்துகொள்ள வேண்டும். இதில் எதை செய்யத் தவறிவிட்டாலும் அவனுடைய நாட்டின் வளம் குன்றும். மக்களிடையே அறியாமை தோன்றும். அந்த நாட்டில் இருக்கும் செல்வங்கள் எல்லாம் தினந்தோறும் குறைந்து கொண்டே வந்து அரசனும் விரைவில் இறந்து போவான்.

பாடல் #240: முதல் தந்திரம் - 13. இராசதோடம் [அரசாட்சி முறை]

வேடநெறி நில்லார் வேடம்பூண் டென்பயன்
வேடநெறி நிற்போர் வேடம்மெய் வேடமே
வேடநெறி நில்லார் தம்மை விறல்வேந்தன்
வேடநெறி செய்தால் வீடது வாகுமே.

விளக்கம்:

போட்டுக்கொண்டிருக்கும் வேடத்திற்கு உண்டான வழிமுறைகளை மேற்கொண்டு அதன்படி நடக்க இயலதவர்கள் இந்த வேடம் போட்டுக்கொண்டிருப்பதால் எந்த பயனும் இல்லை. போட்டுக்கொண்டிருக்கும் வேடத்திற்கு உண்டான வழிமுறைகளை மேற்கொண்டு அதன்படி நடப்பவர்களே உண்மையான வேடம் தரித்தவர்கள் ஆவார்கள். தான் போட்டிருக்கும் வேடத்திற்கு ஏற்ற வழியில் செல்லாத வேடதாரிகளை அந்த நாட்டை ஆளும் வலிமை மிக்க அரசன் கண்டுபிடித்து தண்டித்து வேடத்திற்கு ஏற்றபடி நடக்கச்செய்வது அரசனுக்கு முக்தியை வழங்கிவிடும்.

குறிப்பு:

மக்களில் விவசாயம், துணி நெய்தல், மண்பாண்டம் செய்தல் போன்று இன்னும் பல வேலைகளை அந்த நாட்டில் வாழும் மக்களில் சிலர் அந்தந்த தொழிலுக்கு ஏற்ற வேடம் ஏற்று அந்த வேலைகளை செய்யாமல் சோம்பேரிகளாக இருப்பார்கள். அவர்களை அரசன் கண்டு பிடித்து தன் வலிமையால் தண்டித்து அவர்கள் ஏற்றுக்கொண்ட வேடத்திற்க்கான தொழிலை அரசன் செய்ய வைத்தால் அது அவர்களுக்கும் அவர்களை சுற்றி இருப்பவர்களுக்கும் நாட்டுக்கும் நன்மை உண்டாக்கும். இதைச் செய்த பயனால் அரசனுக்கு முக்தி கிடைக்கும்.



பாடல் #241: முதல் தந்திரம் - 13. இராசதோடம் [அரசாட்சி முறை]

மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடொன் றிலனாகும் ஆதலால் பேர்த்துணர்ந்
தாடம் பரநூற் சிகையறுத் தானன்றே.

விளக்கம்:

அறியாமை அகன்று உண்மை ஞானம் பெறாதவர்கள் குடுமியையும் பூணூலையும் அணிந்து கொள்வதால் அவர்கள் இருக்கும் நாடு வளங்கள் குறைந்து துன்பப்படும். அந்த நாட்டை அரசாண்டு பெரும் வாழ்வை வாழும் அரசனும் பெருமை ஒன்றும் இல்லாதவனாக இழிவு பெற வேண்டியதாகிவிடும். நாட்டை ஆளும் அரசன் தமது நாட்டில் வெறும் ஆடம்பரத்திற்காக சிகை முடியையும் பூணூலையும் தரித்து வாழும் வேஷதாரிகளை நன்றாக ஆராய்ந்து உணர்ந்து கொண்டு அவர்களின் வேஷத்தைக் கலைத்து அவர்களை நம்புகின்ற மக்களுக்கு உண்மையைத் தெரிய வைத்தால் அந்த அரசனும் அவனது நாடும் நன்மை பெற்று விளங்கும்.

பாடல் #242: முதல் தந்திரம் - 13. இராசதோடம் [அரசாட்சி முறை]

ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாம் நாட்டிற்கே.

விளக்கம்:

உண்மை ஞானம் இல்லாதவர்கள் வெறும் சடை முடியும் பூணூலும் தரித்து உண்மை ஞானிகள் போல நடித்துக்கொண்டு இருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் இருக்கும் நாடு எப்போதும் சுபிட்சம் அடையாமல் துன்பப்பட்டுக்கொண்டே இருக்கும். அப்படி நடிப்பவர்கள் யார் என்பதை அந்த நாட்டு மக்களை ஆளுகின்ற அரசன் உண்மையான ஞானிகளின் மூலம் சோதனை செய்து நடிப்பவர்களை அடையாளம் கண்டுகொண்டு அந்த உண்மையான ஞானிகளின் மூலமே நடித்துக் கொண்டிருக்கின்ற ஞானிகளுக்கும் உண்மை ஞானத்தை போதனை செய்யவைத்து ஞானம் உண்டாக்கினான் என்றால் அவன் நாடும் அவனும் எப்போதும் நலம் பெற்று இன்பமாக இருப்பார்கள்.

பாடல் #243: முதல் தந்திரம் – 13. இராசதோடம் [அரசாட்சி முறை]

ஆவையும் பாவையும் மற்றற வோரையும்
தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையும்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே.

விளக்கம்:

பால் தரும் பசுக்களையும் பெண்களையும் அற நெறி உணர்ந்த சான்றோரையும் வானுலகத்து தேவர்கள் போற்றுகின்ற ஞானத்தை உணர்ந்து அதைக் குறிக்கும் வேஷத்தை தரித்த ஞானிகளையும் அவர்கள் வாழும் நாட்டிற்கு காவலனாக விளங்கும் அரசன் அவர்களைக் காத்து பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். அவர்களை காப்பாற்றவில்லை என்றால் அவன் இறந்தபின் இன்னுமொரு பிறவி எடுக்க முடியாத அளவிற்கு எப்போதுமே தப்பிக்க முடியாத நரகத்தில் துன்பப்பட்டுக் கொண்டு கிடப்பான்.

பாடல் #244: முதல் தந்திரம் – 13. இராசதோடம் [அரசாட்சி முறை]

திறந்தரு முத்தியும் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறி யேயாற்றல் வேண்டும்
சிறந்தநீர் ஞாலம் செய்தொழில் யாவையும்
அறைந்திடில் வேந்தனுக் காறிலொன் றாமே.

விளக்கம்:

பிறவி இல்லாத மேன்மை தரும் முக்தியையும் இந்தப் பிறவிக்கு தேவையான செல்வங்களும் வேண்டும் என்று ஒரு அரசன் விரும்பினால் அவன் மறந்த நிலையிலும் தர்மத்தின் வழி தவறாமல் நடக்க வேண்டும். ஏனெனில் சிறப்பு பெற்ற தண்ணீர் சூழ்ந்த இந்த உலகத்தில் அனைத்து உயிர்களும் செய்யும் காரியங்கள் அனைத்திலும் ஆறில் ஒரு பங்கு அரசனுக்கே வந்து சேரும். அந்த உயிர்கள் செய்யும் புண்ணியங்கள் பாவங்கள் அனைத்திலும் ஆறில் ஒரு பங்கு தமக்கு வரும் என்பதை உணர்ந்துகொண்டு அரசன் எப்போதும் மறக்காமல் அறத்தின் வழியிலேயே அவர்களையும் வழிநடத்திச் செல்ல வேண்டும்.

பாடல் #245: முதல் தந்திரம் - 13. இராசதோடம் [அரசாட்சி முறை]

வேந்தன் உலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழி யாநிற்பர்
பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாங்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவம்அகத் தானே.

விளக்கம்:

ஒரு நாட்டை ஆளும் அரசன் அதை மிகவும் நன்றாக காத்து ஆட்சி புரிந்தான் என்றால் அந்த நாட்டில் உள்ள மக்களும் தாங்கள் ஏற்றுக்கொண்ட தொழில்களுக்கு ஏற்ற தர்மநெறிகளிலிருந்து மாறாமல் அவ்வழியே நல்லவர்களாக இருப்பார்கள். அவர்கள் வாழும் நாட்டை பிறர் போர் செய்தோ அல்லது சூழ்ச்சி செய்தோ கைப்பற்ற நினைத்தால், தங்கள் நாட்டை காப்பாற்றிக்கொள்வதற்காக புலி பதுங்கியிருந்து பாய்ந்து அடித்து தனது உணவை தேடிக்கொள்வது போல போர் தொழில் கொண்ட மக்களும் நாட்டைக் காக்கும் அரசனும் பதுங்கியிருந்து தனது நாட்டை காப்பாற்றிக்கொள்வார்கள்.

கருத்து :

மன்னன் தர்மவழியில் நாட்டை ஆட்சி செய்தால் மக்களும் தர்மவழியில் நடப்பார்கள்.

பாடல் #246: முதல் தந்திரம் - 13. இராசதோடம் [அரசாட்சி முறை]

கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணாதோர்
மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே.

விளக்கம்:

பிராணாயாமப் பயிற்சியின் மூலம் மூச்சுக்காற்றை உள்ளே அடக்கி, மூலாதாரத்தில் இருக்கும் குண்டலினியை சுழுமுனை நாடி வழியே மூச்சுக்காற்றின் மூலம் தலை உச்சியின் மேலேற்றி சகஸ்ரரதளத்தில் வீற்றிருக்கும் இறைவனின் நிலவைப் போன்ற திருமுகத்தைக் கண்டு தரிசித்து பிறகு குண்டலினி சக்தியை புருவ மத்தியில் இருக்கும் ஆஞ்சை சக்கரத்தில் கொண்டு வந்து இறக்கி அதன் பிறகு அங்கே இருக்கும் அமிர்தத்தை இறைவனை நினைத்து பருகாமல் புத்தி மயக்கத்தின் மேல் மோகம் கொண்டு பனை மரத்திலிருக்கும் கள்ளை இறக்கித் தினமும் பருகி அந்த மயக்கத்திலேயே இருப்பவர்களை கண்டுபிடித்து அவர்களுக்குத் தக்க தண்டனை அளித்துத் திருத்த வேண்டியது நாட்டை ஆளும் அரசனது கடமையாகும்.

பாடல் #247: முதல் தந்திரம் - 13. இராசதோடம் [அரசாட்சி முறை]

தத்தம் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண்ட மும்செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வதுஅவ் வேந்தன் கடனே.

விளக்கம்:

உயிர்கள் அவரவர்கள் ஏற்றுக்கொண்ட சமய வழிகளின் நெறிமுறைகளின் படியும் ஒழுக்கத்தின் படியும் நடக்கத் தவறியவர்களை அனைத்து சமய வழிகளின் தலைவனாகவும் அனைத்து உயிர்களின் தந்தையாகவும் இருக்கும் சிவபெருமான் தாம் வழங்கிய சிவாகமத்தில் கொடுத்துள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப எந்தவித தண்டைனையானாலும் அவர்களின் ஆன்மாவிற்கு மறுபிறவியில் கொடுத்து அவர்களை சீர் படுத்துவான். ஆனாலும் அவர்கள் எடுத்திருக்கும் இந்தப் பிறவியில் இருக்கும் உடலுக்கு வேண்டிய தண்டனைகளைக் கொடுத்து அவர்களைத் திருத்துவது ஒரு நாட்டை ஆளும் அரசனது கடமையாகும்.

குறிப்பு :

ஏன் இறைவன் அடுத்த பிறவியில் தண்டனை கொடுக்க வேண்டும், இப்பிறவியில் கொடுத்தால் என்ன என்ற கேள்வியை பலர் கேட்கின்றனர். அதற்கான பதில். தவறுக்கு ஏற்ற இறைவனின் தண்டனையை உடல் அளவிலும் மன அளவிலும் தாங்கும் சக்தியை அந்த ஆத்மாவிற்கு கொடுத்து தண்டனையை தாங்கும் அளவிற்கு ஆன்மாவை பக்குவப்படுத்திய பிறகே இறைவன் தண்டனையை அளிக்கிறான்.

பாடல் #248: முதல் தந்திரம் - 14. வானச் சிறப்பு [வானத்திலிருந்து பெய்யும் மழையின் சிறப்பு]

அமுதூறு மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றும்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறும் காஞ்சிரை ஆங்கது வாமே.

விளக்கம்:

அமிர்தம் போன்றது மழை நீர். அதன் மூலம்தான் பாக்கு மரம் தென்னை மரம், கரும்பு வாழை மரம் போன்ற பழங்களைக் கொடுக்கும் அமிர்த சுவையை உடைய பலவித மரங்கள் உலகத்தில் தோன்றுகின்றன. ஆனாலும் அமிர்தத்தைத் தரும் இதே மழைதான் நஞ்சைத் தரும் எட்டிக்காய் போன்ற மரங்களையும் உலகத்தில் தோற்றுவிக்கின்றது.

கருத்து:

மழை நீர் சுவையான பழங்களை கொடுக்கும் மரத்திற்கும் விஷத்தை கொடுக்கும் செடிக்கும் பாகுபாடு இல்லாமல் கொடுக்கின்றதோ அதே போல் உயிர்கள் தனக்குள் இருக்கம் அன்பை பாகுபாடு பார்க்காமல் அனைத்து உயிர்கள் மீதும் கொடுக்கவேண்டும்.

பாடல் #249: முதல் தந்திரம் - 14. வானச் சிறப்பு
[வானத்திலிருந்து பெய்யும் மழையின் சிறப்பு]

வரையிடை நின்றிழி வான்நீர் அருவி
உரையில்லை உள்ளத் தகத்துநின் றூறும்
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்க்
கரையில்லை எந்தை கழுமணி யாறே.

விளக்கம்:

வானத்திலிருந்து பெய்து மலைமுகடுகள் வழியாக அருவியாக கொட்டும் மழை நீரில் நுரை இருக்காது. அழுக்கு இருக்காது துல்லியமான தெளிந்த நீராக மட்டுமே இருக்கும் அந்த நீரை இறைவனுக்கு அபிஷேகம் செய்தால் இறைவன் சிறப்பாக ஏற்றுக்கொள்வான். அது போலவே சொல்லில் இல்லாமல் உயிர்களின் உள்ளத்திலிருந்து ஊறும் எல்லையில்லாத தூய்மையான அன்பினால் உள்ளத்தில் இருக்கும் இறைவனுக்கு செய்யும் அபிஷேகத்தை இறைவன் சிறப்பாக ஏற்றுக்கொள்வான்.

பாடல் #250: முதல் தந்திரம் - 15. தானச் சிறப்பு (தருமம் செய்வதன் பெருமை)

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே.

விளக்கம்:

அவர்கள் இவர்கள் பிடித்தவர் பிடிக்காதவர் உறவினர் வேற்றார் என்று எந்தவித பாகுபாடும் எண்ணாமல் உணவை அனைவருக்கும் கொடுத்து உதவுங்கள். சாப்பிடுவதற்கு முன்பு பசியோடு யாராவது வருகின்றார்களா என்று பார்த்துவிட்டு பிறகு சாப்பிடுங்கள். சாப்பிடாமல் வைத்த பழைய உணவை சேமிப்பாக கருதி எடுத்து வைக்காமல் அதை உடனே பசியோடு இருப்பவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள். உணவின் மேல் அதிக ஆசை வைக்காமலும் பசியோடு இருக்கும்போது அவசர அவசரமாக வேகமாக சாப்பிடாமல் இருங்கள். காக்கை பசியோடு இருக்கும்போதும் கரைந்து கூப்பிட்டு மற்ற காகங்கள் வந்தபின் ஒன்றாகக் கூடி உண்பதைக் கண்டு அடுத்தவருக்கும் உணவை கொடுத்து சாப்பிட வேண்டும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

பாடல் #251: முதல் தந்திரம் - 16. அறஞ்செய்வான் திறம் (தரும வழியில் நிற்பவர்களின் பெருமை)

தாமறி வாரண்ணல் தாள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர்
தாமறி வார்சிவ தத்துவ ராவர்கள்
தாமறி வாருக்குத் தமர்பர னாமே.

விளக்கம்:

நான் என்பது எது என்பதை அறிந்தவர்கள் இறைவனின் திருவடிகளைத் தினமும் வழிபடுபவர்களாகவும் தரும வழிகளை ஏற்றுக்கொண்டு அதன்படி நடப்பவர்களாகவும் சிவ தத்துவத்தின் உருவமே தாமாக இருப்பவர்களாகவும் சிவபெருமானையே தமது உறவினராகவும் கொண்டு இருப்பார்கள்.

பாடல் #252: முதல் தந்திரம் - 16. அறஞ்செய்வான் திறம் [தரும வழியில் நிற்பவர்களின் பெருமை]

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க்கு இன்னுரை தானே.

விளக்கம்:

தினந்தோறும் இறைவனை வழிபட்டு அவனுக்கு படைக்க அன்போடு எந்தவொரு பச்சை இலையையோ வைத்தல் தினந்தோறும் பசுவின் பசிபோக்க ஒரு கட்டு புல்லை கொடுத்தல் தினந்தோறும் தினமும் சாப்பிடும் போது ஒரு கைப்பிடி உணவு தானம் செய்து விட்டு சாப்பிடுதல் தினந்தோறும் தாம் சந்திப்பவர்களிடம் அன்புடன் இனிமையாக பேசுதல் போன்றவை அனைவரும் எளிதில் செய்யக்கூடிய தருமங்களாகும்.

பாடல் #253: முதல் தந்திரம் - 16. அறஞ்செய்வான் திறம் [தரும வழியில் நிற்பவர்களின்பெருமை]

அற்றுநின் றாருண்ணும் ஊணே அறனென்னும்
கற்றன போதம் கமழ்பவர் மானிடர்
உற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்
பற்றிவந்து உண்ணும் பயனறி யாரே.

விளக்கம்:

உலகப் பற்றுக்களை விட்டுவிட்டு இருக்கும் ஞானிகளின் பசியாற உணவு வழங்குதல் என்பது மிகச் சிறந்த தருமமாகும். பல தருமங்களை கல்வி முறைகளில் ஆசிரியர் போதிக்கக் கற்றுக்கொண்டு ஆனால் தானம் ஏதுவும் செய்யாமல் தமக்கு அறிவு ஞானம் இருப்பதாகக் கூறிக்கொள்ளும் மனிதர்கள் கிணத்தடியிலும் குளக்கரையிலும் பற்றுக்களை அறுத்த ஞானிகள் பசியோடு இருக்கின்றார்களா என்று தேடிப்பார்த்து அவர்களைத் தம் வீட்டிற்கு அழைத்து வந்து சாப்பிட வைப்பதால் தமக்கு கிடைக்கும் மிகப் பெரிய பயனை அறியாமல் இருக்கின்றனர்.

பாடல் #254: முதல் தந்திரம் - 16. அறஞ்செய்வான் திறம் [தரும வழியில் நிற்பவர்களின் பெருமை]

அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து
இழிக்கஅன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே.

விளக்கம்:

மும்மலங்களாகிய அழுக்குகளை ஓட்டிவிடும் உண்மை ஞானத்தை அறிந்து அந்த அறிவால் உள்ளத்தில் இறைவனை நிரப்பமாட்டீர்கள். கல்வியும் செல்வமும் நிறைந்து இருந்த நாட்களிலேயே தருமங்கள் செய்யாமல் விட்டுவிட்டீர்கள். தினமும் எழுந்து கண் விழித்திருப்பதனால் என்ன பயன்? ஒரு நாள் கண் மூடிய பிறகு சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று தீ வைத்து உடல் முழுவதும் தீயின் வெப்பம் பரந்து சுட்டெரிக்கும் நேரத்தில் என்ன செய்யப் போகின்றீர்கள்? வாழ்க்கை முழுவதும் தருமம் செய்யும் பரந்த மனது இல்லாமல் ஏழை மனதாகவே வாழ்ந்துவிட்டீர்கள்.

பாடல் #255: முதல் தந்திரம் – 16. அறஞ்செய்வான் திறம் (தரும வழியில் நிற்பவர்களின் பெருமை)

தன்னை அறியாது தான்நல்லன் என்னாதிங்
கின்மை யறியா திளையரென் றோராது
வன்மையில் வந்திடும் கூற்றம் வருமுன்னம்
தன்மையுடன் நல்ல தவஞ்செய்யும் நீரே.

விளக்கம்:

சர்வ வல்லமையுடன் உயிரை உயிரிலிருந்து பிரிக்கும் எமன் வரும் பொழுது தன்னை யாரும் அறியாமல் எடுக்க வந்த உயிர் நன்மை செய்ததா தீமை செய்ததா என்று எண்ணாமல் அந்த உயிர் உலகில் இல்லாவிட்டால் உயிரைச் சார்ந்தவர்கள் என்ன கதியாவார்கள் என்று பார்க்காமல் அது இளையவரா முதியவரா என்று ஆராயாமல் உயிரை எடுத்துச் சென்று விடுவார். சர்வ வல்லமையான எமன் வருவதற்கு முன்பு உயிரை உடலில் நிலைபெறச் செய்து இறைவனை அடையும் நல்ல தருமங்கள் நிறைந்த தவங்களை நீங்கள் செய்துவிடுங்கள்.

பாடல் #256: முதல் தந்திரம் - 16. அறஞ்செய்வான் திறம் [தரும வழியில் நிற்பவர்களின் பெருமை]

துறந்தான் வழிமுதல் சுற்றமும் இல்லை
இறந்தான் வழிமுதல் இன்பமும் இல்லை
மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்
அறந்தான் அறியும் அளவறி யாரே.

விளக்கம்:

உலகப் பற்றுக்களை விட்ட ஞானியர்கள் செல்லும் வழியில் அவர்களின் சுற்றத்தார் உறவினர் என்று யாரும் இருப்பதில்லை. அறம் அறிந்த ஞானிகளுக்கு அறத்தின் அளவுகள் தெரியாது. அறம் செய்யாமல் வாழ்ந்தவன் இறந்து செல்லும் வழியில் எந்தவொரு இன்பமும் அவனுக்கு கிடைப்பதில்லை. அறத்தை மறந்து வாழ்ந்தவன் இறந்து செல்லும் வழியில் துணையாக சிவபெருமான் வரமாட்டான்.

குறிப்பு:

உலகப் பற்றுக்களை விட்டு அறத்தை அறிந்த ஞானியர்களுக்கே அறத்தின் அளவுகள் தெரியாது என்றால் அறம் என்பது எவ்வளவு பெரியது? அந்த அறத்தை அறிந்து வாழ்நாள் முழுவதும் செய்தால் இறைவனே துணையாக வருவான் என்றால் அறம் எந்த அளவு உயர்ந்தது.

பாடல் #257: முதல் தந்திரம் - 16. அறஞ்செய்வான் திறம் [தரும வழியில் நிற்பவர்களின் பெருமை]

தான்தவம் செய்வதாம் செய்தவத் தவ்வழி
மான்தெய்வ மாக மதிக்கும் மனிதர்காள்
ஊன்தெய்வ மாக உயிர்க்கின்ற பல்லுயிர்
நான்தெய்வ மென்று நமனும்வரு வானே.

விளக்கம்:

முன்பிறவியில் செய்த அறத்தினாலும் தவத்தினாலும் தான் இப்பிறவியிலும் மனிதப் பிறவி கிடைத்திருக்கின்றது. இந்த உண்மையை தன் அறிவின் மூலம் அறிந்து அறிவையே தெய்வமாக எண்ணி அந்த அறிவின் சொல்படி இப்பிறவியிலும் அற வழிகளிலும் தவ வழிகளிலும் நடப்பவர்கள்தான் மனிதர்கள். உடலே தெய்வம் என்று எண்ணி ஆசைகளுக்கு அடிமையாகி தருமத்தின் வழியில் செல்லாமல் வாழ்கின்ற எல்லா உயிர்களுக்கும் நானே தெய்வம் என்று எமதருமன் உயிரை எடுக்க வந்து நிற்பானே தவிர இறைவன் வர மாட்டான்.

பாடல் #258: முதல் தந்திரம் - 16. அறஞ்செய்வான் திறம் [தரும வழியில் நிற்பவர்களின் பெருமை]

திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு
கிளைக்கும் தனக்கும்அக் கேடில் புகழோன்
விளைக்குந் தவம்அறம் மேற்றுணை யாமே.

விளக்கம்:

வினையின் பயனால் மீண்டும் மீண்டும் பிறக்கும் பிறவியானது ஒரு பெரும் கடல் போன்றது. இந்த வினை அவ்வளவு சீக்கிரத்தில் தீர்ந்துவிடுவதில்லை. இந்த வினையாகிய பிறவிக்கடலை நீந்திச் சென்று இறைவனை அடையும் வரை சோர்வு வராமல் இருக்க இரண்டு வழிகள் உண்டு. அற வழிகளும் தவ வழிகளும்தான் அந்த இரண்டு வழிகள். அறத்தை கடைபிடிப்பவர்களுக்கும் அவரை பின்பற்றுபவர்களுக்கும் பிறவியில்லாத மேன்மையான முக்திக்கு வழிகாட்டி துணையாக இருப்பான் தூய்மையான புகழுடைய இறைவன்.

பாடல் #259: முதல் தந்திரம் - 16. அறஞ்செய்வான் திறம் [தரும வழியில் நிற்பவர்களின் பெருமை]

பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை
அற்றம் உரையான் அறநெறிக் கல்லது
உற்றுங் களால்ஒன்றும் ஈந்தது வேதுணை
மற்றுஅண்ணல் வைத்த வழிகொள்ளு மாறே.

விளக்கம்:

இறைவனின் திருவடிகளையே பற்றிக்கொண்டு உலகத்திதை உண்மையை பேசி குற்றம் குறை கூறாமல் அறநெறிகளின் வழியே நடப்பது மட்டுமின்றி நம்மால் இயன்றதை வேண்டும் என்று கேட்பவர்களுக்கு மனமுவந்து கொடுப்பதும் முக்தி அடைந்து இறைவனை அடைவதற்க்கான வழிகள் என்று இறைவன் வகுத்தவை என்பதைத் தெரிந்துகொண்டு அந்த வழிமுறைகளை கடைபிடித்து வாழுங்கள்.

பாடல் #260: முதல் தந்திரம் - 17. அறஞ்செய்யான் திறம் [தரும வழியில் நடக்காதவர்களின் இயல்பு]

எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய நல்லறம் செய்யா தவர்செல்வம்
வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயனுமறி யாரே.

விளக்கம்:

எட்டிக்காயின் கனி பழுத்து பெரிதாகி தானாக நிலத்தில் விழுந்தாலும் அது விஷத்தன்மை கொண்டு இருப்பதால் யாருக்கும் உணவாக உதவாது. அதுபோலவே நல்ல தருமத்தோடு இணைந்த புண்ணிய செயல்களைச் செய்யாதவர்களின் செல்வமும் யாருக்கும் உதவாது. உலகத்திலுள்ள உயிர்களிடம் வட்டி மேல் வட்டி போட்டு அவர்களை ஏமாற்றிப் பெரும் செல்வம் சம்பாதிக்கும் நீதிநெறி இல்லாத பாதகர்களுக்கு அவர்கள் சம்பாதித்த செல்வமும் நிலைக்காமல் அதன் உண்மையான பயனை அறியமாட்டார்கள்.



பாடல் #261: முதல் தந்திரம் - 17. அறஞ்செய்யான் திறம் [தரும வழியில் நடக்காதவர்களின் இயல்பு]

ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயிக்
கழிந்தன கற்பனை நாளும் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிடர் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம்அறி யாரே.

விளக்கம்:

காலங்கள் ஓடிக்கொண்டேதான் இருக்கின்றன ஓடிய காலங்கள் பல யுகங்களாக மாறி ஊழிக்காலத்தில் அழிந்தும் போகின்றது. உயிர்கள் தம் கற்பனையில் கட்டிய மனக்கோட்டைகளும் அவை வாழும் நாட்களும் குறைந்துகொண்டே சென்று கடைசியில் பெரிய துயரத்தையே தரும் உடலானது சக்கையாகப் பிழிந்து எடுக்கப்பட்டது போல வயதாகிச் சுருங்கிப் போய் ஒரு நாள் முழுவதுமாக அழிந்தும் போகின்றது. இதையெல்லாம் கண்கூடாக தினமும் பார்தாலும் தங்கள் வாழ்க்கையும் அழிந்து போய்விடும் என்பதை அறியாமல், வாழும் நாட்களில் செய்ய வேண்டிய தான தருமங்களை அறியாமலேயே பல உயிர்கள் வீணாக வாழ்ந்து அழிந்து போகின்றன.

பாடல் #262: முதல் தந்திரம் – 17. அறஞ்செய்யான் திறம் (தரும வழியில் நடக்காதவர்களின் இயல்பு)

அறம்அறி யார்அண்ணல் பாதம் நினையும்
திறம்அறி யார்சிவ லோக நகர்க்குப்
புறம்அறி யார்பலர் பொய்மொழி கேட்டு
மறம்அறி வார்பகை மன்னிநின் றாரே.

விளக்கம்:

தருமங்கள் என்னவென்பதை அறியாத உயிர்களுக்கு இறைவனின் திருவடிகளை நினைத்து வணங்கும் முறையும் தெரியாது. ஆதலால் அவர்களுக்கு சிவபெருமானின் இருப்பிடமான கைலாயத்திற்குச் செல்லும் வழியும் தெரியாது. பலர் தம்மிடம் பொய்யாக கூறிய விஷயங்களை உண்மை என்று நம்பிக்கொண்டு பாவத்தை மட்டுமே அறிந்தவர்களாகவும் அறமில்லாத வீரத்தில் மற்றவர்களிடம் பகையை வளர்த்துக் கொண்டவர்களாகவும் மட்டுமே வாழ்ந்து துயரப்படுகின்றனர்.

பாடல் #263: முதல் தந்திரம் – 17. அறஞ்செய்யான் திறம் (தரும வழியில் நடக்காதவர்களின் இயல்பு)

இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்
உருமிடி நாகம் உரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே.

விளக்கம்:

மார்புச் சளியால் வரும் இருமல், இரத்தக் குறைவால் வரும் இரத்த சோகை, சளியால் வரும் காச நோய், அதிக சூட்டினால் வரும் உபாதைகள் (சுரம் போன்றவை) போன்ற அனைத்துவிதமான நோய்களும் தருமம் செய்யாமல் வாழுகின்ற உயிர்களைத் தேடி வரும். அதே சமயம் உயிர் பயத்தைத் தரக்கூடிய இடிச்சத்தமும், நாகப் பாம்பும், வாதத்தால் வரும் தொண்டை வீக்கமும், வயிற்றுக்கட்டியால் வரும் கழலை நோயும், இன்னும் பல இன்னல்களைத் தரும் நோய்களும் தருமம் செய்து வாழுகின்றவர்களின் வாழ்க்கையில் வந்து சேராமல் ஒதுங்கிவிடும்.

பாடல் #264: முதல் தந்திரம் - 17. அறஞ்செய்யான் திறம் (தரும வழியில் நடக்காதவர்களின் இயல்பு)

பரவப் படுவார் பரமனை ஏத்தார்
இரவலர்க் கீதலை யாயினும் ஈயார்
கரகத்தால் நீரட்டிக் காவை வளர்க்கார்
நரகத்தில் நிற்றிரோ நன்னெஞ்சி னீரே.

விளக்கம்:

உயிர்களெல்லாம் வணங்கித் தொழும் பரம்பொருளான இறைவனை வணங்கித் தொழாதவர்கள் தர்மம் கேட்டு வருகின்றவர்களுக்கு தம்மிடம் மீதமிருப்பதிலிருந்தும் ஈ யின் தலையளவு கூட தர்மம் கொடுக்காதவர்கள் செடிகளுக்கு சிறிதளவு தண்ணீர் ஊற்றி அவற்றை வளர்க்காதவர்கள் ஆகிய இவர்கள் தங்களை நல்லவர்கள் என்று தன்னைத்தானே எண்ணிக்கொண்டு இருப்பார்கள் இவர்கள் இறந்தபின் நரகத்தில்தான் சென்று நிற்பார்கள்.



பாடல் #265: முதல் தந்திரம் – 17. அறஞ்செய்யான் திறம் (தரும வழியில் நடக்காதவர்களின் இயல்பு)

வழிநடப் பாரின்றி வானோர் உலகம்
கழிநடப் பார்நடந் தார்கரும் பாரும்
மழிநடக் கும்வினை மாசற வோட்டி
ஒழிநடப் பார்வினை ஓங்கிநின் றாரே.

விளக்கம்:

தர்ம வழியில் நடப்பவர் மட்டுமே விண்ணுலகத்திற்கு செல்லமுடியும். வேறு யாரும் செல்ல முடியாது. தரும வழியில் இல்லாமல் ஆசை வழிகளிலேயே நடப்பவர்கள் இருள் சூழ்ந்த உலகமான நரகத்திற்குத்தான் செல்ல முடியும். ஆசைகளின் வழி தம்மை இழுத்துச் செல்லும் வினைகளையும் மும்மலங்களையும் இறைவனது திருவருளால் நிக்கிவிட்டு தாம் கொண்ட தர்மநெறியில் நடப்பவர்கள் தாம் பிறந்த பிறவிக்கும் இன்னும் பிறக்கப் போகும் பல பிறவிகளுக்கும் நல்ல வினைகளை அதிகமாக சேர்த்துக்கொண்டு இருப்பவர்கள் ஆவார்கள்.

பாடல் #266: முதல் தந்திரம் - 17. அறஞ்செய்யான் திறம் [தரும வழியில் நடக்காதவர்களின் இயல்பு]

கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்
மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே.

விளக்கம்:

அனைத்து உயிர்களிலும் இறைவன் இருக்கின்றான் என்ற உண்மையை உணர்ந்து எல்லா உயிர்களையும் இறைவனாக எண்ணி அன்பு செலுத்துபவர்கள் ஈசன் கழல் அணிந்த திருவடிகளை தரிசிப்பார்கள். அனைத்து உலகப் பற்றுக்களையும் விடத்துணிந்து இறைவனை மட்டுமே பற்றிக்கொண்டு தவம் புரியத் துணிந்தவர்கள் ஈசன் இருக்கும் கைலாசத்தை ஆளுவார்கள் [சிவகணங்கள் போல]. தருமம், தவம் என்ற இந்த இரண்டு வழிகளிலும் எதையும் செய்யாதவர்கள் தாம் இறக்கும்போது துணைக்கு இறைவனும் வராமல் தருமங்களும் வராமல் எந்த துணையுமின்றி தமது வாழ்க்கையில் கொண்ட ஆணவத்திலும் கோபத்திலுமே மூழ்கி அழிந்து போய்விடுவார்கள்.

பாடல் #267: முதல் தந்திரம் – 17. அறஞ்செய்யான் திறம் [தரும வழியில் நடக்காதவர்களின் இயல்பு]

இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது
இன்ப மதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தையில் அறம்அறி யாரே.

விளக்கம்:

உயிர்கள் தமது வாழ்வில் பெறும் இன்பமும் துன்பமும் தமது முற்பிறவிகளில் செய்த நல்வினை தீவினை ஆகிய இரண்டுவித வினைச்செயல்களின் பயனால்தான். தாம் பிறந்த பிறவியில் தருமம் செய்து வாழும் உயிர்கள் பெறும் இன்பத்தைக் கண்ட பிறகும் தம்மை நாடி வந்தவர்களுக்கு வேண்டியதைக் கொடுத்து மகிழும் அன்பு உள்ளம் இல்லாத பேதைகள் தருமம் எது அதன் பயன் என்ன என்பதை அறியாதவர்களாகவே இருக்கின்றார்கள்.

பாடல் #268: முதல் தந்திரம் - 17. அறஞ்செய்யான் திறம் [தரும வழியில் நடக்காதவர்களின் இயல்பு]

கெடுவதும் ஆவதும் கேடில் புகழோன்
நடுவல்ல செய்தின்பம் நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யிற் பசுவது வாமே.

விளக்கம்:

உலகில் உள்ள அனைத்தும் உருவாவதற்கும் அழிந்து போவதற்கும் காரணமான தூய்மையான புகழுடைய இறைவன் நீதிநெறி தவறி அறம் ஆகியவற்றை கடைபிடிக்காமல் வாழும் உயிர்களுக்கு இன்பத்தை நினைத்து பார்க்கக்கூட விடமாட்டான். பசி என்று வருபவர்களுக்கு உணவு அளித்து இல்லை என்று வருபவர்களுக்குத் தம்மால் முடிந்ததைக் கொடுத்து உதவ வேண்டும் என்பதும் இன்பம் தரக்கூடியவை என்பதை உணர்ந்து அவற்றை செய்து வாழுங்கள். அப்படி இல்லாமல் பிற உயிர்களுக்குத் துன்பத்தைத் தரும்படியான காரியங்களைச் செய்து வாழ்வது மிருக வாழ்க்கையைப் போலத்தான் இருக்கும்.

பாடல் #269: முதல் தந்திரம் - 17. அறஞ்செய்யான் திறம் [தரும வழியில் நடக்காதவர்களின் இயல்பு]

செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும்
புல்லறி வாளரைப் போற்றிப் புலராமல்
இல்லங் கருதி இறைவனை ஏத்துமின்
வில்லி இலக்குஎய்த விற்குறி யாமே.

விளக்கம்:

பணக்காரர் என்று சிலரும் ஏழைகள் என்று பலரும் இருக்கும் வாழ்க்கையில் பணக்காரர்களிடமிருந்து பணம் பெறுவதற்காக அவர்களைப் பேரறிவு கொண்டவர்கள் என்று போற்றிப் புகழாமல் முக்தி கொடுக்கக்கூடிய இறைவனை போற்றி வழிபடுங்கள். அவ்வாறு செய்வது வேடன் தனக்கு வேண்டியதைக் குறிபார்த்து சரியாக அம்பு எய்து குறிதவறாமல் அடிப்பது போன்றது.

கருத்து:

வில்லிலிருந்து குறிபார்த்து அம்பு விட்டு வேண்டியதை எடுத்துக்கொள்வது போல உயிருக்கு தேவையானது எது என்று குறிபார்த்து அதைத் தரக்கூடியவரைப் போற்றி வழிபட்டு வாழவேண்டும்.

பாடல் #270: முதல் தந்திரம் - 18. அன்புடைமை
[அன்பு செலுத்தும் முறை]

அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்துஇருந் தாரே.

விளக்கம்:

அன்பு என்று அழைக்கப்படுகின்ற உணர்வும் சிவம் என்று அழைக்கப்படுகின்ற இறைவனும் இரண்டு வேறு வேறு என்று கூறுகின்றவர்கள் உண்மை ஞானம் இல்லாத அறிவில்லாதவர்கள். அசையும் பொருள் அசையா பொருள் ஓர் அறிவு முதல் ஆறறிவு வரை உள்ள அனைத்து உயிர்கள் மீதும் செலுத்தப்படும் எதிர்பார்ப்பில்லாத தூய்மையான அன்பு தான் சிவம் என்பதை யாரும் அறிந்திருக்கவில்லை. இறைவனது திருவருளால் தமக்குள்ளும் பிறருக்குள்ளும் இருந்து வெளிப்படும் தூய்மையான அன்பு தான் சிவம் என்பதை அறிந்து உணர்ந்த பின் அந்த அறிவு ஞானமே தூய்மையான அன்பே சிவமாக அவருடைய உள்ளத்தில் அமர்ந்து இருப்பார்.



பாடல் #271: முதல் தந்திரம் - 18. அன்புடைமை
[அன்பு செலுத்தும் முறை]

பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடு யாடிக்குப்
பின்னிக் கிடந்ததுஎன் பேரன்பு தானே.

விளக்கம்:

தூய்மையான தங்கத்தைவிட அதிகமாக ஜொலிக்கும் புலித்தோலை உடையாக அணிந்தவனும் மின்னிக்கொண்டு தூய்மையான பால்போன்ற வெள்ளை நிறத்தில் ஜொலிக்கும் இளம் சந்திர பிறை வடிவ நிலாவை தன் சடைமுடியில் அணிந்தவனும் சுடுகாட்டில் எரித்தபின் மிஞ்சியிருக்கும் சூடான சாம்பலைப் பொடிபோல தனது திருமேனியெங்கும் பூசிக்கொண்டு அந்த பொடியின் மேலேயே திருநடனம் ஆடுகின்ற கூத்தனாகிய இறைவனின் மேல் யாம் செலுத்திய அன்பும் இறைவன் எம்மேல் கொண்ட அன்பும் இரண்டற பின்னிக் கலந்துள்ளது.

கருத்து:

உண்மையான எதிர்பார்ப்பில்லாத பேரன்பை எதன் மீது செலுத்தினாலும் அதுவே சிவமாக இருக்கிறது என்பதை எவர் உணர்ந்து இருக்கின்றாரோ அவரோடு சிவனும் பேரன்பாகவே இரண்டறக் கலந்து இருக்கின்றான்.

பாடல் #272: முதல் தந்திரம் – 18. அன்புடைமை
[அன்பு செலுத்தும் முறை]

என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்
பொன்போற் கனலில் பொரிய வறுப்பினும்
அன்போ டுருகி அகங்குழை வார்க்கன்றி
என்பொலா மணியினை எய்தவொண் ணாதே.

விளக்கம்:

உடல் எலும்புகளை விறகுகளாக்கி தங்கம் போன்ற பொன்னிறத்தில் தகதகவென எரியும் தீயில் உடல் தசைகளை அறுத்து போட்டு பொன்னிறத்தில் பொரிய வறுத்தாலும் அன்போடு மனம் உருகி உள்ளம் குழைந்தவர்களைத் தவிர வேறு எவராலும் செதுக்கப்படாத தூய்மையான மாணிக்கம் போன்ற இறைவனை சென்று அடைய முடியாது.

கருத்து:

உயிர்கள் தமது உடலைக் கொடூரமாக வருத்திக்கொண்டு தவம் புரிந்தாலும் தமது உடலையே தீயிலிட்டு யாகம் புரிந்தாலும் அவர்களிடத்தில் உண்மையான அன்பு உள்ளத்தில் இல்லை என்றால் அவர்கள் என்ன செய்தாலும் இறைவனை அடைய முடியாது.

பாடல் #273: முதல் தந்திரம் - 18. அன்புடைமை
[அன்பு செலுத்தும் முறை]

ஆர்வம் உடையவர் காண்பர் அரன்றன்னை
ஈரம் உடையவர் காண்பர் இணையடி
பாரம் உடையவர் காண்பர் பவந்தன்னைக்
கோர நெருக்குகொடு கொங்குபுக் காரே.

விளக்கம்:

இறைவனைக் காண வேண்டும் என்கின்ற அன்பால் தீராத ஆசையைக் கொண்டவர்கள் அனைத்தையும் காத்து நிற்கும் இறைவனது திருவுருவத்தைக் கண்டு பயன்பெறுவார்கள். பிற உயிர்களிடத்தில் இறைவனை கண்டு தூய்மையான அன்புடன் உள்ளம் கசிந்து இருப்பவர்கள் இறைவனின் ஈடுஇணையில்லாத திருவடிகளைக் கண்டு பயன்பெறுவார்கள். அப்படியில்லாமல் பிறவியின் காரணமான கர்மவினைகளை அதிகமாக வைத்திருப்பவர்கள் இறைவனைக் காணாது உலக பற்றுக்களிலேயே இருப்பார்கள். வினையின் பயனாய் எத்தனை பிறவி எடுத்தாலும் அன்பில்லாத உள்ளத்தைக் கொண்டு இருப்பவர்கள் கொடுமையான துன்பத்தைக் கொடுக்கும் இடத்திலேயே மீண்டும் மீண்டும் பிறப்பார்கள்.

பாடல் #274: முதல் தந்திரம் - 18. அன்புடைமை
[அன்பு செலுத்தும் முறை]

என்னன் புருக்கி இறைவனை ஏத்துமின்
முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்
பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியும்
தன்னன் புளனக்கே தலைநின்ற வாறே.

விளக்கம்:

ஏதேனும் ஒரு வகையில் அன்பை உள்ளம் உருக இறைவனைப் போற்றி வழிபடுங்கள். உடலைவிட்டு உயிர் பிரியும் முன்பே உருக்கமான அன்பினை அனைத்து உயிர்களிடமும் காட்டுவதன் மூலம் இறைவனைத் தேடுங்கள். அப்படி செய்து வந்தால் அடியேன் மீது கொண்ட அளவில்லாத பெருங்கருணையினால் குருவாக இருந்து தனது அன்பை எனக்கென்று கொடுத்து என்னோடு எப்போதும் கலந்து நின்றது போலவே உங்களது உயிர் உடலை விட்டுப் பிரிந்த பின்பும் உங்களுக்கும் தனது அளவில்லாத பெருங்கருணையைக் கொடுத்து உங்களோடும் எப்போதும் இறைவன் கலந்து நிற்பான்.

பாடல் #275: முதல் தந்திரம் - 18. அன்புடைமை [அன்பு செலுத்தும் முறை]

தானொரு காலம் சயம்புவென் றேத்தினும்
வானொரு காலம் வழித்துணை யாய்நிற்கும்
தேனொரு பால்திகழ் கொன்றை அணிசிவன்
தானொரு வண்ணமாயென் அன்பில்நின் றானே.

விளக்கம்:

காலங்கள் தோன்றுவதற்கு முன்பே சுயமாகத் தோன்றியவனும் தம்மை அன்போடு போற்றி வணங்கி வாழ்ந்த உயிர்கள் இறந்து விண்ணுலகம் செல்லும் காலம் அவர்களோடு வழித்துணையாய் வருபவனும் தேன் அதிகமாக ஊறியிருக்கும் கொன்றை மலர்களைத் தனது இடது பாகத்தில் மாலையாக அணிந்திருப்பவனுமாகிய சிவபெருமானின் மேல் யான் வைத்திருக்கும் பேரன்பின் உருவமாகவே என்னுடன் கலந்து நிற்கின்றான்.

பாடல் #276: முதல் தந்திரம் - 18. அன்புடைமை
[அன்பு செலுத்தும் முறை]

முன்படைத் தின்பம் படைத்த முதலிடை
அன்படைத் தெம்பெரு மானை அறிகிலார்
வன்படைத் திந்த அகலிடம் வாழ்வினில்
அன்படைத் தான்றனர் அகலிடந் தானே.

விளக்கம்:

உயிர்களை உலகத்தில் படைக்கும் முன்பே அன்பையும் அதன் மூலம் பெறும் இன்பத்தையும் படைத்த முதல்வனாகிய இறைவனை தூய்மையான அன்பினால் கண்டு உணர முடியாதவர்கள் கேடு நிறைந்த இந்த பெரிய உலகத்தில் உலகப் பற்றுக்களின் மேலேயே அன்பு ஆசை வைத்து இந்த அகன்ற உலகத்திலேயே கிடந்து துன்பப்படுகின்றனர்.



பாடல் #277: முதல் தந்திரம் - 18. அன்புடைமை
[அன்பு செலுத்தும் முறை]

கருத்துறு செம்பொன்செய் காய்கதிர்ச் சோதி
இருத்தியும் வைத்தும் இறைவென் றேத்தியும்
அருத்தியுள் ஈசனை யாரருள் வேண்டில்
விருத்தி கொடுத்திடும் விண்ணவர் கோனே.

விளக்கம்:

உண்மையான அன்புகொண்டு இருப்பவர்களின் எண்ணத்தில் இறைவன் தூய்மையான தங்கம் போன்ற பிரகாசத்துடன் பேரொளி வீசும் சூரியனின் ஜோதியாக வீற்றிருப்பான். ஜோதி உருவத்தில் இருக்கும் இறைவனை எம்பெருமானே இறைவா என்று உருகி யாரொருவர் வேண்டினாலும் விண்ணுலகத்திலிருக்கும் தேவர்களுக்கெல்லாம் அரசனாக இருக்கும் இறைவன் அவர்கள் வேண்டியதை உடனே வழங்கிவிடுவான்.

பாடல் #278: முதல் தந்திரம் - 18. அன்புடைமை
[அன்பு செலுத்தும் முறை]

நித்தலும் துஞ்சும் பிறப்பையும் செய்தவன்
வைத்த பரிசறிந் தேயு மனிதர்கள்
இச்சையு ளேவைப்பர் எந்தை பிரானென்று
நச்சியே அண்ணலை நாடுகின்றி லாரே.

விளக்கம்:

தினந்தோறும் கொஞ்சம் கொஞ்சமாக இறக்கின்ற பிறப்பைக் கொடுத்த இறைவனே உயிர்களிடம் உள்ள பெருங்கருணையினால் அவர்கள் அந்த பிறப்பிலிருந்து வெளிவரும் அன்பையும் கொடுத்திருக்கின்றான். இதைத் தெரிந்து கொண்டாலும் மனிதர்கள் தங்களின் அன்பை உலகப் பற்றுகளின் ஆசையின் மேல்தான் வைக்கின்றார்களே தவிர எம்மைப் படைத்த தந்தையே எம்பெருமானே என்று இறைவனின் மேல் அன்பை வைத்து அவனை அடையும் வழியைத் தேடாமல் இருக்கின்றனர்.

பாடல் #279: முதல் தந்திரம் - 18. அன்புடைமை
[அன்பு செலுத்தும் முறை]

அன்பினுள் ளான்புறத் தானுட லாயுளான்
முன்பினுள் ளான்முனி வர்க்கும் பிரானவன்
அன்பினுள் ளாகி அமரும் அரும்பொருள்
அன்பினுள் ளாருக்கே அணைதுணை யாமே.

விளக்கம்:

உயிர்களின் உள்ளத்தில் தூய்மையான அன்பாக இருக்கும் இறைவனே வெளியே உடலாகவும் இருக்கின்றான். அவன் உலகத்தோற்றத்திற்கு முன்பே இருப்பவன் உலக அழிவிற்கு பின்னும் அழியாமல் இருப்பவன். இறைவனை அடைய அனைத்துவித பற்றுக்களையும் விட்ட முனிவர்களுக்கு தலைவன் அவன். தூய்மையான அன்பினுள் வந்து அமரும் அரிய பொருளான இறைவன் அன்பினை உள்ளத்தில் வைத்திருக்கும் உயிர்களுக்கு காக்கும் துணையாக எப்போதும் இருப்பான்.

பாடல் #280: முதல் தந்திரம் – 19. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்
உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்
கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு
மகிழ்ந்தன்பு செய்யு மருளது வாமே.

விளக்கம்:

தம்மை இகழ்ச்சியாக பேசும் உயிர்களையும் போற்றி வணங்கும் உயிர்களையும் சிவபெருமான் அறிவான். தம்மை இகழ்ந்து பேசிய உயிர்களுக்கும் மனமுவந்து அவரவர் மனதிற்கேற்ப அருளை வழங்கும் உத்தமமான தலைவன் இறைவன். அப்படிப்பட்ட இறைவனை உயிர்கள் தமது உள்ளத்திலிருந்து வெளிவரும் தூய்மையான அன்போடு அழைத்து அருள் வேண்டுமென்று கேட்டுவிட்டால் அவர்களுக்கு மிகவும் மகிழ்ச்சியுடன் வேண்டியதை உடனே தந்துவிடுவதும் அந்த இறைவனின் பேரருளே ஆகும்.

பாடல் #281: முதல் தந்திரம் - 19. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

இன்பப் பிறவிக் கியல்வது செய்தவன்
துன்பப் பிறவித் தொழில்பல எண்ணினும்
அன்பிற் கலவிசெய் தாதிப் பிரான்வைத்த
முன்புஇப் பிறவி முடிவது தானே.

விளக்கம்:

உயிர்கள் பிறந்த பிறவியிலேயே பேரின்பம் அடைவதற்குத் தேவையான அனைத்து வழிகளையும் இறைவன் செய்து வைத்திருந்தாலும் உயிர்கள் தாம் எடுத்த பிறவியில் துன்பத்தைத் தரக்கூடிய உலக ஆசைகளின் வழியே பலவித செயல்களைச் செய்கின்றனர். உயிர்கள் ஆசை வழியே சென்றாலும் உயிர்கள் மீது கொண்ட பேரன்பினால் அவர்களின் பிறவியை அறுக்கும் ஒரு வழியாக தூய்மையான அன்பை வைத்து இருக்கின்றான். ஆசை வழியே சென்று துன்பத்திற்குரிய காரியங்களைச் செய்யும் உயிர்களானாலும், தூய்மையான அன்புடன் இருந்தால் அவர்களுக்கு வேறு பிறவியில்லாத முக்தியை இறைவன் அவர்களுக்கு வழங்கி அருளுவான்.

பாடல் #282: முதல் தந்திரம் – 19. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

அன்புறு சிந்தையின் மேலெழும் அவ்வொளி
இன்புறு கண்ணியொ டேற்க இசைந்தன
துன்புறு கண்ணியைந் தொடும் துடக்கற்று
நண்புறு சிந்தையொடு நாடுமின் நீரே.

விளக்கம்:

அனைத்து உயிர்களிடமும் தூய்மையான அன்புடன் இருப்பவர்களின் எண்ணத்தில் பேரொளியாக எழும் இறைவன் உயிர்களின் பிறவியை அறுத்து பேரின்பத்தைக் கொடுக்கும் அமிர்தமாக இரண்டு கண்களுக்கு நடுவே இருக்கும் ஆக்ஞா சக்கரத்தில் இணைந்து எழுகின்றான். உயிர்களின் உள்ளத்தில் பேரொளியாக இறைவன் எழுந்தபின் ஆன்மாக்களுக்கு துன்பத்தை தரும் ஐம்புலன்களின் தொடர்பு அறுபட்டு நீங்கும். எனவே அனைத்து உயிர்களிடமும் அன்பையே சிந்தனை செய்யும் எண்ணத்தோடு அவனைச் சென்று அடையுங்கள் நீங்கள்.

பாடல் #283: முதல் தந்திரம் - 19. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

புணர்ச்சியுள் ஆயிழை மேலன்பு போல
உணர்ச்சியுள் ஆங்கே ஒடுங்கவல் லார்க்கு
உணர்ச்சியில் லாது குலாவி உலாவி
அணைத்தலும் இன்பம் அதுஇது வாமே.

விளக்கம்:

ஆண்கள் தாம் அன்புகொண்ட மனைவியரோடு இருக்கும் பொழுது அந்த உணர்விலேயே ஊறித் தம்மை மறந்து இருப்பதுபோல இறைவன் மீது தாம் வைத்திருக்கும் தூய்மையான அன்பின் உணர்ச்சியிலேயே ஊறித் தம்மை மறந்து இருக்கக்கூடிய உயிர்களுக்கு வெறும் உடல் உணர்ச்சி இல்லாமல் உள்ளத்திலிருக்கும் உணர்ச்சியோடு ஒன்றாகக் கூடி அவர்கள் செல்லும் இடமெல்லாம் அவர்களை காத்து நிற்பான் இறைவன். அப்படிப்பட்ட இறைவனிடம் கிடைக்கும் பேரின்பம் உலகப் பற்றுக்களோடு இருக்கும் அன்பில் கிடைக்கும் சிற்றின்பத்தைவிட மிகவும் பெரியது ஆகும்.

பாடல் #284: முதல் தந்திரம் – 19. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

உற்றுநின் றாரொடும் அத்தகு சோதியைச்
சித்தர்கள் என்றும் தெரிந்தறி வாரில்லை
பத்திமை யாலே பணிந்தடி யார்தொழ
முத்தி கொடுத்துஅவர் முன்புநின் றானே.

விளக்கம்:

அனைத்து உயிர்களிடம் உண்மையான அன்பு வைத்து இருக்கும் அன்பர்களுடன் சேர்ந்து இருக்கும் பேரொளியான இறைவனை வெறும் சிந்தனை மட்டுமே செய்பவர்களால் அவன் எப்படி இருப்பான் என்பதைத் தெரிந்து கொள்ளவோ அவனது பேரன்பையோ அறிந்து கொள்ளவோ முடியாது. சிந்தனையை விட்டுவிட்டு அவன் மீது உண்மையான பக்தி கொண்டு அவன் திருவடிகளைப் பணிந்து தொழுது வருபவர்களுக்கு அவன் முக்தியையும் கொடுத்து அவர்களின் கண் முன்பும் வந்து நிற்பான் இறைவன்.

பாடல் #285: முதல் தந்திரம் – 19. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

கண்டேன் கமழ்தரு கொன்றையி னானடி
கண்டேன் கரியுரி யான்றன் கழலிணை
கண்டேன் கமல மலருறை வானடி
கண்டேன் கழலதுஎன் அன்பினுள் யானே.

விளக்கம்:

சுகந்தமான வாசனை கொண்ட கொன்றை மலர்களைச் சூடியிருக்கின்றவனின் திருவடிகளை யான் கண்டு கொண்டேன். அறியாமையாகிய யானையை கதறும்படி பிளந்து அதன் தோலை உரித்துப் போர்வையாக தன் மேல் போர்த்திக்கொண்டவனின் காதிலிருக்கும் அழகிய கழல்களை யான் கண்டு கொண்டேன். சகஸ்ரர தளத்தில் ஆயிரம் இதழ்கொண்ட தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் இறைவனின் திருவடிகளை யான் கண்டு கொண்டேன். இறைவனின் மேல் யான் கொண்ட பேரன்பால் அழகிய கழல்களை அணிந்து அன்பே உருவாமாய் நின்ற அவனது திருமேனியை யான் கண்டு கொண்டேன்.



பாடல் #286: முதல் தந்திரம் – 19. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

நம்பனை நானா விதப்பொரு ளாகுமென்
றும்பரில் வானவர் ஓதுந் தலைவனை
இன்பனை இன்பத் திடைநின் றிரதிக்கும்
அன்பனை யாரும் அறியவுமி லாரே.

விளக்கம்:

நம்மோடு எப்போதும் இருக்கும் இறைவனை அனைத்து விதமான பொருளாகவும் இருப்பவன் என்று விண்ணுலகத்திலிருக்கும் தேவர்களெல்லாம் போற்றித் துதிக்கும் தலைவனை பேரின்பத்தின் உருவமாக இருப்பவனை பேரின்பத்தின் இடையே நின்று பெருங்கருணையை வழங்கும் பேரன்பு மிக்க பெருமானை உயிர்கள் எவரும் அறிந்து கொள்ளாமல் இருக்கின்றார்களே.

பாடல் #287: முதல் தந்திரம் - 19. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

முன்பு பிறப்பும் இறப்பும் அறியாதார்
அன்பில் இறைவனை யாமறி வோமென்பர்
இன்பப் பிறப்பும் இறப்பும் இலான்நந்தி
அன்பில் அவனை அறியவுமி லாரே.

விளக்கம்:

தாம் முன்பு எடுத்த பிறவியையும் அந்தப் பிறவியில் இறந்த விதத்தையுமே அறியாத உயிர்கள் தாம் கொண்ட சிற்றின்ப அன்பிலேயே இறைவனைத் தெரிந்து கொண்டோம் என்று சொல்லுவார்கள். பேரின்பத்தையும் கொடுத்து பிறவியில்லாத வாழ்வைக் கொடுப்பவன் பிறப்பும் இறப்பும் இல்லாத இறைவன். அவனைத் தூய்மையான அன்பின் மூலம் அறிந்து கொள்ளாமல் இவர்கள் இருக்கின்றார்களே.



பாடல் #288: முதல் தந்திரம் - 19. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

ஈசன் அறியும் இராப்பக லுந்தன்னை
பாசத்துள் வைத்துப் பரிவுசெய் வார்களைத்
தேசுற் றறிந்து செயலற் றிருந்திடில்
ஈசன்வந்து எம்மிடை ஈண்டிநின் றானே.

விளக்கம்:

இரவு பகல் என்று பார்க்காமல் எப்போதும் தம்மை தூய்மையான அன்பில் வைத்துப் போற்றித் தொழும் உயிர்களை சிவபெருமான் அறிவான். ஜோதியாக அவன் வந்து கலந்துவிடுவான் என்பதை அறிந்து கொண்டு எந்தச் செயலுமின்றி நாம் தியானத்தில் இருந்தாலே போதும். அந்தச் சிவபெருமானே நமது முன்னால் வந்து நம்மோடு அன்பில் கலந்து நிற்பான்.

பாடல் #289: முதல் தந்திரம் - 19. அன்பு செய்வாரை அறிவன் சிவன்

விட்டுப் பிடிப்பதென் மேதகு சோதியைத்
தொட்டுத் தொடர்வன் தொலையாப் பெருமையை
எட்டுமென் னாருயி ராய்நின்ற ஈசனை
மட்டுக் கலப்பதுவே மஞ்சன மாமே.

விளக்கம்:

இளமை இருக்கும் போது விட்டுவிட்டு வயதான பிறகு அனைத்திலும் உயர்ந்த ஜோதி வடிவான இறைவனை பிடித்துக்கொள்ளலாம் என்று நினைப்பது மூடத்தனம் ஆகும். செய்யும் அனைத்து காரியங்களிலும் இறைவனை நினைத்துக்கொண்டே வாழ்ந்து வருவது இறைவனை சென்றடைய வழிவகுத்து என்றும் அழியாத பெருமையை கொடுக்கும். அனைத்து உயிர்களுக்குள்ளும் ஆருயிராக இருக்கும் சிவபெருமானுடன் அளவில்லாத பேரன்பில் கலந்து இருப்பதுதான் உயிர்களுக்குள் இருக்கும் இறைவனுக்கு செய்யும் மிகச்சிறந்த அபிஷேகம் ஆகும்.

பாடல் #290: முதல் தந்திரம் – 20. கல்வி
[உண்மை அறிவான ஞானம்]

குறிப்பறிந் தேன்உட லோடுயிர் கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகும் கல்விகற் றேனே.

விளக்கம்:

உயிர்கள் உலகத்தில் வினைப்பயனால் பிறவி எடுக்கும் காரணத்தைத் தெரிந்து கொண்டேன். உயிர்களின் மேல் கொண்ட பெருங்கருணையால் அவர்கள் எடுக்கும் உடலோடு உயிராக இறைவனும் கலந்திருப்பதை தெரிந்து கொண்டேன். தேவர்களுக்கெல்லாம் மிகப் பெரிய மகாதேவனான இறைவன் தன்மீது தூய்மையான அன்பு கொண்ட உயிர்களுக்கு தடையேதும் செய்யாமல் உடனே அவர்களின் உள்ளத்தில் புகுந்து வீற்றிருப்பதையும் தெரிந்து கொண்டேன். இவையெல்லாம் படிப்பதின் மூலமாகவோ அல்லது கேட்பதின் மூலமோ கற்றுக்கொள்ள முடியாத பேரறிவு ஞானத்தை இறைவனது அருளால் கற்றுக்கொண்டேன்.

பாடல் #291: முதல் தந்திரம் - 20. கல்வி
[உண்மை அறிவான ஞானம்]

கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி உரைசெய்யும்
கற்றறி காட்டக் கயலுள வாக்குமே.

விளக்கம்:

கல்வி அறிவை குருவின் மூலம் கற்று அறிந்த உயிர்கள் தாம் கற்றுக்கொண்ட அறிவை ஆராய்ந்து பார்த்தால் தாம் கற்று அறிந்த கல்வியினால் கிடைத்த அறிவுக்குள் ஒரு பேரறிவு ஞானம் இருப்பதைத் தெரிந்து கொள்வார்கள். உயிர்கள் தாம் கற்றுக் கொண்ட உலக கல்விக்குள் உண்மையான அறிவைக் கொடுக்கும் ஞானக் கண்ணை எண்ணித் தியானித்து பேரறிவு ஞானத்தை பெறவேண்டும். அப்படிப் பெற்ற பேரறிவு ஞானத்தை குருவாக இருந்து தன்னை நாடி வருபவர்ளுக்கு அவர்களின் தகுதிக்கேற்ப நயன தீட்சை மூலம் காண்பிக்கமுடியும்.

உள்விளக்கம்:

நயன தீட்சை என்பது முட்டை போடும் மீன் வகைகள் முட்டை போட்டதும் தன் முட்டையை பார்த்துக்கொண்டே இருக்கும் சிறிது நேரத்தில் அனைத்து முட்டைகளும் குஞ்சு பொறித்துவிடும் இதுபோல குருவானவர் சீடனை பார்த்ததும் பேரறிவு ஞானமடைய வைக்கலாம்.

பாடல் #292: முதல் தந்திரம் – 20. கல்வி
[உண்மை அறிவான ஞானம்]

நிற்கின்ற போதே நிலையுடை யான்கழல்
கற்கின்ற செய்மின் கழிந்தறும் பாவங்கள்
சொற்குன்றல் இன்றித் தொழுமின் தொழுதபின்
மற்றொன்று இலாத மணிவிளக் காமே.

விளக்கம்:

நமது உடலில் உயிர் இருக்கும் காலத்திலேயே என்றும் நிலைத்திருக்கும் இறைவனின் பாதங்களை தம் உள்ளத்திற்குள் காணுகின்ற பேரறிவு ஞானத்தை கற்றுக்கொள்ளும் வழிகளைத் தேடி கற்றுக் கொண்டால் நாம் எப்பிறவியிலும் செய்த பாவங்கள் அனைத்தும் நம்மைவிட்டு விலகி அழிந்து போகும். அத்தகைய பேரறிவு ஞானத்தைக் கற்றுக்கொள்ள சத்தியம் வாக்கு தவறாமல் இறைவனை மட்டுமே எண்ணிப் போற்றித் தொழுது வாருங்கள். அப்படித் தொழுது வந்தால் இறைவன் மணிவிளக்காக நமது உள்ளத்துக்குள் எழுந்தருளி பேரறிவை தந்தருளுவான்.

பாடல் #293: முதல் தந்திரம் - 20. கல்வி
[உண்மையான அறிவைக் கற்றுக்கொள்ளும் முறை]

கல்வி யுடையார் கழிந்தோடிப் போகின்றார்
பல்லி யுடையார் பாம்பரிந்து உண்கின்றார்
எல்லியும் காலையும் ஏத்தும் இறைவனை
வல்லியுள் வாதித்தது காயமு மாமே.

விளக்கம்:

உலக ஞானத்தை மட்டும் அறிந்து கொள்ளும் கல்வியை கற்றுக்கொண்ட பலகோடி உயிர்கள் எப்போதும் பிறந்து இறந்து கொண்டுதான் இருக்கின்றனர். எண்ணம் சிதறாத மனமுடையவர்கள் உண்மையான ஞானத்தை சிறிது சிறிதாக பெற்று தினமும் காலையும் மாலையும் இறைவனை போற்றி வழிபட்டால், சித்தக் குளிகையால் செம்பு பொன்னாவது போல இறைவனது அருளால் அழிகின்ற உடல் என்றும் அழியாத காயகல்ப உடலாக மாறிவிடும்.

உட்கருத்து:

உண்மையான பேரறிவு ஞானத்தைப் பெறுவதற்கு எதிலும் சிதறாத வலிமையான மனதோடு இறை வழிபாடு தேவை.

பாடல் #294: முதல் தந்திரம் - 20. கல்வி
[உண்மை அறிவான ஞானம்]

துணையது வாய்வரும் தூயநற் சோதி
துணையது வாய்வரும் தூயநற் சொல்லாம்
துணையது வாய்வரும் தூயநற் கந்தம்
துணையது வாய்வரும் தூயநற் கல்வியே.

விளக்கம்:

பாடல் #293 இல் கூறியுள்ளபடி என்றும் அழியாத உடலைப் பெற்ற உயிர்களுக்கு துணையாக கூடவே வருபவை தூய்மையான பேரொளி ஜோதியாகிய இறைவனும், அந்த உயிர்கள் வேறு உயிர்களுக்கு சொன்னது அப்படியே உடனே நடக்கும் சத்தியவாக்கும், அவர்கள் செய்த நல்ல கர்மங்களின் நல்ல ஜென்மாந்திர வாசனையும், உண்மையான ஞானமாகிய கல்வியும் அந்த உயிர்களுடன் எப்போதும் துணையாக வருபவை ஆகும்.



பாடல் #295: முதல் தந்திரம் - 20. கல்வி
[உண்மை அறிவான ஞானம்]

நூலொன்று பற்றி நுனியேற மாட்டாதார்
பாலொன்று பற்றினால் பண்பின் பயன்கெடும்
கோலொன்று பற்றினால் கூடா பறவைகள்
மாலொன்று பற்றி மயங்குகின் றார்களே.

விளக்கம்:

அறநூல்கள் கூறிய வழிமுறைகளின்படி நடந்து இறைவனை அடைய முடியாத உயிர்கள் உலக ஆசைகளின்படி வழி நடந்து நல்ல பண்புகளால் கிடைக்கும் பயன்களை கெடுத்துக் கொண்டு திரிகின்றார்கள். குச்சி ஒன்றை எடுத்து காண்பித்தால் உணவை உண்ண வரும் பறவைகள் விலகி ஓடிவிடுவதுபோல அறநூல்கள் கூறிய வழிமுறைகளின்படி நடந்தால் உலக ஆசைகளைக் கொடுக்கும் ஐம்புலன்களும் நம்மை விட்டு ஓடிவிடும். இது தெரியாமல் உலக ஆசைகளில் மயங்கிக் கிடந்து வாழ்வை இழக்கின்றனர் உயிர்கள்.

பாடல் #296: முதல் தந்திரம் - 20. கல்வி
[உண்மை அறிவான ஞானம்]

ஆய்ந்துகொள் வார்க்கரன் அங்கே வெளிப்படும்
தோய்ந்த நெருப்பது தூய்மணி சிந்திடும்
ஏய்ந்த இளமதி எட்டவல் லார்கட்கு
வாய்ந்தது மனமல்கு நூலேணி யாமே.

விளக்கம்:

உண்மை கல்வியான ஞானத்தை ஆராய்ந்து உணர்ந்து கொள்பவர்களின் உள்ளத்துக்குள்ளேயே இறைவன் வெளிப்படுவான். மணிவிளக்கின் உள்ளிருந்து வெளிப்படும் நெருப்பு வெளிச்சத்தைப் போல தாம் உணர்ந்த கல்வி ஞானத்தின் மூலம் இறைவனை ஜோதியாக தமக்குள் தரிசிக்க பெற்றவர்களுக்கு இறைவனை அடைய மனம் தகுதிபெற்று அந்த மனமே அவர்களை முக்திக்கு ஏற்றிவிடும் ஏணியாகவும் இருக்கும்.

பாடல் #297: முதல் தந்திரம் - 20. கல்வி
[உண்மை அறிவான ஞானம்]

வழித்துணை யாய்மருந் தாயிருந் தார்முன்
கழித்துணை யாங்கற் றிலாதவர் சிந்தை
ஒழித்துணை யாமும்ப ராமுல கேழும்
வழித்துணை யாம்பெருந் தன்மைவல் லானே.

விளக்கம்:

உண்மை ஞானமாகிய கல்வி கற்றவர்களின் சிந்தனை உயிர்களுக்கெல்லாம் வழித்துணையாகவும், நோய் தீர்க்கும் மருந்தாகவும் இருக்கும். உண்மை ஞானமாகிய கல்வி இல்லாதவர்களின் சிந்தனை, இறைவனைப் பற்றிய எண்ணங்களை இல்லாமல் அறியாமையை கொடுக்கும். உண்மை ஞானமாகிய கல்வி கற்றவர்களுக்கு, தேவலோகம் முதலிய ஏழு உலகங்களுக்கும் வழித்துணையாய் இருக்கும் இறைவனே பெருங்கருணையுடன் அருள் புரிவான்.

பாடல் #298: முதல் தந்திரம் – 20. கல்வி
[உண்மை அறிவான ஞானம்]

பற்றது பற்றின் பரமனைப் பற்றுமின்
முற்றது எல்லா முதல்வன் அருள்பெறில்
கிற்ற விரகின் கிளரொளி வானவர்
கற்றுஅவர் பேரின்பம் உற்றுநின் றாரே.

விளக்கம்:

எதையாவது வேண்டும் என்று எண்ணி அதனை அடைய ஆசைப்பட்டால் இறைவன் வேண்டும் என்று ஆசைப்பட்டு அவனை அடையுங்கள். அனைத்திற்கும் முதல்வனாகிய இறைவனை அடைந்து அவன் அருளைப் பெற்றுவிட்டால் எல்லா ஆசைகளுக்கும் மேலானதை அடைந்திருப்பதை உணரலாம். தவ ஒளியுடன் இருக்கும் தேவர்களை விட உண்மைக்கல்வி ஞானத்தின் மூலம் இறைவனை உணர்ந்தவர்கள் மிகுந்த பேரின்பம் பெறுகிறார்கள்.

பாடல் #299: முதல் தந்திரம் – 20. கல்வி
[உண்மை அறிவான ஞானம்]

கடலுடை யான்மலை யான்ஐந்து பூதத்
துடலுடை யான்பல ஊழிதொ றூழி
அடல்விடை ஏறும் அமரர்கள் நாதன்
இடமுடை யார்நெஞ்சத் திலிருந் தானே.

விளக்கம்:

கடலாக இருப்பவனும் மலையாக இருப்பவனும் ஐந்து பூதங்களையே தனக்கு உடலாக வைத்திருப்பவனும் உலகம் தோன்றி அழியும் பலகோடி ஊழிக்காலங்களிலும் மாறாமல் நின்று வலிமையான காளையின் மேல் ஏறிவரும் அமரர்களுக்கெல்லாம் தலைவனுமான இறைவனை உண்மை கல்வி ஞானத்தைப் பெற்று தம் மனதில் இடம்கொடுப்பவர் நெஞ்சத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்றான்.

பாடல் #300: முதல் தந்திரம் – 21. கேள்வி கேட்டமைதல் [தெளிவான கேள்வி கேட்டு மனத்தை அடக்கியிருத்தல்]

அறங்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்
புறங்கேட்டும் பொன்னுரை மேனிஎம் ஈசன்
திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே.

விளக்கம் :

அறநூல்கள் சொல்லும் உண்மைகளைக் கேட்டும் பாடல் # 224ல் உள்ளபடி இருக்கும் அந்தணர்களின் அறிவுரைகளைக் கேட்டும் பாவங்கள் இவை என கூறும் நீதிநூல்கள் கூறுவதை கேட்டும் தேவர்களின் வழிபாட்டு கூறிய மந்திரங்களைக் கேட்டும் இறைவனைப்பற்றி சொல்லாத பிற நூல்களில் சொல்லப்படும் நல்ல கருத்துக்களைக் கேட்டும் பொன் போன்ற ஈசனின் திருமேனியாக இருக்கும் அவன் நாமத்தையும் அதன் தன்மைகளையும் கேட்டு அதன் படி நடந்தால் சிவகதி அடையலாம்.

பாடல் #301: முதல் தந்திரம் - 21. கேள்வி கேட்டமைதல் [கேள்வி ஞானம் பெற்று இறைவனை அடைதல்]

தேவர் பிரான்றனைத் திவ்விய மூர்த்தியை
யாவர் ஒருவர் அறிவார் அறிந்தபின்
ஓதுமின் கேண்மின் உணர்மின் உணர்ந்தபின்
ஓதி உணர்ந்துஅவர் ஓங்கிநின் றாரே.

விளக்கம்:

தேவர்களின் தலைவனாக இருப்பவனும் அனைத்திலும் மேலானவனுமான இறைவனை ஒருவரும் அவ்வளவு எளிதில் அறிந்து கொள்ளுவதில்லை. இறைவன் என்று ஒருவர் இருக்கிறார் என்று தெரிந்து கொள்ளுங்கள். தெரிந்த பின் அவரை அடைய அவரின் நாமத்தை சொல்லுங்கள் இறைவனை அறிந்த குருவிடம் அவரைப்பற்றி கேட்டு உணர்ந்து கொள்ளுங்கள். இறைவனை நாமங்களை ஒருவர் ஓதி உணர்ந்து விட்டால் அவர் இறைவனின் அடியார்களின் மத்தியில் உயர்ந்து நிற்பார்.

பாடல் #302: முதல் தந்திரம் - 21. கேள்வி கேட்டமைதல் [கேள்வி ஞானம் பெற்று இறைவனை அடைதல்]

மயன்பணி கேட்பது மாநந்தி கேட்பின்
அயன்பணி கேட்பது அரன்பணி யால்
சிவன்பணி கேட்பவர் தேவரும் ஆவர்
பயன்பணி கேட்பது பற்றது வாமே.

விளக்கம்:

குருநாதராக இருந்து இறைவன் வழங்கிய சிவ ஆகமங்களை கேட்டு உணர்ந்தால் அதன் மூலம் திருமால் இறைவனின் ஆணை பெற்று காக்கும் தொழிலை புரிவதையும் பிரம்மன் இறைவனின் ஆணை பெற்று படைக்கும் தொழிலை புரிவதையும் உருத்திரன் இறைவனின் ஆணை பெற்று அழிக்கும் தொழிலை புரிவதையும் தெரிந்து கொள்ளலாம். அவ்வாறு தெரிந்து உணர்ந்தபின் இறைவனிடம் சிவபணி வேண்டும் என்று எவர் ஒருவர் கேட்டுப் பெறுகிறாரோ அவரே அடுத்து தேவர்களாக மாறி என்றும் அழியாத இறைவனின் திருவடிகளைப் பற்றிக்கொண்டு சிவபணி புரியலாம்.

குறிப்பு :

அனைத்து தேவர்களும் சிவனடியாராக இருந்து இறைவனிடம் சிவபணி கேட்டு பெற்று தேவர்களாக நின்று அருள் புரிபவர்கள் தான்.

பாடல் #303: முதல் தந்திரம் – 21. கேள்வி கேட்டமைதல் [கேள்வி ஞானம் பெற்று இறைவனை அடைதல்]

பெருமான் இவனென்று பேசி யிருக்கும்
திருமா னிடர்பின்னைத் தேவரும் ஆவர்
வருமா தவர்க்கு மகிழ்ந்தருள் செய்யும்
அருமா தவத்தெங்கள் ஆதிப் பிரானே.

விளக்கம்:

தெய்வங்களுக்கெல்லாம் மேலான தெய்வம் ஒருவன் சிவன் என்பதை அறிந்து கொள்ள தனக்குள் பேசி கேள்வி கேட்டு கேள்வி ஞானத்தின் மூலம் பெரிய தவம் புரிந்த மானிடர்கள் தேவர்களாவதற்கு மகிழ்ந்து அருள் செய்கிறார் தவக் கோலத்தையே தனது கோலமாக உடைய ஆதியிலிருந்து இருக்கும் சிவபெருமான்.

குறிப்பு :

அமைதியாக பேசாமல் அமர்ந்து இறைவன் யார் என்று தனக்குள்ளேயே கேள்வி கேட்டு இறைவன் அருளால் இறைவனை அடைவதும் பெரிய தவமே.

பாடல் #304: முதல் தந்திரம் - 21. கேள்வி கேட்டமைதல் [கேள்வி ஞானம் பெற்று இறைவனை அடைதல்]

ஈசன் அருளும் இறப்பும் பிறப்பையும்
பேசி யிருந்து பிதற்றி மகிழ்வெய்தின்
நேசமும் ஆகும் நிகழொளி யாய்நின்று
வாசமலர்க் கந்தமாய் மன்னிநின் றானே.

விளக்கம்:

இறைவன் அருளால் வரும் இறப்பும் பிறப்பும் எப்படி வருகிறது என்று தனக்குள் பேசி கேள்வி கேட்டு பிதற்றி அந்த கேள்வி ஞானத்தால் பதில் கிடைக்கும் பேரின்பத்தில் திளைத்து இருந்தால் வாசனை மிக்க மலர்களில் கலந்திருக்கும் நறுமணம் போல பேரொளியாய் திகழும் இறைவனும் நம்மோடு கலந்து நிற்பான்.

பாடல் #305: முதல் தந்திரம் – 21. கேள்வி கேட்டமைதல் [கேள்வி ஞானம் பெற்று இறைவனை அடைதல்]

விழுப்பமும் கேள்வியும் மெய்நின்ற ஞானத்
தொழுக்கமும் சிந்தை உணர்கின்ற போது
வழுக்கி விழாவிடில் வானவர் கோனும்
இழுக்கின்றி எண்ணிலி காலம தாமே.

விளக்கம்:

சிவபெருமானின் சிறப்பைப் படித்தும் கேட்டும் அறிந்து கொள்வோம். அதனால் கிடைக்கும் ஞானத்தினால் ஒழுக்கம் பெறுவோம். ஒழுக்கத்தினால் நம்மிடம் உண்டாகும் மாற்றத்தை சிந்தையில் உணர்வோம். உணர்ந்து ஒழுக்கத்தில் இருந்து வழுக்கி விடாமல் தொடர்ந்து நிலையாக இருந்தோமானால் வானத்திலிருக்கும் தேவர்களுக்கெல்லாம் அரசனான இறைவனும் அவர்களுக்கு ஒரு குறையும் இல்லாது எண்ணிலடங்காத காலம் அவர்களுடனே இருந்து பேரின்பத்தை அருளுவான்.

பாடல் #306: முதல் தந்திரம் - 21. கேள்வி கேட்டமைதல் [கேள்வி ஞானத்தின் மூலம் இறைவனை அடைதல்]

சிறியார் மணற்சோற்றில் தேக்கிடு மாபோல்
செறிவால் அனுபோகம் சித்திக்கும் என்னில்
குறியாத தொன்றைக் குறியாதார் தம்மை
அறியா திருந்தார் அவரவர் அன்றே.

விளக்கம்:

சிறு பிள்ளைகள் மணலில் வீடு கட்டி களிமண் சோறு சமைத்து அதை உண்மையான சோறுபோல பாவித்து சாப்பிட்டு இன்பப்படுவது போல உண்மையில்லாத உலக ஆசைகளை அனுபவித்து இன்பம் அடைந்துவிட்டு இறையருள் கிடைத்துவிடும் என்று நினைப்பது பொய்யானதாகவே இருக்கும். இறைவன் இப்படிப்பட்டவர் அவரை இப்படி அணுகலாம் என்று குறிப்பால் உணர்த்திவிட முடியாத இறைவன் ஒருவர் இருக்கிறார். அவரை அறிந்து கொள்ளவேண்டும் என்ற கேள்விஞானம் கூட இல்லாமல் வாழ்க்கையை உலக இன்பங்களின் வழி நடப்பவர்கள் எப்போதுமே இறைவனையும் அறியமாட்டார்கள் தம்மையும் அறியமாட்டார்கள்.

பாடல் #307: முதல் தந்திரம் – 21. கேள்வி கேட்டமைதல் [கேள்வி ஞானம் பெற்று இறைவனை அடைதல்]

உறுதுணை யாவ துயிரும் உடம்பும்
உறுதுணை யாவ துலகுறு கேள்வி
செறிதுணை யாவ சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கில் பிறப்பில்லை தானே.

விளக்கம்:

உலக வாழ்கை வாழ்ந்து இறைவனை அடைய உற்ற துணையாக இருப்பது உயிரும் உடலும் ஆகும். அந்த உயிர் சிவசிந்தனை பெறுவதற்கு உற்ற துணையாக இருப்பது கல்வியும் கேள்வியும் ஆகும். அந்த கேள்வி ஞானத்தால் சிவனது திருவடியை சிந்தையில் வைத்திருப்பது இறைவனை அடைய தக்க துணையாகும். அத்தகைய மிகப்பெரிய துணையை கேட்டுப் பெற்றால் பிறவியில்லை.

பாடல் #308: முதல் தந்திரம் - 21. கேள்வி கேட்டமைதல் [கேள்வி ஞானம் பெற்று இறைவனை அடைதல்]

புகழநின் றார்க்கும் புராணன்எம் ஈசன்
இகழநின் றார்க்கும் இடும்பைக் கிடமா
மகிழநின் றாதியை ஓதி உணராக்
கழியநின் றார்க்கொரு கற்பசு வாமே.

விளக்கம்:

இறைவனை கேள்வி ஞானத்தின் மூலம் உணர்ந்து போற்றிப் புகழ்ந்து இருக்கின்ற அடியவர்களுக்கு எப்போதும் துணையாக இருப்பார் ஆதிகாலத்திலிருந்து இருக்கும் ஈசன். இறைவனை இகழ்ந்து பேசி இருக்கின்ற மற்றவர்களுக்கு மறக்கருணையினால் துன்பத்தைக் கொடுத்து வினை தீர்ப்பான். ஆதியான இறைவனின் பெருமைகளை உள்ளம் மகிழ்ந்து ஓதி உணராமல் இருப்பவர்களுக்கு இறைவன் கல்லால் ஆன பசு போன்றவன். கல்லாலான பசு எப்படி பாலைத் தராதோ அதுபோல அவர்களுக்கு இறைவனது அருளும் எப்போதும் கிடைக்காது.

பாடல் #309: முதல் தந்திரம் - 21. கேள்வி கேட்டமைதல்
[கேள்வி ஞானம் பெற்று இறைவனை அடைதல்]

வைத்துஉணர்ந் தான்மனத் தோடும் வாய்பேசி
ஒத்துஉணர்ந் தானுரு ஒன்றொடொன் றொவ்வா
தச்சுழன் றாணி கலங்கினும் ஆதியை
நச்சுஉணர்ந் தார்க்கே நணுகலு மாமே.

விளக்கம் :

இறைவனை உள்ளத்தில் வைத்து மனதோடு ஒன்றி தான் வேறு இல்லை இறைவன் வேறு இல்லை என்று உணர்ந்தவர்களும் தன் வாயிலிருந்து பேசும் வார்த்தைகள் அனைத்தும் இறைவனின் வார்த்தையாக உணர்ந்தவர்களுக்கும் அசையும் பொருள் அசையாபொருள் என உருவங்கள் பலவாக இருந்தாலும் அனைத்து உருவங்களிலும் இருப்பவன் இறைவன் ஒருவனே என்று உணர்ந்தவர்களும் உடம்பு என்னும் அச்சிலிருந்து உயிர் என்னும் ஆணி கழன்று விழும் போது ஆதியான சிவபெருமானை விரும்பி உணர்ந்தவர்களுக்கே அவனை அணுகி அடைய முடியும்.



பாடல் #310: முதல் தந்திரம் - 22. கல்லாமை

[உலக கல்வி கற்று உண்மை ஞானம் இல்லாமை]

கல்லா தவரும் கருத்தறி காட்சியை
வல்லா ரெனிலருட் கண்ணான் மதித்துளோர்
கல்லாதார் உண்மைபற் றாநிற்பர் கற்றோரும்
கல்லாதவரும் இன்பம் காணுகி லாரே.

விளக்கம்:

உலக கல்வி கற்காமல் தனது கருத்தில் உள்ளத்துக்குள்ளே இறைவனை ஒருவர் இருக்கிறார் என்று உணர்ந்து அவரை அடையும் தகுதி பெற்றவர்களுக்கு இறைவனது அருளே கண்ணாக இருந்து அவர்களுக்கு ஞானத்தைக் கொடுக்கும். இவர்கள் எப்போதும் உலகைப்பற்றி இருக்காமல் இறைவனைப்பற்றி இருந்து பேரின்பத்தை காண்பார்கள். உலகக் கல்வியை மட்டுமே கற்றறிந்து உண்மை ஞானத்தை கற்றுக்கொள்ளாத உயிர்கள் இறைவனின் பேரின்பத்தை எப்போதும் காண மாட்டார்கள்.

பாடல் #311: முதல் தந்திரம் – 22. கல்லாமை
[கல்வி கற்று உண்மை ஞானம் இல்லாமை]

வல்லார்கள் என்றும் வழியொன்றி வாழ்கின்றார்
அல்லா தவர்கள் அறிவு பலவென்பார்
எல்லா இடத்தும் உளன்எங்கள் தம்இறை
கல்லா தவர்கள் கலப்புஅறி யாரே.

விளக்கம்:

உண்மையான ஞானத்தை அடைந்து இறைவனை உள்ளத்துள் உணரக்கூடிய உயிர்கள் எப்போதும் அவனை வணங்கிப் பின்பற்றி நல்வழியிலேயே வாழ்கின்றனர். உண்மை ஞானம் பெறாதவர்கள் உலக ஞானம் நிறைய இருப்பதாகச் சொல்லிகொண்டு இருப்பார்கள். எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்திருப்பவன் எம்பெருமான் சதாசிவமூர்த்தி. அவனைப் பற்றிய உண்மை ஞானத்தை கற்று அறியாதவர்கள் தமக்குள்ளும் அவன் இரண்டறக் கலந்திருப்பதை அறிய மாட்டார்கள்.

பாடல் #312: முதல் தந்திரம் - 22. கல்லாமை
[கல்வி கற்று உண்மை ஞானம் இல்லாமை]

நில்லா நிலையை நிலையாக நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்காள்
எல்லா உயிர்க்கும் இறைவனே யாயினும்
கல்லாதவர் நெஞ்சத்துக் காணஒண் ணாதே.

விளக்கம்:

எப்போதும் மாறிக்கொண்டே இருக்கும் நிலையில்லாத வாழ்க்கையையும் எதிலும் நிலையாக இருக்காத மனமும் நிரந்தரமாக நிலைத்து இருக்காத உடம்பையும் எப்போதும் நிலையாக இருப்பவை என்று நினைத்துக்கொண்டு இருக்கும் உயிர்களே ஈசன் எல்லா உயிர்களுக்கும் இறைவன் தான் ஆனால் உண்மை ஞானத்தை கற்றுக்கொள்ளாத உயிர்களின் நெஞ்சத்தில் அவன் எப்போதுமே காட்சியாக காணக் கிடைக்க மாட்டான்.

பாடல் #313: முதல் தந்திரம் - 22. கல்லாமை
[கல்வி கற்று உண்மை ஞானம் இல்லாமை]

கில்லேன் வினைத்துயர் ஆக்கு மயலானேன்
கல்லேன் அரன்நெறி அறியா தகையின்
வல்லேன் வழங்கும் பொருளே மனத்தினுள்
கல்லேன் கழியநின்று ஆடவல் லேனே.

விளக்கம்:

சிவநெறியைக் கல்லாமல் இறைவுணர்வை அறிய ஆற்றல் இல்லாத உயிர்கள் மாயையில் மயங்கி வினைப் பயனால் கிடக்கும் துன்பங்களை மேலும் மேலும் உருவாக்கி அனுபவித்துக் கொண்டே இருக்கின்றார்கள். உலகத்தில் இருக்கும் அனைத்து பொருள்களையும் கொடுத்து அப்பொருளாகவே இருக்கும் இறைவன் தனக்குள்ளும் இருக்கின்றான் என்று தெரியாமல் நாட்களை வீணாகக் கழித்துக்கொண்டு உலக இன்பங்களிலேயே இருந்து ஆடிக்கொண்டிருக்கின்றார்கள்.

பாடல் #314: முதல் தந்திரம் - 22. கல்லாமை
[கல்வி கற்று உண்மை ஞானம் இல்லாமை]

நில்லாது சீவன் நிலையன்றுஎன் றெண்ணி
வல்லார் அறத்தும் தவத்துளும் ஆயினார்
கல்லா மனித்தர் கயவர் உலகினில்
பொல்லாத வினைத்துயர் போகஞ்செய் வாரே.

விளக்கம்:

உண்மையான ஞானத்தை கற்றவர்கள் உயிரோடு கூடிய உடல் என்றும் நிலையானது இல்லை என்று உணர்ந்து தம்மால் முடிந்த அளவு அற வழியிலும் தவ வழியிலும் சென்று இறைவனை அடைய முயற்சிக்கின்றனர். உண்மையான ஞானத்தை கற்றுக்கொள்ளாத உயிரோடு கூடிய உடல் உலக வாழ்க்கையையே வாழ்ந்துகொண்டு கொடுமையான வினையின் பயனால் வரும் துன்பங்களையே அனுபவித்துக்கொண்டு வாழ்க்கையை வீணாக்குகின்றனர்.



பாடல் #315: முதல் தந்திரம் - 22. கல்லாமை
[கல்வி கற்று உண்மை ஞானம் இல்லாமை]

விண்ணினின் உள்ளே விளைந்த விளங்கனி
கண்ணினின் உள்ளே கலந்தங் கிருந்தது
மண்ணினின் உள்ளே மதித்து மதித்துநின்
றெண்ணிலி எழுதி இளைத்துவிட் டாரே.

விளக்கம்:

வானவெளியில் உள்ளே இருந்து உயிர்களுக்கு அருள் செய்யும் இறைவன் அவர்களின் கண்களுக்குள்ளும் இருந்து காட்சியைக் காட்டுபவனாகவும் கலந்து அருள் செய்கின்றான். அந்த இறைவனை வழிபட்டு பேரின்பத்தை அனுபவிக்காமல் உலக வாழ்க்கையையே பெரிதானது என்று மதித்துக்கொண்டு இறைவனைப்பற்றி வீண் விளக்கங்கள் எழுதி வீண் பொழுதை கழிக்கின்றனர்.

பாடல் #316: முதல் தந்திரம் - 22. கல்லாமை
[கல்வி கற்று உண்மை ஞானம் இல்லாமை]

கணக்கறிந் தார்க்கன்றிக் காணஒண் ணாது
கணக்கறிந் தார்க்கன்றிக் கைகூடாக் காட்சி
கணக்கறிந் துண்மையைக் கண்டண்ட நிற்கும்
கணக்கறிந் தார்கல்வி கற்றறிந் தாரே.

விளக்கம்:

இறைவனை அடையும் வழிகளை நன்றாக அறிந்து அதனை செயல் படுத்துபவர்களைத் தவிர வேறு யாருக்கும் இறைவனது திருக்காட்சியை காணமுடியாது உணரமுடியாது. இறைவனை அடையும் வழிகளை நன்றாக அறிந்து அதனை செயல் படுத்தி இறைவனது திருக்காட்சியை பார்த்து உணர்ந்தவர்களே உண்மை ஞானத்தைக் கற்று அறிந்தவர்கள் ஆவார்கள்.

குறிப்பு :

கணக்கு அறிந்தவர்கள் என்றால் கணக்கை இப்படி போட்டால் பதில் கிடைத்து விடும் என்று எண்ணுபவர்கள் மட்டும் இல்லை. அந்த கணக்கை எழுதி சரியான பதிலை தருபவர்களே கணக்கை அறிந்தவர்கள் ஆவார்கள். அது போல இறைவனை அடையும் வழிகளை தெரிந்தவர்கள் மட்டும் ஞானம் அடைந்தவர்கள் இல்லை. அந்த வழிகளை பயன் படுத்தி இறைவனை கண்டு உணர்ந்தவர்களே ஞானம் அடைந்தவர்கள் ஆவார்கள்.

பாடல் #317: முதல் தந்திரம் – 22. கல்லாமை
[கல்வி கற்று உண்மை ஞானம் இல்லாமை]

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடனன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்துஅறி யாரே.

விளக்கம்:

உண்மையான ஞானத்தைக் கற்று அறியாத மூடர்களை சென்று பார்ப்பது நமக்கு நல்லது இல்லை. அவர்கள் சொல்லுவதைக் கேட்டே ஆகவேண்டும் என்கிற கடமையும் நமக்கு இல்லை. உண்மையான ஞானத்தை கற்று அறியாத மூடர்களுக்கு தம்மைப் போலவே கற்று அறியாத மற்ற மூடர்களை நல்லவர்கள் என்று சொல்வார்கள். கல்லாத மூடர்க்கு எந்த கருத்தையும் அறிந்து கொள்ளும் திறன் கிடையாது.

பாடல் #318: முதல் தந்திரம் - 22. கல்லாமை
[கல்வி கற்று உண்மை ஞானம் இல்லாமை]

கற்றும் சிவஞானம் இல்லாக் கலதிகள்
சுற்றமும் வீடார் திரிசறார் மூடர்கள்
மற்றும் பலதிசை காணார் மதியிலோர்
கற்றன்பில் நிற்போர் கணக்கறிந் தார்களே.

விளக்கம்:

அற நூல்களையும் வேதங்களையும் கற்று சிவஞானத்தை அடைய வேண்டும் என்ற எண்ணம் இல்லாத தீயகுணமுடையவர்கள் தமது ஐம்புலன்கள் வழியாக உள்ள ஆசைகளையும் உலக வாழ்க்கையையும் பற்றிக்கொண்டு ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களால் வரும் மாசையும் அகற்றாத மூடர்கள் பல திசைகளிலும் உள்ள கற்றறிந்து உண்மை ஞானம் அடைந்தவர்களை உணரும் அறிவில்லாதவர்கள் இறைவனை அடையும் வழி தெரியாதவர்களே. அற நூல்களையும் வேதங்களையும் கற்று அதன் வழியில் இறைவனின் மேல் அன்போடு இருப்பவர்களே இறைவனை அடையும் வழி தெரிந்தவர்கள்.

பாடல் #319: முதல் தந்திரம் - 22. கல்லாமை
[கல்வி கற்று உண்மை ஞானம் இல்லாமை]

ஆதிப் பிரான் அமரர்க்கும் பரஞ்சுடர்
சோதி அடியார் தொடரும் பெருந்தெய்வம்
ஓதி உணரவல் லோமென்பர் உள்நின்ற
சோதி நடத்துந் தொடர்வுஅறி யாரே.

விளக்கம்:

பிறப்பு இறப்பு இல்லாத தேவர்களுக்கு இறைவனாகவும் அண்டங்கள் முழுவதும் பரவி ஜோதியாக ஆதியிலிருந்தே இருக்கும் இறைவனை உணர்ந்த அடியவர்கள் அவன் கூறிய வழியிலையே தொடர்ந்து சென்று இறுதியில் அடையும் பெருந்தெய்வமாக இருக்கும் இறைவனை உலகக் கல்வியை படித்து உணர்ந்து விடமுடியும் என்று கூறுபவர்கள் தமக்குள் ஜோதி வடிவாக நின்றுகொண்டு தம்மை வழி நடத்துபவனும் உயிரை உடலோடு தொடர்ந்து வைத்திருப்பவனும் அவனே எனும் உண்மை அறியாதவர்கள் ஆவார்கள்.

பாடல் #320: முதல் தந்திரம் - 23. நடுவுநிலைமை
[விருப்பு வெறுப்பு இன்றி ஞானத்தை மட்டுமே பற்றி இருப்பது]

நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரும் ஆவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே.

விளக்கம்:

தனக்கோ உற்றார் உறவினர் மற்ற உயிர்கள் வாழும் உலகத்திற்கோ என்ன நடந்தாலும் இன்பம் துன்பம் என எது வந்தாலும் எல்லாம் இறை செயல் என்று எதனாலும் பாதிக்காத விருப்பு வெறுப்பு இல்லாமல் தான் செல்லும் இறை வழியிலிருந்து சிறிதும் மாறாமல் நடுநிலையான மனநிலையில் இருப்பவர்களைத் தவிர மற்றவர்களுக்கு உண்மையான ஞானம் கிடைப்பதில்லை. அப்படி இருப்பவர்களுக்கு நரகமும் இல்லை. அப்படி இருக்கக்கூடியவர்களே நல்ல தேவர்களாகவும் இருப்பார்கள். அப்படிப்பட்டவர்கள் நின்ற நெறியிலேயே யானும் நிற்கின்றேன்.

பாடல் #321: முதல் தந்திரம் - 23. நடுவுநிலைமை
[விருப்பு வெறுப்பு இன்றி ஞானத்தை மட்டுமே பற்றி இருப்பது]

நடுவுநின் றான்நல்ல கார்முகில் வண்ணன்
நடுவுநின் றான்நல்ல நான்மறை ஓதி
நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவோர்
நடுவுநின் றார்நல்ல நம்பனும் ஆமே.

விளக்கம்:

பாடல் #320ல் உள்ளபடி நடுநிலையுடன் இருந்து ஞானம் அடைந்தவர்களே பின்பு உலகத்தைக் காக்கும் திருமால் உயிர்களைப் படைக்கும் பிரம்மனாகவும் மாறுவார்கள். சிலர் சிறந்த ஞானியாகி சிவமாகவே மாறிவிடுவார்கள்.

பாடல் #322: முதல் தந்திரம் – 23. நடுவுநிலைமை
[விருப்பு வெறுப்பு இன்றி ஞானத்தை மட்டுமே பற்றி இருப்பது]

நடுவுநின் றார்சிலர் ஞானிக ளாவர்
நடுவுநின் றார்சிலர் தேவரு மாவர்
நடுவுநின் றார்சிலர் நம்பனு மாவர்
நடுவுநின் றாரொடு நானும்நின் றேனே.

விளக்கம்:

பாடல் #320ல் உள்ளபடி நடுநிலையுடன் இருப்பவர்களில் சிலர் சிறந்த ஞானிகளாகி தேவர்களாகி, சிவமாகவே ஆகின்றார்கள். யாமும் நடுநிலையுடன் இருப்பவர்களுடன் கலந்து இருக்கின்றேன்.

பாடல் #323: முதல் தந்திரம் – 23. நடுவுநிலைமை
[விருப்பு வெறுப்பு இன்றி ஞானத்தை மட்டுமே பற்றி இருப்பது]

தோன்றிய எல்லாம் துடைப்பன் அவனன்றி
ஏன்றுநின் றாரென்றும் ஈசன் இணையடி
மூன்றுநின் றார்முதல் வன்திரு நாமத்தை
நான்றுநின் றார்நடுவு ஆகிநின் றாரே.

விளக்கம்:

அண்டசராசரங்கள் அனைத்திலும் தோன்றிய அனைத்தையும் அழிப்பவன் சதாசிவமூர்த்தி ஒருவனே அவன் இல்லாமல் வேறு எதுவும் இல்லை என்பதை உணர்ந்து ஈசன் திருவடிகளை பற்றி மும்மூர்த்திகளுக்கும் முதன்மையானவனாகிய சதாசிவமூர்த்தியின் திருநாமமாகிய நமசிவாய மந்திரத்தை சிந்தித்துக் கொண்டு இருப்பவர்கள் நடுநிலையுடன் இருக்கும் ஞானியாகி விடுவார்கள்.



பாடல் #324: முதல் தந்திரம் - 24. கள்ளுண்ணாமை [போதையைத் தரக்கூடிய எதையும் சாப்பிடாமல் இருப்பது]

கழுநீர்ப் பசுப்பெறிற் பின் கயந்தேரா
கழுநீர் விடாய்த்துத்தங் காயம் சுருக்கும்
முழுநீர்க் கள்ளுண்போர் முறைமை அகன்றோர்
செழுநீர்ச் சிவன்றன் ஆனந்தத் தேறலே.

விளக்கம்:

அரிசி கழுவிய நீரை பசுவுக்குக் கொடுத்தால் அதைக் குடித்துப் பழகிய பசு அதற்குப் பிறகு குளங்களைத் தேடிச் சென்று நல்ல நீரைப் பருகாது. தாகம் எடுத்தாலும் எளிதாக கிடைக்கும் நல்லநீரை குடிக்காமல் அரிசி கழுவிய கழுநீருக்காக காத்திருந்து அந்தப் பசுக்கள் தங்களது உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்ளும். அதுபோலவே போதை தரக்கூடிய மதுவைக் குடித்துப் பழகிய மனிதர்கள் ஒழுக்கத்திலிருந்து விலகி எளிதாக கிடைக்கும் செழுமையான நீரான சிவானந்தத் தேனான அமிர்தத்தைப் பருகாமல் போதைதரும் மதுவை பருகி தங்களின் வாழ்க்கையை வீணாகக் கழிக்கின்றனர்.

பாடல் #325: முதல் தந்திரம் - 24. கள்ளுண்ணாமை [போதையைத் தரக்கூடிய எதையும் சாப்பிடாமல் இருப்பது]

சித்தம் உருக்கிச் சிவமாம் சமாதியில்
ஒத்த சிவானந்தம் ஓவாத தேறலைச்
சுத்த மதுவுண்ணச் சுவானந்தம் விட்டு
நித்தல் இருத்தல் கிடத்தல்கீழ்மைக் காலே.

விளக்கம்:

உயிர்கள் வெளியுலக எண்ணங்களை முழுமையாக நீக்கிவிட்டு இறைவனின் மேல் சிந்தனையை வைத்து யோகத்தில் சிவமாக இருக்கும் சமாதி நிலையில் குண்டலினி சக்தியை சுழுமுனை நாடி வழியே மேலேற்றி சகஸ்ரரதளத்தில் சேர்த்தால் அங்கே ஊறும் மிகவும் தூய்மையான அமிர்தத்தைப் பருகி பேரானந்தத்திலேயே இருப்பதை விட்டுவிட்டு புத்தியை மயக்கும் உலக மதுவை பருகி அந்த மயக்கத்தில் இருப்பதும் சுய நினைவின்றி மயங்கிக் கிடப்பதும் உயிர்களை இழிவு நிலைக்கு அழைத்துச் செல்லும்.

பாடல் #326: முதல் தந்திரம் – 24. கள்ளுண்ணாமை [போதையைத் தரக்கூடிய எதையும் சாப்பிடாமல் இருப்பது]

காமமும் கள்ளும் கலதிகட் கேயாகும்
மாமல முஞ்சம யத்துள் மயலுறும்
போமதி யாகும் புனிதன் இணையடி
ஓமய ஆனந்தத் தேறல் உணர்வுண்டே.

விளக்கம்:

காமமும் போதை தரும் மதுவும் கீழ்த்தரமான மனிதர்களுக்கே உரியது. மதுவினால் மிகப்பெரிய அழுக்காகிய ஆணவம் அதிகரிக்கும். ஆணவம் மிகுந்தால் நம்மையே உணர முடியாத அளவுக்கு அறிவு எல்லா நேரத்திலும் மயங்கி கிடக்கும். நாளடைவில் அறிவு அழிந்தே போகும். எப்போதும் பேரானந்த உணர்வைத் தரும் இறைவனின் திருவடிகள் போலவே பேரானந்தத்தைத் தரும் அமிர்தத்தைப் பெற்று அருந்துவது மேன்மையான மனிதர்கள் செய்யும் செயலாகும்.

பாடல் #327: முதல் தந்திரம் - 24. கள்ளுண்ணாமை [போதையைத் தரக்கூடிய எதையும் சாப்பிடாமல் இருப்பது]

வாமத்தோர் தாமும் மதுவுண்டு மாள்பவர்
காமத்தோர் காமக்கள் ளுண்டே மயங்குவர்
ஓமத்தோர் உள்ளொளிக் குள்ளே உணர்வர்கள்
நாமத்தோர் அண்ணலை நணுகுவர் தாமே.

விளக்கம்:

தீவினையைச் செய்பவர்கள் தமக்கும் தீயதாகிய மதுவைக் குடித்து குடித்து அழிந்து போவார்கள். காம எண்ணம் கொண்டவர்கள் அந்தக் காமத்தையே மதுவாகக் குடித்து அதிலேயே மயங்கிக் கிடப்பார்கள். அப்படி இல்லாமல் தவ வழியில் ஹோமம் வளர்த்து இறைவனை வழிபடுபவர்கள் தமக்குள்ளேயே பேரொளியாக இறைவனின் பேரானந்தத்தை உணர்வார்கள். இறைவனது திருநாமத்தை மட்டுமே எப்போதும் சிந்தித்து ஓதிக்கொண்டே இருப்பவர்கள் இறைவனோடு பேரானந்தத்தில் கலந்துவிடுவார்கள்.

பாடல் #328: முதல் தந்திரம் – 24. கள்ளுண்ணாமை (போதையைத் தரக்கூடிய எதையும் சாப்பிடாமல் இருப்பது)

உள்ளுண்மை ஓரார் உணரார் பசுபாசம்
வள்ளன்மை நாதன் அருளினின் வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்
கள்ளுண்ணும் மாந்தர் கருத்துஅறி யாரே.

விளக்கம்:

புத்தியை மயக்கும் மதுவை அருந்தி அதில் மயங்கிக் கிடப்பவர்கள் இறைவனை அடையும் வழிகளைச் சொல்லும் வேதங்களின் கருத்தை அறிய மாட்டார்கள். பதி, பசு, பாசம் என்பவற்றில் உள்ள உட்பொருளை அவர்கள் உணர்வதில்லை. உயிர்களுக்கு பெருங்கருணையோடு அருளை வாரி வழங்கும் வள்ளலாகிய இறைவனின் அருள் பெற்று வாழும் பேரானந்த வாழ்க்கையை விரும்ப மாட்டார்கள். அறிவிற்கு தெளிவைக் கொடுக்கும் உண்மையான ஞானத்தைத் தரும் சிவயோகம் செய்பவர்களுடன் சேரவும் மாட்டார்கள் தானும் சிவயோகம் செய்ய மாட்டார்கள். மதுவை அருந்துபவர்கள் உண்மை கருத்துக்கள் எதையும் அறிந்து கொள்ளும் தகுதி இல்லாதவர்கள் ஆகின்றனர்.

குறிப்பு : பேரொளியாக இருக்கும் பதி என்ற இறைவனிடம் இருந்து வந்த ஆத்மா தான் பசு இந்த பசு மீண்டும் பதியாகிய இறைவனிடம் சென்று சேர்ந்து பிறவி இல்லா முக்தி அடைய வேண்டும். ஆனால் பதியிடம் இந்த பசு சென்று சேரவிடாமல் தடுப்பது பாசம் எண்ணும் கயிறு. சிவயோகம் செய்து உண்மை ஞானத்தை அடைந்தால் பாசம் என்னும் கயிற்றை அறுத்து பதியிடம் சென்று சேர்ந்து விடலாம். இந்த உண்மை ஞானத்தை அறிந்து கொள்ளும் அறிவை மது அழித்துவிடும்.

பாடல் #329: முதல் தந்திரம் - 24. கள்ளுண்ணாமை
[போதையைத் தரக்கூடிய எதையும் சாப்பிடாமல் இருப்பது]

மயக்குஞ் சமய மலமன்னு மூடர்
மயக்கு மதுவுண்ணு மாமூடர் தேரார்
மயக்குறு மாயையின் மாமாயை வீடு
மயக்கில் தெளியின் மயக்குறும் அன்றே.

விளக்கம்:

மனதை மயக்கும் மதுவை சமயத்தின் பெயரால் அருந்தி சமயத்தை அழுக்காக்கின்றனர் மூடர்கள். மயக்கம் தரும் மதுவை அருந்தும் மூடர்கள் சமயத்தை ஆராய்ந்து அறியும் திறன் இல்லாதவர்களாக மாபெரும் மூடர்களாகின்றனர். உலகப்பற்று என்னும் பெரும் மயக்கத்திலுருந்து விடுபட்டு இறைவனை அடைய வேண்டும் என்ற தெளிவு இருப்பவர்கள் கூட சமயவழியில் சென்று மது அருந்தி வழிபட்டால் உலக மயக்கம் தெளிந்து இறைவனை அடையலாம் என்று எண்ணி மது அருந்துபவர்களை மது அன்றே மயக்கமடையச்செய்யும்.

குறிப்பு : மது கஞ்சா போன்ற போதை தரும் பொருட்களை இறைவனை அடைய வேண்டும் என்று எண்ணி சமயத்தின் பெயரால் அருந்தினாலும் அந்த போதை மயக்கம் மேலும் அவர்களை மூடர்களாக்கி மயக்கத்திலேயே வைத்திருக்கும்.

பாடல் #330: முதல் தந்திரம் - 24. கள்ளுண்ணாமை
[போதையைத் தரக்கூடிய எதையும் சாப்பிடாமல் இருப்பது]

மயக்கும் தியங்குங்கள் வாய்மை அழிக்கும்
இயங்கும் மடவார்தம் இன்பமே எய்தி
முயங்கும் நயங்கொண்ட ஞானத்து முந்தி
இயங்கும் இடையறா ஆனந்தம் எய்தே.

விளக்கம்:

மதுவானது குடிப்பவரின் புத்தியில் தடுமாற்றத்தையும் மனச்சஞ்சலத்தையும் ஏற்படுத்தும். உண்மை பேசுவதை தடுத்து பொய் பேச வைக்கும். மது அருந்துபவர்கள் இன்பத்துக்காக பொதுமகளிரை நாடி அவர்களிடம் மயங்கி இருப்பார்கள். இவர்களுக்கு நல்லறிவைக் கொடுக்கும் உண்மை ஞானத்தினால் கிடைக்கும் பேரானந்தம் ஒரு போதும் கிடைக்காது.

பாடல் #331: முதல் தந்திரம் - 24. கள்ளுண்ணாமை
[போதையைத் தரக்கூடிய எதையும் சாப்பிடாமல் இருப்பது]

இராப்பகல் அற்ற இடத்தே இருந்து
பராக்கற ஆனந்தத் தேறல் பருகார்
இராப்பகல் அற்ற இறையடி இன்பத்
திராப்பகல் மாயை இரண்டிடத் தேனே.

விளக்கம்:

இரவு பகல் என்று தெரியாமல் எந்த சிந்தனையும் எண்ணங்கள் அற்று உடலாலும் உள்ளத்தாலும் மற்றும் உலக பந்தங்கள் என்று எதனாலும் பாதிக்காமல் தன்னை மறந்த நிலையில் இருந்தால் தனக்குள் உண்டாகும் பேரானந்த சிவானந்ததேனை உலகத்தார் அருந்தாலாம். ஆனால் உயிர்கள் மதுவை குடித்து வீணாக அழிகின்றனர். எதனாலும் பாதிக்காத இறைவனின் திருவடிகளைப் பற்றினால் இறைவனே கொடுக்கும் சுத்த மாயையும், பந்த, பாச, ஆசைகளினால் வரும் அசுத்த மாயையையும் அறுந்து தனக்குள் உண்டாகும் பேரானந்த சிவானந்ததேனை அருந்தலாம்.



பாடல் #332: முதல் தந்திரம் – 24. கள்ளுண்ணாமை [போதையைத் தரக்கூடிய எதையும் சாப்பிடாமல் இருப்பது]

சத்தியை வேண்டிச் சமயத்தோர் கள்ளுண்பர்
சத்தி அழிந்தது தம்மை மறத்தலால்
சத்தி சிவஞானம் தன்னில் தலைப்பட்டுச்
சத்திய ஞானவா னந்தத்திற் சார்தலே.

விளக்கம்:

தேவியை வணங்குபவர்களில் சிலர் அவள் அருளைப்பெற்று மந்திர தந்திரசக்தி அடைய வேண்டும் என்று மதுவைப்படைத்து பின்பு அருந்துகின்றனர். மது அருந்துவோர் தம்மை மறப்பார்கள். தம்மை மறந்ததால் அவர்களுடைய ஆற்றல் அழியும். அருள் சக்தி என்பது இறைவன் மேல் எண்ணத்தை வைத்து சிவஞானத்தை அறிந்து அதில் நிலைபெற்று உண்மை ஞானத்தை அடைவதே ஆகும்.

பாடல் #333: முதல் தந்திரம் - 24. கள்ளுண்ணாமை (போதையைத் தரக்கூடிய எதையும் சாப்பிடாமல் இருப்பது)

சத்தன் அருள்தரின் சத்தி அருளுண்டாம்
சத்தி அருள்தரின் சத்தன் அருளுண்டாம்
சத்தி சிவமாம் இரண்டுந்தன் னுள்வைக்கச்
சத்தியம் எண்சித்தித் தன்மையு மாமே.

விளக்கம்:

சிவம் அருள் பெற்றால் அதில் சக்தியின் அருளும் இருக்கும். அதுபோலவே சக்தி அருள் பெற்றால் அதில் சிவத்தின் அருளும் இருக்கும். இரண்டும் கலந்து தமக்குள்ளேயே இருக்கிறது என்பதை உணரந்து அடைந்தால் உண்மையான சக்தியின் தன்மையாகிய எட்டுவித சித்திகளும் (அட்டமா சித்திகள்) கிடைக்கும்.

பாடல் #334: முதல் தந்திரம் – 24. கள்ளுண்ணாமை [போதையைத் தரக்கூடிய எதையும் சாப்பிடாமல் இருப்பது]

தத்துவம் நீக்கி மருள்நீக்கித் தானாகிப்
பொய்த்தவம் நீக்கிமெய்ப் போகத்துட் போகியே
மெய்த்த சகமுண்டு விட்டுப் பரானந்தச்
சித்திய தாக்கும் சிவானந்தத் தேறலே.

விளக்கம்:

பாடல் #331 ல் உள்ளபடி சிவானந்ததேனை அருந்தினால் உயிர்கள் உடம்பில் வாழ இறைவனால் கொடுக்கப்பட்ட 96 தத்துவங்கள் நீங்கும். அவை அனைத்தும் தன்னுடையது என்று எண்ணும் மாயைகள் நீங்கும். உலக இன்பங்களைப் பெற எண்ணி பொய்யான தவங்கள் செய்ய வேண்டும் என்ற எண்ணம் நீங்கும். இந்த உலகைப்பற்றிய நினைப்பொழிந்து தமக்குள் சிவபோகமாகிய என்றும் அழியாத உண்மை வீட்டில் பேரானந்த மயக்கத்துள் இருக்கலாம்.

பாடல் #335: முதல் தந்திரம் - 24. கள்ளுண்ணாமை
[போதையைத் தரக்கூடிய எதையும் சாப்பிடாமல் இருப்பது]

யோகிகள் கால்கட்டி ஒண்மதி ஆனந்தப்
போத அமுதைப் பொசித்தவர் எண்சித்தி
மோகியர் கள்ளுண்டு மூடராய் மோகமுற்
றாகும் மதத்தால் அறிவுஅழிந் தாரே.

விளக்கம்:

இறைவனை அடைய வேண்டும் என்று சிவ சிந்தனையில் இருக்கும் சிவயோகிகள் பிராணாயாம முறையில் மூச்சுக்காற்றை தன் வசப்படுத்தி அதனால் கிடைக்கும் குண்டலினி சக்தியின் மூலம் அமிர்தத்தை பருகி எட்டுவித சித்திகளையும் பெற்று பேரானந்தத்தில் இருப்பார்கள். அப்படி இல்லாமல் உலக இன்பங்களில் மோகம் கொண்டவர்கள் மதுவைக் குடித்து மூடர்களாகி மதம் பிடித்த யானை போல் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் கோபம் கொண்டு அறிவு அழிந்து ஒரு நாள் இறந்து போகின்றனர்.

பாடல் #336: முதல் தந்திரம் – 24. கள்ளுண்ணாமை [போதையைத் தரக்கூடிய எதையும் சாப்பிடாமல் இருப்பது]

உண்ணீர் அமுதம் உறுமூ றலைத்திறந்
தெண்ணீர் குரவன் இணையடித் தாமரை
நண்ணீர் சமாதியி னாடிநீ ராலங்
கண்ணா றொடேசென்று கால்வழி காணுமே.

விளக்கம்:

குருவின் ஈடுஇணையில்லாத தாமரை மலர் போன்ற திருவடிகளை எப்போதும் தியானத்தில் எண்ணி குண்டலினியை எழுப்பி மூச்சுக்காற்றின் மூலம் ஆறு ஆதார சக்கரங்களுக்கும் எடுத்துச் சென்று ஏழாவது சக்கரமான சகஸ்ரரதளத்தில் வீற்றிருக்கும் இறைவனோடு சேர்த்து பேரின்பத்தைத் தரும் அமிர்தம் ஊறும் இடத்தைத் திறந்து அதிலிருந்து கிடைக்கும் அமிர்தத்தை பருகி சமாதி நிலையை அடைந்து பேரானந்த நிலையில் இருக்கலாம்.



முதலாம் தந்திரம் முற்றியது.

தொடர்புக்கு: 9677074974
மேலும் அறிந்து கொள்ள:
https://kvnthirumoolar.com